
# சோமகாந்தம்




மணிவிழா மலர்

1996


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T. 3621

K. Sivaramalingapillai,
B. A.
RETD DEPUTY PRINCIPAL
JAFFNA HINDU COLLEGE
28, CUMARASAMY ROAD
KANDARMADAM - JAFFNA

UNIVERSITY OF JAFFNA ★ LIBRARY ★

University of Jaffna
167716
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LIBRARY ★ UNIVERSITY OF JAFFNA ★

**Donated**

to

**the Library, University of Jaffna**

by

Thiru / Thirumathi சி. பாலசுந்தரம் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழாக் கண்டு மாண்புறும்
# நா. சோமகாந்தன் தம்பதியர்

UNIVERSITY LIBRARY



"வாழி நலம் சூழ என்றே
வாழ்த்துகிறோம். வாழ்க !"

ARCHIVES
-மணிவிழாச்சபை-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோமகாந்தம்

(மணிவிழா மலர்)

894.811092
COM
AR



தொகுப்பாசிரியர்
பூ. ஸ்ரீதரசிங்

ARCHIVES

167716

மணிவிழாச் சபை வெளியீடு

1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
167716

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தாளர் திரு. நா. சோமகாந்தன் அவர்களின்
# 'மணிவிழா' அமைப்புக் குழு


தலைவர் - திருமிகு. தெ.ஈஸ்வரன் அவர்கள்
செயலாளர் - திருமிகு. பூ.ஸ்ரீதரசிங் அவர்கள்
பொருளாளர் - திருமிகு. ச.ஆ.பாலேந்திரன் அவர்கள்
விழா அமைப்பாளர்- திருமிகு. பொ.பாலசுந்தரம் அவர்கள்

செயற்குழு உறுப்பினர்கள் -

திருமிகு. கே.வி.சோமசுந்தரம் அவர்கள்
திருமிகு. பொ.விமலேந்திரன் அவர்கள்
திருமிகு. Dr.தி.ஞானசேகரன் அவர்கள்
திருமிகு. S. கருப்பையா அவர்கள்
திருமிகு. அ.மயில்வாகனன் J.P. அவர்கள்
திருமிகு. டொமினிக் ஜீவா அவர்கள்
திருமிகு. சாரல் நாடன் அவர்கள்
திருமிகு. அன்ரனி ஜீவா அவர்கள்
திருமிகு. மேமன் கவி அவர்கள்
திருமிகு. திக்குவல்லைக் கமால்
திருமிகு. வீ.விக்கிரமராஜா அவர்கள்
திருமிகு. கே.பி. நடனசிகாமணி அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இம்மலரை மலர்வித்தோர்

திருமிகு. S. கருப்பையா தொழிலதிபர்

திருமிகு. தேசபந்து.வி.ரி.வி. தெய்வநாயகம்பிள்ளை
தலைவர். வி.ரி.வி.நிறுவனங்கள்

திருமிகு. கே.வி.சோமசுந்தரம்
பொதுச்செயலாளர், இலங்கைச் சின்மய மிஷன்

திருமிகு தெ.ஈஸ்வரன்
தலைவர், ஈஸ்வரன் பிரதேர்ஸ்

திருமிகு.பொ.பாலசுந்தரம்
அறங்காவலர், ஸ்ரீ வரதராஜ விநாயகர் தேவஸ்தானம்

திருமதி தயாம்பிகை மகிந்தா
உபதலைவர், இலங்கைச் சின்மய மிஷன்

திருமிகு.பூ.ஸ்ரீதரசிங்
அதிபர், பூபாலசிங்கம் புத்தகசாலை

திருமிகு.பொ.விமலேந்திரன்
அதிபர், யுனி ஆர்ட்ஸ் நிறுவனம்

பிரம்மஸ்ரீ சோ. ரவிச்சந்திரக் குருக்கள்
திருக்கோணமலை பத்திரகாளி அம்மன் தேவஸ்த்தானம்

திருமிகு. எம். ஏகாம்பரம்
உரிமையாளர், புஸ்பா ஜுவல்லர்ஸ்

திருமிகு. பொ. ஜெயராமன்
உரிமையாளர், பாமா ஜுவல்லர்ஸ்

திருமிகு. துரைவிஸ்வநாதன் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொகுப்பாசிரியர் உரை



**சோ**மகாந்தன் அவர்களுக்கு மணிவிழா.

கேட்டதும் என் குடும்பமே குதூகலித்தது.

அவர்கள் எங்கள் குடும்ப உறுப்பினர்கள்.

அந்தணராயினும் அன்பால் எம் குடும்பத்தினரோடு இரண்டறக் கலந்தவர்.

என் தந்தை பூபாலசிங்கம் புத்தகசாலையை வெறும் வியாபார ஸ்தலமாக அன்றி, அறிஞர்கள் கூடும் களமாகவும் ஆக்கியதால் இத்தகைய அறிஞர்கள் தொடர்பினை நானும் என் குடும்பமும் தொடர்ந்து பெற்று வருகிறோம்.

சோமகாந்தன் அவர்கள் நட்பெனும் எல்லையைத் தாண்டி, பல விடயங்களில் எனக்குக் குருவாகவும் திகழ்பவர்.

அவர் தம் மணிவிழாச்சபையிற் செயலாளர் பதவியும், மணிவிழா மலர்த் தொகுப்பாசிரியர் பதவியும் ஒருமித்துக் கிட்டியது நான் செய்த பேறு.

எம் அன்புத் தொடர்பு நன்றிக்கடனுக்கு அப்பாற்பட்டதெனினும், அவர்தம் பணியிலே கலந்துகொள்ள வாய்ப்புக் கிடைத்தமை, என் அன்பை வெளிப்படுத்த இயல்பாய் அமைந்த ஒரு வழியாயிற்று.

கடல் தாண்டும் இராமன் பணியில் அணில் இட்ட கல்லாய் என் பணியையும் கொள்ள வேண்டுகிறேன்.

..........................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவிழாவை நடத்துவதில் சிரமமிருக்கவில்லை.

சோமகாந்தன் ஐயாவுக்குக் கடமைப்பட்டோர் பலர்.

தம் கடமையைத் தீர்க்கும் வழியாய் இம்மணிவிழா அமைந்ததிலே பலருக்கும் மகிழ்ச்சி.

நாம் சிரமப்பட்டது, ஐயாவை மணிவிழாவுக்குச் சம்மதிக்கச் செய்யத்தான்.

"தனிமனிதப் புகழாய்ப் போய்விடும் நான் சம்மதிக்க மாட்டேன்" எனப் பிடிவாதம் பிடித்தார்.

எத்தனையோ பேர் சொல்லியும் விழாவை ஏற்க மறுத்தார்.

"நீங்கள் பணியாற்றிய நிறுவனங்கள் பல. நாவலர் சபை, முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஆகியவை உங்கள் வாழ்வோடு ஒன்றியவை.

உங்கள் மணிவிழாத் தொகுப்பு இவ்வமைப்புக்களின் வரலாற்றுத் தொகுப்பாய், தெரியாத பல விடயங்களை வெளிக்கொணரும் குறிப்பேடாய், அமையும் வாய்ப்பைத் தவிர்க்கலாமா?"

இக்கேள்வி இறுதியில் அவரைப் பணிய வைத்தது.

மணிவிழாவுக்குச் சம்மதித்தார்.

இவ்விழா தனி மனிதப் புகழ்ச்சியல்ல.

சோமகாந்தன் அவர்கள் தொண்டாற்றிய விழாக்கள், மாநாடுகள், கருத்தரங்குகள், நூல்வெளியீடுகள் என்பவை பற்றியும், அவர் அறிஞர்களோடு கொண்ட தொடர்பு பற்றியும் ஓர் இலக்கியவாதி என்ற முறையிலே தனித்துவமான அவரின் ஆக்கத்திறன் பற்றியும் ஆராய்ந்து பதிவு செய்யும் ஓர் அறிவுலக முயற்சியே.

இம்மலருக்காகக் கட்டுரை கேட்டதும்,

அறிஞர் பெருமக்கள் போட்டி போட்டுக்கொண்டு எழுதித் தள்ளி விட்டனர்.

உண்மையில் நான் இதனை எதிர்பார்க்கவில்லை.

அதுவே இம்முயற்சியின் வெற்றிக்குச் சான்றாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோமகாந்தனின் இலக்கிய வாழ்வின் வெற்றிக்கும் சான்றாயிற்று.

என்னால் முடிந்தவரை அறிஞர்கள் ஆலோசனையோடு, அறிவுலகம் பயன்கொள்ளும் வகையில் இந்நூலைத் தொகுத்திருக்கிறேன்.

ஒவ்வோர் அறிஞர் பார்வையிலும் சோமகாந்தனின் இலக்கியப்பணி விரிகிறது.

நிச்சயம் இளந்தலைமுறையினருக்கு இது வரலாறு சொல்லும் ஓர் பதிவேடாய் அமையும் என நம்புகிறேன்.

என்னை மீறிய தவறுகளிருப்பின் அவற்றை விலக்கிப் பயன்கொள்ள வேண்டுகிறேன்.

இம்மலர் சிறக்கத் துணைபுரிந்த அனைத்து அறிஞர்களிற்கும் என் நன்றிகள். தன் தனிப்பட்ட கலையாற்றலால் அண்மைக்காலத் தமிழ் இலக்கிய மலர்களைச் சிறப்புறச் செய்து வரும் யுனி ஆர்ட்ஸ் பதிப்பக உரிமையாளர், இம்மலர் சிறக்க முதற்காரணமானவர். அவர்க்கும் என் நன்றி உரித்தாகுக. இம்மலர் வெளியீட்டிலே கம்பன் கழகத்தார் செய்த உதவிகள் என் பணியை மிகச் சுலபமாக்கின. என் அன்புத் துணைவர்களான அவர்கட்கு நன்றி சொல்லலாமா? தொகுப்பாசிரியர் எனும் பதவி நோக்கி நன்றி கூறுகிறேன்.

இனி மலர் உங்கள் கையில்.....

முடிந்தால் அபிப்பிராயம் எழுதுங்கள் மகிழ்வேன்.

அன்பன்

பூ. ஸ்ரீதரசிங்.

அதிபர், பூபாலசிங்கம் புத்தகசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை



எத்தனையோ மலர்களைப் பதிப்பித்த சோமகாந்தன் ஐயா அவர்களின் மணிவிழா மலரைப் பதிப்பிக்கும் பேறு எனக்குக் கிடைத்திருக்கின்றது. அவர் முன்னின்று தொகுத்த பல மலர்களை நான் பதித்திருக்கிறேன். அச்சுக்கலை பற்றிய அவரது அறிவு என்னை வியக்க வைத்திருக்கிறது. அவரிடம் நான் கற்றவை ஏராளம்.

பதிப்பில் மட்டுமன்றி, பல சந்தர்ப்பங்களிலும் அவரோடு இணைந்து பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்ததால் அவரின் பல பரிமாணங்களைக் கண்டிருக்கிறேன். விழா அமைப்பாளராய், ஆலோசகராய், எழுத்தாளராய், பேச்சாளராய், ஆத்மீக வாதியாய் அவரின் பல கோணங்களைத் தரிசித்திருக்கிறேன்.

எடுத்துக் கொண்ட விடயங்களில் ஒன்றாகிவிடும் தன்மை, அப்பணிகளை அழகூட்டும் கலையுணர்வு, உண்மை உழைப்பு, சோர்வற்ற தன்மை, எடுத்த காரியத்தை எப்படியும் வெற்றியாக்கும் வல்லமை இவை சேர்ந்து இவரை எல்லாப் பணிகளிலும் முக்கியஸ்தராக்கி விடுகிறது.

ஓர் ஒப்புரவாளனின் மணிவிழா மலரைப் பதிப்பிக்கும் வாய்ப்புக் கிட்டியதால் மகிழ்கிறேன்.

என்னால் முடிந்தவரை முயன்றிருக்கிறேன்.

பிழைகள் இருப்பின் பொறுத்தருளுங்கள்.

இவ்வாய்ப்பைத் தந்த மணிவிழா சபையினர்க்கு நன்றி.

பொ. விமலேந்திரன்.
அதிபர், யுனி ஆர்ட்ஸ் நிறுவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| ஆசிகள் | ....... | 3 - 10 |
| வாழ்த்துக்கள் | ....... | 11 - 24 |
| எண்ணங்கள் | ....... | 25 - 138 |
| பதிவுகள் | ....... | 139 - 187 |


### வழங்கியோர்

## ஆசிகள்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் – (நல்லை ஆதீனம்)

சுவாமி ஆத்மகனாநந்தா –(கொழும்பு இராமகிருஷ்ண மிஷன்)

சுவாமி தத்வானந்தா– (மதுரை வேதாந்த நிறுவகம்)

பிரதிஷ்டா சிரோமணி பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள்

வேதாகமமாமணி பிரம்ம ஸ்ரீ சோ.ரவிச்சந்திரக் குருக்கள்

நீ. மரிய சேவியர் அடிகளார்– (திருமறைக் கலா மன்றம்)

## வாழ்த்துக்கள்

கொழும்பு மாநகரசபை முதல்வர். கே.கணேசலிங்கம்

தேசபந்து.வி.ரிவி.தெய்வநாயகம்பிள்ளை

கே.வி.சோமசுந்தரம் (இலங்கைச் சின்மய மிஷன்)

தெ.ஈஸ்வரன் (மணிவிழாச் சபைத் தலைவர்)

பொ.பாலசுந்தரம் (மணிவிழாச் சபை விழா அமைப்பாளர்)

ச.ஆ.பாலேந்திரன் (மணிவிழாச் சபை பொருளர்)

திருமதி. தயாம்பிகை மகிந்தா (இலங்கைச் சின்மய மிஷன்)

அ.மயில்வாகனன் J.P (நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றம்)

UNIVERSITY OF JAFFNA LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணங்கள்

பிரேம்ஜி ஞானசுந்தரன்

பொன்னீலன்

பேராசிரியர் கா.சிவத்தம்பி

வரதர்

வித்துவான் க.ந.வேலன்

நந்தி

சொக்கன்

ஏ.ரி.பொன்னுத்துரை

செ.குணரத்தினம்

பேராசிரியர் அ.சண்முகதாஸ்

இ.ஜெயராஜ்

டொமினிக் ஜீவா

தெளிவத்தை யோசப்

கு.சோமசுந்தரம்

இ.யோகநாதன்

சு.டிவகலாலா

செ.கணேசலிங்கன்

கலாநிதி எம்.ஏ.நுஃமான்

ஆர். சிவகுருநாதன் M.A

செ.யோகநாதன்

ஆ.சிவநேசச் செல்வன்

கே.எஸ்.சிவகுமாரன்

சி.வன்னியகுலம்

பேராசிரியர் சோ.சந்திரசேகரன்

திக்குவல்லை– கமால்

எஸ்.தில்லை நடராசா

சாரல் நாடன்

Dr. தி.ஞானசேகரன்

க.நாகேஸ்வரன் M.A.

வீ.விக்ரமராஜா

அன்ரனி ஜீவா

மேமன்கவி

புலவர் ஈழத்துச் சிவானந்தன்

மாத்தளை பெ.வடிவேலன்

கலாநிதி. சி. மௌனகுரு

வி.என்.மதி அழகன்

திருமதி பத்மா சோமகாந்தன்

சோ பத்மநாதன்

கே.பி.நடனசிகாமணி


வேலணை வேணியன்

## பதிவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வாழ்க இனிது"



ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர
ஞானசம்பந்தபரமாச்சார்யஸ்வாமிகள்
திருஞானசம்பந்தர் ஆதீனம், நல்லூர்.

ஸ்ரீ. நா. சோமகாந்தன் அவர்கள் ஒரு சிறந்த எழுத்தாளர், பேச்சாளர், கல்விமான்,பக்திமான். இதனை நாடறியும். யாவரும் ஒப்புவர்.

ஸ்ரீ சோமகாந்தன் ஏற்கனவே சைவசமயத்தின் ஆணித்தரமான கருத்துக்கள் உள்ளிட்ட பல நூற்களை யாத்து வெளியிட்டவர். சைவ சமய எழுச்சி, வளர்ச்சிக்கான தொண்டுணர்வு அவர் நெஞ்சில்நிறைந்திருப்பது வெளிப்படை – நாம் பகர்வது மிகையல்ல.

அவர் நலமே நீடு வாழ்ந்து, மேன்மேலும் இன்னோரன்ன தொண்டுகள் புரிந்து, இன்புற்று வாழவேண்டுமென முருகப் பெருமானின் பாதார விந்தங்களை வணங்கி எமது உளமார்ந்த நல்லாசிகளை வழங்குகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்தாளத் தம்பதியர்



சுவாமி ஆத்மகனாநந்தா
இராமகிருஷ்ண மிஷன், கொழும்பு

**திரு.** திருமதி சோமகாந்தன் அவர்களது சஷ்டியப்த பூர்த்தி விழா நடைபெறவிருப்பதை அறிந்து அவர்களுக்கு எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, இறைவன் அருளால் அவர்கள் பல்லாண்டு வாழப் பிரார்த்திக்கிறேன்.

தம்பதிகள் இருவரையும் இலங்கை வாழ் தமிழ் மக்கள் நன்கு அறிவர். இருவரும் சிறந்த எழுத்தாளர்கள். எழுத்துப்பணி அவர்களோடு உடன்பிறந்தது எனலாம். இருவரும் தங்கள் வாழ்க்கையை இலக்கியப் பணிக்கென்று அர்ப்பணித்தவர்கள். ஒருயிர் ஈருடலாக வாழ்பவர்கள் அவர்கள். எனவே அவர்களது வாழ்க்கையில் நிறைவு உண்டு.

இந்த இனிய மங்கள வேளையில், அவர்கள் இருவருக்கும் இறைவனது அருளை வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நம்மனதைக் கவர்ந்தவர்

சுவாமி தத்வானந்தா
வேதாந்த நிறுவகம், மதுரை

ஸ்ரீற்போக்கு எழுத்தாளராக நண்பர்களிடத்துப் பெரிதும் பாராட்டுதல்களைப் பெற்ற அன்பர் நா.சோமகாந்தன் அவர்களின் மணி விழா 21-12-1996ல் நடைபெறவிருப்பதைக் கண்டு நாம் பெரிதும் உவகை கொண்டோம்.

இலக்கியப் பணிகளுக்கு அப்பால் அவருடைய மனமுவந்த ஆன்மீகத் தொண்டும், ஆன்மீக கலாசார -பண்பாட்டில் அவர் கொண்டுள்ள ஆர்வமும், ஈடுபாடும் நம்மைப் பெரிதும் கவர்ந்து மன மகிழ்வைத் தந்துள்ளன.

அவரது வாழ்க்கை மேன்மேலும் சிறப்படைய, நீண்ட ஆயுளுடன் நிறைவான மனதோடு வாழ எல்லாம் வல்ல இறையருளை வேண்டி வாழ்த்துகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருமரபும் தூயர்

பிரதிஷ்டா சிரோமணி,
சிவாசார்யதுரந்தரர் பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள்



*குருப்பிரம்மா குருவிஷ்ணு குரு தேவோ மஹேஸ்வரஹ:*
*குரு சாஷாத் பரப்பிரம்ம தஸ்மை ஸ்ரீ குரவே நமஹ*

சகல செல்வங்கள் நிறைந்ததும், ஆகமவிதி முறைகளுக்கு அமைந்த ஆலயங்களையும், வேதஆகம பாண்டித்தியம் பெற்ற குருமார்களையும், அந்தணப்பெருமக்களையும், சைவக் குருமார்களையும், பௌராணீகர்களையும், சமய நெறிவழுவாத சைவப் பெரியார்களையும் கொண்டு விளங்குவதும் கரணவாய் என்னும் கிராமமாகும். அக்கிராமத்தில், உத்தம அந்தணப் பெருமகனாக விளங்கிய ஸ்ரீபாதராயண கோத்திரத்தில் உதித்த பிரம்மஸ்ரீ நாகேந்திரக்குருக்கள், அவரின் தர்மபத்தினி செல்லம்மாள் என்னும் தம்பதியரின் தவ, ஜெப, பூஜா பலன்களின் பலனாகப் பிறந்த புத்திரன் பிரம்மஸ்ரீ சோமகாந்தன் அவர்கள் . அவரின் இனிய பாரியாரான பத்மாவதி வண்ணார் பண்ணை சிவலிங்கப்புளியடி என்னுமிடத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற வேதாகம விற்பன்னரான பரத்துவாதி பிரம்மஸ்ரீ பஞ்சாட்சரக்குருக்கள்–அமிர்தாம்பிகை அம்மா தம்பதியரின் அருந்தவப்புதல்வி.

சோமகாந்தன்–பத்மாவதி தம்பதியினர் இருவருமே அரசாங்க உத்தியோகங்களிற் சிறப்பான பதவிகளை வகித்ததுடன், பத்திரிகைகளின் வாயிலாக அரிய பல கட்டுரைகளை இலக்கியம், சமயம் முதலிய துறைகளில் பலகாலமாக எழுதிவருபவர்கள். பல சிறந்த நூல்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கி வெளியிட்டுள்ளனர். இலக்கிய, சமய உரைகளை ஆற்றுவதிலும் வல்லவர்களாக விளங்குகின்றனர். இவர்கள் ஆற்றிவரும் சேவை மிகவும் போற்றுதற்குரியது.

இவர்கள் செய்துவரும் சேவைக்கும், இவர்களின் தேகாரோக்கிய வாழ்வுக்கும், குடும்பச்சிறப்புக்கும் உறுதுணையாக இருப்பது ஜெபம், பூஜை வழிபாடுகளே. அதனால் இவர்கள் நலமான வாழ்வு பெறவேண்டுமென்பதற்காக ஆசார அனுஷ்டானங்களின்படி பூஜை, ஹோமங்களுடன் தேவ சாந்நித்தியம் வேண்டி சஷ்டியப்தப் பூர்த்தி வைபவம் நிகழ இருப்பதறிந்து மகிழ்ச்சியடைகிறோம்.

இவர்களின் தேகாரோக்கியம் சிறப்படைந்துசெயலாற்றல்கள் மேலும் வளம்பெற்று, சகல நலன்களும் பெற்று, இவர்கள் சிறப்புறப் பல்லாண்டுகள் வாழ்வதற்கு பக்தரக்ஷக அர்ச்சாவதார நாயகராகிய அலமேலு மங்கை சமேத ஸ்ரீ வெங்கடேசப் பெருமாளின் பாதார விந்தங்களைப்பிரார்த்தித்து எமது நல்லாசிகளை வழங்குகின்றோம்.

*"லோகா சமஸ்தா சுகினோ பவந்து."*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீக முற்போக்கு உறவுப் பாலம்

வேதாகம மாமணி
பிரம்மஸ்ரீ சோ. ரவிச்சந்திரக் குருக்கள், ஆதீன கர்த்தா.
அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம், திருக்கோணமலை



தமிழர் பண்பாடுகளில் ஒன்றாக மதிக்கப்படுவது வாழ்த்து. வாழ்த்த வேண்டியவர்களை வாழ்த்தத்தான் வேண்டும். இது நமது தலையாய கடமை. இதனைக் காலத்துக்குக் காலம் அறிந்து. அவ்வப்போது நிறைவேற்றுவதனால், நமது சமூகம் பண்பாட்டினாலும், பணிகளாலும் ஏற்ற மடைகின்றது.


இந்த வகையில் சஷ்டியப்த பூர்த்தி விழாக்காணும், "ஈழத்துச் சோமு" என்று பலராலும் அறியப்படும் திரு. நா. சோமகாந்தன் அவர்கள் ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் கருணையில் கனிந்து, கசிந்து, கரைந்து, எனது உள்ளத்து நினைவுகளில் இடங்கொண்ட என் சோமகாந்தனாய் இருக்கின்றார் (N. சோமகாந்தன்).

இலங்கையிலே நவீன தமிழிலக்கியம் பற்றிய அறிவுபூர்வமான செய்திகளைச் சிறுகதைகள், கட்டுரைகள், வானொலி, மேடைப் பேச்சுக்கள் என்பனவற்றால் வெளிப்படுத்தி அறிவியலாளர்களின் நெஞ்சில் இடங்கொண்டு, அறிவியலார் "எமது சோமகாந்தன்" என்று கூறிப் பெருமைப்படுமளவுக்கு உயர்ந்து விளங்குகின்றார்.

பல்லாண்டுகளாக இந்து சமய, கலாசார அமைச்சிற் பணியாற்றி, சமய, சமூகப் பணிபுரிவதனாலும், இலக்கியச் சங்கங்களின் முக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துக்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்குனராயும், தேவஸ்தானங்களின் வளர்ச்சிக்கு ஆலோசனைகள் வழங்குபவராயும் இருப்பதனாலும் ஆஸ்திகர்கள் இவரை நமது சோமகாந்தன் என்று போற்றுமளவுக்குப் பெருமகனாக வாழ்கிறார்.

"வாழ்வு என்னும் பயணம் தொடர்ந்து போய்க் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு கணப்பொழுதிலும் நீ அதை ஒழுங்குபடுத்துவாயானால் வாழ்வு மங்களமாக நிறைவுபெறும்" என்று அருளாளர்கள் கூறும் கூற்றுக்கு இலக்கியமாக வாழத் துணைநிற்கும் தர்மபத்தினி பத்மாவுடன் சீரும் திருவும் பொலியப் பல்லாண்டு வாழ்கவென அம்பிகையின் அருளை வேண்டி வாழ்த்துகிறேன்.

ஆன்மீகமும் அறிவியலும் இரு கண்களாயுடைய பெரியார் திரு. நா. சோமகாந்தன் அவர்கள், அறுபதாவது அகவையைக் கடந்து செல்லும் வாழ்க்கையைக் கௌரவிக்கும் பெருவிழா சிறப்பாகவும், மங்களகரமாகவும் நிறைவேற எல்லாம்வல்ல அன்னை பராசக்தி ஸ்ரீ பத்திரகாளி அம்பாளைத் துதித்து வாழ்த்துகிறேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலம் மிக்க வல்லவர்

நீ.மரிய சேவியர் அடிகள்
இயக்குனர், திருமறைக் கலாமன்றம்



ஒரு சில விழாக்கள் விழா நாயகருக்குப் பெருமையை அளிக் கின்றன. வேறு சில, விழா நாயகரால் சீரும், சிறப்பும், மதிப்பும் மாண்பும் பெறுகின்றன. திரு. சோமகாந்தனுக்கு எடுக்கப்படும் மணிவிழா இரண்டாவது வகையைச் சார்ந்தது.

மணி விழா நாயகன் பல்வேறு துறைகளில் ஆழ்ந்த புலமையும் ஆற்றலும் கொண்டவர். பழகுவதற்கு இனியவர். எளியவர். எனக்குத் தெரிந்த அளவில் உதவி கேட்டுச் சென்றவர்க்கு ''இல்லை'' என்று சொல்லத் தெரியாதவர். மனங்களைப் புண்படுத்த அறியாத கலை உள்ளத்தினர். மற்றையோரின் நற் பண்புகளையும், வெளிக் கொணரப்பட்டும், வெளிக் கொணரப் படாமலும் இருக்கும் கொடைகளையும் போற்றுபவர். அவைகளை வளர்க்க உறுதுணையாக நிற்பவர். இத்தகைய ஒரு நல்லாரின், நலம் மிக்க வல்லாரின் மணிவிழாவில் அவரை வாழ்த்துவதை ஒரு பேறாகவே கருதுகிறேன்.

அவருக்குப் பக்கபலமாக இருக்கும் அவரது வாழ்க்கைத் துணைவியையும் மனமாரப் போற்றி, இறைவனின் திருவருள் மழை இவர்கள் மீது என்றென்றும் பொழிய வேண்டி நிற்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கிய உலகை ஊக்குவிக்கும் விழா



க.கணேசலிங்கம் J.P.U.M.
மாநகர முதல்வர், கொழும்பு மாநகர சபை.

தமிழுக்குத் தொண்டாற்றுபவர்கள் மறக்கப் படுவதில்லை. அன்பு, மனிதநேயம், எழுத்தாற்றல், செயலாளுமை, அனைவரையும் அணைத்துப் போகும் தன்மை முதலிய பண்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ள நண்பர் சோமகாந்தன் அவர்களுக்கு எடுக்கப்படும் மணிவிழா, தமிழிலக்கிய உலகை ஊக்குவிக்க எடுக்கப்படும் உற்சாக விழா, உவகையும், பூரிப்பும், பெருமிதமும் கொள்ளவேண்டிய பெருவிழா என்றே கொள்ளவேண்டும்.

இன்று மணிவிழாக் காணும் இவர் பல்லாண்டு காலம் வாழவும், இவரது பணிகள் பொலிந்து வளரவும் மனதார வாழ்த்துகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இவர் என்னவர்"

விஸ்வப் பிரசாதினி, தேசபந்து வி.ரி.வி.தெய்வநாயகம் பிள்ளை J.P
அறங்காவலர், ஸ்ரீஜிந்துப்பிட்டிஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்



ஸ்ரீ சோமகாந்தன் நாடறிந்த நல்ல எழுத்தாளர். சமய, சமூகப்பணிகளைப் பல நிறுவனங்களினூடாகச் சிறப்பாகச் செய்து வருபவர். தாங்கள் எழுதி வெளியிட்ட நூல்களின் வெளியீட்டுவிழாக்களில் இவரும் இவரின் மனைவியார் பத்மா சோமகாந்தனும் என்னை அழைத்துச் சிறந்த முறையில் மதிப்பளித்துள்ளனர். பெரியோரைக் கனம் பண்ணும் பண்பும், பணிவும் இவர்களிடம் குடி கொண்டிருப்பதைப் பல தடவைகளில் உணர்த்திருக்கிறேன். பல காலமாக இவர்கள் எனது அன்புக்குரியவர்களாக விளங்கி வருகின்றனர். பழகுவதற்கும், நட்புக்கும் உரிய இனிய தம்பதியினர்.

எனதும், எனது குடும்பத்தார் அனைவரினதும் நேசிப்புக்கும், நட்புக்கும், மதிப்புக்கும் உரிய ஸ்ரீ சோமகாந்தன், ஸ்ரீமதி பத்மாவதி தம்பதியினரின் சஷ்டியப்தப்பூர்த்தி விழாவினை, எனதுவீட்டு மங்கல வைபவமாகக் கருதி மகிழ்கிறேன்.

தேகாரோக்கியமும், நீண்ட ஆயுளும், மேலும் சகல சிறப்புகளும் இவர்களுக்கு அருளுவதுடன், இவர்களின் பிள்ளைகளும் தழைத்துச் செழித்து வாழ அருள வேண்டுமென எல்லாம் வல்ல ஜெயந்திநகர் வள்ளிதேவசேனா சமேத ஸ்ரீசிவசுப்பிரமணியப் பெருமானைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டின் துணைவன்

கே.வி.சோமசுந்தரம்
பொதுச் செயலாளர், இலங்கைச் சின்மய மிஷன்



இலங்கைச் சின்மய மிஷன் என்ற அறிவுவழியான ஆன்மீக இயக்கத்தில் அர்ப்பணிப்புடனும், சுறுசுறுப்பாகவும் செயலாற்றி வரும் உறுப்பினர்களில் திரு.சோமகாந்தன் அவர்கள் குறிப்பிடப்படவேண்டயவர். 1980களில் முற்பகுதியில் குருதேவர் சுவாமிஜி சின்மயானந்தா அவர்கள் இலங்கை விஜயங்களை மேற்கொண்ட தருணங்களில் அவரின் ஞான உரைகளால் ஈர்க்கப்பட்டு, இவ்வியக்கத்தில் இவரும் இவரின் முழுக்குடும்பத்தினரும் இணைந்து கொண்டார்கள். குருதேவர் தமது பேரன்புகளையும், ஆசீர்வாதத்தையும், நேரிலும் கடிதங்களினூடாகவும் இவர்களுக்கு வழங்கினார்.

1990ல் இருந்து, புதிய வேகத்துடன் எமது இயக்கம் இலங்கையில் இயங்குவதற்கு எடுக்கப்பெற்ற முயற்சிகளில், நிர்வாகக்குழுவிலிருந்து எனக்குப் பக்க பலமாக இவர் ஆற்றிவரும் சேவை மறக்க முடியாதது.

இவரின் இலக்கியம் மற்றும் ஊடகத்துறை அனுபவங்கள், புதிய திட்டங்களை வகுத்து, அவற்றை நிறைவேற்றும் சுறுசுறுப்பான செயலாற்றல்கள், சின்மயா மிஷனின் ஒவ்வொரு நிகழ்ச்சிகளையும் பரிமளிக்கச் செய்துள்ளன; இலங்கை சின்மயமிசன் வெளியிட்டு வரும் 'வொய்ஸ் ஒவ் சின்மயா' காலாண்டிதழ் அழகும், பொலிவுமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவருவதற்கு அதன் பொறுப்பாசிரியரான திரு.சோமகாந்தன் எடுத்துவரும் கரிசனையே காரணமாகும்.

உலகச் சின்மயா இயக்கத்தின் இப்போதைய ஆன்மீகத் தலைவரான சுவாமி தேஜோமயானந்தா அண்மையில் இலங்கைக்கு முதற் றடவையாக விஜயத்தை மேற்கொண்டபோது எமது நிறுவனம் வெளியிட்ட ''இலங்கையும் இராமாயணமும்' என்ற ஆய்வு நூலை ஒரு மாத காலத்துள்ளே தயாரித்து சுவாமிஜி உட்பட அனைவரின் பாராட்டையும் பெற்றவர் இவர். அறிஞர்களிடமும், பேராசிரியர்களிடமும் இவருக்கு இருக்கும் செல்வாக்கையும் மதிப்பையும் எம்மாற் காணமுடிந்தது.

தனிப்பட்டவகையில் நானும் இவரும் நெருங்கிய குடும்ப நண்பர்கள். ஒருவரின் துன்பத்தை மற்றவர் ஏற்று ஒன்றாக அழுதிருக்கிறோம். அதே போல மகிழ்ச்சியையும் பல தடவைகளிலே பகிர்ந்து கொண்டிருக்கிறோம். மணிவிழாக்காணும் நண்பரையும், அவரின் துணைவியாரையும் மனமார வாழ்த்துவதில் மிக்க பூரிப்பும் மகிழ்ச்சியுமடைகின்றோம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தட்டிக்கொடுக்கும் தம்பதியர்

தெ. ஈஸ்வரன்
இங்கைக்கான மொரீஷியஸ் தூதுவர்
தலைவர், மணி விழாச்சபை



**1992** டில் ஒருநாள் என்னைப் பார்க்கத் தனது தந்தை விரும்புவதாக எனது காரியதரிசி கலா சொன்னாள். சம்மதம் என்று சொன்னேன். வந்தார். தான் சென்னைக்கு இருதய சிகிச்சைக்காகச் செல்லுவதாகவும் அங்கு தனக்குச் சில வசதிகள் வேண்டுமென்றும் சொன்னார். செய்து கொடுத்தேன்.

பின் இருவரும் பலகாலம் சந்திக்க வாய்ப்பிருக்கவில்லை. நான் மொரீஷியஸ் தூதுவராக நியமிக்கப்பட்டேன். அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பல ஒழுங்குகளைச் செய்து கொடுத்து என்னை மலைக்க வைத்து விட்டார் இந்த இனிய நண்பர். நான் சென்னையிலே செய்து கொடுத்தது ஒன்றும் பெரிய உதவியல்ல. ஆனால், மனதில் அதை வைத்து, தகுந்த சந்தர்ப்பத்தில், பன்மடங்காய் அவர் எனக்குச் செய்த நன்றி வள்ளுவன் வாக்கை நினைவு படுத்தியது.

*"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்*
*கொள்வர் பயன் தெரிவார்"*

செய்த நன்றியையே மறக்கின்ற இந்தக் கலியுகத்தில், தினையளவு நன்றியை பனையளவாய்க் கொள்ளும் பொன் மனம் கொண்டவர் சோமகாந்தன்.

பொதுவாக மனிதன் பாராட்ட, உற்சாகப்படுத்தத் தயங்குவான். நல்லதை நல்லது என்று சொல்லுவதிற் கூட அவனுக்குத் தயக்கம். ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல கச்சேரிக்குப் போகிறோம். நம்மில் எத்தனைபேர் அந்தக் கச்சேரி செய்தவரைச் சந்தித்து "உங்கள் கச்சேரி நன்றாக இருந்தது" என்று சொல்லுகிறோம். சிலர் குறை சொல்லாமற் போவதே பெரிய விஷயம். இதில் இவர்கள் பாராட்டுவார்கள் என்று எதிர்பார்ப்பதில் அர்த்தமேயில்லை. கூட்டத்திற் பேசி முடித்த ஒருவரிடம் சென்று "நீங்கள் நன்றாகப் பேசினீர்கள்" என்று சொன்னால் நாம் பேச்சுக்கலையை வளர்க்கிறோம் என்று பொருள். இவ்விஷயத்தில் விழாக் காணும் தம்பதியர் இருவரும் முன்நிற்பவர்கள். சோமகாந்தன் உடனேயே பாராட்டுவார். பத்மாவோ வீட்டுக்குச் சென்று தொலைபேசி மூலம் உங்கள் பேச்சு அல்லது கச்சேரி நன்றாக இருந்தது என்று பாராட்டுவார். இவ்விடயத்தில் இருவரும் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்களல்லர். " இதென்ன பெரிய விடயமா? இதைப் போய்ப் பெரிதுபடுத்துகிறீர்களே" என்று கேட்கலாம். சாயி பகவான், "பணி புரிய, ஆறுதல் கூற, ஊக்குவிக்க, உன் கையை நீ எப்போது தூக்குகிறாயோ, அப்போது நீ ஆண்டவனைக் கும்பிடக் கை தூக்கியதாக அர்த்தம்" என்று சொல்லுகிறார். சோமகாந்தன் தம்பதியர் நல்ல நிகழ்ச்சிகளுக்குச் சென்று வந்தால் ஆண்டவனைக் கும்பிட்டுக் கொண்டே இருப்பார்கள். இது அவர்களுடைய இயற்கையான பழக்கம்.

சோமகாந்தன் ஒரு நல்ல எழுத்தாளர். இல்லை இல்லை. மணி விழாக் காணும் தம்பதியர் சிறந்த எழுத்தாளர்கள். தான் மாத்திரம் பரிசுபெற்ற எழுத்தாளராக இருந்தாற் போதாது. மற்றவர்களும் எழுத வேண்டும் என்ற பெருநோக்குக் கொண்டவர் சோமகாந்தன். என்னை அடிக்கடி, "எழுதுங்கள் சார், எழுதுங்கள் சார்" என்று ஊக்குவித்திருக்கிறார்கள். அவர்களுடைய ஊட்டச்சத்து இல்லாவிட்டால் எனது கை என்றோ முடங்கிப் போயிருக்கும். நான் அதிகம் எழுதியவனல்ல. நான் எழுதிய சில வார்த்தைகளுக்கும் அவரே காரணகர்த்தா. என்னை மட்டுமல்ல எல்லாக் கலைஞர்களையும் தன்னால் முடிந்தவரை ஊக்குவித்து, தட்டிக் கொடுத்து, கை கொடுத்து உயர்த்த வேண்டுமென்பது அவரது இரத்தத்தோடு சேர்ந்த குணம்.

நண்பர்களை உயர்த்திச் சொல்வது இயற்கை. ஆனால் உண்மையைச் சொன்னாற்றான் உலகம் ஏற்கும். வார்த்தைகளால் மக்களை மயக்க முனைவது ஏமாற்றத்தையே தரும். எனவே நானும் இல்லாததைச் சொல்லவில்லை. நான் சொன்னவைகளை நாடறியும். நாமெல்லோருமறிவோம். நான் சொன்னவை உண்மை. முழுவதும் உண்மை. உண்மையைத் தவிர வேறு ஒன்றுமில்லை.

எழுத்தாளர் தம்பதியினரே, நீவீர் பல்லாண்டு பல்லாண்டு வாழ்க. உங்கள் எழுத்துக்கள் தமிழ்கூறும் நல்லுலகிலே தனியிடம் வகிக்கட்டும். மல்லிகையும் மணமும் போல இன்னும் பல்லாண்டு இணைபிரியாது வாழ எங்கள் வரதராஜ விநாயகரை வேண்டி நிற்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்தைப் பதிப்பித்து எண்ணத்தில் பதிந்தவர்

பொ. பாலசுந்தரம்.
அறங்காவலர்
ஸ்ரீ வரதராஜ விநாயகர் தேவஸ்தானம்



ஆசிரியர் திரு. சோமகாந்தன் ஐயாவின் சேவைகளைப் பாராட்டி மலர் ஒன்று வெளியிடப்படுகின்றது என்பதை அறிய உள்ளம் பெருமிதம் அடைகின்றது.

ஆசிரியர் திரு. சோமகாந்தன் அவர்களின் மாணாக்கன் என்ற முறையில் இக் கட்டுரை எழுதுவதைப் பெரும் பாக்கியமாக எண்ணுகிறேன்.

கலைகள், இலக்கியங்கள்; இவற்றின் இன்றியமையாத இலக்கு வெற்றுப் பொழுதுபோக்கு என்பதல்ல. வேண்டிய வாழ்வியல் உண்மைகளையும், உணர்வுகளையும், வழிமுறைகளையும் எடுத்துச் சொல்வதாகும். அவ்வாறு அமையும் படைப்புகளே பயன்தரும் படைப்புகளாகும்.

ஆசிரியர் திரு. சோமகாந்தனின் படைப்புகள் பயன்மிகு படைப்புகளாகவும், நலமிகு படைப்புகளாகவும் விளங்குகின்றன. மொழி, இனம் இவற்றின் முன்னேற்றம் குறித்தும், தடைகளைத் தகர்க்க வேண்டிய முறைகள் குறித்தும் தம் படைப்புகளிடையே பல இடங்களிற் கூறுகிறார். இத்தகு அரிய உண்மைகளைக் கண்டு காட்டும் சிறந்த ஆய்வாளராக விளங்குகிறார் ஆசிரியர் திரு. ஈழத்துச் சோமு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. சோமகாந்தன் ஐயா பல புத்தகங்களை எழுதி, பதிப்பித்து வெளியிட்டிருக்கிறார்.

வானுறு மதியம் போலும், வளர் பொன்னி நதியம் போலும், கானுறு தருவைப் போலும் தன்னால் வானொலியிலும், மாணவர் மத்தியிலும், இலக்கிய மேடைகளிலும் ஆற்றப்பட்ட கன்னித்தமிழ் ஈரச் சொற்களெல்லாவற்றையும், வீசும் காற்றில் உலர்ந்து போகாமல் என்றும் வாசமிகு பொய்கை மலர்களாக ஆக்கி இலக்கியச் சோலைக்கு அர்ப்பணித்திருக்கிறார் ஈழத்துச் சோமு அவர்கள்.

இவருடைய காரியம்யாவிலும் கைகொடுத்து இலக்கிய மேடைகள் தோறும் இவரின் துணைவியார் திருமதி பத்மா சோமகாந்தன் அம்மையாரும் அரும் பெரும் பணியாற்றிவருகிறார். இருவரின் அறிவுத் திறனெல்லாம் வெறும் பேச்சுக்களாக நின்று காற்றோடு கலந்து போகாமல் பல நூற்களாக மலர்ந்து நிற்கின்றன.

திரு. சோமகாந்தன் ஐயா அவர்கள் இலங்கை சின்மயா மிஷனின் உதவிப் பொதுச் செயலாளராக இருந்தும், "Voice of Chinmaya" பத்திரிகையின் ஆசிரியராக இருந்தும் அரும் பெரும் பணியாற்றி வருகிறார். அவரோடு சேர்ந்து பணி புரிவதைப் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்.


இவருக்கும், இவரின் குடும்ப அங்கத்தவர் அனைவருக்கும் எல்லாம்வல்ல விநாயகப் பெருமான் நீண்ட ஆயுளையும், சகலவளங்களையும் அருளுவார் என்று வாழ்த்தி வணங்குகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமையுடன் ஒரு வாழ்த்து

ச.ஆ.பாலேந்திரன்
பொருளாளர், மணிவிழாச் சபை.



ஐயாவுக்கு மணி விழா. செய்தி கேட்டதுமே மனம் எல்லையற்று மகிழ்கிறது. அவர் மணிவிழாச் சபையில் நான் பொருளாளர். இத் தகுதி எனக்கு உறவு பற்றி வந்ததாய் நான் கருதவில்லை. உரிமை பற்றி வந்ததாகவே கருதுகிறேன்.

இன்றைய ஐயாவின் வெற்றியின் பின்னணி அவர்தம் துணைவியார் என்பது அறிஞர் அனைவராலும் ஒத்துக் கொள்ளப்பட்ட உண்மை. எழுத்து, பேச்சு, விழா, என்று வாழ்நாள் முழுவதும் ஓடித் திரிபவர் ஐயா. அத்தகைய சமூகத் தொண்டனை இன்று வரை நலமுறக் காத்து நிற்பதோடு தன் கடமை முடிந்து விட்டதாய்க் கருதாமல், அவருக்குத் தக்க துணை தான் என்று நிரூபித்து, எழுத்துலகிலும், சமூகத் தொண்டிலும் பெயர் குறித்து நிற்பவர் திருமதி பத்மா சோமகாந்தன் அவர்கள்.

வந்தார்க் கெல்லாம் பொன் கொடுத்துப் பெருமை கொண்ட எங்கள் காரைநகர், ஐயாவுக்குப் பெண் கொடுத்துப் பெருமை கொண்டுள்ளது.

பெண் கொடுத்தவருக்கு இல்லாத உரிமையா? அதனாலே தான் உரிமையால் வந்த தகுதி என்றேன்.

இவ்வளவும் சொன்னாலும் எங்கள் ஊர்க் குருக்களின் மாப்பிள்ளையாக ஐயாவைத் தெரிந்ததை விட, கம்பன் கழகத் தொடர்பால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடன் பழகியதே அதிகம். குலப் பெருமை பேசாமல் அனைவரையும் அணைத்து நடக்கும் அவர் தம் பண்பு என்னை அவர் தாசனாக்கியது.

எந்நேரமும் சிரிப்பது, ஒரு நிமிடமும் சோராமல் இருப்பது, எப்போதும் சாதிக்க வேண்டியவற்றை நினைத்துக் கொண்டிருப்பது, எடுத்துக் கொண்ட காரியத்தை எப்படியும் முடித்தே தீருவது என ஐயாவிடம் நான் படித்தவை பல.

அவர் தம் மணிவிழா எந்தன் மன விழா. விழாச் சிறக்க இறைவனை வேண்டுகிறேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'குருவின் குடும்பம்'

திருமதி தயாம்பிகை மகிந்தா
*உபதலைவர் சின்மயா மிஷன்*



குருதேவர் சின்மயாந்தாவின் குழுவிற் சேர்ந்து சேவையில் இறங்கிய நாள் முதல், ஆன்மீகத்தில் ஈடுபட்டவர்களுடன் தொடர்பு கொள்ளும் பாக்கியம் எனக்குக் கிட்டியது. இத்தருணத்தில்தான் திரு.சோமகாந்தன் குடும்பத்தினரின் உறவு எனக்கு ஏற்பட்டது.

பல ஆண்டுகளாக இந்தச் சேவையில் 'சின்மயா குடும்பம்' என்ற மனப்பான்மையுடன் பழகியுள்ளளேம். திரு.சோமகாந்தன் ஒரு சிறந்த எழுத்தாளர். சின்மயா மிஷன் வெளியிடும் சஞ்சிகையான "Voice of Chinmaya" ஆசிரியராக விளங்குகிறார்.

அந்தப் பணியில் அவர் மிகவும் ஆர்வமாகவும், தன் உடல் நலத்தைக் கருதாது ஒரு அரிய தொண்டாக மேற்கொண்டும் வருடத்துக்கு நான்கு முறை வெளியிட்டு வருகிறார். வாசகர்களுக்குப் பயனுள்ள கட்டுரைகளை பிரசுரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில், மிகவும் சிரமப்பட்டு அவற்றைத் தேர்ந்தெடுத்து வெளியிடுவது அவர் வழக்கம்.

சமீபத்தில் தவத்திரு சுவாமி தேஜோமயானந்தா இலங்கைக்கு வந்த போது "Lanka & the Ramayana" என்ற நூலைச் சின்மயானந்தா மிஷன் வெளியீடாக வெளியிட்டு வைத்தார்கள். பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிஞர்களின் கட்டுரைகளைச் சேர்த்து அதைக் குறிப்பிட்ட தினத்துள் வெளியிட மிகவும் சிரமப்பட்டவர் திரு சோமகாந்தன் அவர்களே.

அவர் இந்தத் தொண்டை மிக வெற்றிகரமாக நிறைவேற்றினார். சுவாமி அவர்கள் இந்நூலை மிகவும் போற்றி, அதன் பல பிரதிகளை இந்தியாவுக்கு எடுத்து சென்றார் என்றால் அந்த நூலின் சிறப்பைப்பற்றி வேறு எதுவும் கூற வேண்டியதில்லை.

திரு. சோமகாந்தன் தன் அருமை மனைவி பத்மாவுக்கு உற்ற துணையாகவும், தன் பிள்ளைகளுக்கு அன்புத் தகப்பனாராகவும் விளங்குகிறார்.

அவர் சேவை மேலும் தொடர்ந்து வளரப் பெருமானை வேண்டிக்கொள்கிறேன்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லை என்னாத ஏந்தல்

இறைபணிச்செம்மல் அ.மயில்வாகனன் J.P.
தலைவர் நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றம்



சோமகாந்தன் ஐயாவுக்கு அறுபதாகிவிட்டதா? இன்றும் இளைஞர் போலச் சுறுசுறுப்பாகக் காரியங்களாற்றி வரும் அவருக்கு 60 என்பதை நம்ப முடியவில்லை.

நேற்றுப் போல இருக்கிறது. 1969ல் ஆறுமுகநாவலர் சிலையைத் தேசபவனியாக எடுத்துச்செல்ல ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதனை ஒருதினம் எமது நகரிலே தரிக்க வைத்து வரவேற்பளிக்க விரும்பி, அந்த முக்கியஸ்தரைக் காண்பதற்காகக் கொழும்புக்குச் சென்றோம். மெல்லிய கம்பீரமான சிவந்த தோற்றம். அந்த முக்கியஸ்தரான இளைஞர் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருந்தார். அவர்தான் இன்று மணிவிழாக்காணும் திரு.சோமகாந்தன்.

"நான் என்ன செய்ய வேண்டும்?" அவர் எம்மிடம் கேட்ட முதற் கேள்வி இது. சாதகமான ஏற்பாடுகளைச் செய்து தந்தார். இதே கேள்வியைத்தான், நன்கு பழகி நட்பாகிய இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும், ஏதாவது ஆலோசனைகளைப் பெறவிரும்பித் தொடர்பு கொள்ளும் போது அவர் கேட்பதுண்டு. அன்று முதல் இன்று வரை கொழும்புக்கும் நீர்கொழும்புக்கும் கலை இலக்கிய, கலாசாரப்பாலமாக அவர் திகழ்ந்து கொண்டிருக்கிறார். நீர்கொழும்புத் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களின் இதயத்தில் அவர் எங்கள் வீட்டுப் பிள்ளையாக மதித்து நேசிக்கப்படுபவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1994ல் எமது மன்றத்தின் கலாசார மண்டபத் திறப்பு விழாவும், மன்றத்தின் மணி விழாவும், சிறப்பாக அமைய அரிய ஆலோசனைகளை அளித்ததுடன், எமது மன்ற மணிவிழா மலர் திறம்பட அமைவதற்கும் பெரும்பங்களிப்பைச் செய்தவர். எந்தப்பணியைக் கொடுத்தாலும் இயலாது என்ற வார்த்தை அவரிடமிருந்து வந்ததேயில்லை.

அந்தஸ்து ஏற்றத்தாழ்வுகளையும், சாதி சமயப்பாகுபாடுகளையும் பொருட்படுத்தாமல் எல்லோரையும் அன்புடன் மதித்துப் பழகி வரும் இவரின் ஊக்குவிப்பினாலும், ஆலோசனையினாலும் பல மன்றங்கள் விருத்தியடைந்தன. அநேக எழுத்தாளர்களும், கலைஞர்களும் வளர்ச்சி பெற்றுள்ளனர்.

எமது மன்றம் 1994ல் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் அனுசரணையுடன் ஆக்க இலக்கியம் பற்றி நடத்திய முழுநாள் எழுத்தாளர் மகாநாட்டில், நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் நூற்றுக்கணக்கான எழுத்தாளர்கள் நீர்கொழும்புக்கு சமுகமளித்திருந்தனர். எமது எழுத்தாளர்கள் மத்தியில் சோமகாந்தன் அவர்களின் சொல்லுக்கு இருக்கும் செல்வாக்கையும் மதிப்பையும் கண்டு வியந்தோம்.


சோமகாந்தன் ஐயா அவர்களின் துணைவியாரும் புகழ்மிக்க ஒரு எழுத்தாளர். விருந்தோம்பும் விடயத்தில் இருவருக்குமிடையிற் போட்டி நிலவுவதைக் கண்டிருக்கிறோம். இன்முகத்தோடு விருந்தளிப்பது அவர்களில்லத்தில் வழக்கமான நிகழ்ச்சியாகும்.

ஐயா அவர்களும், அவரின் குடும்பத்தினரும் மிக்க தேகாரோக்கியத்துடனும் சீர் சிறப்புக்களுடனும் பல்லாண்டு வாழ்ந்து பணியாற்ற வேண்டும் எனவும், மேலும் புகழ்பெறவேண்டுமெனவும் மனதார வாழ்த்துகிறோம்.


UNIVERSITY OF JAFFNA LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எண்ணங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றல் மிக்க படைப்பாளி, திறமை மிகு அமைப்பாளர்



பிரேம்ஜி ஞானசுந்தரன்
பொதுச் செயலாளர்-இலங்கை
முற்போக்கு எழுத்தாளர் சங்கம்.

நண்பர் சோமகாந்தன் அறுபதாண்டு ஜனன விழாவை அனுஷ்டிக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் அவருக்கு நல்வாழ்த்துக்களையும் இதய பூர்வமான பாராட்டுக்களையும் வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இந்த வாத்சல்ய வாழ்த்துக்களை வாயார, நெஞ்சாரக் கூறுவதில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கமும், அதன் அணியிலுள்ள எழுத்தாளர்கள் அனைவரும், அதே போல ஈழத்து இலக்கிய உலகும் பெருமிதம் கொள்வதை ஆத்மார்த்தமாக உணர்கிறேன்.

நண்பர் ஈழத்துச் சோமு ஈழம் தந்த நல்லதோர் படைப்பாளி. அவரது எண்ணிறைந்த சிறுகதைகளும், வெளிவந்த ஓரிரு நாவல்களும் இந்தக் கணிப்புக்குக் கட்டியங் கூறுகின்றன.

மக்களின் வாழ்வை, அதன் பல்வேறு கோணங்களில், கோலங்களில், வெளிப்பாடுகளில் தரிசித்து அதை அழியா இலக்கியப் படைப்புகளாகச் சிருஷ்டிப்பதில் சோமு கைதேர்ந்த வல்லவராகத் திகழ்கிறார்.

வாழ்வினதும் சமூகத்தினதும் குரூரங்களையும் சௌந்தர்யங்களையும், பிரச்சனைகளையும், பிணக்குகளையும், சிக்கல்களையும், சிருங்காரங்களையும் தன் எழுத்துக்களில் பதிவு செய்வதுடன் நின்று விடாமல், இவற்றுக்கு ஊடாக மனித நேயத்தையும் மானுடப் பிரேமையையும் சுடர்விடவும் செய்துள்ளார். இத்தகைய சுந்தர பாவம் இவரது சிருஷ்டிகள் அனைத்திலும் முகிழ்ந்து பூரித்துச் சொரிவதை அவதானிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித குலத்தின்பாலான இந்த ஆத்மார்த்த அபிமானமும், வியாபித்துச் சிலிர்க்கும் அன்பும், ஆழ்ந்த பிரேமையும் தான் எந்தவொரு நல்ல இலக்கியத்தினதும் கேந்திர மையமும், ஜீவனுமாகும். இந்த உணர்வை ஆத்ம எழுச்சியை இலக்கியத்தில் புஷ்பிப்பதில் சோமுவின் பாங்கான, பவ்வியமான படைப்புத்திறன் வியாபித்துச் செயற்படுகிறது.

சமூகத்தின் ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, நலிவுற்ற பிரிவினர்பால் மிகுந்த ஈடுபாட்டையும் மானுடத்தின் மகிமைக்கான அவர்களின் போராட்டத்தில் ஆழமான அக்கறையையும், தனது படைப்புகளில் வெளிப்படுத்திய சோமு, தான் சார்ந்த மக்கள் பகுதியின் வாழ்வை, ஏற்ற இறக்கங்களை, அவலங்களை புதிய கோணங்களில் தனது நாவலில் தரிசனம் காட்டும் போது சமூகத்தின் பிறிதொரு பிரிவினர் பற்றிய நிஜங்களை நிதர்சனமாகப் பார்க்கிறோம்.

ஒரு படைப்பாளி என்ற வகையில் சோமுவின் பிரதான சிறப்பியல்பு நவீன சிந்தனைகளை, இலக்கியம் வாழ்வையும் சமூகத்தையும் யதார்த்தமாகச் சத்திய நேர்மையுடன் சித்தரிக்க வேண்டும் என்ற இந்த யுகத்தின் படைப்பிலக்கியத் தத்துவத்தை, தமிழ் மரபுக்கு அமைய, தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்களுக்கு ஏற்ப, தமிழ் மொழியின் செழுமைக்கும் கட்டுக்கோப்புக்கும் இயைய தனது சிருஷ்டிகளில் வெளிப்படுத்துவதாகும்.

காத்திரமான, சமூகப் பிரக்ஞையுள்ள, மனிதாபிமான வீச்சுக் கொண்ட படைப்புகளே ஒரு நல்ல இலக்கியத்தின் அடிப்படை. இதன் மீறவொண்ணா நியதிகளான உருவச் சிறப்பு, கலைத்துவ மேன்மை, அழகியல் நேர்த்தி, பாத்திர வடிப்பு நேர்மை, கதை நகர்த்தும் கச்சிதம், பண்பாட்டு விசுவாசிப்பு, கம்பீரமான மொழிநடை, இலக்கணச் சுத்தி, இலக்கியத்தின் பாலும் இலக்கிய மாந்தர்பாலுமான ஆத்ம லயிப்பு ஆகியவற்றின் தளத்தில் நின்று சிருஷ்டிப்பதில் சோமு அளப்பரிய ஆற்றலை வெகு நேர்த்தியாக வெளிப்படுத்தியுள்ளார்.

இதன் மூலம் உள்ளடக்கத்திற்கும் உருவத்திற்கு மிடையிலான சமநிலை காண வேண்டிய இலக்கியத் தேவையை நிறைவு செய்து புதிய செம்மையான இலக்கிய நியதிக்கு நடைமுறையில் கோடிகாட்டுகிறார்.

படைப்பு இலக்கியத்தில் மட்டுமல்ல அறிவு இலக்கியத் துறையிலும் சோமு தனது முத்திரையை ஆழமாகப் பதித்துள்ளார். அவர் எழுதிய ஏராளமான கட்டுரைகள், இலக்கியக் குறிப்புகள், விமர்சனங்கள், அறிமுகங்கள், இலக்கிய முக்கியத்துவம் பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு அற்புதமான படைப்பாளியான சோமு ஒரு ஆற்றல் மிக்க அமைப்பாளரும் செயல்வீரரும் ஆவார். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் கடந்த நான்கு தசாப்தங்களாகச் சாதித்த மாபெரும் சாதனைகளில், அது நடத்திய சிறியதும் பெரியதுமான எண்ணரிய மாநாடுகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள், விழாக்கள் ஆகிய அனைத்திலும் சோமுவின் செயற்றிறனும் அமைப்பாற்றலும் பளிச்சிட்டுள்ளன.

எந்தக் காரியத்தையும் அடக்கமாக, அளவோடு செய்யத் தெரியாத, அல்லது செய்ய விரும்பாத சோமு இ.மு.எ.ச. வின் செயற்பாடுகளுக்கு பிரமாண்ட பரிமாணத்தையும் அகண்ட வியாபிப்பையும் தருவதற்குக் காரண புருஷராகத் திகழ்ந்துள்ளார். இது இலக்கியப் பரப்பில் இ.மு.எ.ச. வின் ஸ்தாபன ரீதியான தாக்கத்தை, பாத்திரத்தை, பங்களிப்பை உயர்த்திச் செல்வதில் பிரதான காரணியாக இருந்துள்ளது.

இ.மு.எ.சங்கத்திற்கு அப்பாலும் சோமுவின் செயற்படு திறன் வியாபித்துச் சென்றுள்ளது. நாவலர் இயக்கம் இதற்கு நல்லதோர் சான்று. நாவலரை தேசிய விழிப்பின் ஈழத்து தேசிய இலக்கியத்தின் மூலவராக இ.மு.எ.ச. இனம் கண்டு காட்டியது. இதை ஆதாரமாகக் கொண்டு நாவலர் இயக்கத்திற்கு மாபெரும் தேசியப் பரிமாணத்தை அளிப்பதில் சோமு ஆற்றிய பணி அளப்பரியது. ஏனைய கலாசார, ஆன்மீக இயக்கச் செயற்பாடுகளிலும் அவரது அமைப்பாற்றல் வியாபித்து அந்த இயக்கங்களுக்குப் பெரும் உந்து விசையாகத் திகழ்கிறது.

நோயின் தாக்கங்களைத் தாக்குப் பிடித்துக் கொண்டு இந்த மனிதர் ஓயாது ஒழியாது செயற்படும் பாங்கு மெய்யாகவே அதிசயிக்கத்தக்கது, இளந்தலைமுறைக்கு ஒரு ஆதர்ச வழிகாட்டி.

இனிய நண்பர் சோமுவின் இலக்கிய, கலாசார, ஆன்மீகப் பணிகள் மேலும் மேலும் சிறக்கவும், அவர் நல்லாரோக்கியத்துடன் நீடு வாழவும் வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

167716

894.811092
Com
AR



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்துறை ஆற்றலாளன்

பொன்னீலன்
பொதுச் செயலாளர்
தமிழ் நாடு கலை, இலக்கியப் பெருமன்றம்




இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க அமைப்பு செயலாளரான திரு. நா. சோமகாந்தன் அவர்கள் உள்ளும் புறமும் மென்மையானவர். நல்ல மனிதர்களைக் கவர்ந்திழுக்கும் ஆற்றலும், அவர்களைக் கொண்டு நல்லகாரியம் செய்து முடிக்கும் திறனும் மிக்கவர். சென்ற ஜுலை மாதத்தில் இரண்டு வாரம் இலங்கையில் சுற்றுப்பயணம் செய்தபோது அவருடைய உழைப்பையும் விடாமுயற்சியையும் நேரிற் கண்டு பலமுறை வியந்தேன். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நடத்திய இலக்கியப் பேரரங்கை அவர் நடத்திய விதம் பாராட்டத்தக்கது. பத்தாண்டு காலத்திற்கு அதிகமாக மிகுந்த நெருக்கடிக்குள் சிக்கிக் கிடக்கும் தமிழ்க் கலைஞர்களும், அறிஞர்களும் ஒருவரோடு ஒருவர் உறவாடிக் கொள்ளவும், கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும் தோழர்கள் உதவியுடன் அவர் ஏற்படுத்திக் கொடுத்த இந்த வாய்ப்பு தமிழுக்கு அவர் காலத்தினாற் செய்த நன்றியாகும்.

சோமகாந்தன் ஒரு சிறுகதை எழுத்தாளர், நாவலாசிரியர், விமர்சகர், சிறந்த ரசிகர், இலங்கைத் தமிழிலக்கிய உலகில் நன்கு அறிமுகமான வலிமை மிக்க பேச்சாளர். நிர்வாகத்துறையில் நீண்டகாலம் பணியாற்றிப் பல சிறப்புகளைப் பெற்ற ஒரு கல்வியாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்துறைச் சிறப்புகள் பெற்ற அன்புத் தோழருக்கு மணிவிழா நடைபெறுகிறது என்று அறிந்து மகிழ்கிறேன். இவருக்கு வாய்த்த துணைவியோ இவர் வாழ்வின் செம்பாதி. இவருக்கு நிகரான சிறப்புகள், அனைத்துத் துறையிலும் பெற்றிருப்பவர். இருவரையும் ஒரு சேரப் பார்ப்பதே ஒரு இனிய இலக்கியக் காட்சி. இவர்களுக்கு வாய்த்திருக்கும் மக்களோ பண்பில் இவர்களையும் மிஞ்சுபவர்கள். தம் அருமைத் தலைவியோடும் இனிய மக்களோடும் தமிழுலகமெல்லாம் பரவிக் கிடக்கும் முற்போக்குப் படைப்பாளர் இனத்தோடும் இவர் எல்லாச் சிறப்புகளையும் பெற்று நீடுழி வாழ்க எனத் தமிழ் நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் சார்பிலும், அதனிலும் விரிவாகத் தமிழ் உலக முற்போக்குப் படைப்பாளிகளின் சார்பிலும் நெஞ்சார வாழ்த்துகிறேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க முடியா நினைவுகள்
# மறுக்க முடியாச் சாதனைகள்

ஈழத்துச் சோமுவின் ஆறாம் தசாப்தத்
தொடக்கம் பற்றிய செய்தி.
செய்தி கிளப்பிய சிந்தனைகள்.

கார்த்திகேசு சிவத்தம்பி
முது தமிழ்ப்பேராசிரியர்
யாழ் பல்கலைக்கழகம்
வருகைப் பேராசிரியர், கிழக்குப்பல்கலைக்கழகம்



நண்பர் சோமுவுக்கு "அறுபதுகள்" தொடக்கியதையிட்டு ஒரு மலர் வெளியிடுவதாக திரு. ஸ்ரீதரசிங் தகவல் தந்தார்.

இது "நம்ம வீட்டுக்கல்யாணம்".

சோமுவும் நானும் ஐம்பது வருடங்களுக்கு முன்னர், கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரியிலே படித்தவர்கள். 'துகில் வெள்ளை வேட்டியுடனும், தீட்டிய திருநீறும், சந்தனமும், பளிச்சிடும் தோற்றத்துடனும் நுகவிலுக்கு அப்பாலிருந்து வரும் "ஐயர்ப்பொடியன்" ஆகத் தான் அவர் அறிமுகம் கிட்டியது. ஆனால் விரைவில் நண்பர்களாகி விட்டோம்.

பின்னர் 1950களின் பிற்கூற்றில் முற்போக்கு இலக்கிய இயக்கத்தின் நடவடிக்கைகளின் பொழுது திரும்பச் சந்தித்தோம். அப்பொழுது அவர் திருமணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திருந்தார். மாணவக் கால நட்பு, இயக்கத்தோழமையாக, குடும்ப நட்பாகப் பூத்துக்குலுங்கிற்று.

அதன் பின்னர் நட்பு, தொடர்ச்சி அறாது தொடர்கின்றது.

சோமு இன்று கொழும்புத் தமிழ் உலகின் ஒரு மிகமுக்கியமான பிரபலஸ்தர். அவர் சம்பந்தப்படாத வைபவங்களில்லை. அவர் பங்களிப்பு இல்லாத சனரஞ்சக இலக்கிய, கலை நிகழ்ச்சிகள் இல்லை.

சோமு இன்று மிகத்திறமை வாய்ந்த ஒரு "ஒழுங்கமைப்பாளராக" மேற்கிளம்பியுள்ளார். கொழும்பு முதல் தமிழகம் வரை தெரியப்பட்ட இலக்கிய நண்பராகி விட்டார்.

சோமுவின் எழுத்துத்திறனை மறைக்கும் அளவுக்கு அவரது சமூக ஆளுமை இன்று வளர்ந்துள்ளது.

சோமுவின் சாதனை என நான் கருதுவது, அவரின் இலக்கிய விழா ஒழுங்கமைப்புதிறன் ஆகும். 1959ம் ஆண்டு ஸாகிறாக்கல்லூரி முற்போக்கு எழுத்தாளர் சங்க மாநாடு முதல் இன்றுவரை பல இலக்கிய வைபவங்களைச் சீர் பட அமைத்து நடத்திய பெருமை அவரைச் சாரும். அந்த விடயத்தில் முக்கிய மைல்கற்களாக அமைபவை என நான் கண்டவை,

1963 யாழ்ப்பாணத்தில் நடந்த முற்போக்கு எழுத்தாளர் சங்கவிழா.
(குறிப்பாக யாழ்ப்பாணத்துச்சாமியார் கோயிலில் நடத்தியது).

1968 நாவலர் சிலையை யாழ்ப்பாணம் கொண்டு சென்ற விழா.

1972 இலங்கைக் கலாசாரப் பேரவையின் சாகித்தியவிழா.

1996 மு.போ.எ.ச.இலக்கியப் பேரரங்கு.

1996 சின்மயானந்த மிஷன் சுவாமிஜியின் வருகை விழா.

இதில் எழுபதுகளின் பிற்கூற்றில் அவர் சம்பந்தப்பட்டனவற்றையும், எண்பதுகளில், தொண்ணூறுகளின் முற்கூற்றில் இந்து கலாசார அலுவல்கள், அமைச்சின் நடவடிக்கைகளிற் சாதித்தவற்றையும் நான் கூறவில்லை.

இந்த விழாக்கள் ஒவ்வொன்றையும் நினைவுறுத்தும் விழா மலர்கள் இவரது தீட்சண்ணிய நோக்குக்கான எடுத்துக்காட்டுக்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோமுவின் சஷ்டியப்த விழாவின் பொழுது நான் பதிவு செய்ய விரும்புவது நானும் அவரும் சம்பந்தப்பட்ட, வரலாற்று முக்கியத்துவமுடைய ஒரு சம்பவத்தையாகும்.

1971–74 இல் நான் இலங்கைக் கலாசாரப் பேரவையின் தமிழ் இலக்கியக் குழுத்தலைவராக இருந்தேன். அந்த வேளையிலே தான் நாவலர் முத்திரை வெளியீடு நடந்தது. அதில் முத்திரைக்கான குறிப்பை எழுதுவது முதல் கண்காட்சி வரையுள்ள பல நடவடிக்கைகளிலே பங்கு கொள்ளும் வாய்ப்புக் கிட்டிற்று. நாவலரின் முத்திரையுடன் மகிந்தபாறன் ஜெயதிலக (?) வின் முத்திரையும் வெளிவந்தது. அதற்காக ஒரு வெளியீட்டு விழா கலாபவனத்தில் நடைபெற்றது. பேராசிரியர் பரண வித்தானவும் வந்திருந்தார். அந்தக்கூட்டத்தில் நாவலர் வசித்த இடத்தை வரலாற்றுப் பொக்கிஷமாகப் பேண வேண்டுமென்ற கருத்தினை முன்வைத்தேன். அப்பொழுது அமைச்சர்களாகவிருந்த குலதிலக்க அவர்களும் குமாரசூரியர் அவர்களும் அதிலே பேரார்வம் காட்டினார்கள். இந்தத் தூண்டுதல்களின் பின்புலத்திலே பிரேம்ஜி ஞானசுந்தரம் இருந்தார். ஞானவுக்கு ஊக்க சக்தி சோமு. நாங்கள் எங்களிடையே கலந்துரையாடியே கருமங்களை முன்னேடுத்தோம்.

ஒருநாள் திடீரென்று வேண்டுகோள் வந்தது. யாழ்ப்பாணம் சென்று, நாவலர் வாழ்ந்ததாகக் கருதப்படும் இடத்தைத் திட்டவட்டமாக அறிந்து, அதன் அன்றைய (1972) நிலை என்ன என்பதையும், அதனை அரசு சுவீகரிப்பதற்கு என்ன செய்யப்படவேண்டுமென்பதையும் முப்பத்தாறு மணித்தியாலங்களுள் தெரிவிக்க வேண்டும் என்று கூறப்பட்டது.

இந்தப்பயணத்தின் பொறுப்புக்களைப் பகிர்ந்து வேண்டியவற்றை வேண்டிய முறையிற் செய்வதற்கான வழிமுறைகளைத் தெரிந்தவர் நண்பர் சோமுதான்.

நானும் சோமுவும் ஒரு நாளிரவு, யாழ்ப்பாணம் பயணமானோம். அடுத்த நாட்காலை, உதவி அரசாங்க அதிபர் முருகேசுப் பிள்ளை, மேயர் துரையப்பா ஆகியோரின் உதவியுடன் ஏற்கனவே நமக்குத் தெரிந்திருந்த வைமன்றோட் நாவலர்றோட் சந்தியிலிருந்த நாவலர் வளவைப் பார்த்தோம். அப்பொழுது நாவலர் வாழ்ந்த வீட்டின் சுவர் சிதைந்த நிலையிலிருந்தது. அதனைப்பாதுகாப்பதற்குரிய சகல உத்திகளையும் பற்றி முருகேசுப் பிள்ளை அவர்களுடனும், அல்பிரட் துரையப்பாவுடனும் உரையாடினோம். இந்த விடயத்தில் சோமு தான் விஷயம் தெரிந்தவர். விவரம் தெரிந்தவர்.

இறுதியாகப் பண்டிதமணி கணபதிப்பிள்ளையைச் சந்தித்து அது பற்றிக் கேட்டோம். இந்தப் பயணத்தின் பொழுதுதான் நாவலர் பயன்படுத்திய சிலபொருட்கள், கைலாச பிள்ளையார் கோவில் முகாமையாளர்கள் பரம்பரையினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டில் இருப்பதையும் அறிந்தோம். அம்பிகை பாகன் அவர்களின் ஆலோசனைகள் பெரிதும் உதவின.

இந்தப்பயணத்தை முடித்துக் கொழும்பு திரும்பி அடுத்த நாளே ஓர் அறிக்கையைச் சோமுவும் நானும் கைச்சாத்திட்டு சமர்ப்பித்தோம்.

யாழ்ப்பாணத்தில் நாவலர் மண்டபம் கட்டப்படுவதற்கான தீர்ப்பு எடுக்கப்பட்டது. இடத்தைக் கண்டுபிடித்து, பூர்வாங்க ஏற்பாடுகள் பற்றிக் குறிப்பிட்ட அந்த அறிக்கையின் பிரதி என்னிடம் இல்லை. சோமு தன்னிடம் இருப்பதாகச் சொல்லியுள்ளார்.

பின்வந்த அரசியற் கருத்து வேறுபாடுகளாலும், அரசியல் மாற்றங்களாலும் எங்களுக்கும் அந்தச் செயல் திட்டத்துக்கும் தொடர்புகள் இல்லாமல் போயின.

ஆனால் அந்தப் பயணமும், அறிக்கையும் நாவலர் நினைவு மீட்பு வரலாற்றில் இடம் பெற வேண்டிய அடிக்குறிப்பு ஆகும்.

1960 களின் முற்கூற்றில், ஈழத்திலக்கிய வளர்ச்சித் தேவைகள் பற்றிய வரலாற்று வாசிப்புக்கள் நாவலரைத் தேசீய வீரராக்கின.

1960களின் பிற்கூற்றில் நாவலரை இந்த " இரட்டித்த" புகழோடு போற்றும் இயக்கம் ஆறுமுக நாவலர் சபையால் மேற்கொள்ளப்பட்டது. நீதிபதி சிவசுப்பிரமணியம் அதன் தலைவராக விளங்கினார். திரு.ஸ்ரீகாந்தா அதன் மிகமுக்கிய உந்து சக்தியாக விளங்கினார். நாவலரின் சிலை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லூர்க்கந்த சுவாமி கோவிலுக்கு முன்பே நிறுவப்பட்டது. அந்தப் பணிமிகவும் சிறப்பாகச் செய்யப்பட்டது. அப்பொழுது வெளியிடப்பட்ட "நாவலர் விழா மலர்" நாவலர் பற்றிய ஆய்வுக்கு மிக முக்கியமானது. அந்த முழுச் செயற்பாட்டிலும் சோமுவின் பங்கு மிகமிக முக்கியமானது.

சோமுவின் "நாவலர் சபைக் காலம்" மிகமிக முக்கியமான ஒன்றாகும்.

இச்சந்தர்ப்பத்தில் நாவலர் பற்றிச் சோமு 1974 (?) இலங்கைக் கலாசாரப் பேரவைத் தமிழ் இலக்கிய விழா மலரில் (இது அவர் பதிப்பித்தது) எழுதியுள்ள கட்டுரை பற்றிக் குறிப்பிட வேண்டும். அதன் தலையங்கம் 'சமய குரவரிலிருந்து தேசீய வீரர் வரை" என்று நம்புகிறேன். நாவலர் பற்றிய பரிமாண மாற்றங்களை வெளிக் கொணர்வதற்கு அக்கட்டுரை பெரிதும் உதவும்.

அந்த விழாவுக்கும், அந்த இலக்கிய மலர்ப்பதிப்புக்கும் சோமு ஆற்றிய பணிகள் மறக்கமுடியாதவை. அப்பொழுது நான் தமிழ் இலக்கியக் குழுத்தலைவராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தேன். மலரைத் தயாரித்து உதவுமாறு சோமுவை நட்புரிமையுடன் வேண்டினேன். மிக அழகான, மிக்க பெறுமதி வாய்ந்த ஒரு மலரைப்பதிப்பித்து உதவினார். அந்த நன்றியை நான் என்றும் மறக்க முடியாது.

சோமுவின் இலக்கிய நிலைப்பாட்டு ஓர்மம் பற்றிய ஒரு குறிப்பும் இங்கு அவசியம். 1963 இல் யாழ்ப்பாணத்தில் நடந்த சாகித்திய விழாச் சங்கங்களின் பின்னர் (முட்டையடிப்பு, கூட்டம் குழப்பியமை) யாழ்ப்பாணத்தில் முற்போக்கு இலக்கிய அணியினருக்கெதிரான பல உயர்மட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சோமு, சொக்கன், நந்தி முதலியோர் தான் அந்தத் தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்கள் ஆனார்கள். சோமு அதற்கு முகம் கொடுத்த முறைமை என்றும் மறக்க முடியாதது.

இன்று, சோமு ஒரு சமூக இலக்கிய நிறுவனம் ஆகியுள்ளார். அந்தத் தொழிற்பாட்டுக்கான ஒரு கணிப்புத்தான் இந்த விழா.

அவர் நீண்டகாலம் வாழ்ந்து இந்தப் பணிகளைத் தொடர்ந்து சிறப்புறச் செய்தல் வேண்டும்.

மணிவிழாக்காணும் சோமுவின் மனையாள் பத்மா பற்றியும், இவர்களது பிள்ளைகள் பற்றியும் ஒரு சிறுகுறிப்புக் கூறுவது அவசியம்.

பத்மா ஒரு நல்லாசிரியை. பாடசாலை அதிபராக விளங்கியவர். "காதல் ஒருவனைக் கைப்பிடித்து அவன் காரியம் யாவிலும் கை கொடுத்து" அவருடைய வளர்ச்சியினூடே தானும் தனது ஆளுமையை தன் பலத்தினால் வளர்த்துக் கொண்ட பெருமை பத்மாவினுடையது. பத்மாவின் சிறுகதைத் தொகுதி பற்றிய "இந்து" (The Hindu) விமர்சனம் அவர் திறமையை எடுத்துக் கூறியுள்ளது. இன்று அவர் பெண்கள் இயக்கத்தில் முக்கிய பணிகளைச் செய்கிறார்.

பத்மாவும் சோமுவும் இன்று போல் என்றும் வாழ்க.

பத்மா–சோமு தாம்பத்தியத்தின் "பேறுகள்" மூன்று ஆண்கள், ஒரு பெண். பெண்ணும், ஒரு ஆணும் திருமணம் செய்து வி டார்கள்.

நமது பண்பாட்டில் 'போந்த பொலிந்த மனிதன்" என்று சிலரை வாழ்த்துவதும் மகிழ்ச்சியுடன் வியப்பதும் வழக்கம்.

சோமு ஒரு பொலிந்த மனிதன். அவரது குடும்பம் நிறைவானது .


சோமுவின் புகழ் சிறக்க, அவர் மேலும் பொலிவுடன் வாழ நண்பர்கள் வாழ்த்துகின்றனர். அந்த வாழ்த்து ஒலிகளோடு எனது குரலும், எனது குடும்பத்தின் குரலும் இணைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் செய்த பாக்கியம் நண்பர் சோமகாந்தன்

"வரதர்"



**1957** ஆம் ஆண்டாக இருக்கலாம். இன்றைக்குச் சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் யாழ்ப்பாணத்தில் 'யாழ்ப்பாண எழுத்தாளர் சங்கம்' என்ற ஒரு இலக்கியக்கழகம் இருந்தது. அவ்வப்போது ஏதாவது இலக்கிய நிகழ்ச்சிகள் நடக்கும்.

ஒருமுறை ''கதையரங்கம்'' ஒன்று நடைபெற்றது. நாலைந்து எழுத்தாளர்கள் 'வெறி' என்ற தலைப்பில் தாங்கள் எழுதிய கதைகளைத் தாங்களே வாசித்தார்கள். என்னுடைய 'வெறி' என்ற சிறுகதை முதன் முதலாக அந்த அரங்கத்திற்றான் வெளிப்பட்டது.

அந்தக் கதையரங்கத்தில் பங்குகொண்டு கதை படித்தவர்களில் திருமதி பத்மா சோமகாந்தனும் ஒருவர்! அப்போது அவர் திருமதி சோமகாந்தன் அல்லர். செல்வி பத்மா பஞ்சனதேஸ்வரக் குருக்கள்'

வண்ணார்பண்ணை இந்துக்கல்லூரிக்கு முன்பாக உள்ள ஒட்டு மடம் வீதியில் பிரம்மஸ்ரீ பஞ்சனதேஸ்வரக் குருக்களின் வீடு இருந்தது. எனக்கு அவரைத் தெரியும். ஒழுக்க சீலரான, மரியாதைக்குரிய, நெடிதுயர்ந்த தோற்றமுள்ள பிராமணோத்தமர் அவர்.

எனக்குத் திருமணமான பிறகு செல்வி பத்மா பஞ்சனதேஸ்வரன் எங்கள் குடும்ப நண்பரானார். இளம் ஆசிரியையாக இருந்த அவர் அந்தக்காலத்தில் புகழ்பெற்ற ஒரு பெண்பேச்சாளருமாவார். பேசுவதைவிட, கதைகள், கட்டுரைகள் எழுதுவதிலும் முத்திரை பதித்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக்காலத்தில் இப்படி முற்போக்கான இலக்கியத் தரமுள்ள பெண்களை விரல்விட்டு எண்ணி விடலாம்.

செல்வி பத்மா, புகழ்பூத்த ஒரு நட்சத்திரமாக விளங்கிய போதுதான் அவருடைய திருமணம் நடைபெற்றது.

மணமகனாக வந்தவர் சோமகாந்தன்– திருமணத்தின் பின்பே அவர் எனக்கு அறிமுகமாகி பிறகு நெருங்கிய நண்பர் ஆனார்!

'ஈழத்துச் சோமு' என்ற சோமகாந்தன் –இந்த நண்பரை நினைக்கும்போது நெஞ்சமெல்லாம் நிறைகிறது! ஒரு அருமையான, அற்புதமான நண்பர் இவர்!

'புதினம்' என்ற சஞ்சிகையை நான் வெளியிட்ட போது ஆக்கபூர்வமான பல உதவிகளைச் செய்தது மட்டுமன்றி, 'களனி நதி தீரத்திலே' என்ற தொடர் கதையையும் புதினத்தில் எழுதியவர் இவர். 'வரதரின் பலகுறிப்பு', என்ற புதுமையான பாரிய வெளியீட்டை நான் வெளியிட்டபோது என்னோடு தோளோடு தோள் நின்றவர். அதன் நான்காவது பதிப்புக்கு இணையாசிரியராகவும் இருந்து புகழ்கொண்டவர்.

எதை யென்று சொல்ல?

என்னுடைய அறுபதாவது பிறந்த நாளுக்கு முன்தினம் என்னைச் சந்தித்து, "நாளைக்கு எங்கள் வீட்டுக்குச் சாப்பாட்டுக்குக் குடும்பத்தோடு வரவேண்டும். வேறு சில இலக்கிய நண்பர்களும் வருவார்கள்" என்று அழைப்பு விடுத்தார். அடுத்தநாள் அவருடைய வீட்டுக்குப் போய் இறங்கினால்,– அடேயப்பா, அங்கே மிகப்பெரிய விழா ஒன்று காத்திருந்தது! பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், பத்திரிகைக்காரர்கள் உட்பட யாழ்ப்பாணத்தின் குறிப்பிடத்தக்க எழுத்தாளர்கள் எல்லாருமே அங்கே கூடியிருந்தார்கள்.! வாழ்த்துரைகள் , மாலை மரியாதைகள், ஈற்றில் அனைவருக்கும் அறுசுவை உணவு– இப்போது நினைத்தாலும் நெஞ்சு நெகிழ்கிறது!

இந்த ஆண்டில் நான் யாழ்ப்பாணத்திலிருந்து புலம் பெயர்ந்து கொழும்புக்கு வந்திருந்தேன். இதை அறிந்ததும் நண்பர் சோமகாந்தன் ஏதோ திட்டமிட்டு எனக்குத் தெரியாமலே மளமளவென்று பல ஏற்பாடுகளைச் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பலன்? ஒரு மாதத்துக்குள்ளாகவே என்னுடைய இரு நூல்கள் வெளியாகின! இ.மு.போ. எழுத்தாளர் சங்க விழாவிலே எனக்கு மிகப் பெரிய அளவில் ஒரு பாராட்டு விழாவும் நடந்தது!

என்னை ஒரு உதாரணத்துக்காகக் காட்டினேன். இலக்கிய நண்பர்கள் எல்லாரையுமே மிகவும் நேசிக்கிற ஒரு உயர்ந்த மனிதர் சோமகாந்தன்! ஒரு நிகழ்ச்சியை நடத்துவதென்று திட்டமிட்டு விட்டால் அந்தக்கணம் முதலே அசுரவேகத்தில் செயலாற்றத் தொடங்கி, அதை நிறைவேற்றுகிற வரையில் ஓய்வின்றி அலைகிற மனிதர். அதனால் தமது உடல் நலத்தையும் பெரிதாகவே கெடுத்துக் கொண்டவர்.

'ஈழத்துச்சோமு' என்ற நண்பர் சோமகாந்தன் இலக்கிய நண்பர்களுக்கிடையே ஒரு நல்ல பாலமாக அமைந்திருப்பது மட்டுமன்றி தாமே ஒரு சிறந்த எழுத்தாளராகவும் விளங்குவது மகிழ்ச்சிக்குரியது.

நான் முதலில் குறிப்பிட்ட இவருடைய துணைவியார் திருமதி பத்மா தமது கணவரின் காரியங்கள் யாவிலும் கைகொடுத்து, அவரை உயர்த்தி நிற்பது மட்டுமன்றி, தாமும் உயர்ந்து வருகிறார். இத்தகைய இலக்கியத் தம்பதியரை காண்பது அரிதினும் அரிது!

நண்பர் சோமகாந்தன் இப்போது தமது வாழ்வில் அறுபது ஆண்டுகளை நிறைவுசெய்துள்ளார். அதில் பெரும்பகுதியை அவர் இலக்கிய உலகத்திற்குத் தந்திருப்பது தமிழ் செய்த பாக்கியம்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவருக்கு வயது அறுபது

கலாநிதி, வித்துவான் க.ந.வேலன்



மனம் என்பது ஓர் அந்தக்கரணம். அதாவது புறத்தில் இருக்கும் ஐம்பொறிகள்போல அகத்தில் இருக்கும் உறுப்புகளுள் ஒன்று; அற்புதமான ஒரு படைப்பு. இந்த உறுப்பினாலேதான் மனிதன் சிறப்படைகிறான். மன வளர்ச்சியே மனித வளர்ச்சி.

உயிரினக் கூர்ப்பு வரலாற்றில் மனித இனத்தின் புறநிலைக் கூர்ப்பு ஓரளவு நிறைவு பெற்றுவிட்டது என்று கொள்ளலாம்.

மென்டலிசம் என்னும் கலப்பியல் விஞ்ஞானம், புற உலகில் பல புதுவிளைவுகளை ஏற்படுத்தியுள்ளது என்பது உண்மைதான்.

ஆனால் அகஉலகக் கூர்ப்பு நடைபெற்றுக் கொண்டேயிருக்கிறது. புறஉலகக் கூர்ப்புக் கண்ணுக்குப் புலப்படுவது போல இது வெளிப்படையாகப் புலனாவதில்லை. இந்தக் கூர்ப்பு மனத்தைத் தளமாகக் கொண்டு நடைபெறுகிறது.

இதனை வள்ளுவர், " மனத்தானாம் மாந்தர்க்கு உணர்ச்சி" என்றார்.

அறிவு, உணர்வு என்னும் இரண்டில், அறிவு, புறஉலக வளர்ச்சிக்குத் துணைபுரிவதுபோல, அகஉலக வளர்ச்சிக்குத் துணைபுரிவது உணர்ச்சியாகும்.

அரம்போலும் கூரிய அறிவுடையவர்களிடமும் மரம்போலும் மக்கட் பண்பற்ற செயல்களைக் காண்கின்றோம். இத்தகைய நுண்மாண் நுழைபுலம் உடையவனா இத்தகைய கொடூரத்தைச் செய்தான்! என்று மருள்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குக் காரணம் என்ன? பண்பட்ட உணர்ச்சி இல்லாமையே காரணம். பண்பட்ட உணர்ச்சி ஒருவனிடம் தோன்ற வேண்டுமானால் பண்பட்ட மனம் அமையவேண்டும்.

அதாவது மனம் வெளுக்க வேண்டும்; மனத்தைச் சலவை செய்ய வேண்டும். இதனையே சான்றோர்கள் செய்தனர். இதுவே சிந்தனைப் புரட்சி. இதுவே முற்போக்கு.

புரட்சிக் கவி பாரதியார்

*துணி வெளுக்க மண்ணுண்டு*
*தோல் வெளுக்கச் சாம்பருண்டு*
*மணி வெளுக்கச் சாணையுண்டு (ஆனால்)*
*மனம் வெளுக்க வழியில்லை- எங்கள் முத்து*
*மாரி அம்மா, எங்கள் முத்து மாரி*

என்பார்.

மனம் வெளுக்காதவர்களால் வீட்டிலும் நிம்மதி இல்லை. நாட்டிலும் நிம்மதியில்லை. மனம் வெளுக்காதவர்கள், பெரிய பெரிய பதவிகளில் வீற்றிருக்கிறார்களே.

இவற்றை உணர்ந்து கொதித்த ஓர் இளைஞர் கூட்டம், ஆகா! என்று எழுந்ததுபார் யுகப் புரட்சி செய்ய. வாளை விடக் கூர்மையானது பேனாமுனை என்பதை உணர்ந்திருந்தது அக்கூட்டம்.

துப்பாக்கி ரவைகளை விடத் துளைத்துச் செல்லும் சிந்தனைவேகம் அவர்களிடமிருந்தது. தொல்காப்பியர் அன்றே கூறியதுபோல, 'கண்ணினும் செவியினும் நுண்ணிதின் உணரும் அகக் காட்சியும் எஃகு செவியும் அவர்களிடம் வாய்த்திருந்தன.

இதனால் வானத்து எழும் நல்லோசைகள் இவர் செவிக்குப் புலனாயிற்று.

பாரதி கூறுவதுபோல, 'வானம் பார்த்தறியாத குருடரெல்லாம் கவிஞர்' என்று வலம் வந்த காலத்தில் இந்தப் புதுப்புனல் வெள்ளம் புகுந்து பாயத் தொடங்கிற்று.

பயிர்களுக்கு மாத்திரமல்ல. உண்ணும் நீராகத் தாகந்தீர்த்துப் பசியும் போக்கிற்று.

இந்தப் புதுப்புனல் கொண்டுவந்தவர்களுள் ஒருவரே ஈழத்துச் சோமு, சோமகாந்தன். அவருக்கே வயது 60!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மக்கள் தென்னிந்தியாவில் செறிந்தும் உலகின்பல பாகங்களில் பரந்தும் வாழ்கின்றார்கள். இவர்களுள் ஈழத்துத் தமிழ்மக்கள் ஒருவகையில் புதுமையானவர்கள், முற்போக்கானவர்கள், புரட்சிகரமான சிந்தனையுடையவர்கள்.

*பாரதி கூறுவதுபோல,*

*சார்வினுக்கு எல்லாம் தகத்தக மாறுவார்கள்*
*ஆனால், தன்மையும் தனது தருமமும் மாறாதவர்கள்*
*தொன்மையவாம் எனும் எவையுமே நன்றாகா என்பதையும்*
*இன்று தோன்றிய நூல் எனும் எவையும் தீதாகா என்பதையும்*
*கூர்த்த மதியால் உணர்ந்தவர்கள்.*

புதுமையை உள்வாங்கித் தம்வயப்படுத்திக் கொண்டவர்கள்.

மாற்றுவதற்கு முன்பே மாறிவிடக் கூடியவர்கள்.

இவற்றால் சோமகாந்தன் போன்ற முற்போக்குச் சிந்தனையாளர்களின் சிந்தனைகள் விரைந்து விழுமியங்களாயின. இருந்தும் ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னிருந்த ஈழத்துத் தமிழ்ச் சமுதாயத்தில் சோமகாந்தன் போன்றவர்களின் பணி சுலபமானதல்ல.

பிராமணர்கள் வைதீகர்களாகத் தானிருக்க வேண்டும். வைதீகம் என்றால் பிற்போக்கு. அங்கிருந்து ஒருமுற்போக்குத் தோன்ற முடியுமா? தோன்றியதுதான் புதுமை.

இந்தப்புதுமைக்கு ஓர் உந்துசக்தியாக, ஒரு புதுமைப்பிரியையான பத்மா சோமகாந்தனையும் கூட்டுச் சேர்த்தது தான் திருவருள்!

சோமகாந்தனைப் பிரித்துப் பார்க்க முடியவில்லை. சக்தி வேறு, சிவம் வேறா? இந்தச் சக்தி அறிவுத்தாகத்தால் நாவறண்டு நீர் வேட்கையால் யாழ்ப்பாணத்துச் சிந்தனை ஊற்றுக்களைத் தேடி அலைந்ததை நான் அறிவேன்.

அவருடைய அந்த யானைப்பசிக்கு முற்றிய செங்கரும்புக் கட்டுக் கிடைத்தது.

அந்தச் செங்கரும்புக் கட்டுக்குத்தான் வயது 60! ஆன்மாவுக்கு வயது எது? அறிவுக்கு வயது ஏது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோமு என்ற காந்தம் பத்மா என்ற புதுமை

"நந்தி"



எங்கள் தலைமுறையில் சோமு–பத்மா என்ற இலக்கியச் சோடி நமக்குக் கிடைத்த செல்வங்களில் ஒன்றாகும். இலக்கிய உலகில் சோமு ஒரு சக்தி. நாற்பது வருடங்களாக அந்தக் காந்த சக்தி, சிறிய குடும்ப வட்டங்களிலிருந்து மாபெரும் இலக்கிய விழாக்கள் வரை விருந்து, பாராட்டு, அறிக்கை, அறிமுகம், விழா, ஊர்வலம், பெருவிழா என்று இயங்கியிருக்கிறது. இப்படியான கைங்கரியங்களை ஆரம்பிப்பது சோமுவாக இருக்கும். அல்லது ஆரம்பிப்பவர் முதலில் தொடர்புகொள்வது சோமுதான்.

சோமுவுக்குக் கடமைப்பட்டவர்கள் பலர். சோமுவின் எழுத்து முயற்சிகளே சகோதர எழுத்தாளரை அறிமுகப்படுத்துவதிலே தொடங்கியது. பலரின் ஊரும், பெயரும், படமும் உலகிற்குத் தெரியவந்தது அவராலேதான். இலக்கிய நண்பர் சிலரின் நிகழ்வுகள், வெறும் குடும்ப, கோவில் வைபவங்களாக மாறாமல், பாராட்டு விழாவாக வானொலி, பத்திரிகை அறிமுகங்களாக, நூல்–மலர் பதிவுகளாகப் பெருமை அடைந்ததற்கு அவர், அவரே பின்னணிக் காரணரும், அடிப்படைச் சக்தியும் ஆவார். அந்தச் சக்தியின் சக்திதான் பத்மா !

எனது விஷயம் ஓர் உதாரணம்:

நான் 1988 இல் 60 ஐ கண்டேன். எல்லா வருடங்களைப் போல் அன்றும் எனது மனைவி என் பெயரில் ஓர் அர்சனை செய்திருப்பா. ஆகக்கூடியது எனது அலுவலகத்தில் பத்துப் பேருக்கான ஒரு கேக் வெட்டப்பட்டிருக்கும். ஆனால்,அந்த நாள் ஒரு பெருவிழாவாகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைப் பற்றிய 25 கட்டுரைகள் கொண்ட அழகிய நூலாக எனது கதை தெரியவந்ததும் யாரால்? மறக்க முடியுமா இவர்களை?

எனது சொந்த விஷயத்தை ஏன் எழுதினேன்? காரணம், சோமு–பத்மா தம்பதிகளின் இந்த அன்பின் செயற்பாட்டிற்கு நானும் எனது வைபவமும் மட்டுமல்ல உதாரணங்கள்.

'டொக்டர், ஜுவாவிற்கு ஏதாவது செய்ய வேண்டும்' என்று வருவார். அப்படியே வரதருக்கு, சிவத்தம்பிக்கு..... சோமுவின் 'ஏதாவது' என்பதற்குப் பயங்கரமான அர்த்தம் இருக்கும். அது ஒரு மினி இயக்கமாக மாறும். தொடர்புகள் தொடங்கும். மோட்டார் சைக்கிள் மூலம், கடிதம், தந்தி, டெலிபோன் மூலம். சிவகுருநாதன், ஸ்ரீதரசிங், பிரேம்ஜி, மேமன்கவி, பாலச்சந்திரன்..... குலைச் சீன வெடியில் ஒன்றைப் பற்ற வைத்தது போல் தொடர்புகள் வெடிக்கும். கடைசியில் விழா. விழா முடிவிற் சோமு எல்லோருக்கும் நன்றி சொல்லுவார். அவருக்கு நாம் நன்றி சொன்ன ஞாபகம் இல்லை.

இனி, இலக்கிய இயக்கம் என்ற நிலையில் சோமுவின் பங்கு சரித்திரம். ஒருவர் அங்கும் இங்குமாகக் கைகொட்டிக் கரகோஷம் கிளம்புவதில்லை. தொட்டம் தொட்டமாக மரங்கள் நின்று தோப்பும் உண்டாவதில்லை. அதே போல், நமது நாட்டிலே தன்னந் தனியனாக எழுத்தாளர் நின்று சமூகத்தின் புரையோடிய பொல்லாங்கைக் காட்டுவதும், பரிகாரம் தேடுவதும் இயலாததாகும். இதை உணர்ந்து, தோன்றி இயங்கிய இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் சாதனைகள் முக்கியமாக 1960 களில் மறக்கமுடியாதனவாகும். சாதனையாளர்களில் முக்கியமான ஒருவர் சோமு.

சோமு அரசியல் இயக்கச் சிந்தனைக்கும், பாரம்பரியத்திற்கும் பாலமாக இருந்தார். சாதியின் மிக உயர்ந்த மட்டத்திலிருந்தும் மனிதாபிமான சிந்தனை வரமுடியும் என்று காட்டினார். அவரால் இ. மு. எ. சங்கம் பல முனைகளில் வி  பகம் அடைந்தது.

சோமு–பத்மா தம்பதிகள் காலத்திற்குக் காலம் புதிய புதுமையுடன் இயங்கி வருபவர்கள். எழுத்தாளர்களாக, பேச்சாளர்களாக, ஒலிபரப்பாளர்களாக, ஒளிபரப்பாளர்களாக, சமயப் போதகர்களாக, பத்திரிகை ஆசிரியர்களாக இன்றும் சமூகத்திலே அவர்களின் பங்களிப்புப் பெரிதாகும்.


நாம் அவர்களுக்குத் தாமதமாக எடுக்கும் இந்த விழாவில் எனது மனப்பூர்வமான ஆசிகளைத் தெரிவித்து மகிழ்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்மாகாந்தன் என்னும் சோமகாந்தன்

'சொக்கன்'



சில நாள்களுக்கு முன்னர் 'சொக்கன் கதை' என்ற வாழ்க்கை வரலாற்று நூல் ஒன்றினை வாசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அது என் கதையல்ல. டெல்கி பல்கலைக்கழகத்திலே தமிழ்ப் பேராசிரியராய் இருந்தவரும், சிறந்த கவிஞர், கட்டுரையாளர், புரட்சிப் போக்கினர் என்றெல்லாம் இசை போக்கியவருமான சாலய் இளந்திரையன் (இது அவரது புனைபெயர்) தமது உண்மைப் பெயரான சொக்கலிங்கம் என்பதைச் 'சொக்கன்' எனக் குறுகத்தறித்துப் படர்க்கையாகத் தமது சொந்தவரலாற்றினையே 'சொக்கன் கதை' என்ற நூலாய் வடித்துள்ளார். சாலய் இளந்திரையன் தமிழ்ப் பேராசிரியர். அவரின் பாரியாரான சாலினி இளந்திரையன் (கனகவல்லி என்பது அவரின் சொந்தப் பெயர்) டெல்கியில் திருவேங்கடவன் கல்லூரியிலே தமிழ்ப் பேராசிரியராயும், முதல்வராயும் விளங்கியவர். இவ்விலட்சியத் தம்பதியர் பெற்ற கல்விப்பட்டங்களாலும் எழுத்தாற்றலாலும் சரிநிகர் சமமாய் விளங்கி வருபவர்கள். (எம்.ஏ, எம்.லிட், பிஎச்.டி) சாலய் இளந்திரையன், மூச்சுக்கு முந்நூறு தடவைகள் என்று சொல்லுமளவுக்கு முதலிலிருந்து முடிவுரை, தமது உயிர்த்துணைவியின் புகழையும் இன்றியமையாமையையும் நூலிலே காவியச் சுவையுடன் விபரித்துச் சென்றுள்ளதைப் படிக்கையில் என் உடல் புல்லரித்தது.

"என்னவள் பண்பை விரித்திடவோ- அவள்
ஏற்றும் ஒளியைக் குறித்திடவோ
என்றும் புதுமை புதுப்புதுமை -அவள்
என்னகத் துள்ளே பழம்பழமை!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இது சொக்கனின் பாட்டு, தொடக்கக் காலப் பாட்டு, இறுதிக் காலம்வரை அவருடைய இதயத்தின் ஒவ்வொரு துடிப்பிலும் எதிரொலித்துக் கொண்டிருந்த பாட்டு".

சாலய் இளந்திரையன்– சொக்கன் கதை– பக்.804–சாலை அச்சகம்
11, திருவீதியான் தெரு, கோபாலபுரம்– சென்னை 600086

இந்நூலை வாசித்தபொழுது என் மனக்கண்களின் முன்பு பவனி வந்த இலட்சியத் தம்பதியர் திரு.திருவாட்டி சோமகாந்தன் ஆகியோர் தாம், சோமாஸ்கந்தன் சோமகாந்தனாகிப் பத்மாகாந்தனாய்ப் புனர் ஜென்மம் பெற்று இருவரும் அத்துவிதராய் வாழ்ந்து வருகின்றார்கள் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை. இவர்களை ஈழத்துச் சாலய் இளந்திரையர் என்று சொல்லி இவர்களின் அன்பிணைப்பினை –ஒன்றிணைப்பினைக் கொச்சைப்படுத்த நான் விரும்பவில்லை. ஒருவரான இவர்கள் அந்த ஒருமைநிலையிலேயே ஆயிரம் பிறைகளையும் காணல்வேண்டும் என்று உளங்கனிந்து வாழ்த்துகின்றேன்.

நண்பர் சோமகாந்தன், பத்மாகாந்தன் மட்டுமல்லர். அவர் விழாக் காந்தனுமாவார்! தம் நண்பர்கள் பலருக்கும் மணிவிழாக்களும் பாராட்டுவிழாக்களும் எடுத்து விழாவையும் தமது காதற்றலைவியாகக் (சின்னவீடு என்று சொல்லலாமா?) கொண்டவர் என்பேன். இத்தகைய விழா (வின்) நாயகர் தம் உயிர்த்துணையோடு மணிவிழாக் காணும் கோலாகல வைபவத்திற் கலந்து கொள்ள வாய்ப்புக் கிட்டாவிடினும், எழுத்தாளனுக்குக் கைகொடுப்பதாகிய கற்பனையிற் கண்டு களித்து, திரு. திருவாட்டி சோமகாந்தனுக்கு எனது இதயங்கனிந்த மணிவாழ்த்துக்களை மிகுந்த மனமகிழ்ச்சியோடு சமர்ப்பித்து, அவர்கள் தம் கால்வழியினரோடும், கனிவு மிக்க உற்றார் உறவினர்களோடும் பல்லாண்டு பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டு பல கோடி நூறாயிரம் காலம் நிலைத்திட நல்லை முருகனின் மலரடிகளைப் பணிகின்றேன்.

*வாழிய சோம காந்தனும் அவரின்*
*மனைவிளக் கெனஒளி காலும்*
*ஆழிய அன்பின் பாரிபத் மாவும்*
*அன்னவர் மக்களும் என்றும்*
*வாழிய அவர்க்கு மணிவிழாக்காணும்*
*மாண்புசார் நண்பரும் நலமார்*
*ஏழிசை யாயும் இசைப்பய னாயும்*
*இலங்கிடும் இறையருள் இணைந்தே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலரின் ஆர்வலர்

'கலைப்பேரரசு' ஏ.ரி. பொன்னுத்துரை



எழுத்தாளர் சோமகாந்தன் ஒரு சுந்தர புருஷன். செந்தண்மை பூண்ட மனிதன். பேனா மன்னர்களைப் பெரிதும் நேசிப்பவன். கலைஞர்களுக்குத் தனியிடம் இதயத்திலே தருபவன். வல்ல எழுத்தாளன். பெரிய விழாக்களை, மகாநாடுகளைத் திட்டமிட்டுப் பாடுபட்டு, பிரமிக்குமளவுக்கு நடாத்த வல்ல ஆளுமை மிக்கவன். இவரது தொழிற் பாட்டைக் கலை இலக்கிய உலகு உவந்து, வரவேற்றுப் பயனடைந்தது.

முப்பது ஆண்டுகளுக்கு முன் யாழ் முற்ற வெளியில் ஆறுமுக நாவலர் பெருவிழா (மகாநாடு) மூன்று தினங்களாகக் கொண்டாடப்படுகிறது. மகரதோரணப் பந்தலின் கீழே குவிந்து, அமர்ந்து மக்கள் கூட்டம் பேரறிஞர் உரைகளைச் சுவைக்கிறது.

இறுதிநாள் நன்றி கூறும் நிகழ்வுக்குச் சந்தன நிற இளைஞன் சுந்தர உடையில், மாப்பிள்ளை போல அரங்குக்கு வருகிறார். கணீர் என்ற குரலிற் பேசுகிறார். அவர் வேறுயாருமல்லர். எமது எழுத்துலக நண்பர் சோமகாந்தன் தான். பேச்சுக். களைகட்டியது. பெருவிழாக்களை வெற்றிகரமாக அமைப்பதில் உள்ள நுட்பதிட்பங்களை அவரது உரை உணர்த்தியது. 'வல்லவன் ஆற்றல் மிக்கவன்' என்பதை உணர்ந்தோம். கூட்டத்தோடு கூடி நின்ற இரசிகமணி கனக செந்திநாதன் முகத்தில் ஒரே கலகலப்பு!

ஆறுமுகநாவலர் விழாச் சபைத் தலைவர் இலங்கை அரசின் நிர்வாக சேவையில் மிக உயர்பதவி வகித்த திரு ஸ்ரீகாந்தா C.C.S அவர்களாவர். அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே முன்வந்து, சிபார்சு செய்து, சோமகாந்தன் அவர்களை விழாக்குழுச் செயலராக அமர்த்தினார் என்றால், அதை விடப் பெருமை வேறு என்ன தான் இருக்கிறது. ஒரு செயல்வீரனுக்குத்தான் இன்னொரு வலுவான செயல்வீரனைத் தேர்ந்தெடுக்கும் நுட்பம் விளங்கும்.

மூத்த எழுத்தாளர்களுக்கு மணிவிழாவா, கலைஞர்களுக்கு கௌரவ விழாவா, பரிசளிப்பு விழாக்களா சோமகாந்தன் அவர்கள் முன்னணியிலே திகழ்வார். அடக்கப்பண்புடன் பொறுப்பான பணிகளைப் புரிந்து புளகிப்பார். இலக்கியச் சந்திப்புக்களில், கலை விழாக்களில், மற்றும் சங்கம், சபைகளின் பொது நிகழ்வுகளில் பேச்சாளராகவோ, சுவைஞராகவோ பங்குகொண்டு கனதியாக்குவார். சங்கமத்தை வரவேற்கும் இவர் ஒரு இலட்சிய வாதியே.

இவரது இல்லத்தில் அடிக்கடி சந்திப்புகள் நிகழும். தேநீர் விருந்தாக, மதியபோசனமாகக் கலந்துரையாடல்களாக அமையும். இவற்றிலே கலை இலக்கிய கர்த்தாக்களை, ஆர்வலர்களை பெருந்தொகையாய்க் காணலாம். கலைஞரைப் போற்றுதல் இவரது இரத்தத்துடன் ஊறிய பண்பெனலாம். விருந்தோம்பும் இல்லறப்பண்பு இவரது இல்வாழ்வில் விஞ்சி நிற்பதற்கு, பாரியார் பத்மா சோமகாந்தனின் ( நல்ல பேச்சாளர், எழுத்தாளர்) நிறைந்த உள்ளமும், முன்னனிப் போக்கும் மூலகாரணங்களெனலாம்.

இவர் எழுத்துலகிலே கால்வைத்து, சிறுகதை, நாவல், கட்டுரை, எனப் பல ஆக்கங்களைத் தந்துள்ளார். "கலை கலைக்காகவல்ல சமூக மேம்பாட்டிற்கே உரியது" என்ற குறிக்கோளுடன் எழுந்த இவரது சிருஷ்டிகளிலே, சமூகப் பிரச்சினைகள் அலசப்பட்டன. அடக்கு முறை, ஏற்றத்தாழ்வு என்பவற்றைச் சாடும் வகையில் இவரது பேனா தொழிற் பட்டது. கிராமியப் பாத்திரங்களைத் தத்ரூபமாகச் சிருஷ்டித்து இயல்பான நிகழ்வோட்டங்களில் நகர்த்தி, யதார்த்த வார்ப்பாக மண்வாசனையுடன் தந்துள்ளார். விமர்சன வீச்சுள்ள கட்டுரைகள், வல்லவர், நல்லவர் வரலாற்றுக் கட்டுரைகள் பல ஏடேறி வந்தன. பயன்தந்தன.

இங்கிதமான உரையாடல் இவரது இன்னொரு நற்பண்பு. நண்பர்கள் கூட்டத்துக்குக் குறைவே இல்லை. நட்புநிலையில் கற்பினைப் பேணுகிறார். இளமை முதல் நேசித்த வரதர், சொக்கன், டொமினிக் ஜீவா போன்ற பல பிரபலஸ்தர்களிடம் காட்டிய அன்புப் பிணைப்பில் இன்றும் இறுக்கம் இருக்கிறது. அன்றும் முற்போக்கு எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்க உறுப்பினர். இன்றும் விசுவாசமாகத் தொழிற்படும் உறுப்பினர். நீண்டகாலம் ஒரு நிறுவனத்திலே தொடருதல், உழைத்தல் என்பதில் ஒருவித கற்புநிலையைக் காண முடிகிறது.

கருத்தால் மாறுபட்ட கலைஞர்களைப் புண்படுத்திக் கருகவைக்குமளவுக்கு விமர்சிப்பது இவரது போக்கல்ல. சுயம் என்ற வட்டத்திற் சுழராமல் சமூகப் பிரக்ஞையுடன்தான் மற்றையோரும் பொது வாழ்வுக்கு வருகின்றனர் என்ற கருத்தினாலோ என்னவோ, நாகரீகமான முறையில் நற்பண்பு இழையோட்டத்துடன் தன் நிலைப்பாட்டினை, கருத்துக்களை முன்வைப்பார். வாழ்நாளை வீணாக்காமல் செந்தண்மை பூண்டு, ஞாலம் செழித்திட, நற்பணி புரிகின்ற பெருமகன் தான் சோமகாந்தன் அவர்கள்.

மணிவிழாச் சிறப்புற வாழ்த்துவோம். அநுபவ முதிர்ச்சியுடன் ஆக்கப்பணிகளில் இரட்டிப்பு வீச்சினை எதிர்பார்ப்போம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துச் சோமு என்ற இலக்கிய ஆர்வலர்

இலக்கியச் செம்மல் செ. குணரத்தினம்
தலைவர், கொழும்புத் தமிழ்ச் சங்கம்.



தமிழ்நாட்டில் "மணிக்கொடி" காலம் போல, ஈழத்தில் மறுமலர்ச்சிக்காலம் ஒன்று மலர்ந்திருந்த அடிச்சுவட்டில் எழுந்த எழுத்துலக விழிப்புணர்வில் மலர்ந்த மலர்களில் ஈழத்துச் சோமு என்ற எழில் மலரும் ஒன்று. சோமு அவர்களை அவர் எழுத்தின் மூலமே நான் முதலில் அறிந்தேன் என்பது உண்மை. இராஜாஜி, கல்கி இவர்களின் நன்மதிப்பைப் பெற்றுச் சிறந்த கலாமேதையாகவும், கவிஞராகவும் தமிழ்நாட்டில் விளங்கிய சோமு என்ற எழுத்தாளரை ஓரளவுக்குத் தெரிந்திருந்த காலத்தில், ஈழத்துச் சோமு என்ற எழுத்தாளர் ஒருவர் தமக்கேயுரிய தனித்தன்மைகள் பரிணமிக்க ஈழத்தில் படைப்பிலக்கியவாதியாக எமக்கு அறிமுகமானார். அவரது எழுத்தின் சிறப்புக்களையும், அதிலும் சிறப்பாக அவரது சிறுகதைகளையுமே யாம் முதலில் அறிந்துகொள்ள முடிந்தது. இந்த அறிமுகம் 'மல்லிகை' என்ற இதழின் மூலமாக ஏற்பட்ட ஒன்றாகவே நான் எண்ணுகின்றேன்.

அதன்பிறகு கொழும்பிற் சோமுவை நேரிலேயே காணும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. நான் பிரதேச அபிவிருத்தி, இந்துகலாசார, தமிழ் அலுவல்கள் அமைச்சின் செயலாளராக இருந்த காலத்தில், பல இலக்கிய முயற்சிகள், புத்தக வெளியீடுகள், சமய சமூக வளர்ச்சிகருதிய இயக்கங்கள், சங்கங்கள் முதலியவற்றுடன் பரிச்சயம் ஏற்பட்டது. எமது அமைச்சு ஆரம்பித்து வைத்த பல பணிகளை, அதன் வாரிசாகப், பின்பு அமைந்த இராஜாங்க அமைச்சு பலகோணங்களில் வளர்த்தும் போற்றியும் செயற்பட்டது. அக்காலத்தில் சோமு அவர்கள் இராஜாங்க அமைச்சில் உயர் அதிகாரியாக பணியாற்றிக் கொண்டிருந்தது மட்டுமல்லாமல், அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சின் செயற்பாடுகளின் மையமாகவும், அதன் உந்துசத்தியாகவும் விளங்கிப் பல துறைகளில் தமது தனித்துவ முத்திரையைப் பொறித்துள்ளார். அக்கால அமைச்சின் சேவைகளில் முக்கிய பங்கெடுத்துப் பலதுறைகளில் சோமு அவர்கள் உத்வேகமாகப் பணியாற்றினார்கள்.

அதன்பின் சோமு அவர்கள், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் முக்கிய பிரமுகராகச் செயற்படுவதைக் கண்டு மனம் மகிழ்ந்தேன். இந்த நாட்டின் இலக்கிய வரலாற்றில் ஆழமான பங்களிப்பைச் செய்து சரித்திரம் படைத்த இயக்கம் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம். பழைய மரபில் இருந்து விலகி புதிதாய் வளரும் இலக்கியப் போக்குகளுக்குக் களம் அமைத்து ஈழத்தமிழ் வளர்ச்சிக்குக் கணிசமான பங்களிப்பைச் செய்ததோடு, புதிது புதிதாக மலர்ந்த இலக்கியச் செல்வங்களை இந்தநாட்டு இலக்கிய வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்து இந்த இயக்கம் உரமூட்டியது. பிரேம்ஜி ஞானசுந்தரனின் வழிகாட்டலில் சரித்திரம் படைத்த இயக்கத்தின் நிர்வாகச் செயலாளராக இருந்து பல இலக்கிய முயற்சிகளைச் சோமு அவர்கள் முன்னெடுத்துச் சென்றுள்ளார்கள்.

மரபு இலக்கியத்தில் தேங்கி நின்ற தமிழ் வளர்ச்சியை மீண்டும் முன்னெடுத்துச் சென்று வளர்ச்சிப்பாதையில் அழைத்துச் சென்ற பெருமை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துக்கு உரியது என்றால், அதன் வளர்ச்சியில் கணிசமான பங்களிப்புச் சோமுவுக்கு உண்டு. எதிர்காலத்தில் ஈழத்து இலக்கிய வளர்ச்சியின் இக்கால கட்டத்தை எழுதுபவர்கள் இவர்களின் பணிகளைப்பற்றி நிச்சயமாகப் பேசுவார்கள்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக யான் 1990 ஆம் ஆண்டிலிருந்து பணியாற்றிக் கொண்டிருக்கும் இக்காலத்தில் எமது சங்கத்துக்கும் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துக்கும் இப்பொழுது இருக்கும் உறவு போல் எப்பொழுதும் இருந்ததில்லை என்று கூற விரும்புகின்றேன். மரபு சார்ந்த பண்டித நெறிநின்ற தமிழ்ச்சங்கமும், முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் முரண் இல்லாத ஒட்டுறவுடன் தமிழ் வளர்த்தது இக்காலத்திலேயே. இதற்கு தமிழ்ச்சங்கத் தலைவராக இருந்த எனக்கும், முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தைச் சேர்ந்த பிரேம்ஜி, சோமு ஆகியோருக்குமிடையே மலர்ந்த நட்பும், நேசமுமே அடித்தளமாக இருந்தது என்பேன்.

சோமு முற்போக்குச் சிந்தனை கொண்டவராக இருந்தாலும், மரபு போற்றும் இலக்கியங்களுக்கு எதிரான ஒருவரல்ல. உண்மையில் அண்மைக்கால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாளர்களில் சோமுவிடமே மரபுபோற்றலும், முற்போக்குச் சிந்தனைகளும் நிறைவாகச் சங்கமமாகின என்று கூறமுடியும்.

அவரது எழுத்து நடை இதனை உணர்த்தும். அண்மைக்காலத்தில் அவர் வெளியிட்ட பிரயாண நூல் என்று கூறத்தக்க 'பொய்கை மலர்' என்ற நூலில் அவர் கையாண்ட மொழிநடை அபூர்வ அழகும், கவர்ச்சியும் மிக்கது.

கோவில் சூழ்நிலையைச் சொல்லும் லாவகமும், பூஜா கிரியைகளை வர்ணிக்கும் விதமும், பக்தியுள்ளம் கொண்ட யாத்திரீகர்களின் மனோ நிலையைச் சித்திரிக்கும் உணர்வு பூர்வமான விஸ்தார எழுத்தோவியங்களும் சோமு என்ற எழுத்தாளனின் பன்முகப்பட்ட ஆளுமையைக்காலம் காலமாக விகர்சித்து நிற்கும் என்பது உண்மை.

சாதாரணமாகப் படைப்பிலக்கியவாதிகளுக்குக் கைவராத நிர்வாகத்திறமை சோமுவிடம் சிறப்பாக அமைந்திருத்தல் கண்டு போற்ற வேண்டியது ஒன்று. எடுத்த எக்கருமத்தையும் சிறப்பாக நிறைவேற்றும் வல்லமை அவருக்கு அபூர்வமாக அமைந்து கொண்டது. இதைப் பல சந்தர்ப்பங்களிலும் என்னால் கண்டு மகிழ முடிந்தது.

இலங்கை மொரிஸ்சியஸ் நாட்டு நட்புறவுச் சங்கத்தின் தலைவராக இருந்து, சிறந்த சேவைகளைச் செய்கின்றார். இச்சங்கத்தின் அனுசரணையுடன் நடந்த சிறப்பு நிகழ்ச்சிகள் பலவாகும்.

சோமு அவர்களுக்கு இன்னொரு கொடையும் உண்டு. அவரது பாரியார் சிறந்த எழுத்தாளர் மட்டுமன்றி ஒரு முற்போக்குச் சிந்தனை கொண்ட இலக்கியவாதியும் கூட. இலக்கியத் தம்பதிகளின் பங்களிப்பு காலம் கடந்தும், பேசப்படக்கூடியது.

மணி விழாக்காணும் இலக்கிய நண்பர் சோமகாந்தன் அவர்களும் அவரது அருமைத்துணைவியார் பத்மா சோமகாந்தன் அவர்களும் நீடுவாழ்ந்து, இந்த நாட்டின் இலக்கிய வரலாற்றில் சரித்திரம் படைத்தவர்களாக விளங்க வேண்டும் என்பது எமது பேரவா.

*நற் சோம காந்தனும் நங்கை திரு பத்மாவும்*
*எற்போல் வாழ்க இனிது*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்று நாயகன்



பேராசிரியர், கலாநிதி அ. சண்முகதாஸ்
தலைவர், தமிழ்த் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

நா. சோமகாந்தன் ஒரு செயல் வீரர். ஒரு திட்டத்தினை அவர் கையிலே கொடுத்தாற் போதும். அதனைத் திறம்பட அவர் செயற்படுத்திக் காட்டுவார். அத்தகைய செயற்றிறனைக் கண்ணுற்றவர்கள் அவர் கலந்து கொள்ளும் மன்றங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றிலே அவரைச் செயலாளராக உடனடியாகத் தேர்ந்தெடுத்துவிடுவார்கள். சோமகாந்தன் அவர்களை நினைக்கும்போது அவருடைய இத்தகைய ஆளுமைப்பண்பே முதலில் என் மனக்கண் முன் தோன்றும்.

முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திலே நீண்ட காலமாகச் சிறப்பான பணி செய்து வந்த திரு. சோமகாந்தன் இலங்கையின் முற்போக்கு எழுத்தாளர்களிலே ஒருவராவர். அறுபதுகளிலே இங்கு நடைபெற்ற மரபுப் போராட்டத்திலே முற்போக்கு எழுத்தாளர் அணியிலே நின்று மரபு மாற்றத்தை நியாயப்படுத்தி நின்றார். பல ஆக்க இலக்கியங்களைப் படைத்துள்ளார்.

ஆறுமுகநாவலர் சபை யாழ்ப்பாணத்திலே சிறப்பாக இயங்குவதற்குத் திரு. சோமகாந்தன் அவர்களே அடிநாதமாக அமைந்தார். இக்கட்டான வேளைகளிலே முறையான தீர்வினையும் வழியையும் காணுவதற்குத் துணைநிற்பார். அவர் கொழும்பு சென்ற பின்னர் நாவலர் சபையின் சிறப்பான இயக்கமும் வேகமும் தணிந்து விட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியோரைப் போற்றுதல், நண்பர்களை அணைத்துக் கொள்ளுதல், கலைஞர்களைப் புகழ்தல் ஆகிய நல்ல பண்புகள் இவரிடத்தே காணப்படுவன. ஈழத்தின் தலைசிறந்த பலரை, அவர்களுடைய துறைகளை இனங்கண்டு அவ்வத் துறைகளுக்கு அவர்கள் ஆற்றிய பணிகளுக்காகப் பாராட்டும் விழா ஒன்றினை திரு. சோமகாந்தன் நடத்தி வெற்றிகண்டார். ஆறுமுகநாவலர் சபை வளத்தினை இத்தகைய நல்ல செயல்களுக்குப் பயன்படுத்தினார்.

மணிவிழாக் காணும் சோமகாந்தன் அவர்களுக்கு இந்நாட்டிலே ஓர் இடமுண்டு. ஈழத்துத் தமிழியல் வரலாற்றை நோக்கும்போது சோமகாந்தனுடைய எழுத்துக்கள் சில அவ்வரலாற்றிலே குறிப்பிடப்படத்தக்கன. இவருடைய வாழ்வுக்குத் துணையாயுள்ள திருமதி. பத்மா சோமகாந்தன் அவர்களையும் இவ்வேளையிலே நாம் பாராட்ட வேண்டும். இருவரும் பெருவாழ்வு பெற்றுப் பல்லாண்டு வாழ்ந்து பலருக்கும் பயனுடைய பணிசெய்து வாழ இறையருளை வேண்டுகிறேன். நண்பர் சோமகாந்தனுடைய மணிவிழா மலருக்கு இச்சிறிய குறிப்பினை எழுதுதலிலும் அதனூடாக அவருக்கு என் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதிலும் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘இன்றென இருப்பீர்’



இ. ஜெயராஜ்

அமைப்பாளர் - கம்பன் கழகம்

நாவலர் மாநாடு நடாத்த வேண்டும்.

**அழையுங்கள் அவரை.**

முற்போக்கெழுத்தாளர் மாநாடு ஒழுங்கு செய்ய வேண்டும்.

**அழையுங்கள் அவரை.**

மிஷன் சுவாமியாருக்கு வரவேற்பு.

**அழையுங்கள் அவரை.**

மூத்த எழுத்தாளருக்கு மணிவிழா.

**அழையுங்கள் அவரை.**

மலையக எழுத்தாளர் மாநாடு.

**அழையுங்கள் அவரை.**

கலாசாரத் திணைக்களக் கருத்தரங்கு.

**அழையுங்கள் அவரை.**

காளிகோயில் திருவிழாக் கலைநிகழ்ச்சி.

**அழையுங்கள் அவரை.**

**ஆஸ்த்திகம், நாஸ்த்திகம்.**

**முற்போக்கு, பிற்போக்கு.**

**புதுமை, பழமை.**

இம் முரண்பாடுகள் கடந்து தம் தேவைக்கென,

அனைவராலும் அழைக்கப்படும் அம்மனிதர் யார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்போக்கெழுத்தாளர் –சோமகாந்தன் – ஐயர் அவர்கள்.
முன்னும் பின்னும் கொண்ட முரண்பாட்டுத் தகுதிகளை,
தெளிவுபட்டு நிர்வகிக்கும் திறமையாளன்.
"எல்லோரோடும் ஒத்துப்போவதால் இவர்க்குக்
குறிக்கோள், கொள்கை இல்லையோ?"
பலர் மனதில் கேள்வி.
**"இருக்கிறது"**
இவரை ஆராய்ந்தார் பதில்.
"எது குறிக்கோள்? எது கொள்கை?"
மீண்டும் கேள்வி.
**"அன்பே குறிகோள், அரவணைப்பே கொள்கை" – அவர் தம் பதில்.**
"தங்களை இலக்கியவாதி என்கிறார்களே?"- கேள்வி.
**"அன்பையும் அரவணைப்பையும் விட உயர்ந்ததோர் இலக்கியம் உண்டா?"**
இது இவர் பதில்.
"முற்போக்காளன் சமயவாதியாதல் எங்ஙனம்?
இரண்டும் வேறன்றோ?" - கேள்வி.
**"மனுக்குலத்தை உயர்த்தும் அடிப்படைத் தத்துவத்தில்
இரண்டும் ஒன்றே".**
இது இவர் பதில்.
"முரண்பட்ட எல்லோர்க்கும் நல்லனாதல்
புரட்டன்றோ?" - கேள்வி.
**"ஆண்டவன் புரட்டனா?"**
கேள்வியைப் பதிலாக்குகிறார் இவர்.
"ஒரு வழிப்படாமல் பல வழிப்பட்டிருக்கும் தேவை என்ன?" -கேள்வி.
**"சமுதாயம் பல வழிப்பட்டு நிற்பது"** – பதில்.
"அது பல வழிப்படின் தாங்கள் பல வழிப்பட வேண்டுமா?"- அவர்கள்.
**"நான் ஒரு சமுதாய மனிதன்"** – இவர்.
"எல்லாரையும் திருப்திப்படுத்தல் சாத்தியமா?"
**"அன்பினாற் சாத்தியமே"**
"முரண்படும் இடங்களிலே தங்கள் பதில்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"அவரவர்க்கு அவரவர் பாதை".**

"வெறும் இலட்சியக் கருத்து".

**"யதார்த்தமாய் வாழ்வில் வெற்றி கண்டிருக்கிறேன்".**

"அங்கீகாரம் எங்கு கிடைத்தது?".

**"மனச் சாட்சியில்"**

இவர் தான் சோமகாந்தன்.

பத்து வருடங்களுக்கு முந்தைய பழக்கம்.

மேற்படிக் கேள்விகள் என் மனதிலும் உதிக்காமல் இல்லை.

நெருங்கிப் பழகியதால்,

அவர் வாழ்வே பதிலாகத்

167716

திருப்தியுற்றிருக்கிறேன்.

இலக்கியம் சில பேருக்குப் பொழுது போக்கு.

இலக்கியம் சில பேருக்கு அந்தஸ்து.

இலக்கியம் சில பேருக்குத் தொழில்.

நண்பர் சோமகாந்தனுக்கோ,

**இலக்கியமே வாழ்வு.**

இல்லா விட்டால்.

இரண்டு பெரிய இருதய சத்திரசிகிச்சைகளின் பின்னும்

இலக்கியப் பைத்தியமாய் இப்படி ஓடித்திரிய முடியுமா?

**வெறுப்பவர்களாலும் விரும்பப்படும் விந்தை மனிதன்.**

அகவை அறுபது எனும் செய்தி ஆச்சரியம் தருகிறது.

கூடவே ஓர் கவலை.

இம்மணிவிழா, இவர் மனதில் முதுமையைத் தோற்றி விடுமோ?

நோயே வெல்ல முடியாத இவரை,

விழாவா வெல்லப் போகிறது?.

நிம்மதி.

**உலகமே வாழ்வாய்த் திரிந்த இவரை,**

குறை சொல்லாமற் குடும்பம் காத்ததெனின்,

வியப்புத்தான்.

"மனைத்தக்க மாண்புடையாளாய்" மட்டுமன்றி

மனத்தக்க மாண்புடையாளாயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழ்புரிந்த இல்லாள் அமைந்த எழுச்சி.
**"பத்மா"**
சோமகாந்தனின் இதயத்தாமரை இவர் என்பதுணர்ந்து
பெற்றோர் இட்ட பெயரோ?
"இதயம் மனிதனோடு முரண்படுமா?"
தெரியாது.
நிச்சயம் இவர் கணவருடன் என்றும் முரண்பட்டதில்லை.
**"பத்தாவுக்கேற்ற பதிவிரதை"**
**("பத்மாவுக்கேற்ற பதிவிரதனுமாம்".)**
இகழ்வார் முன் சோமகாந்தனின்
ஏறு போற் பீடு நடைக்கான காரணம் புரிகிறது.
பிரமன் நல்ல "மூட்"டில் படைத்த இரு காதற் புறாக்கள்.
அறுபதில் இருபதாய்த் திரியும் சோடிகள்.
கண்படாமற் போகக் கடவது.
அன்பைத் தகுதியாக்கி ஆசி கூறுகிறேன்.
மற்றவர்க்காக வாழ்ந்தவர்கள்,
**மணிவிழாக் காண்கின்றனர்.**
பல "நூற்றாண்டு விழாக்கள்" காண,
அனைவர் உள்ளமும் பிரார்த்திக்கும்.
தனை வணங்கிய அநுமனை,
இவன் பெறுதற்கு இனி எதுவும் இல்லை என்பதால்,
அவன் நிறைவு நோக்கி,
**"இன்றென இருத்தி"** என
வாழ்த்தினள் வைதேகி.
முக நிறைவால் அக நிறைவைக் காட்டும்
இவர்க்கும் இல்லாதது எது?
அநுமற்காம் அன்னை வாழ்த்தினை,
இவர் தமக்காக்கி இதயம் மகிழ்கிறேன்.
"அன்புடையீர்!
**இன்றென இருப்பீர்".**
"இன்பமே எந்நாளுந் துன்பமில்லை".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்புக்கு ஒரு கௌரவச் சின்னம்



டொமினிக் ஜீவா

நண்பர் சோமகாந்தனைப் பற்றிநினைக்கும் பொழுது நான் எப்பொழுதுமே ஆச்சரியப்படுவதுண்டு. எடுத்த காரியத்தைச் சிறப்புற முடிப்பதில் இவர் காட்டும் ஆர்வமும் அக்கறையும் என்னை மலைக்க வைப்பதுண்டு.

அப்படிப்பட்ட ஒரு மனிதர்தான் சோமகாந்தன் அவர்கள்.

1987ம் ஆண்டு எனக்கு மணிவிழா நடந்தது. யாழ்ப்பாணத்தில் நடந்த அந்த மணிவிழாவுக்காக 'மல்லிகை ஜீவா' என்றொரு நூலும் வெளியிட்டு வைக்கப்பெற்றது. அந்த விழாவை வெற்றிகரமாக நடத்த நண்பர் சோமு எடுத்துக் கொண்ட விடா முயற்சியையும், உழைப்பையும் நான் எப்போதுமே வியந்து பாராட்டுவதுண்டு. அந்த விழாவில் பாராட்டுடன் பண முடிப்பும் எனக்கு வழங்கப்பெற்றது. மல்லிகைக்குச் சொந்த அச்சு வாகனம் அதில் பெறப்பட்ட பணத்தின் மூலம் வாங்கப்பட்டது என்பது யாழ்ப்பாணத்து வாசகர் ஒவ்வொருவருக்கும் நன்கு தெரிந்ததே.

என்னுடைய விழா என்பதல்ல. டாக்டர் 'நந்தி' அவர்களுக்கும் அதற்குப் பிந்திய ஆண்டுகளில் மணிவிழா நடந்தது. மலர் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்த விழாவுக்கும் நண்பர் சோமு கணிசமான பங்களிப்பைச் செய்தார்.

இதிலிருந்து ஒன்றைக் கற்றுக் கொண்டேன், "சகோதர எழுத்தாளர்களைக் கௌரவிக்க எங்கு விழா நடந்தாலும் அதில் சோமகாந்தன் தன் பங்களிப்பைச் செய்யத்தவறாது அங்கு நிச்சயம் இருப்பார்" என்பதே அது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த பல தசாப்தங்களாக யாழ்ப்பாணத்திலும் சரி, கொழும்பிலும் சரி, இலக்கிய விழாக்கள் நடைபெறும் வேளைகளில் இவரது பங்களிப்புக்களும் வழிகாட்டல்களும் பெரும் பங்கு வகித்து வந்துள்ளன.

1987ல் சூழ்நிலை நெருக்கடியான கால கட்டத்தில் யாழ்ப்பாணத்தில் ஓர் இலக்கிய விழா நடைபெற்றது. இறுக்கமான அந்தச் சூழ்நிலையிலும் கூட, தளம்பாமல் வெகு உற்சாகமாக அவர் என்னுடன் ஒத்துழைத்து அந்த இலக்கிய விழாவை மிகமிக வெற்றிகரமானதாக நடத்தி முடித்து வைத்தார். இது எனக்கு அவர் மீது இருந்த மதிப்பை இன்னும் உயர் நிலைக்கு எடுத்துச் சென்றது.

1996 ஜுலை 5–6–7ஆம் திகதிகளில் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் மூன்று நாட்கள் நடந்த பெரு விழாவிலும் இவரது பங்களிப்பு மிகச் சிறப்பு வாய்ந்தது. அந்த இலக்கியப் பெருவிழாவின் பெரு வெற்றி சோமகாந்தனின் சலியாத உழைப்பின் வெற்றிதான் என எங்களுக்குள் பேசிக் கொண்டோம்.

அந்த இலக்கிய உழைப்பாளிக்கு இன்று நாங்கள் ஒருங்கு சேர்ந்து மணி விழா எடுக்கின்றோம். சகல எழுத்தாளர்களையும் ஓடி ஓடி உபசரித்து, அவர்களைக் கனம் பண்ணிக் கௌரவித்த சோமகாந்தனை நாங்கள் கௌரவிப்பதற்குக் கிடைத்துள்ள இந்தச் சந்தர்ப்பத்துக்காக மெய்யாகவே பெருமைப்படுகின்றேன். சோமு என்பவர் எழுத்தாளன் மாத்திரமல்ல. உண்மையாகவே ஒரு தொண்டன். அந்தத் தொண்டனுள்ளம் இன்று கௌரவிக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துச் சோமுவின் இலக்கிய விஸ்வரூபம்

-தெளிவத்தை ஜோசப்-



இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் இவ்வாண்டு (1996) நடத்திய இலக்கியப் பேரரங்கு மூன்று நாள் விழாவாக வெகு விமரிசையாக நடந்தேறியதை நாமறிவோம்.

பேரரங்கிற்கு தமிழகத்திலிருந்து மூத்த எழுத்தாளர் வல்லிக் கண்ணன், நாவலாசிரியர் பொன்னீலன், தாமரையின் பொறுப்பாசிரியர் மகேந்திரன் ஆகிய மூவரும் வருவதாக பத்திரிகைகள் வாயிலாகச் செய்திகள் பரவி இருந்தன.

அண்மைக் காலங்களில் தமிழகத்திலிருந்து எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள் என்னும் பெயரில் யார் யாரோ எல்லாம் வந்தார்கள் போனார்கள். இது என்ன ஆலை இல்லா ஊரா என்று இலங்கை இலக்கியவாதிகள் எரிச்சறப்பட்டார்கள். அப்பேர்ப்பட்டதொரு சூழ்நிலையில் இந்த இலக்கியவாதிகள் மூவரும் இலக்கியப் பேரரங்கிற்கு வருகின்றார்கள் என்னும் செய்தி நமது எழுத்தாளர்கள் மத்தியில் ஒரு மன நிறைவையும் மகிழ்வையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தி இருந்தது.

இலக்கிய முனிவரான வல்லிக்கண்ணனைப் பார்க்கலாம், பொன்னீலனுடன் பேசலாம், தாமரை மகேந்திரனின் பேச்சைக் கேட்கலாம் என்று எத்தனை எதிர்பார்ப்புக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜுலை மாதம் 5ஆம் திகதி இலக்கியப் பெருவிழாவின் ஆரம்ப நாள். மாலை ஐந்து மணியளவில் பஸ்ஸிலிருந்து இறங்கி விழா மண்டபத்தை நோக்கி வேக வேகமாக நடக்கின்றேன். ஆறேழு பேரடங்கிய ஒரு கூட்டம் என்னருகே வந்து நின்றது. ''ஐயா சரஸ்வதி மண்டபம் இன்னும் தொலைவோ'' என்று கேட்டது.

எழுத்தாளர்கள் தான் என்பதை யூகித்துக் கொண்டு ''எங்கிருந்து வருகின்றீர்கள்?'' என்று கேட்டேன். ''மட்டுநகர்'' என்றார்கள். என்னைத் தொடர்ந்த அவர்களின் உரையாடல்களிலிருந்து ஒன்று புலனாகின்றது. வல்லிக்கண்ணனைப் பார்த்துவிட வேண்டும் என்னும் ஆர்வம் அவர்களுள் பொங்கி வழிந்தது என்பதே அது.

மண்டபத்துள் நுழைந்து இடம் தேடி அமர்ந்துவிட்ட பிறகே அந்த அதிர்ச்சி தோன்றியது. மேடையில் வல்லிக்கண்ணனைக் காணவில்லை. பொன்னீலனைக்காணவில்லை !

என்னை விடுங்கள் ! ஆர்வத்துடன் அத்தனை தூரத்திலிருந்து வந்திருக்கும் அந்த எழுத்தாளர்கள் எத்தனை அதிர்ச்சி அடைந்திருப்பார்கள். அவர்களைப் போலவே இன்னும் தூரத் தொலைவில் இருந்து வந்துள்ள எத்தனை பேர் ஏமாற்றத்துக்குள்ளாவர்கள்.

சுற்றிப் பார்க்கின்றேன். அதோ பண்டாரவளையில் இருந்து வந்திருக்கும் புலோலியூர் சதாசிவம், புசல்லாவையில் இருந்து ஞானசேகரன், குறிஞ்சித் தென்னவன், மட்டக்களப்பிலிருந்து செ. குணரத்தினம், அதோ அதோ என்று இன்னும் எத்தனை பேர்....

கண்களை இறுக மூடிக்கொள்கிறேன்.

மூடிய கண்களுக்குள் முன் வந்து வானத்துக்கும் பூமிக்குமாக விஸ்வரூபமெடுத்து நிற்கின்றது ஒரு உருவம் ! யாரது .....?

ஆம் சோமகாந்தன் தான்.

இந்த இலக்கியப் பேரரங்கின் அமைப்புச் செயலாளர் அவர்தான்.

பிறகெப்படி இது நடந்திருக்கமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. மு. எ. ச. நடத்திய எண்ணிலடங்கா கூட்டங்கள், கருத்தரங்குகள், இலக்கிய விழாக்கள், மகாநாடுகள், நாடு தழுவிய ரீதியில் நடாத்தப்பட்ட பாரதி நூற்றாண்டு விழாக்கள், அவைகளில் பங்கு பற்ற தமிழகத்திலிருந்து பாரதி ஆய்வாளர் ரகுநாதன், பேராசிரியர் இராமகிருஷ்ணன், நாவலாசிரியை ராஜம் கிருஷ்ணன் ஆகியோரின் வருகை ஆகிய இன்னபிற நிகழ்வுகளின் வெற்றிக்கும் காலாய் நின்ற அதே ஈழத்துச் சோமு தான்.....

பிறகெப்படி இது நடந்திருக்கமுடியும் !

இமைப்பொழுதும் சோராதிருத்தல் என்னும் கூற்றுக்கோர் இலக்கணமாயிற்றே சோமு.... எடுத்த கருமத்தைச் செய்து முடிக்காமல் சோர்ந்தவரல்லவே அவர்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் இயக்க விசையாயிற்றே அவர்.

எனது மனதுக்குள் ஒரு பிரளயம்.

இந்த நாட்டில் இன்று எதுவேண்டுமானாலும் நடக்கலாம். "எல்லாரும் பகலில் தூங்கி இரவில் வெளியே தொழிலுக்குப் போங்கள்" என்று சட்டம் வரலாம். ஏன் என்று கேட்டால் "பாதுகாப்பு" என்று கூறலாம். "இரவில் இருட்டாக இருக்குமே" என்று கூறினால் "வெள்ளமாய் வெளிச்சம் தருவோம்" என்பார்கள். வெளிச்சவெள்ளம் என்றதும் கிரிக்கெட் நினைவுக்கு வருகிறது. அவுஸ்திரேலியாவும் வெஸ்ட் இன்டீசும் பாதுகாப்புக் காரணம் கருதி விளையாட வர மறுத்துவிட்ட நம்மூரில், நாங்கள் விளையாடிக் காட்டுகின்றோம் என்று நட்பாட்டம் ஆட வந்த இந்திய அணித்தலைவர் அசாருதீனையே நடு றோட்டில் பிடித்து வைத்துக் கொண்டு சோ[illegible]விகள் கேட்டவர்களாயிற்றே... இவர்கள்....

மீசையும் தானுமாக வந்த பொன்னீலனையும் உடன் வந்ததற்காக வல்லிக்கண்ணனையும் பிடித்துக் கொண்டு போய் விட்டார்களோ?

பயந்து போய் விட்டேன்.

இத்தனை எண்ணங்களையும் மீறி சோமுவின் உருவம். அதே வசீகரச் சிரிப்பும் வயப்படுத்தும் முகமுமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''காரியச் சமர்த்தர் யாம். யாமிருக்கப் பயமேன்'', என்னும் கை அசைவுடன்.

அடுத்த நாள் மாலை வல்லிக்கண்ணனும் பொன்னீலனும் விழா மேடையை அலங்கரித்தார்கள்.

* * *

தான் ஓர் தரமான படைப்பாளி என்பதை ''ஆகுதி'' சிறு கதைத் தொகுதி மூலம் நிரூபித்துள்ளார்.

படைப்புத் துறையில் இருந்து ஒதுங்கி நின்றாலும் இலக்கியத் துறையிலிருந்து ஒதுங்க முடியாத அளவுக்கு இலக்கியத்துடன் தன்னைப் பிணைத்துக் கொண்டவர் இவர்.

ஒன்றைத் தியாகம் செய்தே மற்றொன்றை வசமாக்கிக் கொள்ள முடியும் என்பதற்கோர் சாட்சியாகத் திகழ்பவர் சோமு.

இவர் இ. மு. எ. ச செயற்பாட்டில் இணைந்த பிறகு சங்கம் செயல் வேகத்தைப் பெற்றது என்பது மனம் கொள்ளத்தக்கது என்கின்றார் திரு. பிரேம்ஜி (மல்லிகை ஏப்பிரல் 89)

இவருடைய செயற்பாட்டுத் தளம். மிக விஸ்தாரமானது. அதைப்பற்றிக் கூற இது தருணமல்ல என்றாலும் இவர் பொறுப்பாசிரியராய் இருந்து வெளியிட்ட மலர்கள் எத்தனை ! புதுமை இலக்கிய மலர்களிலிருந்து சாகித்திய விழா மலர்... நாவலர் ஜெயந்தி மலர்... என்று இலக்கியக் கனதியும் வரலாற்றுத் தேவையுமான மலர்கள் எத்தனை எத்தனை !

மூத்த எழுத்தாளர் வரதருக்கான பாராட்டு விழாவுடன் அவருடைய இரண்டு நூல்களின் வெளியீட்டு... நினைத்துப் பார்க்கக் கூடிய காரியங்களா.?

ஈழத்து இலக்கியத்துக்கெனக் கிடைத்திருக்கும் ஒரே சோமு ஈழத்துச் சோமுதான்.

எந்த ஒரு மனிதனின் வெற்றிக்கும் பின்னால் ஒரு பெண் இருப்பாள் என்பது இங்கும் உறுதியாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தின் மிகச்சிறந்த பெண் எழுத்தாளர்களில் ஒருவரான பத்மாவை சோமகாந்தன் மணம் புரிந்து கொண்ட இந்த அறுபதுகளில் தான் இ. மு. எ. சங்கத்தில் திரு. சோமகாந்தன் இணைந்தார்.

இ. மு. எ. ச. கோட்டையில் கோபுரப் பொம்மைகளாக இருப்போர் மிகப்பலர். அலங்காரத் தூண்களாக இருப்போர் பலர். அதன் அத்திவாரமாக இருப்போர் சிலர். அதன் ஜீவனான இயக்கத்துக்கும் செயல் வேகத்துக்கும் உரித்தானவர்களாக இருப்போர் ஒரு சிலர். அந்த ஒரு சிலரிலும் முக்கியமானவராகத் திகழ்பவர் இந்த அறுபது வயதிலும் இளைஞனாக ஓடித்திரிந்து செயலாற்றும் திரு. சோமகாந்தன்.

இ. மு. எ. ச. எண்ணற்ற செயற்பாடுகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதில் பக்கபலமாக நின்று நிழல் தரும் விருட்சமாய் நிமிர்ந்து நிற்கின்றார்.

நிழலின் அருமை விருட்சத்தின் கீழ் நிற்பவர்களுக்குத் தெரியாது தானே !

அவர் நீடுழி வாழ்ந்து இலக்கியப் பணியாற்றப் பிரார்த்திக்கின்றேன். வாழ்க சோமு ! வளர்க அவரது பணிகள் !

UNIVERSITY OF JAFFNA
LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மானுடம்" வாழ்வித்த மாண்பாளர்

-குமாரசாமி சோமசுந்தரம்-



**திரு.** நா. சோமகாந்தன் அவர்கள் ஆன்றமைந்த அறிவு நலம் பெற்றவராகவும், வாழ்க்கை அனுபவங்கள் நிறைந்தவராகவும் விளங்குகின்றார். அவருடைய எழுத்துக்களிலும் பேச்சுக்களிலும் அப்பண்புகளைக் காணமுடிகின்றது. அவர் கடவுட் பணியும், சமூகப் பணியும் இலக்கியத்தினூடாக ஆற்றி வருகின்றார். போற்றுதற்குரியவர். எஞ்ஞான்றும் பணிகள் புரிந்து கொண்டேயிருப்பவர்கள், தொண்டர்கள். தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே.

நவீன படைப்பிலக்கியத்துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டு, முற்போக்குச் சிந்தனையுடன் சிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகள் என்பவற்றைப் படைத்து வருகின்ற சோமகாந்தன், "மானுடம் என்றொரு பொருள் உண்டு; அதுவே மனித குலத்திற்கு மாண்பினைத் தருவது" என்னும் செய்தியைத் தமது ஆக்கங்கள் ஊடாக உணர்த்தி வருகின்றார். மனிதம், மானுடம் என்பவற்றின் மீள் சிந்தனை, மறுமலர்ச்சி முற்போக்கின் முகத்துவாரம் ஆகும்.

பழமை என்பது பின்னோக்கு. எமது வரலாற்றைப் பின்னோக்கிப் பார்ப்பது ஒரு தேவையே. பழமை கூடாதது அன்று. "அப்பனைப் பாடும் வாயால் தம்பி சுப்பனைப் பாடுவேனோ" - என்ற நிலைப்பாடு சோமகாந்தனிடம் காணப்படவில்லை.

"ஆகுதி" (சிறுகதைகள்), "விடிவெள்ளி பூத்தது" (நாவல்), "நிலவோ நெருப்போ?" (ஆகுதிச் சிறுகதைகள்), எழுதிய சோமகாந்தனின் புதுமை காக்கும் கரங்கள், "பொய்கை மலர்" என்னும் முருகனைப் பற்றிய நூலையும் எழுதும் துணிவையும் பெற்றிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே*
*பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனே"*

முருகன் தொன்மையும், மாறா இளமையும், அழகும் கொண்டு திகழ்பவன். சோமகாந்தன் முற்போக்கினை நன்குணர்ந்தவர் என்பதற்கு இது சான்று.

"நீண்ட காலமாக நவீன இலக்கியத்துறையில் சஞ்சரித்து நாவல்கள், சிறுகதைகள், இலக்கியக் கட்டுரைகளென எழுதிக் கொண்டிருந்த நான், முருகனைப் பற்றிய இந்நூலை எழுதியிருப்பது ஒரு புதிய அனுபவம்" (பொய்கை மலர் – என்னுரை – பக் 4). சோமகாந்தனின் முற்போக்கில் அவர் பெற்ற முன்னேற்றத்தின் பிரதிபலிப்பாக, இக்கூற்று அமைகின்றது.

"கலைச் செல்வி" காலத்திலிருந்து ஈழத்துச் சோமு என்னும் நா. சோமகாந்தனை அறிவேன். ஆனால் சந்தித்து உரையாடி, நட்புக்கொள்ள நேர்ந்தது அண்மையிலே தான். நட்பின் பெருமையை நன்குணர்ந்தவர் என்பது எனது மதிப்பீடு.

எடுத்துக் கொண்ட முயற்சியை நன்கு திட்டமிட்டு ஒழுங்குபடுத்தி, சம்பந்தப்பட்டவர்களுடன் அடிக்கடி தொடர்பு கொண்டு, ஊக்குவித்து, உறங்காமல் செயற்பட்டு, நிறைவேற்றுவதில் அவர் ஒரு விற்பன்னர் என்பதை நான் பல சந்தர்ப்பங்களில் கண்டு கொண்டேன். அதுவும் இலக்கியம் சார்ந்த கருமங்கள் என்றால் அற்புதமாகச் செய்யும் திறன் படைத்தவர். இவையெல்லாம் அவருக்குக் கைவந்த முகாமைத்துவக் கலை. அண்மையில் "இராமாயணமும் இலங்கையும்" என்னும் தலைப்பில் பல ஆய்வுக்கட்டுரைகள் அடங்கிய தொகுப்பு நூல் ஒன்று இலங்கை சின்மயானந்த மிஷன் சார்பில் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டது. சோமகாந்தன் அதனை நெறிப்படுத்தி வெளியிடுவதில் முன்னின்று உழைத்தார். ஒரு வேலையைப் பொறுப்பெடுத்தால், அதில் தனது முத்திரையைப் பதித்து விடுவார். எல்லோரினதும் அன்பையும் பாராட்டையும் பெற்றுவிடுவார். அப்படிப்பட்ட திறமைசாலி அவர். அன்று நாவலர் விழாவை ஒழுங்கு செய்ததிலிருந்து இற்றைவரை அவரின் கை வண்ணத்தைக் கண்டு கொண்டு தான் இருக்கிறோம்.

இலங்கையில் முற்போக்கு எழுத்தாளர் சங்க விழாவா, தமிழ் இலக்கிய விழாவா, ஆய்வரங்குகளா, நூல்வெளியீடுகளா, தமிழ் மாநாடுகளா எங்கும் எதிலும் சோமகாந்தனின் மனப்பூர்வமான பங்களிப்புகள் இருந்தே தீரும்.

சோமகாந்தனின் எழுச்சிக்கும், வளர்ச்சிக்கும், ஆளுமைக்கும் அவரின் அருமை மனைவியார் பத்மா சோமகாந்தனின் பங்களிப்பும் மிகப் பெரியது என்பதையும் சொல்லித்தான் ஆக வேண்டும். மணிவிழாக் காணும் சோமகாந்தனுக்கும் குடும்பத்தினருக்கும் நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சோமகாந்தன்" - ஓர் ஆய்வுப் பொருள்

இ.யோகநாதன்
கல்வி, உயர்கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர்



நண்பர் திரு. சோமகாந்தன் அவர்கள் அறுபதுகளின் பிற்பகுதியில் எனக்கு அறிமுகமானார். அக்கால கட்டத்தில் அவர் ஆறுமுகநாவலர் சபையின் பிரதிச் செயலாளராகத் தொண்டாற்றி வந்தார். அதன் பின் 1995ஆம் ஆண்டு கலாசார, சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளராகப் பதவியேற்ற பொழுது திரு.சோமகாந்தனோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. இடைப்பட்ட காலத்தில் ஒருவரையொருவர் தெரிந்திருந்தபோதிலும் அன்னியோன்யமாகப் பழகும் வாய்ப்பு ஏற்படவில்லை.

அவர் அறுபது வயதைப் பூர்த்தி செய்து மணிவிழாக் காண்கின்ற இவ்வேளையில் அவருடன் நெருங்கிப் பழகிய தொடர்பின் அடிப்படையில் அவருடைய பொது வாழ்க்கையை பகுத்தாய்ந்து சில குறிப்புக்களை முன் வைப்பது இக்கட்டுரையின் நோக்கமாகும். அவருடைய பொது வாழ்க்கைக் குறிப்பாக இலக்கிய, சமய பங்களிப்பு மூன்று கூறுகளாகப் பிரிக்கக் கூடியது. இக்கூறுகள் ஒவ்வொன்றும் பரஸ்பரம் தனித்துவம் வாய்ந்தவையாக அல்லாது, ஒன்றோடொன்று பின்னப்பிணைந்தவையாக நிற்பதாகத் தெரிகின்றது. அதேபோன்று இக்கூறுகள் ஒவ்வொன்றும் ஒரு கால எல்லைக்குட்பட்டவையாக அமையாமல் அன்னாருடைய முழு வாழ்க்கையையும் தழுவியதாக அமைந்துள்ளது.

இக்கூறுகளில் 1) இயற்றுதற் கருத்தாவாகச் செய்த பங்கை ஒரு கூறாகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) ஏவுதற் கருத்தாவாகச் செய்த தொண்டை ஒரு கூறாவும்,

3) நிறுவகத் திறனை வெளிப்படுத்தும் திறனை மற்றைய கூறாகவும் கொள்ளலாம்.

இம்மூன்று கூறுகளிலும் முதன்மை அடிப்படையில் நிறுவகத்திறன் முதலானதாகவும், இயற்றுதற் கருத்தா அடுத்ததாகவும், ஏவுதற் கருத்தா ஈற்றிலும் வருகின்ற ஒழுங்கில் வைத்துக் குறிப்பிடப்பட வேண்டியவை.

இவர் பல மன்றங்களில் செயலாளராகவும், அமைப்பாளராகவும் பாரிய பொறுப்பையேற்றுத் தன்னுடைய நிறுவக ஆற்றல் என்னும் முத்திரையை நாடளாவிய ரீதியில் மட்டுமல்லாமல் சர்வதேச ரீதியிலும் பதியச் செய்து வெற்றியும் கண்டுள்ளார்.

இவற்றுக்கு உதாரணமாக ஆறுமுகநாவலர் சபையின் பிரதிச் செயலாளர், நாவலர் நூற்றாண்டு விழாச் செயலாளர், பாரதி நூற்றாண்டு விழா அமைப்புச் செயலாளர், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் ஆகிய பதவிகளில் அவர் ஆற்றிய பங்களிப்பை கொள்ளலாம்.

நிறுவகத்திறன் என்பது அமைப்பின் நோக்கத்தை எவ்வாறு அடையலாம் என்று திட்டத்தை வகுத்து, அத்திட்டத்தின்படி செயற்பட்டு நோக்கங்களை அடைவதன் மூலம் அமைப்பின் வெற்றிக்கு உழைப்பது.

இவ்விடயத்தில் திரு. சோமகாந்தன் அவர்களுக்கு இலக்கிய, சமயக் கனவான்களுடைய நெருங்கிய தொடர்பும் ஆதரவும் இருந்து வந்தது அன்னாரின் வெற்றிக்கு ஒரு காரணம் எனக் கொள்ளலாம். அது மட்டுமல்லாமல் அவருடைய துணைவியாரும் அவரைப் போன்று இலக்கியம், சமயம் போன்ற துறைகளில் ஈடுபாடு கொண்டு தொண்டு செய்கின்றவர். இதுவும் அவருடைய பங்களிப்புக்கு ஒரு உந்து சக்தியாக அமைந்தது என்று சொன்னால் அது மிகையாகாது.

இயற்றுதற் கருத்தாவாக வெளிவந்த ஆக்கங்கள் மொத்தமாக ஆறு ஆகும். சொந்த ஆக்கங்களை வெளிக்கொணர்வதில் ஏற்படும் இடர்ப்பாடுகளும் தடங்கல்களும் ஆக்கங்களை வெளிக்கொணர வேண்டும் என்ற வைராக்கியத்தையும் ஊக்கத்தையும் தளர்வடையச் செய்கின்றன. இக்காரணத்தினால் இலக்கியவாதிகள் சிலர் ஆரம்பத்திலேயே முயற்சியை விட்டுவிடுகிறார்கள். ஆரம்பித்த பின்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைவழியிலேயே கைவிட்டவரும் உளர். திரு.சோமகாந்தன் அவர்கள் ஆறு ஆக்கங்களை அச்சில் வெளிக்கொணர்ந்த கருத்தா ஆவார்.

1) " விடிவெள்ளி பூத்தது" என்ற நாவலையும்

2) "நிலவோ நெருப்போ" என்ற சிறுகதைத் தொகுப்பையும்

இந்த ஆறு ஆக்கங்களில் இரண்டு உதாரணங்களாகக் கொள்ளலாம்.

ஏவுதற் கருத்தவாக இருந்து வெளியிட்ட சிறப்பு மலர்கள் எல்லாமாகப் பன்னிரண்டு. இவற்றுள் ஆறுமுகநாவலர் மாநாட்டு மலர் 1969, பாரதி நூற்றாண்டு விழா புதுமை இலக்கிய மலர் 1980 ஆகியவை தமிழ் கூறும் நல் உலகினதும் இந்து அபிமானிகளினதும் பாராட்டுக்களைப் பெற்றவை எனக் கூறலாம். இப்பங்களிப்புக்காக திரு. சோமகாந்தன் அவர்கள் 'இலக்கியக் குரிசில் 1993 'தமிழ் மாமணி' 1994 'கலை இலக்கிய மாமணி' 1994 போன்ற விருதுகளையும் பட்டங்களையும் பெற்றுள்ளார்.

இத்தகைய காத்திரமான இலக்கிய, சமய பங்களிப்பை அளித்த திரு. சோமகாந்தன் அவர்கள் குடும்பத்தினருடன் பல்லாண்டு பல்லாண்டு காலம் வாழ்ந்து மேலும் பாரிய தொண்டைச் செய்ய வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய நிர்வாகி



-சுந்தரம் டிவகலாலா
செயலாளர்
வட கிழக்கு- மாகாண கல்வி,
கலாசார அலுவல்கள், விளையாட்டு அமைச்சு.

"சோமுவிற்கு மணிவிழா" அதற்கு உங்களிடம் இருந்து அவரைப்பற்றிய பதிவுகள் தேவை என்று கேட்டு, ஒரு கடிதம் சோமகாந்தன் மணிவிழாச் சபையினரிடம் இருந்து கிடைக்கப்பெற்றபோது உண்மையிலேயே 'ஒரு வகையான' மனத்திருப்தியை அடைந்தேன்.

சோமுவைப் பற்றி ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோணத்திலே நிச்சயமாகப் பார்க்கப் போகின்றார்கள். புதுமைப்பித்தன் கூறியதுபோல, ஒருவனை அதீத மனிதனாகவோ, அசாதாரண மனிதனாகவோ கூறிக் கொள்வது மிகச் சுலபம். ஆனால் அவனை அவனாகக் காட்டிக் கொள்வது, அல்லது படைத்துக் கொள்வது கஷ்டமானதாகும். இந்தக் கருத்தினை மனத்திற் பதித்தே எமது தொடர்பின் நினைவுகளைப் பதிக்க விரும்புகின்றேன்.

ஈழத்து சோமு என்ற எழுத்தாளனைப் பற்றி 1989ம் ஆண்டு ஏப்பிரல் மாதத்திற்கு முன்னர் கேள்விப்பட்டிருந்தேன். முற்போக்கு இலக்கியவாதிகளது கருத்துக்களோடு ஒத்த கருத்துக்களைக் கொண்டிருந்த நான் அவர்களது ஆக்கங்களைத் தேடி வாசிக்கும் பழக்கம் கொண்டிருந்தபடியினால், இவரை நேருக்கு நேர் சந்திக்காவிட்டாலும் இவரது ஆக்கங்களோடு தொடர்பு கொண்டிருந்தேன். இத் தொடர்பு ஒரு எழுத்தாளனுக்கும், வாசகனுக்கும் இடையிலான தொடர்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1989ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் நான் யாழ் மாவட்டத்தில், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளராகப் பதவியை ஏற்றுக்கொண்டேன். புதிய காரியாலயத்திலே பதவியை ஏற்கின்ற சமயங்களில் எல்லாம் முதல்நாள் அன்று அக்காரியாலய அலுவலர்களோடு ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளும் நோக்கத்தோடு கலந்துரையாடுவது வழக்கம். அதேபோன்று அக் காரியாலயங்களில் முதல்நாள் அந்த அலுவலர்களோடு கைகுலுக்கி என்னை அறிமுகம் செய்த வேளையில் திரு. சோமகாந்தன் அவர்களைச் சந்தித்தேன். அன்றிலிருந்து அவர் இடமாற்றம் பெற்று, கொழும்பு சென்ற காலம் வரை அவருக்கும் எனக்கும் இடையே உத்தியோக ரீதியான ஒரு தொடர்பு இருந்தது.

அக்காரியாலயத்தில் சோமகாந்தனுடைய ஈடுபாட்டையும் நோக்கையும், போக்கையும், ஆற்றலையும் சரியாகப் புரிந்து கொள்ளாத காரணத்தினால் அவரிடம் இருந்து கூடிய சேவையைப் பெற்றுக்கொள்ள முடியாத ஒரு நிலை இருந்தது. சோமகாந்தன் ஏனைய அலுவலர்களிடம் இருந்து வேறுபட்டு இருந்தார். பல்வேறு மட்டத்திலான இலக்கியக் கருத்தரங்குகளையும், மாநாடுகளையும் நடாத்தி முதிர்ந்த அனுபவம் பெற்றிருந்த படைப்பாளியான சோமகாந்தனால் குறுகிய வட்டத்திற்குள் நின்று செயற்பட முடியாது இருந்த தன்மையைப் புரிந்து கொண்ட நான் அவரைப் பண்பாட்டு அலுவல்களின் வளர்ச்சிக்கும், எழுத்தாளர் ஊக்குவிப்புக்கும் பொறுப்பான அலுவலராக நியமித்தேன். திரு. சோமகாந்தனுடைய உச்சப் பயன்பாட்டை என்னாற் பெற முடிந்தது.

1989ல் உள்ளூராட்சித்திணைக்களம் யாழ் மாவட்டத்திலே காலத்தின் தேவையை அறிந்து பொருத்தமான ஓர் இலக்கிய விழாவினை நடாத்தியது. அத்தகைய விழாக்களை நடாத்துவது ஆபத்தானது என்ற கருத்து நிலவிய காலம் அது. பெரிய ஒரு விழாவினை மேற்கொள்வதற்கு வேண்டிய வளங்கள் கிடைக்கப்பெறாமல் இருந்த காலம். இருந்தும் சோமகாந்தன் இருக்கின்றார், அவரது கடந்த கால அனுபவங்கள், ஒழுங்கமைப்புத்திறன், மற்றவர்களது ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளும் ஆற்றல் இவ்விழாவிற்குப் பெருந்துணையாக இருக்கும் என்ற துணிவில் இவ்விழாவினை நடாத்த நான் துணிந்தேன். ஈழத்து இலக்கியப் படைப்புக்கள், ஈழத்துப் பிரபல்ய ஓவியர்களது ஓவியங்கள், கலைப்படைப்புக்கள், சித்த மருத்துவத்துறை, சிற்பத்துறை, புகைப்படத்துறை, இலக்கிய அமர்வுகள், எழுத்தாளர்கள் ஒன்றுகூடுதல் என்பனவற்றை அடக்கியதாக இந்த விழா அமைந்து பலரது பாராட்டுக்களையும் வரவேற்பினையும் பெற்றிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விழாவினை நடாத்துவதற்கு, பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், படைப்பாளிகள், கலைஞர்கள், சனசமூகநிலைய அங்கத்தவர்கள், அரச அலுவலகர்கள் எமக்குப் பெரும் உதவி செய்தனர். இவர்கள் அனைவரையும் ஒன்று சேர்த்து ஒரு குறிக்கப்பட்ட சில நாட்களுக்குள் இவ்விழாவை ஒழுங்கு செய்த பங்கு திரு. சோமகாந்தனுக்குப் பெரிதும் உரித்தானது ஆகும். 1995 வரை எனக்கும் திரு.சோமகாந்தனுக்கும் இடையே ஆங்காங்கே சில தொடர்புகள் ஏற்பட்டன. 1995ல் இருந்து விசேடமாக 1996 ஏப்பிரல் மாதத்தில் இருந்து இவர்களுடனான எனது தொடர்பு மீண்டும் இறுக்கமடையத் தொடங்கியுள்ளது.

சோமுவினுடைய ஆற்றலும், அனுபமும், ஏற்றுக் கொள்ளும் பொறுப்பினைச் செய்து முடிக்கும் வரை அவ்வேலையுடன் தன்னை ஈர்த்துக் கொள்ளும் தன்மையும், திட்டமிட்டு எதிர்காலத் தடைகளை முன்னரே அறிந்து வழிசமைக்கும் பக்குவமும் நிச்சயமாக எமது அமைச்சின் பண்பாட்டு அலுவல்கள் தொடர்பான செயல்திட்டங்களுக்கு வலுவான உதவுகரங்களாக அமையும் என்பதில் திடமான நம்பிக்கை கொண்டுள்ள நாம், எமது இலக்கை அடைவதற்கு அவரின் சேவையையும் நாடி நிற்கின்றோம்.


"சோமுவும், சோமுவின் இதயத்துடிப்பை நன்கு புரிந்துசெயற்படும் இல்லாளும் நீடுழி வாழ்க" என வாழ்த்துவதிலே பெரும் மனநிறைவு அடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிய மனிதர்

செ.கணேசலிங்கன்



சிரித்த முகமும் எடுப்பான தோற்றமும் எவருடனும் நயமாகப் பேசிப் பழகும் குணாம்சமும் உடல், மனத்துன்பங்களை வெளியே காட்டி இரக்கம் தேடாத துணிச்சலும் கொண்ட மனிதரைக் காண்பது அரிது. அத்துடன் பிறருக்கு உதவ முன்வருதலையும், சமூகப் பணிகளை மனமுவந்து ஏற்று அதற்காகத் தன் காலத்தையும், நேரத்தையும், பணத்தையும், செலவு செய்யும் நற்குணத்தையும் கொண்டவரைத் தேடுவது மிகமிக அரிது. இவை மட்டுமல்லாமல் மேலும் பல சிறப்புகள் கொண்டவராய் விளங்குபவர் திரு. சோமகாந்தன் அவர்கள்.

ஈழத்துச் சோமுவும் அவரே. சிறுகதைகள், நாவல், கட்டுரைகள், விமர்சனங்கள் ஆகிய துறைகளிலும் தன் ஆளுமையை நன்கு பதித்துள்ளவர். 'விடிவெள்ளி பூத்தது' என்ற அன்னாரது சமூக வரலாற்று நாவல் இலக்கிய வரலாற்றில் என்றும் நிலைத்துப் புகழ் தரவல்லது. இந்நாவல், யாழ். சமூகத்தின் பொருளாதார, அரசியல் உட்பட குடும்ப அமைப்பு, சமயம், கல்வி, கலாசாரம் முதலிய கருத்தியல்களையும், குறிப்பிட்ட காலகட்டமாகிய இந்நூற்றாண்டின் நடுப்பகுதியையும் கலைவடிவத்திற் கூறி நிற்கும், என்றும் நிலைத்து நிற்கும் கலைப்படைப்பாகும்.

மேலும் ஈழத்துச் சோமுவின் 'நிலவோ நெருப்போ,' 'ஈழத்து இலக்கியம் பல்துறைநோக்கு' 'தத்துவச் சித்திரம்' ஆகியவையும் ஈழத்திலும், தமிழகத்திலும் அவரது இலக்கியப் பணியைப் பறைசாற்றும்.

இலக்கிய, சமயக்கூட்டங்களிலெல்லாம் சோமகாந்தனைப் பொலிவோடு காணலாம். வெறும் பேச்சாளராக மட்டுமல்லாது கூட்டங்களை ஏற்பாடு செய்து திறம்பட நிர்வகிப்பதிலும் திறமைபடைத்தவர். அழைப்பிதழ் அச்சிடுவது தொடக்கம் அனைத்தையும் சிறப்பாகச் செய்தல் வேண்டும் என்ற ஆர்வம் கொண்டவர்.

சோமகாந்தன் அவர்கள் நோய்த் துன்பம் நீங்கி, நீண்டகாலம் வாழ்ந்து மேலும் இலக்கியப் பணி ஆற்ற வேண்டும் என்பதே என் அவா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுபது வயது இளைஞன்

கலாநிதி.எம்.ஏ.நுஃமான்
*பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை*



நண்பர் சோமகாந்தனை எனக்குச் சுமார் கால் நூற்றாண்டுக்கு மேலாகவே தெரியும். முதற் பழக்கத்தையே நெருங்கிய நட்பாக்கிக் கொள்ளும் அவரது சுபாவம் என்னையும் அவரது நண்பர் வட்டத்துள் ஒருவனாக்கிக் கொண்டது. அறுபது வயதாகிவிட்டாலும், உடல் நலம் குன்றி இருந்தாலும் ஓர் இளைஞருக்குரிய உற்சாகத்துடன் இன்றுகூட, பொதுப்பணிகளிலே தீவிரமாக ஈடுபட்டு உழைக்கும் அவரது இயல்பு பலரையும் அவருக்கு நண்பர்களாக்கியுள்ளது. இதுதான் சோமகாந்தனின் குண விசேடம்.

ஈழத்துச் சோமு என்ற புனைபெயரில் ஆரம்ப காலத்தில் எழுதிவந்த நா.சோமகாந்தன் ''சோமு'' என்றே நண்பர்களாற் பிரியமாக அழைக்கப்படுபவர். இலக்கிய உலகிலும், பொதுவாழ்விலும் தொடர்ந்தும் பணிகள் செய்து வருபவர்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை இன்றுவரை உயிரோடு காப்பாற்றி வருபவர்கள் என்று இருவரைச் சொல்லவேண்டும். ஒருவர் நண்பர் பிரேம்ஜி ஞானசுந்தரன். மற்றவர் சோமகாந்தன். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நடத்திய பெரும்பாலும் எல்லா விழாக்களிலும், மாநாடுகளிலும் நண்பர் சோமுவின்கை இருந்திருக்கின்றது. பெரிய அளவில் விழாக்களை ஏற்பாடு செய்வதிலும், அதற்கு ஆட்பலத்தையும் நிதிப்பலத்தையும் திரட்டுவதிலும் சோமகாந்தனுக்கு ஓர் அலாதியான திறமை உண்டு. முற்போக்கு எழுத்தாளர் சங்கம் சமீபத்திற் கொழும்பில் நிகழ்த்திய இலக்கியப் பேரரங்கு சோமகாந்தனின் இத்தகைய அமைப்பாக்கத் திறமைக்கு ஒரு அண்மைக்காலச் சான்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்போக்கு எழுத்தாளர் சங்க மாநாடுகளை ஒட்டி, அவ்வவ்போது புதுமை இலக்கியச் சிறப்பு மலர்களைப் பெரிய அளவிலும், கனதியாகவும் வெளிக்கொண்டு வந்ததிலும் நண்பர் சோமகாந்தனுக்கு முக்கிய பங்கு உண்டு. சுருக்கமாகச் சொல்வதானால் இலங்கை முற்போக்கு இலக்கிய இயக்கத்தில் நிறுவன ரீதியான அவரது பங்களிப்புக் கணிசமானது.

படைப்பிலக்கியம் என்ற வகையில் அவரது *"ஆகுதி"* என்ற சிறுகதைத் தொகுதியும் *"விடிவெள்ளி பூத்தது"* என்ற நாவலும் அச்சில் வெளிவந்துள்ளன. ஆகுதி கதைகள் *"நிலவோ நெருப்போ"* என்ற பெயரிலே தமிழ் நாட்டிலும் வெளிவந்துள்ளது. *"விடிவெள்ளி பூத்தது"* இலங்கைப் பிராமணச் சமூகத்தைப் பகைப் புலமாகக் கொண்டு வெளிவந்த ஒரு குறிப்பிடத்தக்க நாவல். கதைப்பின்னலிலே, தமிழ்ச் சினிமாப்பாணி தவிர்க்கப்பட்டிருந்தால் தமிழின் நல்ல நாவல்களுள் ஒன்றாக அது புகழப்பட்டிருக்கும் என்பது என் நம்பிக்கை.

*"ஈழத்து இலக்கியம்-பல்துறை நோக்கு"* என்ற அவரது நூல், சோமகாந்தனுக்கு ஒரு விமர்சக முகத்தையும் வழங்கியுள்ளது. ஈழத்து இலக்கியம் பற்றி அவர் அவ்வப்போது எழுதிய கட்டுரைகளைக் கொண்டுள்ள இந்நூல் இலங்கை இலக்கியம் பற்றிய பல தகவல்களைத் தருகின்றது. கடந்த ஆண்டு *"பொய்கை மலர்"* என்ற அவரது கட்டுரை நூல் வெளிவந்தது. கதிர்காம யாத்திரை பற்றியும், இலங்கையில் முருக வழிபாடு பற்றியும் பல அரிய தகவல்களைக் கொண்டுள்ள நூல் இது.

சமீபத்தில் இலங்கை சின்மயா மிஷன் அனுசரணையுடன் *"இலங்கையும் இராமாயணமும்"* என்ற அரிய ஆங்கில நூல் ஒன்றையும் நண்பர் சோமகாந்தன் பதிப்பாசிரியராக இருந்து வெளிக்கொண்டு வந்துள்ளார். பத்தோடு பதினொன்று என்ற வகையில் ஒரு சமயச் சிறப்பிதழாக அமைந்திருக்க வேண்டிய இது, நண்பர் சோமகாந்தனின் முயற்சியினாலேயே தமிழ், சிங்கள அறிஞர்களின் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளைக் கொண்ட பயனுடைய ஒரு தொகுப்பு நூலாக வெளிவந்துள்ளது. இந்த முயற்சிக்காகச் சோமகாந்தனை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

இன்று மணிவிழாக் கொண்டாடும் நண்பர் சோமகாந்தன் உடல் நலத்துடன் பல்லாண்டு வாழ எனது வாழ்த்துக்கள் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது இலக்கியக் குறிப்பு அல்ல!
# நெஞ்சின் அலைகள்

ஆர்.சிவகுருநாதன் M.A
(விரிவுரையாளர், சட்டக்கல்லூரி)



**சோ**மகாந்தன் ஆம்! இவரது பெற்றோர் தங்கள் செல்வத் திருக்குமரனுக்கு வாஞ்சையுடன் சூட்டிய திருநாமம் இது. அப்பெயருக்கேற்ற திருவும், தேஜசும், அறிவும், ஆற்றலும் இவருக்கு உண்டு. ஆரூடம் அறிந்தே தந்தையார் இவ்வழகிய பெயரைச் சூட்டினரோ என்று கூட நான் சிந்திப்பதுண்டு.

இலக்கிய உலகம் வழங்கிய பெயரோ "ஈழத்துச் சோமு" என்பதாகும். ஆனால் எமக்கு இவர் சோமர். எந்தச் சோமர் என்று யாழ்ப்பாணத்தவர் எவரேனும் கேட்டால் சிவலிங்கப் புளியடிச்சோமர் என்றே விளக்குவது வழக்கம்.

இவர் சைவப் பிராமணக் கோத்திரத்தவர். ஆசாரசீலர்களான பெற்றோரின் புத்திரர். உரிய பராயத்தில் உபநயனஞ் செய்தவர். சொந்த வாழ்க்கையிலும் பூணூல் தரித்து அனுஷ்டானங்களைக் கடைப்பிடிப்பவர். "காலையில் மாலையில் கருத்துடன் நாளும் ஆசாரத்துடன் அங்கம் துலக்கி சிந்தை கலங்காது தியானிப்பவர்."

எனினும் பிறருடன் இவர் கொள்ளும் தொடர்பினை அவதானித்தால் இவர் சாதாரணமான ஒருவர் போலவே நடந்து கொள்வதை அறியலாம். இதனாற்றான் இவரை எல்லோரும் நேசிப்பர். இவரது ரசிகர் கூட்டமோ பெரியது. சமூகப் பிரமுகர்கள் முதல் சாதாரண மக்கள் வரை இவரைப் பாராட்டுவர்.

சோமரைப் பார்த்தால் அறுபது வயதை எட்டிப் பிடித்தவர் என்று எவருமே சொல்ல மாட்டார்கள். அத்துணை இளமைத் துடிப்பும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகலாவண்யமும், சௌந்தர்யமும் இவரிடம் காணப்படும். கிழடு தட்டவில்லை. பேச்சில், நடையில், செயல் முறையில் இன்றும் இவர் குமரன் தான். இடையிடையே நெஞ்சில் இவர் கை வைத்தாலும் திடகாத்திரமானவராகவே தோற்றுவார். யாவரையும் கவருகின்ற சக்தி இவரிடம் நிறைய உண்டு. இதனாலேதான் பத்மா கண்ணும் கருத்துமாக எந்நேரமும் நின்று அவதானிப்பார் போலும். ஆனால் இவரோ ஒழுக்கசீலர், ஏகபத்தினி விரதர். தன் பேனா தேடித் தந்த புதுமைப் பிரியை அருகினில் இருக்கும் போது அமுதும் தேனும் எதற்கு? ஓலை விடுதூது காலத்திலிருந்தே சோமரை எனக்குத் தெரியும். இதனால் எமது நட்பும் ஆழமானதே. நட்பின் காரணமாக சோமரின் குணங்களை நான் நன்கு அறிந்தவன்.

இலக்கியப் பங்களிப்புப் பற்றிப் பேசப் போனால் தமிழ் நாடே இவருக்கு கௌரவ இடம் அளித்திருக்கின்றது என்றே கூறவேண்டும். தமிழ் சிருஷ்டி இலக்கிய வரலாற்றில் இவர் முக்கிய இடம் பெறுபவர். முற்போக்குச் சிந்தனையை முன்வைத்த முன்னோடிகளுள் இவரும் ஒருவர். முற்போக்கு இலக்கியம் பற்றிப் பேசுபவர்கள், சோமரைக் குறிப்பிடத் தவற மாட்டார்கள். தமிழ்நாட்டிலுள்ள முற்போக்குச் சிந்தனை யாளர்களுடனும் இவருக்குத் தொடர்பு உண்டு. இவரது எழுத்தையும், கருத்தையும் அங்கீகரித்தே இவரது நூல்களைத் தமிழகப் பிரசுராலயங்கள் வெளியிட்டிருக்கின்றன. புதுமையான, புரட்சிகரமான கருத்துக்களைத் தன் சிருஷ்டிகள் வாயிலாகத் தெரிவிப்பதால் இவருக்குத் தமிழ் இலக்கிய உலகம் மதிப்பு அளிப்பதுண்டு. முற்போக்கான கருத்தைச் சொல்லவேண்டும் என்பதற்காகச் சமூகத்தின் எந்தப் பிரிவினரையும் சாடியதில்லை. கடிந்ததும் இல்லை.

சோமரின் இலக்கியத் துறைப் பங்களிப்புப் பற்றிப் பலர் எழுதலாம் என்றதனால் சோமரின் ஆளுமைக் குண இயல்புகள் பற்றி மட்டுமே நான் குறிப்பிட விரும்புகின்றேன். சோமர் கண்ணியம் மிக்க கனவான், முன் மாதிரியான ஒரு மனிதர், பண்பாளர், என்ற தகைமைகளிலேயே தான் மதிப்பு அளிக்கின்றேன்.

இவரது பண்பை விளக்கப் பல சம்பவங்களை எடுத்துக் கூறமுடியும். தனிப்பட்ட முறையில் இவர் செய்தவை பல. இவற்றிற் சிலவற்றை மேலும் கூறாவிடின் எனக்குத் திருப்தி ஏற்படமாட்டாது.

1983 இனக்கலவரத்தின் போது என்னிடமிருந்த பெருந்தொகையான நூல்கள் தீக்கிரையாக்கப்பட்டன. பழந்தமிழ் நூல்களோடு பல சட்ட நூல்களும் எரிந்து சாம்பராயின. சோமருக்கு இவ்விஷயம் தெரிந்து கவலைப்பட்டார். வேதனைப்பட்டார். ஒரு நாள் திடீரெனச் சோமர் எனது வீட்டுக்கு வந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிவா உமக்கு நல்ல பரிசு ஒன்று தரப் போகின்றேன்." என்றார். என்ன விஷயம் என்று கேட்ட போது "பாருமன் இந்தக் காரில் இருக்கும் நூல்களை உமக்காகத்தான் ஓரிடத்திற் பெற்றேன்" என்றார். நான் பார்த்தேன். நல்ல சட்ட நூல்கள். எனக்கு அவசியம் தேவைப்பட்ட நூல்கள். சட்டக் கல்லூரியில் விரிவுரை நிகழ்த்த மிகவும் அவசியமான நூல்கள். நான் பெருமகிழ்ச்சி அடைந்தேன்.

அமரத்துவம் எய்திய தனது நண்பரான நீதியரசர் ஒருவருக்கு அந்நூல்கள் உரிமையானது என்றும், உறவினர்கள் பலர் அவரது நூல்களைப் பகிர்ந்து கொண்டனர் என்றும் நண்பரான தனக்குக் கிடைத்த நூல்களுள் சட்ட நூல்களைக் கண்டதும் என் நினைவு வந்ததால் அவற்றை எனக்குத் தருவதாகவும் தெரிவித்தார். இத்தனை அன்பு உள்ளம் உறவினருக்குக் கூட இருக்க மாட்டாதல்லவா?

நாவலர் சிலையை நல்லூர் வீதியிலிருந்து நாவலர் வீதிக்கு எடுத்துச் சென்று விழா எடுத்த போது எனக்கு இவர் அளித்த இடத்தை மறக்க முடியுமா?

என் மகனின் திருமணம் நடைபெற்றபோது கொழும்பிலே கடைசி நாள் வரை நான் இருந்தேன். சோமர் யாழ்ப்பாணத்திலே செய்த ஏற்பாடுகளை நான் மறக்க முடியுமா?

இப்படி எத்தனையோவற்றைச் செய்தவர் சோமர். நிரைப்படுத்திச் சொல்லலாம். ஆனாற் சோமர் விரும்ப மாட்டார். என்றாலும்,

*எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை*
*செய்நன்றி கொன்ற மகற்கு*

என்பது தமிழ் வேதம் அல்லவா? இதனாலே தான் ஒருசிலவற்றையேனும் சொல்ல வேண்டும் என்ற ஆசை எனக்கு ஏற்பட்டது.

சோமரும், அவரது குடும்பத்தாரும் நீடு வாழ வேண்டும் என்பதுவே என் பிரார்த்தனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபூர்வம் ஆனந்தம் கம்பீரம் : சோமகாந்தன்

-செ.யோகநாதன்-



**ப**ல்கலைக்கழக மாணவனாக இருந்தபோது எனக்கு அறிமுகமானவர் திரு. சோமகாந்தன். முதலில் அவரை நான் சந்தித்தபோது எத்தகைய வசீகரமான புன்னகை என்னைக் கவர்ந்ததோ, அதே புன்னகைதான் இன்றும் அவரை நினைக்கையில் என்மனதிலே பளீச்சென்று தோன்றுகின்றது. இத்தகைய ஆளுமை யென்பது வெகு அபூர்வமாகவே மனிதருக்கு வாய்த்து விடுகின்றது. இந்த அபூர்வம் ஆனந்தத்துக்கு உரியது. பெருமைக்கு உரியது. கம்பீரமானது.

சோமகாந்தனை ஒரு சுழல்கின்ற பம்பரமாகவே நான் முதலில் கண்டேன். ஒரு பணியை எடுத்துக்கொண்டால் அர்ப்பணத்தோடு செயற்படுகின்ற சுறுசுறுப்பு. களைப் பறியாத செயற்பாடு. முப்பத்தைந்து ஆண்டுகளின் முன்னர் பார்த்த போதிருந்த அதே உற்சாகம். அப்பலோ மருத்துவ மனையில் நோயாளியாக டாக்டரிடம் போனபோது கூட அதே உற்சாகம். இது அபூர்வமான உற்சாகம். ஆனந்தத்துக்கு உரியது. பெருமைக்கு உரியது. கம்பீரமானது.

தான் நம்பியதிலும், சார்ந்ததிலும் எனக்கு அறிமுகமான நாளிலிருந்தே வழுவாதிருப்பவர் சோமகாந்தன். இன்னும் சொன்னால் இவற்றிலே உள்ள நெருக்கம் வரவர அவரிடம் அதிகரித்தே வருகின்றது. இப்படியானவர்கள் அபூர்வம். இந்த அபூர்வம் ஆனந்தத்துக்கு உரியது. பெருமைக்கு உரியது. கம்பீரமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாய வாழ்வில் மௌனப்புயல் ஒன்றினூடே இலக்கிய வாதியாகப் பரிணமித்தவர் சோமகாந்தன். வைதீகச் சூழலில் ஒற்றைச் சுடராக வெளிச்சமிட்டுத் தோன்றிய விளக்கு, அதுபோல இன்னொரு சுடரைப் பலமாகவும் துணையாகவும் சேர்த்துக் கொண்ட விளக்கு. தான் இருந்த முரணான சூழலில் அச்சமின்மையை வளர்த்து, உறவு தந்த உதாசீனங்களை அற்பமாய்த் தவிர்த்து, தான் நம்பிய கருத்தையே உறுதியாய்ப் பற்றி வாழ்தல் என்பது அபூர்வம். இந்த ஈடுபாடு ஆனந்தத்துக்கு உரியது. பெருமைக்கு உரியது. கம்பீரமானது.

''ஈழத்துப் படைப்பிலக்கியத்தில் சோமகாந்தனின் பாத்திரம் எத்தகையது?''

முற்போக்கு இலக்கிய வளர்ச்சியின் அமர்களிலும், சமர்களிலும் சேர்ந்து வளர்ந்தவர் அவர். அதன் எல்லா விளைவுகளையும் வீரனாகச் சந்தித்தவர். இன்னலும் இடுக்கணும் வந்தபோதெல்லாம் புன்னகையோடு எதிர்கொண்டவர். அது நேற்றும் தான். இதோ இந்த வேளையிலுந் தான். முற்போக்கு இலக்கியக் கருத்துக்களை தன்னலத்துக்காக அடித்தும், திருத்தியும் ''வாத்தியாராகி'' வியாக்கியானம் செய்யாத படைப்புவாதியின் முதிர்ச்சி கொண்டவர் சோமகாந்தன்.

அவர் நாவல் எழுதியிருக்கிறார். சிறுகதை படைத்திருக்கிறார். உரைச் சித்திரம் காற்றிலும், கடிதத்தாள்களிலும் வரைந்திருக்கிறார். விமர்சன நெறிப்படுத்தியிருக்கிறார். ஆன்மீகவாதியாய் வெளிப்பட்டிருக்கிறார். தனது அடையாளங்களை வண்ணக் கோடுகளிட்ட ஓவியமாய், பிடிபடாத சித்திரமாய்ப் பொறித்திருக்கின்றார். இவரின் படைப்புத் திரையில் நிரப்பப்பட வேண்டிய வெற்றிடம் இன்னும் உண்டு. இது அபூர்வமானதல்ல.

நம்பமுடியவில்லை. காலம் எப்படி ஓடிப்போய் விடுகிறது? படைப்பாளியின் வரலாறு, காலப்போக்கு அவனது படைப்புக்களாலேயே பதிவு செய்யப்பட்டு விடுகின்றது. 'நான் அர்த்தமாய் வாழ்ந்திருக்கிறேன்' என்ற திண்மையை, பதிவான அவனது எழுத்துக்களே விரல் சுட்டிக்காட்டுகின்றன. எழுதிய அவனின் பக்கங்கள் இறந்தகாலத்தை உயிரூட்டி அவன் காலடியில் உயிரான நிகழ்காலமாய் நிறுத்திப் பெருமை காண்கின்றன. ஆனந்த நெடுமூச்செறிய வைக்கின்றன.

பழகிய நாட்களிலிருந்து இன்றும், இனியும், என்றும் சோமகாந்தனை என் மூத்த சகோதரனின் ஸ்தானத்தில் நான் வைத்து வந்திருக்கிறேன். இது என் அந்தரங்கமாயினும் இவ்வேளையில் காரணத்தோடு பதிவு செய்கின்றேன். இலக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வில் இளம் பருவத்திலிருந்தே மென்மையோடு நட்பு வளர்த்தவன் நான். நெஞ்சத்து நட்பென்று நான் எண்ணியவை என் மேல் ஏறி நடந்து போயிருக்கின்றன. இடுக்கண் வந்த வேளையில் என் பின்னே நின்று நகுதற் பொருட்டே நட்பென்று சொல்லி நழுவியிருக்கின்றன. என் கைபிடித்து, மேலேறி, முன்சென்று, கவிழ்க்க முனைந்து, கவிழ்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால் சோமகாந்தனின் முதற் புன்னகையே முழுப் புன்னகையாய் இப்போதும் இருக்கின்றது. இது நட்பையும் மீறிய அன்பு. மூத்த சகோதரன் கொள்கிற எதிர்பார்ப்பற்ற நேசம்.

இப்போது மூத்த சகோதரன் மீது அவன் தம்பிக்கேயுரிய கண்டிப்பான அக்கறையுள்ள விமர்சனம்.

"நீங்கள் எழுதத்தொடங்கி எவ்வளவு காலம்?"

எல்லாவற்றிலும் கால்வைத்தீர்கள்.

இப்படிப் பார்க்கையில் – "உங்கள் அனுபவம்– பின்புலம் – சலனசஞ்சலங்கள் –கனவு என்பன முழுமையாகப் பதிவாகியுள்ளனவா?" என்ற கேள்வி குரல் கொடுக்கவே செய்கின்றது. இது அபூர்வமான கேள்வியல்ல.

நீங்கள் அதே வசீகரமான புன்னகையோடு பதில்சொல்ல நினைப்பீர்கள்.

"தொழில், பணிகள், அமைப்புவேலைகள்..........."

படைப்பாளி சோமகாந்தனைப் பற்றித்தான் இப்போது பேச்சு; கேள்வி.

சென்றதினி மீளாது.

ஈழத்து இலக்கியப் பாரம்பரியம் முற்றிலும் வெளிச்சத்துக்கு ஆட்படாத முதிர்ச்சி. படிக்காமல் எழுதும் வரட்டு விமர்சகர்களின் கண்ணில் படாத முதிர்ச்சி. இலங்கையர்கோனும், வைத்திலிங்கமும் புகழ்பூத்த முதல்வர்கள். அவர்களின் வழி, துல்லியமானது. கைலாசபதியின் விமர்சன நெறி, இந்த மரபைச் செம்மையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செழுமையும் பெற வைத்தது. இந்த மரபு இன்னும் விரிவும் செழுமையும் அடையவேண்டியுள்ளது. இது தருணம்.

வாழ்வென்னும் இலக்கியத்தின் அடையாளமான டொமினிக் ஜீவாவின் ஆயிரத்தையும் மீறிய எழுத்துப் பக்கங்களைப் பார்க்கிறபோது பெருமிதமும் பொறாமையும் உண்டாகிறது. வாழ்வின் பல முக அனுபவங்கள் உங்களிடம் உண்டு. அவற்றைத் தனித்துவமான அடையாளத்தோடு உங்களாலே பதிவு செய்ய முடியும். பதிவு செய்யுங்கள். தேவேந்திரமுனையிலிருந்து பனிபடர்ந்த இமயம் வரை பரிச்சயமான படைப்பாளி நீங்கள். உங்களுக்குக் கிடைத்த வாய்ப்பும், பின்புலமும், அனுபவங்களும் அபூர்வமானது. இதை எழுதுவது ஆனந்தம். கம்பீரம்!

இது மணிவிழாக் காணும் உங்களுக்குச் சொல்கிற வாழ்த்து, வேண்டுகோள்!


UNIVERSITY OF JAFFNA LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துச் சோமு - ஒரு செயல் வீரர்

ஆ. சிவநேசச்செல்வன்



ஈழத்து முற்போக்கு இலக்கியத்தோடு, "அணுக்கத் துணைவராகத்" தம்மைப் பின்னிப் பிணைத்து, "நின்றும், இருந்தும், நடந்தும்" எழுத்தே மூச்சாக வாழ்ந்து வருபவர் ஈழத்துச் சோமு. ஈழத்துத் தேசிய இலக்கியப் பாரம்பரியத்தை இனங்கண்டு இலக்கிய விசையை இயக்கிய பிதாமகர்களுள் ஒருவராகத்தன்னைப் பிணைத்துக் கொண்ட சோமகாந்தன் ஈழத்து முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் ஆதார சுருதியாகச் செயற்பட்டு வந்தமையை, ஈழத்துத் தமிழ்கூறும் நல்லுலகம் நன்கு அறியும்.

சோமகாந்தனுக்கும் எனக்கும் உள்ள உறவு, விட்டும் தொட்டும் இடையீடுகளுடன் இருந்தாலும் அது நீண்டது. பாவலர் தெ. துரையப்பாபிள்ளையின் இலக்கிய அரவணைப்பில் எழுச்சி பெற்ற மகாஜனாக் கல்லூரியில் மாணவனாக சோமகாந்தனின் கல்விப்பேறும் இலக்கியப் பசியும் வளம் பெற்றது. புலவர் நா. சிவபாதசுந்தரம், கவிஞர். செ. கதிரேசபிள்ளை, தமிழருவி த. சண்முகசுந்தரம் போன்றோர் தமிழ்க் கல்வியோடு இலக்கிச் சுவையையும் இளம் உள்ளங்களில் ஊட்டிய காலத்திற் சோமகாந்தன் கல்வி பயின்றார். மகாஜனா ஊட்டிய இலக்கியப் பசளை இவரையும் உயிர்பெறவைத்தது.

அ. ந. கந்தசாமி, அ. செ. முருகானந்தன், மஹாகவி து. ருத்திரமூர்த்தி ஆகிய மும்மணிகளை ஈழத்து இலக்கிய உலகிற்கு அளித்த மகாஜனாக் கல்லூரியின் இலக்கியச் செழுமையோடும் வாழையடி வாழையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த மரபோடும் சோமகாந்தன் தம்மைப் பிணைத்துக் கொண்டமை நெஞ்சில் நிழலாடுகின்றது.

வட பிரதேசத்திலேயே ஒரு புதிய கலை, இலக்கிய, கலாசார அலையை ஏற்படுத்திய கார்ணிவல் களியாட்ட விழாவை யாழ்ப்பாண முற்றவெளியில் மகாஜனாக் கல்லூரி 1954 ஆம் ஆண்டு ஒழுங்கு செய்திருந்தது. பெருந்தொகையான தென்னிந்தியக் கலைஞர்களும், அறிஞர்களும் பெருந்திரளாக வந்து இவ்விழாவிற் பங்கு கொண்டனர். இந்த விழாவின் அமைப்பில் முக்கியமானவராக, சகல ஒழுங்குகளையும் துடிப்புடனும் வேகத்துடனும் செய்த சோமகாந்தனின் இளமைத்துடிப்பு பலருடைய பாராட்டுக்களையும் பெற்றது.

அக்காலத்து ஈழகேசரிப் பத்திரிகையிற் பக்கம் பக்கமாக விழா நிகழ்ச்சிகளின் வர்ணனை எழுதப்பட்டது. கல்லூரி வளர்ச்சியோடு கலைகலாசாரச் செல்நெறியும் மெருகுபெற்றது. சோமகாந்தனின் "கணீர்" என்ற குரலில் கேட்ட அறிவிப்புகள், இரவு பகலாக முழுமூச்சோடு உழைத்து விழாவின் வெற்றிக்கு அணிசேர்த்த பெருமைகள் நினைவு கூரத்தக்கவை. புலவர் நா. சிவபாதசுந்தரனின் அரவணைப்பில் கல்லூரியில் இயங்கிய இலக்கியமன்றத்திலும் சோமகாந்தனின் குரல் அவ்வப்போது ஒலித்தது. இது மாணவக் காலத்தில் நான் கண்ட சோமகாந்தன்.

கரவெட்டி விக்னேஸ்வராவில் இளமைக் கல்வியைப் பெற்ற சோமகாந்தன் த. சண்முகசுந்தரத்தின் உந்து சக்தியுடன் மகாஜனக் கல்லூரியின் நிழலில் ஆக்க இலக்கிச் சுடராக மாறியமை நினைவிற்கு வருகின்றது. மகாஜனாவின் முன்னணி மாணவருள் ஒருவராகத் திகழ்ந்த சோமகாந்தன் பிற்காலத்தில் இலக்கிய, கலாசார வளர்ச்சிக்காக முற்போக்கு எழுத்தாளர் சங்கம் மேற்கொண்ட இயக்கம், மகாநாடுகளின் அமைப்பு ஆகிய பலவற்றில் செயலாளராக எழுச்சி பெற்றமை வியப்பிற்கு உரியதொன்றல்ல. இது அவருக்கு கருவிலே விளைந்த திரு.

அக்காலத்தில் மகாஜனாவில் அதிபராக விளங்கிய தெ. து. ஜெயரத்தினத்தின் நன்மாணாக்கருள் ஒருவராக சோமகாந்தன் மதிக்கப்பட்டார். அன்புடன் அவரை ஆசிரியர்களும், நண்பர்களும் "சோமு" என்று அழைத்தனர். மகாஜனாவின் கார்ணிவல் களியாட்ட விழாக்காலங்களில் அமைப்பாளராகப் பெற்ற "பட்டறிவு", அவர் தொடர்ச்சியாகக் காலந்தோறும் மேற்கொண்ட எழுத்தாளர் விழாக்கள், நாவலர் விழா, சாகித்திய மண்டல விழா, மலர்வெளியீடுகள் போன்றவற்றில் எல்லாம் பக்கபலமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உந்து சக்தியாக விளங்கியது. எடுத்த கருமத்தை மனஞ்சலியாது வெற்றியுடன் சாதிப்பது சோமகாந்தனின் தனித்துவமான பண்பு.

கல்லூரிக் காலத்தின் பின்னர் அவ்வப்போது கருணையூர் சோமுவின் எழுத்துக்களைப் பத்திரிகைகளில் ஆங்காங்கு கண்டதுண்டு. நீண்ட கால இடைவெளியின் பின்னர், 'கருணையூர் சோமு', ஈழத்துச் சோமு ஆனதன் பின்னர் பாரதியின் ஞானகுருவான யாழ்ப்பாணச் சுவாமி அருளம்பல ஞான தேசிகரின் விழாவினை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் முனைப்புடன் நடாத்திய காலத்தில் சோமகாந்தனைக் கண்டு பேசினேன்.

ஈழத்துத் தேசிய இலக்கியம், கோட்பாட்டு ரீதியான எழுச்சியைப் பெற்றுவந்த காலத்தில் எல்லாம் சோமகாந்தன் அயராது, முழுமூச்சோடு செயற்பட்டு வந்தார். அ. ந. கந்தசாமி, பேராசிரியர் க. கைலாசபதி, அன்பர் இளங்கீரன், பேராசிரியர் கா. சிவத்தம்பி, பிரேம்ஜி. ஞானசுந்தரன் என்ற வரிசையில் உயிர்த்துடிப்போடு முற்போக்கு இலக்கியம், தேசிய இலக்கியம் என கோட்பாட்டு ரீதியான வளர்ச்சிப் பாதையில் ஈழத்து இலக்கியத்தை நெறிப்படுத்திய போது ஈழத்துச் சோமு நிரம்பிய இலக்கிப் பசியுடனும் விசுவாசத்துடனும் உழைத்து வந்தார்.

வாழ்வின் ஓட்டங்களுக்கு எல்லாம் ஈடுகொடுத்து, அதன் மத்தியில் இலக்கியத், தாகத்துடன் செயலாற்றி வருபவர் ஈழத்துச் சோமு. முற்போக்கு இலக்கியத்தினதும் தேசிய இலக்கியத்தினதும் விரிவாகப் பின்னர் நாவலரிலக்கியம் விரிவடைந்தது. தேசிய இலக்கிய முன்னோடியாக ஆறுமுகநாவலர், சித்திலெப்பை, விபுலானந்தர், சோமசுந்தரப்புலவர், ஆகியோர் பற்றி வழி வழியாக விழாவெடுத்த காலங்களில் எல்லாம் சோமகாந்தன் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் உந்து சக்தியாகச் செயற்பட்டு வந்தார்.

ஈழத்து இலக்கியத்தில் முன்னர் எப்போதும் இல்லாத வகையில் விழிப்பும் வேகமும் ஏற்பட்டது. தேசிய உணர்வுடனும், சமூக உணர்வுடனும் இலக்கிய இயக்கத்தை உருவாக்கிய பொறுப்பு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தளராத செயற்பாடுகளினால் எழுச்சியும் பெற்றது. தமிழ், சிங்கள எழுத்தாளர்கள் மகாநாடு, மரபுப் போராட்டம், நாவலரியக்கம், சாகித்திய விழா ஆகியனவற்றை எல்லாம் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் முன்னின்று நடாத்திய போது ஒவ்வொரு கட்டத்திலும் சோமகாந்தன் தோன்றாத் துணையாக இயங்கி வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் பணிகளுக்கு அப்பால் நாவலர் சபையோடு இணைந்து சோமகாந்தன் முழுமூச்சாகச் செயற்பட்டுவந்தார். 1961 ஆம் ஆண்டு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நாவலருக்கு விழாவெடுத்து நாவலர் பாரம்பரியத்தைப் புதிய கோணத்திலே தரிசித்தது. இந்த மரபின் வளர்ச்சியும் தொடர்ச்சியுமாக நாவலர் குருபூசை மரபிற்கு அப்பால் நாவலர் தரிசனம் விரிவுபெறப் பக்கபலமாக விளங்கியவருள் சோமகாந்தனும் ஒருவர்.

நாவலரியக்கத்தின் வரலாற்றையும் சாதனைகளையும்புதிய கோணத்திற் காணும் நெறிமுறையை நாவலர் சபை மூலமாக வெளிக் கொணர்ந்த பெருமைக்குரியவர் சோமகாந்தன். நாவலர் சபை ஆரம்பிக்கப் பட்டுச் சிலை நிறுவிய சாதனைகள் ஒரு புறமிருக்க, நாவலர் பாரம்பரியம் "நாவலரியலாக" வளரும் போக்குக்கு சோமகாந்தன் பக்க பலமாக அமைந்தார். நாவலர் பரம்பரை என்று உரித்துக் கூறி ஆன்மீக அமைதிகண்ட தமிழறிஞர் பரம்பரைக்குப் புறம்பாக, விடுதலைப் பேரியக்கத்திற்கு வித்திட்ட தேசியத்தின் முதல்வராகவும், தேசிய எழுச்சியின் பிதாமகராகவும் நாவலரைக் காணும் வாய்ப்புக்கள் பேராசிரியர் க. கைலாசபதியின் அனுசரணையுடன் உருப்பெறப் பக்கபலமாக விளங்கியவர் சோமகாந்தனே யாவார்.

மலையைக் காணத் தூரம் வேண்டும். சம்பவங்களை மதிப்பிடக் காலம் வேண்டும். கடந்த அரை நூற்றாண்டு காலத்தில் ஈழத்துத் தமிழிலக்கியம் தனித்துவமான போக்குடன் புடமிடப்பட்டமை ஒரு நீண்ட வரலாறு. தேசிய இலக்கியம், முற்போக்கு இலக்கியம், நற்போக்கு இலக்கியம் என்ற கோஷங்கள் இலக்கிய உலகைக் காலம் தோறும் ஆக்கிரமித்தன. இலக்கிய வரலாற்றுப் போக்கிலே பலங்களும் பலவீனங்களும் ஒருபுறமிருக்க, தனிமனித சாதனை இயக்கரீதியான பணிகள், கோட்பாட்டு ரீதியான செயற்பாடுகள் எல்லாம் எமது இலக்கிய இயக்கத்தை வழிப்படுத்தி வந்தன.

இலக்கியத்தின் வாழ்வும் வளமும் காலதேச வர்த்தமானங்களால் அடிபட்டுப் போகக் கூடாது. ஈழத்துச் சோமு அல்லது சோமகாந்தன் என்ற மனிதன் சாதித்தவைகள் பல்வேறு மட்டங்களில் இலக்கியப் போக்கிற்கு அணி சேர்ப்பனவாக உள்ளன. சோமகாந்தன் பேனா பிடிக்கத் தொடங்கிய காலம் முதலாக இன்றுவரை எழுதியவண்ணமே உள்ளார். ஏதோ ஒரு வேகம், மூச்சு சோமகாந்தனை இயக்கி வந்துள்ளது. மகாஜனாக் கல்லூரியில் மாணவனாக இருந்த காலத்தில் "ஆசை ஏணி" என்ற நாவலை எழுதிய த. சண்முகசுந்தரத்தின் அரவணைப்பில் இலக்கிய உணர்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


எழுந்தமையை அடிக்கடி ஈழத்து சோமு நினைவு கூருகின்றார். ஈழத்துச் சோமுவின் நரம்புத் தூய்களில் எல்லாம் இலக்கிய ஊற்றே நிறைந்துள்ளது.

மகாஜனாக் கல்லூரி காலம் முதல் இன்று வரை, சிறுகதைகளின் ஊடாகவும், கட்டுரைகளின் ஊடாகவும் துன்பம் வந்துற்ற காலங்களிலே கூடத் துளங்காத தமது செயற்பாடுகள் மூலமாகவும் கட்டித்த உணர்வுடன் இயங்கி வரும் ஈழத்துச்சோமு பத்மா என்ற சிறந்த பெண் எழுத்தாளரை வாழ்க்கைத் துணைவியாகப் பெற்றுள்ளார். இது அவரது இலக்கிய உணர்வின் ஒரு பேறு.

"மனிதர்கள் தாம் இருக்கின்ற நிலையிலிருந்து இன்னும் உயர்ந்து வாழவே ஆசைப்படுகிறார்கள். மனிதர்களின் இந்த ஆசையைத் தூண்டி அவர்கள் உயர்நிலை பெறுவதற்கும், முன்னேறுவதற்கும் துணை புரிவது தான் இலக்கியத்தின் நோக்கமாக இருக்கவேண்டும்" என்ற மார்க்சிம் கோர்க்கியின் சிந்தனைக்கு இலக்கியமாக வாழ்ந்து தமது இளமைக் கனவை நனவாக்கி வரும் ஈழத்துச் சோமு நிறைவாகப் பல விடயங்களைச் சாதித்துள்ளார்.

இலக்கியத் தாகமும், படைப்புத்திறமும் ஓரளவு செயற்படுவதற்குக் கூட வாய்ப்பும் வசதியும் "அருந்தலாக" உள்ள இன்றைய சூழலில் அசுரவேகத்துடன் அவ்வப்போது இயக்க ரீதியாகவும், தனிப்படவும் சாதித்தவை ஈழத்துச் சோமுவின் பெயரை என்றும் நின்று நிலைக்க வைக்கும் !

"ஈழத்துச் சோமு" சகல நலமும் பெற்றுச்
சிறக்கவென வாழ்த்துவோமாக ! .





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “இனிய உறவுகள் எழுச்சியுறட்டும்”

கே. எஸ். சிவகுமாரன்



ஈழத்துச் சோமு என்ற புனை பெயரில் 45 வருடங்களுக்கும் மேலாக கலை, இலக்கியத் துறைகளிலும், சமய அலுவல்களிலும் ஈடுபட்டுவரும் திரு. நா. சோமகாந்தன் அவர்கள், இந்த நாட்டின் தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவர் என்பதை இத்துறைகளில் ஈடுபட்டுள்ள அனைவரும் அறிவர். புதிய பரம்பரையினருக்கு இவர் ஆற்றிய பணிகள் பற்றிய முழுவிபரங்களும் தெரியாமலிருக்கலாம். ஆயினும், இலக்கிய வரலாற்றை எழுதுபவர்களும், வரலாற்றில் இத்தகைய பணிசெய்தவர்களின் ஆற்றல்களைப் பதிவு செய்பவர்களும், ஈழத்துச் சோமுவையோ, அவர்தம் துணைவியாரையோ புறக்கணித்துத் தமது பதிவுகளை வரைய முடியாது. சோமகாந்தன் அவர்களின் துணைவியார், புதுமைப் பிரியை என்ற புனைபெயரில் எழுதிவரும் பத்மா சோமகாந்தன் அவர்களாவர். இருவருமே தத்தம் அளவில், தனித்தும், இணைந்தும் பற்பல நற்பணிகளைச் செய்து முடித்துள்ளனர்.

1950 களின் பிற்பகுதியில் சுதந்திரன் வார இதழ், இந்நாட்டுத் தமிழ் பேசும் இளைஞர்களைப் பெரிதும் கவர்ந்த பத்திரிகையாக வெளிவந்து கொண்டிருந்தது. மூத்த பத்திராதிபரான முத்திரை பொறித்த எஸ். டி. சிவநாயகம் அவர்கள் அப்பத்திரிகையின் ஆசிரியராக இருந்து புதுமையான விஷயங்களைக் கொணர்ந்து அறிமுகப்படுத்தினார். அவற்றுள் ஒன்று, ஈழத்து எழுத்தாளர்களின் அறிமுகம். இந்த அறிமுகங்களை நேர்மையாக எழுதிவந்தவர் அன்பர் சோமகாந்தன் அவர்கள். அப்பொழுது முதல் இவருடைய கட்டுரை, கதை, விமர்சனம் ஆகியவற்றைப் படித்து வருகிறேன்.

தமிழிலே ஈழத்து எழுத்தாளர்கள், அவர்களுடைய படைப்புக்கள் ஆகியவற்றை அறிந்து கொள்ளும் ஆர்வம் எனக்கு ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோ.சிவபாதசுந்தரம், கனகசெந்திநாதன் போன்றோர் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த பத்திரிகைகளில் முன்னர் இவ்வாறான அறிமுகங்களை எழுதியிருந்த போதிலும், சோமகாந்தன் அவர்கள் 'சமூகத் தொண்டன்' என்ற பருவகால ஏட்டில் எழுதிய ஓர் ஆய்வுக் கட்டுரையைப் படித்த பின்னர் சோமகாந்தன் அவர்களின் விமர்சனப் பாங்கே எனக்கு அக்காலத்தில் மிகவும் பிடித்ததாய் அமைந்தது.

விமர்சகராக மட்டுமன்றி, ஆக்க இலக்கியப் படைப்பாளியாகவும் சோமகாந்தன் தமது ஆற்றலை வெளிப்படுத்தி வருகிறார். இவருடைய சிறுகதைத் தொகுப்புகள், நாவல்கள் அனைத்துமே ஆய்வாளர்களின் ஆதரவைப் பெற்று உயர்ந்த இடத்தைப் பெற்றுள்ளன. இவருடைய எழுத்து நடை, வாழ்க்கை நோக்கு, ஆக்க இலக்கியங்களைச் செம்மையாக உருவாக்கும் ஆற்றல், யதார்த்த ரீதியாகக் கதைப் பொருளைத் தேர்வு செய்யும் முறைமை அனைத்துமே பாராட்டுக்குரியவையாய் அமைகின்றன. இவருடைய ஆக்கங்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக இங்கு பகுப்பாய்வு செய்ய முடியாதாகையால், பொதுப்படையாகவே, இவர் எழுத்துக்கள் பற்றி இங்கு குறிப்பிட முடிகிறது.

இவ்வாறே இவருடைய கட்டுரைகளும், கட்டுரைத் தொகுப்புகளும், இனிய எளிமையான, கவித்துவ நடையைக் கொண்டுள்ளன. "காந்தனின் கண்ணோட்டம்" என்ற தலைப்பிலே இவர் தினகரன் வார மஞ்சரியில் எழுதிவரும் பத்திகள் மிகமிகத் தரமுயர்ந்ததாகவும், பல நிகழ்ச்சிகளின் அவதானிப்புக்களை உள்ளடக்கியதாகவும் அமைவதுடன், எழுத்து நடையினாலும், வாசகர் ஆவலைத் தூண்டுகின்றன.

ஈழத்துச் சோமு அல்லது சோமகாந்தன் ஓர் நல்ல செய்தியாளர் என்பதையும், அண்மையில் நிரூபித்திருக்கிறார். புதுதில்லியிலிருந்து தினகரன் வார மஞ்சரிக்கு இவர் எழுதிய செய்திக் குறிப்புகளையும் அவை எழுதப்பட்ட முறையையும் படித்து வியந்தேன். இவருடைய இந்த ஆற்றலும் மேலும் விருத்தி செய்யப்பட வேண்டியதொன்று.

கலை, இலக்கியம் தவிர்ந்து பக்தி சம்பந்தப்பட்ட பொருட்கள் அனைத்திலும் சோமகாந்தன் பல முயற்சிகளிலும் ஈடுபட்டுவருகிறார். முற்போக்குச் சிந்தனைகளையும், பக்திப் பரவசத்தையும் இணைக்கும் நுட்பத்தை இயல்பாகவே சோமகாந்தனும் இவருடைய துணைவியாரும் பெற்றிருக்கின்றனர். இந்து சமய, கலாசார அலுவல்கள் அமைச்சிலும், திணைக்களத்திலும் பொறுப்புள்ள பதவிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகித்தவர் சோமகாந்தன். அங்கு பொதுப்பணி மேலோங்கியதனால், தனித்துவம் துலங்க வாய்ப்பில்லாமற் போய்விட்டது போலும்.

சோமகாந்தன் அவர்களின் துணைவியாரான பத்மா அவர்கள் 'புதுமைப் பிரியை' யாகவே அன்றும் இன்றும் இருந்து வருகிறார். இந்த நாட்டிலுள்ள முன்னணிப் பெண் எழுத்தாளர்களுள் ஒருவராய் விளங்கும் இவர், திருமணஞ் செய்வதற்கு முன்னரே, சிறுகதைகளை எழுதி ஆய்வாளரின் கவனத்தைப் பெற்றவர். பிராமணக் குலத்தைச் சேர்ந்த பத்மாவும், அதே குலத்தைச் சேர்ந்த சோமுவும் இணைந்து, முற்போக்கு வழியிற் செல்வது அவதானிக்கத் தக்கது.

பத்மா சோமகாந்தன் அவர்களுடைய சிறுகதைத் தொகுப்புக்கள் அவருடைய ஆக்கத் திறனின் வெளிப்பாடுகள். இவற்றையும் இங்கு தனித்தனியாகப் பகுப்பாய்வது சாத்திமில்லையாதலால் பொதுப்படையாகவே இவைபற்றி இங்கு குறிப்பிட முடிந்தது. கதைகள் மட்டுமன்றி, இதழாசிரியராகவும், பேச்சாளராகவும், பெண்ணியத்தில் ஈடுபாடு கொண்ட ஆய்வாளராகவும் விளங்கி வரும் பத்மா அவர்கள் தம் துணைவர் போலவே நவீன, முற்போக்கான சிந்தனையாளர்.

இருவருமே, இந்நாட்டுத் திறமைமிகு எழுத்தாளர்கள், ஒலிபரப்பாளர்கள், பேச்சாளர்கள், ஒளிபரப்பாளர்கள், சமயத் தொண்டர்கள் எல்லாவற்றுடனும் சிறந்த அமைப்பாளர்கள். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க நிகழ்ச்சிகள் காத்திரமான, பயனுள்ள விழாக்களாக அமைந்தமைக்கு முக்கிய காரணம் சோமகாந்தனின் ஈடுபாடுடைய ஒழுங்கமைப்பான ஏற்பாடுகளும், இவருடைய துணைவியாரின் பங்களிப்புமாகும்.

இந்த விரும்பத்தக்க தம்பதியரின் தொண்டுகள் மேலும் தொடரவும், மனுக்குலம் உய்ய வழிவகுக்கவும், இனிய இல்வாழ்க்கை ஷோபனமாய் அமைந்து மேலும் கனிவுறவும் எம்போன்றவர்களின் வாழ்த்துக்கள் என்றுமே இருந்து வரும். உயர்க அவர் தம் வாழ்வும், பணியும். மணிவிழா நாயகர் சோமகாந்தனும், அவர்தம் துணைவியார் பத்மாவும் நீடூழி வாழ்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதைகளினூடாக நா.சோமகாந்தன் அவர்களின் சமூகப் பார்வை

சி.வன்னியகுலம்
பணிப்பாளர் (தமிழ் நிகழ்ச்சிகள்)
இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்



திரு.நா.சோமகாந்தன் அவர்களை எனது இளம் பராயம் முதல் நான் நன்கறிவேன். 1967ம் ஆண்டளவில் எனது இலக்கிய உலகப் பிரவேசத்துடன் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தோடு நெருங்கிய உறவுகளை ஏற்படுத்திக்கொண்டேன். அந்தக் காலம்முதல் அவரை ஒரு 'பெரியார்' ஆகக் கனம்பண்ணியே நான் பழகிவந்திருக்கிறேன்.

திரு.நா.சோமகாந்தன் அவர்கள் தனிமனித உறவுகளைப் பேணுவதில் மிக அக்கறையுடன் செயற்பட்டு வந்திருக்கின்றார். எந்த மனிதனையும் மிக இலகுவாகக் கவர்ந்து விடுவதும், எவருடனும் எளிமையாகவும் அந்நியோந்நியமாகவும் பழகுவதும் அவரது இயல்பு. கட்சி, இனம், மதம், மொழி, சாதி, வர்க்க வரம்புகளை உடைத்தெறிந்துகொண்டு மனித நேயத்துடன் இவர் மக்களுடன் பழகுவதைக் காணும்போது ஆச்சரியமாகவிருக்கும்.

முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் முதுகெலும்பாக விளங்குபவர் சோமகாந்தன். சங்கத்தின் இயக்கத்திலும் தொழிற்பாடுகளிலும் முன்னின்றுழைப்பவர். அத்திபூத்தாற்போல சங்கம் எடுக்கும் விழாக்களில்அவரே 'உபயகாரன்'. விழாக் 'கால்கோள்' முதல் கடைசி நிமிடம் வரை, மிகச் சுறுசுறுப்பாகத் தொழிற்படுவார். சங்கம் நடாத்தும் கூட்டங்கள், கலந்துரையாடல்கள், நூல்வெளியீட்டு விழாக்கள் யாவற்றிலும் அவரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயகன். சங்கப் பொதுச்செயலாளர் பிரேம்ஜி ஞானசுந்தரன் அமைதியுடனும் புன்முறுவல் தவழும் முகத்துடனும் வீற்றிருக்க, தேசிய அமைப்பாளரான இவர்மட்டும் பம்பரமாகச் சுழன்று வருவார். மூச்சைப் பிடித்தபடி செயற்படும் சோமகாந்தனைப் பார்க்கும்போது வியப்பாகத்தானிருக்கும்.

நண்பர் சோமகாந்தன் முற்போக்குச்சக்திகளுடன் மட்டும் தமது தொடர்புகளை மட்டுப்படுத்திக்கொண்டவரல்லர். முற்போக்குச் சிந்தனைகளுக்கு முரணான நிறுவனங்களுடனும் தனிமனிதர்களுடனும் அவர் நெருங்கிய தொடர்புகளைப் பேணி வருகின்றார். எந்தக் கொள்கை சார்ந்தவர்களுக்கும் சோமகாந்தனின் நெருக்கமும், நட்பும் தேவைப்படுகின்றன.

சிறுகதைகளினூடாக சோமகாந்தனின் சமூகப் பார்வையை எடைபோட முயன்றபோது தான் சமூகம் சார்ந்த அவரது துல்லியமான கொள்கையை இனங்காண முடிந்தது. அவரது சிறுகதையைப் படிக்கும்போது பெருவியப்பாக இருக்கின்றது. அவரது ஒவ்வொரு சிறுகதையும் வாழ்க்கை பற்றிய அவரது நோக்கின் கருவூலமாகத் திகழ்கின்றன. சமூகத்தையும், மக்கள் இயல்புகளையும் எவ்வாறு சோமகாந்தன் அணுகுகின்றார் என்பதற்கு அவரது ஒவ்வொரு சிறுகதையும் கட்டியம் கூறுகின்றன. சமூகம்பற்றிய மிகத் தெளிந்த சிந்தனையை ஒவ்வொரு சிறுகதையிலும் கண்டுணர முடிகிறது. வர்க்க முரண்பாடுகள் பற்றிய அவரது துல்லியமான சிந்தனையை இனங்காண முடிகிறது.

தொழிலாளர் வர்க்கத்திற்காகவும், சமூகத்திலே காலாகாலமாக ஒடுக்கப்பட்டு வந்த மக்களின் விடுதலைக்காவும் சோமகாந்தனின் படைப்பு ஒவ்வொன்றுமே போர்க்கொடி உயர்த்துகின்றன. அந்த மக்களின் ஈனமான வாழ்க்கை நிலை கண்டு கசிந்துருகுகின்றன. அவர்களின் வாழ்க்கை ஈடேற்றத்துக்காக ஏங்கித் தவிக்கின்றன. சமுதாய அட்டைகளாக மாறிப்போய்விட்ட உயர்வர்க்க மிருகங்கள் மீது காறி உமிழ்கின்றன.

அடக்குமுறைக்கும், ஆசை வார்த்தைகளுக்கும் அடிமைப்பட்டுக்கிடக்கும் தொழிலாள வர்க்கம் அடம்பன் கொடியாய்த் திரண்டுவிட்டால் அண்ட சராசரத்தையும் அதிரச் செய்து விடும் என்ற தத்துவத்தை, 'நிலவோ நெருப்போ' சிறுகதையினூடாக உணர்த்துகிறார் சோமகாந்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலங்காலமாக ஒடுக்கப்பட்ட, தாழ்ந்த ஜாதிப் பெண்களின் உழைப்பையும், கற்பையும் சூறையாடிக் கொண்டு, சட்டங்களையும், சமூக மரபுகளையும் தமது கைகளிலே சுருட்டிக்கொண்டு, அட்டகாசம் செய்யும் உயர்வர்க்கக் காடைத்தனத்துக்கு எதிராக, நெஞ்சு நிமிர்த்தி, தலைதூக்கி எழுகின்றது 'நிலவோ நெருப்போ'.

தொழிலாள வர்க்கத்தின் விசுவாசத்தையும், அப்பாவித் தனங்களையும் மூலதனமாகக் கொண்டு, காசேதான் வாழ்க்கையெனக், கருமிகளாய் வாழ்கின்ற முதலாளி வர்க்கத்தினருக்குச் சாட்டையெனச் சொடுக்குகின்றது, "காசுக்காக அல்ல' சிறுகதை. கள்ளங் கபடமற்ற ஒரு ஏழைத் தொழிலாளியின் அற்பமான ஒரு தியாகத்திற்கும், தன்மான உணர்வுக்கும் முன்னிலையில் அருணாசலம் முதலாளியை மண்டியிட வைக்கிறார் சோமகாந்தன்.

உயர் குடிப்பிறந்தபோதும், பொருளாதார ரீதியாகவும், சமூகரீதியாகவும் துகிலுரிக்கப்பட்டு நடுச்சந்தியில் நிறுத்தப்படும் பிராமணர்களின் அவல வாழ்க்கையையும், கோயில் மணியகாரர்களின் அடாவடித் தனங்களையும், கபடத்தனமான செயற்பாடுகளையும் சித்திரிக்கின்றது 'ஆகுதி'.

யாழ்ப்பாணத்திலே சமூக மேலாதிக்க நிலையில் உள்ளவர்கள், உழைக்கும் வர்க்கத்தினரைச் சுரண்டுவதையும், அந்த வர்க்கம் சார்ந்த பெண்களைத் தமது காம இச்சைகளுக்கு ஆட்படுத்துவதையும், அந்த மக்களின் வாழ்க்கையைத் தமது கால்களின் கீழேபோட்டு துவம்சம் செய்வதையும், இத்தனை கொடுமைகளையும் கண்டும் காணாமல் வாய்மூடி மௌனிகளாய் யாழ்ப்பாண உயர்சாதியினர் அஹிம்சாவாதிகளாய் இருந்ததையும் 'வாத்தியார் பேசவில்லை'' என்ற சிறுகதையினூடாக முன்வைக்கிறார்.

சோமகாந்தனின் சிறுகதைகளினூடாக அவரது சமூகப்பார்வையை நோக்கும் போது அவர் இமயத்தின் சிகரமென உயர்ந்து நிற்கிறார். இருப்பினும், அவரது சிறுகதைகளிலே சமூகக் கொடுமைகளுக்கும், அநீதிகளுக்கும் எதிராகக் கிளர்ந்தெழும் போர்க்குணம் அடக்கமாகவே கையாளப்பட்டிருக்கின்றது.


ஒரு தலைசிறந்த படைப்பாளி, பிறக்கும்போதே, அப்பிரதேசத்தின் மண் அவனது இருதயத்துடன் ஒட்டிக் கொள்கின்றது. அவன் எங்கு சென்றாலும், எந்த நிலையிலிருந்தாலும் அந்த மண்ணின் வாசனை அவனுள்ளே கமழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கிறது. சோமகாந்தனின் சிறுகதைகளைப் படிக்கும்போது இந்த உண்மைதான் என் மனதிலே துளிர் விட்டது. யாழ்ப்பாணத்தின் சமூகவியல் தளத்தை பச்சையாகவே உழுதுகாட்டி அதன் வக்கிரங்களையும், விழுமியங்களையும் கட்புலனாக்கும் ஆற்றல் சோமகாந்தனின் சிறுகதைகளில் நிறையவே காணப்படுகின்றன.

நண்பர் சோமகாந்தனுக்குத் தாழ்மையான ஒரு வேண்டுகோள். நீங்கள் மீண்டும் யாழ்ப்பாணம் செல்ல வேண்டும். யாழ்ப்பாணத்தின் சமூகப் பண்பாட்டு விழுமியங்களை உங்கள் எழுத்துக்களின் ஊடாகப் படம் பிடிக்க வேண்டும். உங்கள் எழுத்துக்கள் மூலமாக இலக்கியப் புத்துயிர்பொன்றினை உருவாக்க முடியுமென நான் உறுதியாக நம்புகிறேன். அப்பணியை நிறைவு செய்வதற்கு இறையருள் என்றும் உங்களுக்குத் துணை நிற்கும் என வாழ்த்துகிறேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் கண்ட திரு. சோமகாந்தன்

பேராசிரியர்
சோ. சந்திரசேகரன்
*கொழும்புப் பல்கலைக்கழகம்*



இவ்வாண்டு அறுபது வயதை நிறைவு செய்யும் உயர்திரு.நா.சோமகாந்தன் அவர்களுக்கு மணிவிழாவெடுக்கும் இச் சந்தர்ப்பத்தில் அவர் மேலும் பலகாலம் வாழ்ந்து தமது கலை இலக்கிய எழுத்துப் பணிகளைத் தொடர இறைவன் அருள் பாலிக்க வேண்டும் என உளமாரப் பிரார்த்திக்கின்றேன். திரு. சோமகாந்தன் அவர்கள் பதவியை நேசித்து சமூகத்திலிருந்து ஒதுங்கி வாழ முற்பட்டவரல்லர். தமது வாழ்நாளையும், ஒய்வு நேரத்தையும், இலக்கிய, சமூகப் பணிகளுக்காகப் பயனுள்ள முறையில் செலவிட்டு வருகின்ற ஒரு தமிழ்பெருந்தகை அவர்.

அவரது இலக்கிய மற்றும் விமரிசனப் பணி ஈழத்து இலக்கிய வரலாற்றில் என்றென்றும் இடம் பெறுவதொன்று. யதார்த்த உலகிலிருந்து விடுபட்ட கற்பனை உலகொன்றில் தமது எழுத்துக்களுடன் சஞ்சாரம் செய்ய அவர் விரும்பவில்லை. தமது கலை இலக்கியப் பணிக்கு ஒரு இலட்சியத்தையும், குறிக்கோளையும் அவர் வகுத்துக் கொண்டார். அவருடைய எழுத்துக்கள் எப்போதுமே சமுதாய யதார்த்தம், மனித நேயம், மனித மேம்பாட்டில் தணியாத ஆர்வம் என்னும் வரையறைகளைக் கடந்ததில்லை. எழுத்தாளர் என்றால் அவனுக்கு சிந்தனா சக்தியும், கற்பனையும் மட்டும் போதாது. அவற்றை ஒரு சாதனத்தினூடாக வெளியிடும் ஆற்றல் அவனுக்குத் தேவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளங்களில் ஒழுங்கற்றுக் கிடக்கும் எண்ணங்களையும் சிந்தனைகளையும் கலைஞன் முறைப்படுத்தி வெளியே கொண்டு வருகின்றான். திரு.சோமகாந்தனின் எழுத்துக்களில் அவருடைய சிந்தனை ஆற்றலையும் அழகியல் பாணியில் அதனை வெளியிடும் ஆற்றலையும் காணமுடிகின்றது.

இலங்கையில் இலக்கிய நோக்கினைச் செம்மைப்படுத்தவும், மக்கள் இலக்கியம் எதுவென்பதை இனங்கண்டு விமரிசிக்கவும் முற்போக்கு எழுத்தாளர் அணி புறப்பட்டுப் பணியாற்றியபோது அவ்வணியின் எண்ணங்களையும் பிரதிபலிப்பவராய் உருவானவர் சோமகாந்தன் அவர்கள். 'முன்னேறும் சக்திகளை சித்திரிப்பதும், புரட்சிகரமான மனித நேயம் இடம் பெறுவதும், பழமையை மறு மதிப்பீடு செய்து ஏற்பதும், முற்போக்கு அணியினரின் பணியாகிய போது அதற்கு உறுதுணையாக நின்றவர் திரு.சோமகாந்தன் அவர்கள்.


தமிழபிமானியும் ஆர்வலருமான திரு.சோமகாந்தன் அண்மையில் திருகோணமலையில் நடந்தேறிய தமிழ் ஆய்வரங்கில் சுறுசுறுப்புடன் கலந்து கொண்டு ஆய்வாளர்களுக்கு பெரும் உற்சாகமளித்தார். அவருடைய வாழ்க்கைப்பணியிலிருந்து நாம் கற்க வேண்டியவை ஏராளம். வாழ்க அவர் நாமம், வளர்க அவர்தம் கலை இலக்கியப் பணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடக்கம் நிறைந்த ஆளுமை

திக்குவல்லை - கமால்



**1970** களின் முற்பகுதி: நாவலர் சபை, நாவலர் விழாவை முன்னிட்டு நடாத்திய சிறுகதைப் போட்டியில் எனக்கும் ஒரு பரிசு கிடைத்தது. அந்த விழாவின் செயலாளராகவிருந்து, யாழ்ப்பாணத்திலே பெருவிழா நடாத்தியவர் திரு.சோமகாந்தன் அவர்களே. அதுவே அவரை எனக்கு அறிமுகப்படுத்திய நிகழ்ச்சி. ஆனால் அந்த அறிமுகம் நேர்முகமானதல்ல.

1975ல் கொழும்பில், பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நடாத்திய சிங்கள தமிழ் எழுத்தாளர் ஒருமைப்பாட்டு மகாநாடு தொடர்பான முன்னேற் பாடுகளின்போது எனக்கு, திரு. சோமு அவர்களை நேரிற் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

அதனைத் தொடர்ந்து இ.மு.எ.ச. வுடன் தொடர்புபட்டு இயங்கியபோது திரு .சோமுவை அவ்வவ்போது சந்திப்பது ஒரு சாதாரண நிகழ்வாகி விட்டது.

ஏதாவது விழாவென்றால், அதிலே திரு.சோமு சம்பந்தப்பட்டிருந்தால், அது எப்படியாவது வெற்றிகரமாக நடந்தே தீரும் என்பது இலக்கிய நண்பர்களின் நம்பிக்கை. அது என்றுமே பொய்த்துப்போனதில்லை என்பதற்கு, இவ்வாண்டு கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற மூன்று நாள் இலக்கியப் பேரரங்கும் ஒரு சான்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் ஒரு சிறந்த ஆக்க இலக்கியவாதி என்பது அவரது மறுபக்கம். ஒரு சிறுகதையாளராகவே அறியப்பட்டிருந்த சோமுவின் ஆக்கத் திறமைக்கும் பார்வை வீச்சுக்கும் 'ஆகுதி' சிறுகதைத்தொகுதி சான்று பகர்கின்றது. அதே நேரத்தில் ஒரு சிறந்த நாவலாசிரியரும் கூட என்பதை 'விடிவெள்ளி பூத்தது' மூலம் மெய்ப்பித்து விட்டார். இலக்கியப் பரப்பிலே அவருக்கு இன்னும் சில முகங்களுண்டு. ஆம்; அவரொரு பன்முகப் புலமையாளர்.

ஒரு மனிதர் என்ற வகையிலே மிகவும் அடக்கமான ஆளுமை கொண்டவராகவே அவரை நான் காண்கின்றேன். எந்த இக்கட்டான நிலையிலும் நிதானம் நிரம்பியவராகவே காணப்படுவார்.

திக்குவல்லை எழுத்தாளர் சங்கத்தின்மீது அவருக்குத் தனியான கண்ணோட்டமும் அபிமானமும் உண்டு. இங்குள்ள ஒவ்வொருவரைப் பற்றியும் எப்பொழுதும் அக்கறைப்படுபவர். நீண்ட இலக்கியப் பாரம்பரியம் எமக்கில்லை. தமிழ் இலக்கியத் தொடர்பிலிருந்து துண்டிக்கப்பட்ட பிரதேசத்திலிருந்து கொண்டே நாம் தமிழ் செய்கிறோம். இதைத்துல்லியமாகப் புரிந்துகொண்டு எமக்குக் கைதந்தவர்கள் முற்போக்குச் சிந்தனை கொண்டவர்களே. அவர்களில் ஒருவர் சோமகாந்தன். அவருடைய வானொலி உரைகளிலும், பத்தி எழுத்துக்களிலும் எம்மைத் தொட்டுக்காட்டி ஊக்கம் தந்து வருபவர்.

எல்லோருக்கும் விழாவெடுக்கும் சோமுவுக்கு எப்போது விழாவென்று எதிர்பார்த்திருந்த எழுத்தாள நண்பர் மத்தியில் நானும் ஒருவன். மணிவிழாச் செய்தியை ஏந்தி வந்த கடிதம் நெஞ்சிலே தேன் வார்த்தது.

மணிவிழாக் காணும் சோமகாந்தனின் படைப்புக்கள் நூல்வடிவம் பெற்றது போதாது என்ற ஆதங்கம் எனக்கு என்றும் உண்டு. எதிர்காலத்தில் அவர் இதிலே கூடிய கவனம் செலுத்துவதோடு, அவரது இலக்கிய அனுபவங்களையும், வாழ்க்கை அனுபவங்களையும் எதிர்காலச் சந்ததிக்காக எழுதித்தர வேண்டுமென்றும் எதிர்பார்க்கிறேன்.

மணிவிழா நாயகனுக்கு திக்குவல்லை எழுத்தாளர் சங்கச் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பூரிப்படைகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனியவர் "ஈழத்துச் சோமு"

உடுவை எஸ்.தில்லைநடராசா



மணிவிழாக்காணும் திரு.நா.சோமகாந்தன் அவர்கள் ஐந்தாறு வருடங்களாக என்னை அறிவார். அவரை நான் அறிவேன், சுமார் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக.

சிந்திக்கின்றேன்.

1996ம் ஆண்டு ஜுலைத் திங்களில் மூன்று நாட்கள் முற்போக்கு எழுத்தாளர்கள் சங்கம் நடத்திய இலக்கியப் பேரரங்கு கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் எல்லா வகையாலும் சிறப்பாக நடைபெற்றது. விழாவையொட்டி வெளியிடப்பெற்ற மலர் சிறப்பாக அமைந்துள்ளது. விழாவும், மலரும் சிறக்கப் பணி புரிந்தவர்களில் 'ஈழத்துச் சோமு' என்றழைக்கப்படும் திரு.நா.சோமகாந்தன் ஒருவர் என்பதைவிட முக்கியமானவர் என்று கூற வேண்டும்.

சிந்தனை பின்னோக்கிச் செல்கிறது.

சுமார் நான்குவருடங்களுக்கு முன்பு நோய்வாய்ப்பட்டிருந்த சோமு சிகிச்சை பெற இந்தியா செல்கின்றார். சுகம்பெறப் பிரார்த்தித்து அனுப்புகின்றோம். திரும்பிவந்த செய்திதெரிந்ததும் தொலைபேசியில் அழைத்தேன்– "சுகமா?"

"சுகம்" சொன்னவர் தொடர்ந்தார். "நண்பர்கள் உதவியோடு இரண்டு புத்தகங்களை அச்சிட்டுக் கொண்டு வந்துள்ளேன். வெளியீட்டு விழாவுக்கு வருகைதர வேண்டும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகிச்சை பெறச்சென்ற சோமு ஒய்வெடுக்கவில்லை. இந்தியப்பொருட்களை வாங்கிக்குவிக்கவில்லை. இலக்கிய வளர்ச்சிக்கே உழைத்திருக்கின்றார். இந்தியாவில் அச்சிட்ட இருநூற்கள். "நிலவோ நெருப்போ" சிறுகதைத்தொகுதி, "ஈழத்து இலக்கியம்: பல்துறைநோக்கு" என்பன. இவற்றின் வெளியீட்டு விழா கொழும்பில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. ஒரு நூலை வெளியிடவே பலர் சிரமப்படும் போது ஒருவர் இரண்டு நூல்களை வெளியிடுவதென்றால் ......! வெளியீட்டு விழா மட்டுமல்ல ஈழத்தின் பல்வேறு பாகங்களிலும் அறிமுகவிழா நடத்தியும் அசத்திவிட்டார். பல மாதங்களாக விமர்சகர்கள், எழுத்தாளர்கள், இலக்கிய ஆர்வலர்களால் பெரிதும் பாராட்டப்பெற்ற அறிமுகவிழா சோமுவின் நூல்களுக்குத்தான் கிடைத்திருக்குமென்பது எனது கருத்து.

சிந்தனை சற்றுப் பின்னோக்கிச் செல்கிறது.

1991ன் வருட இறுதியில் எனது சிறுகதைப் புத்தகத்தின் வெளியீட்டு விழாவுக்கு அப்போதைய அமைச்சர் திரு.பி.பி.தேவராஜ் அவர்களை அழைக்கும் ஏற்பாட்டில் அமைச்சினுள்ளே புகுந்த என்னுடன் அறிமுகமாகின்றார் திரு.சோமு. என் பையிலிருந்த பிரதிகளில் ஒன்று சோமுவின் கைக்குச் செல்ல, சோமுவின் சட்டைப் பையிலிருந்த பெரிய நோட்டு என்னை நோக்கி–

"இல்லை வைச்சிருங்கோ–" இது நான்.

" நானும் எழுத்தாளன். எழுத்தாளனை எழுத்தாளன் மதிக்க வேண்டும். கௌரவப்படுத்த வேண்டும். வார்த்தைகளால் மட்டுமல்ல...." சிரிப்புடன் வணங்கி வாழ்த்திப் பணத்தை நீட்டும் போது மறுப்பதெப்படி.?

04–12–91 கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் இடம்பெற்ற எனது நூலின் வெளியீட்டுவிழாவிலே திரு. சோமு – திருமதி. பத்மா சோமகாந்தன் தம்பதியர் நேரத்தோடு வருகை தந்ததையும், விழா முடிந்ததும் என்னைக் குடும்பத்துடன் அழைத்துப் பாராட்டி விருந்து –அன்பான உபசரிப்பு அளித்ததையும் மறப்பதெப்படி? இப்படி எத்தனை எத்தனையோ.

கலைஞர்களையும் படைப்பாளிகளையும் வீட்டுக்கு அழைத்து உபசரிப்பார் சோமு. இதற்கு நம்நாட்டுப் படைப்பாளிகள் மட்டுமல்ல, தமிழ் நாட்டிலிருந்து வருவோரும் தப்பிவிட முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோமுவின் வீட்டுக்குப் போனால் அவர்–அவர் மனைவி மட்டுமல்ல. முழுக் குடும்பமுமே மகிழ்ச்சியினாலே துள்ளும். இலக்கியத்தகவல்களைச் சுவையாகச் சொல்லிக் கொண்டேயிருப்பார்கள். சாப்பாட்டைத் தவிர்ப்பதற்காகச் சில சமயங்களிற் சாப்பிட்டுவிட்டுச் சென்றாலும் பழமாக, பாலாக, சிற்றுண்டியாக வயிற்றை நிரப்பிவிட்டு– எழும்ப முடியாமல், விலக முடியாமல் சங்கடப்பட்டதுண்டு. தாமதமடைந்ததுண்டு.

என் சிந்தனை இன்னும் சற்றுப் பின்னோக்கிச்செல்கிறது.

**1969**ல் நல்லை நகர் ஆறுமுக நாவலருக்கு யாழ்ப்பாணத்திற் சிலை நாட்டு விழா, கொழும்பிலிருந்து சிலை, நாட்டின் பல பாகங்களுக்கும் ஊர்வலமாக எடுத்துச் செல்லுதல் என்ற செய்திகள் பல இடங்களிற் களிப்பையும், கலகலப்பையும் ஊக்குவிக்கின்றது. அப்போது நுவரெலியா வூட்லண்ட்ஸ் ஹோட்டலிலே தங்கியிருந்தேன். சோமு–பத்மா இலக்கியத் தம்பதிகளும் வூட்லண்ட்ஸில் சில நாட்கள் தங்கியிருந்ததால் பரிமாறிய கருத்துக்கள் இன்னும் பசுமையாக இருக்கின்றன. நாவலர் "தேசியப் பெரியார்" எனப் பிரகடனப்படுத்தப்பட்டதும், நாவலருக்குத் தபால்த் தலை வெளியிடப்பட்டதும், சிலை ஊர்வலம், சிலை நிறுவுதல், மணி மண்டபம் அமைத்தல் ஆகிய நிகழ்வுகளால் பரவலான விழிப்புணர்ச்சி ஏற்பட்டதும் நாம் அறிந்ததே. பின்னணியில் சோமுவின் உழைப்பு இருந்ததைச் சிலரே அறிவார்.

என் சிந்தனை இன்னும் இன்னும் பின்னோக்கி......

**1963**ல் பள்ளி மாணவனாக இருந்த என்னைப் பத்திரிகைச் செய்திகளும், பல்வேறுவகையான அறிவித்தல்கள், ஆரம்ப ஏற்பாடுகளும் கவர்ந்திழுக்கின்றன. எல்லாம் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் இரண்டாவது மகாநாடு பற்றியதே.

பாரதியின் ஞான குருவான யாழ்ப்பாணத்துச் சுவாமி பற்றிய செய்திகள் பரவியதும் அந்த மகாநாட்டையொட்டியே. ஈழத்தின் பல்வேறு எழுத்தாளர்கள் ஒன்றாகத் திரண்டதும் அந்த மகா நாட்டிலேயே மலையகம் தந்த சி.வி.வேலுப்பிள்ளை , வி.எம். அம்சுதீன் உட்படப் பல இலக்கியச் சிற்பிகளும், நாடகக்கலைஞர்களும் கௌரவம் பெற்றதும் அந்த மகாநாட்டிலேயே.

எழுத்தாளர்களுக்கு மதிப்பையும், கௌரவத்தையும் அளித்த மகாநாடு விழிப்புணர்ச்சியையும் தூண்டி விட்டதால் புதிய எழுத்தாளர்கள் உருவாக ஆரம்பித்தார்கள். இலக்கியக் கருவூலங்களும் மலர ஆரம்பித்தன. விழாச் சிறப்புக்கு மூலகாரணம் "சோமு" என்பதை எல்லோரும் அறிவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்போக்கு எழுத்தாளர் சங்க வளர்ச்சிக்கு முன்னின்று உழைத்தாலும் சமயப்பற்று மிக்கவர். வானொலியில் நல்ல சிந்தனைகள் –நடைமுறை வாழ்க்கைத் தத்துவங்கள் எனவும், சஞ்சிகைகளில் கட்டுரைகள் எனவும் சமயக்கருத்துக்களை விதைத்து வருபவர். சோமுவின் எழுத்திலும் , பேச்சிலும், மண்வாசனையும், நல்ல தமிழ்ச் சொற்களும் நிறைந்திருக்கக் காணலாம். வானொலி மேடைநிகழ்ச்சிகளைக் கலகலப்பாக்கும் வெண்கலக் குரலும் சோமுவிடம் உண்டு.

மேடைச் பேச்சாளர்கள் சிலர் ஒலிவாங்கியையும், சபையையும் பார்த்தால், பேச்சை நீட்டுவார்கள். இவர் இடத்திற்கேற்றவாறு, சந்தர்ப்பம், நேரம், சபை ஆகியவற்றைக் கவனத்திற் கொண்டு நீட்டி முழக்காமல், தெளிவான கருத்துக்களை எளிதாகச் சொல்லி எல்லோரையும் கவர்கின்றார்.

பண்பாகப் பழகுவதால் பல முகங்களைத் தெரிந்து வைத்திருக்கின்றார். பல சங்கதிகளையும் தெரிந்து வைத்திருக்கின்றார். தெரிந்து வைத்திருப்பதைத் தெரியப்படுத்தும் ஆற்றலும் கைவரப்பெற்றவர். இதற்கு வானொலி கலைக்கோலத்திலே செய்த பங்களிப்புக்களை உதாரணமாகக் காட்டலாம்.

நாற்பது, ஐம்பது ஆண்டுகளுக்கு முதற் பெற்ற நேரடி அனுபவங்களும், இன்று பரவிக் கொண்டிருக்கும் புதிய சிந்தனைகளும் சுவையான கலை இலக்கியத் தகவல்களாகத் தினகரன் ''காந்தனின் கண்ணோட்டத்தில்'' கலந்து வருவதும் பலராலும் புகழ்ந்து பேசப்படுகிறது.

''ஆகுதி'' சிறுகதைத் தொகுதி, 'விடிவெள்ளி பூத்தது' நாவல், 'ஈழத்து இலக்கியம் பல்துறைநோக்கு' என ஒவ்வொன்றும் முத்திரை பதித்த புத்தகங்கள். குறிப்பாக ஆராய்ச்சி என அட்டவணை தராமல் –பட்டியற்படுத்தாமல் 'நாவல், சிறுகதை, கவிதை, வானொலி, திரைப்படம், தொலைக்காட்சி' எனப் பல்வேறு வடிவங்களைப் பற்றி சுமார் 125 பக்கங்களிற் கனதியான விடயங்களைத் தருவதென்றால் 'சாதனை' என்றுதானே சொல்லவேண்டும்.

இனிய ஈழத்துச் சோமுவுக்கு,

*பொன்னிற மேனி.*
*சிரிப்புப் பரவி நிற்கும் முகம்.*
*தீட்சண்ணியமான விழிகள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அவர்,*

*அடிக்கடி கேட்பார் "ஆக வேண்டியது என்ன?",*
*எதுவும் சொன்னால் "அப்படியோ"?*
*முரண்பாடுகள் உருவாகு முன்பே,*
*"அ.......அ..... இல்லைப் பாருங்கோ"*

சமாளித்து விடுவார். மாற்றுக் கருத்துடையவரையும் மனம்திருப்பி, தன் பக்கம் இழுக்கும் ஆற்றல் மணிவிழாக்காணும் சோமுவுக்கு உண்டு.

தனித்துவமான மனிதப் பண்புகளும், நல்ல மதிநுட்பமும், எல்லோரையும் கூட்டியணைத்துச் செல்லும் தலைமைத்துவமும் இவரது வெற்றிக்குக் காரணம்.

எழுத்திலும், பேச்சிலும், மட்டுமல்ல– வாழ்விலும் இனிமையும் எளிமையும் உடைய சோமு மேலும் சிறப்படைய வாழ்த்துவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மலையகம்" மறக்க முடியாத மனிதர்

-சாரல் நாடன்-



வடபுலத்தைச் சார்ந்த அரசியல்வாதிகளும், கற்றறிந்த மேல்மட்டத்தாரும் உள்ளன்போடு நேசிக்க மறந்து போன குறைபாட்டினால் கல்வியும் மொழிப் புலமையும் பெறும் வாய்ப்பு மலையகத் தமிழருக்கு இந்நூற்றாண்டின் நடுப்பகுதிவரை அறவே இல்லாது போயிருந்தது.

பட்டை தீட்டப்படாத வைரமாக மண்ணுக்குள்ளேயே மறைந்து கிடந்த மலைநிலத்து வளங்கள் கொஞ்சம் கொஞ்சமாக இலக்கியவடிவம் பெற ஆரம்பித்தவேளையிலும் (1960 களில்) முறையான கவனிப்பும் கௌரவமும் மலையகப்படைப்பாளிகளுக்குக் கிடைத்ததில்லை.

இலங்கைத் தேசிய நீரோட்டத்தில் எழுத்தாளர்களை இணைத்துச் செயற்பட்ட இலங்கை முற்போக்கு எழுத்தாளர்கள் சங்கம் முதன் முறையாக அப்படி ஓர் அங்கீகாரத்தை இர. சிவலிங்கம், எஸ். திருச்செந்தூரன் ஆகியோருக்குக் கொடுத்தது.

என்னுடைய நூல் ஒன்று முதன் முறையாக 1986ல் அச்சில் வந்தது. 'மல்லிகை' சஞ்சிகையில் நிறைவான அறிமுகம் ஒன்றை ஈழத்துச் சோமு செய்து வைத்தார். இரண்டாண்டுகளுக்குப் பின்னால் எனக்குப் புகழீட்டித் தந்த இரண்டாவது நூல் வெளிவந்தது. ஈழத்துச்சோமு என்றறியப்பட்ட இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் அமைப்புச் செயலாளர் என். சோமகாந்தன் அதைப்பற்றி ஒன்றுமே எழுதவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1989ல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பிரமாண்டமான "ஈழத்து நூல், சஞ்சிகை, சித்திரம், சிற்பக் கண்காட்சியின் போது மலையகத் தூதுக்குழுவில் என்னை இடம் பெறவைத்துப் பேசுவதற்கு மேடை அமைத்துக் கொடுத்தார். அன்றுதான் அவரோடு எனக்கு நேரில் பரிச்சயம் ஏற்பட்டது. இந்திய இராணுவம் யாழ்ப்பாணத்தில் பிரசன்னம் செய்திருந்த வேளையில் யாழ்மண்ணில் நான் தங்கியிருந்த மூன்று நாட்களும் சோமுவும் அவரது குடும்பத்தாரும் காட்டிய அன்பினால் பெரிதும் நெகிழ்ந்து போனேன்.

பின்னால் நீர் கொழும்பில் நடைபெற்ற தமிழ் விழாவிலும் கொழும்பில் நடைபெற்ற இலக்கியப் பேரரங்கிலும் நாடு தழுவிய விழாக்களிலும் எனக்கு அவரளித்த முக்கியத்துவம் எளிதில் மறக்க முடியாத ஒன்று. இம்மாதம் வெளியிடப் பெற்ற 'இலங்கையும் இராமாயணமும்' என்ற ஆங்கில நூலில் எனது எழுத்து இடம்பெற்று இருப்பதற்கும் அவரே மூலகாரணம். அதுமட்டுமல்லாமல் அந்நூல் வெளியீட்டு விழாவில் இலங்கையின் புகழ் பூத்த தமிழ்ப் பேராசிரியர்களோடும், சிங்களப் பேராசிரியர்களோடும் சேர்ந்து என்னையும் உலகச் சின்மய இயக்கத்தலைவர் சுவாமி தேஜோமயானந்தா அவர்களிடமிருந்து கௌரவம் பெற வைத்தது என் வாழ்நாளில் மறக்க முடியாத ஒரு நிகழ்ச்சியாகும்.

என்னுடைய சிறுகதைத் தொகுதி ஒன்றை வெளியிட்டுத் தரும்படி அவரிடம்கதைகளைக் கையளித்திருந்தேன். நாட்டில் ஏற்பட்ட சீர்கேட்டினால், யாழ்ப்பாணத்தை விட்டு வரும் அவசரத்தில் என்னுடைய சிறுகதைகளை அவரால் எடுத்து வர முடியாது போயிற்று. அவரை நேரிற் காணும் போதெல்லாம் அதுகுறித்து மிகவும் கவலைப்படுவார். என்னுடைய சிறுகதைத் தொகுதியைக் காணும் நம்பிக்கையை நான் முற்றாக விட்டொழித்திருந்தேன். திடுமென ஒருநாள் டெலிபோனில் என்னிடம் பேசினார். என்னுடைய சிறுகதைத் தொகுதி வெளிவந்துவிட்டதென்றும் ஒரு பிரதியைத் தபாலில் அனுப்பியிருப்பதாகவும் கூறினார்.

நம்ப முடியாத ஒரு செயல் என் வாழ்வில் நடந்தது.

வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் மிகவும் கண்ணியமான ஈழத்துச் சோமு திறமைகளைக் கண்டு கொள்வதற்கும், அவற்றைக் கைதூக்கி விடுவதற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சளைப்பதே இல்லை. தலைமுறை இடைவெளியின்றி அவர் கலைஞர்களிடம் பழகும் முறை இருக்கின்றதே, அதுவே தனியான ஒரு கலை.

எடுத்துக் கொள்ளும் எந்த விதப் பணியாயினும் அதில் முழுவதாக ஈடுபட்டுவிடுவதில் தனது உடல் நலத்தையும் பற்றிக் கவலைப்படாது செயற்படுவது அவருக்குப் பழக்கமாகிப்போய் விட்டது.

பிறர் மனம் புண்பட, பேசத் தெரியாத அவருக்குக் கிடைத்த பொக்கிஷம் அவரது மனைவி.

*வாசுகி வள்ளுவரைக் கேட்டுத் தெரிந்துள்ளேன்.*
*மீனாட்சி நடேசய்யரைப் படித்துத் தெரிந்துள்ளேன்.*
*நல்லம்மாள் சத்யவாகேஸ்வரரைத் தேடித் தெரிந்துள்ளேன்.*
*பத்மா சோமகாந்தனைப் பழகித் தெரிந்துள்ளேன்.*

எல்லா வளமும் அவர்களுக்கு மேலும் சேர்ந்திட வாழ்த்துகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துச் சோமுவின் இலக்கியப் பயணம்......

-தி.ஞானசேகரன்



திரு.நா.சோமகாந்தன் அவர்களுக்கு மணிவிழா என்றதுமே நான் பெரிதும் மகிழ்வடைந்தேன். அதேசமயம் ஆச்சரியமாகவும் இருந்தது. அவருக்கு மணிவிழாக்காணும் வயதாகிவிட்டதா? என்னால் நம்பமுடியவில்லை.

உயர்ந்த தோற்றம். தலைநிமிர்ந்த நடை, உளம் நிறைந்த சிரிப்பு, எப்போதுமே இயந்திரமாய்ச் சுழன்று காரியமாற்றும் இயல்பு, தனது நெஞ்சைத் தொட்டபடி உதிர்க்கும் சொற்களில் பிறர்நெஞ்சை ஈர்க்கும் வசீகரம், இவையெல்லாம் அவரது வயதைக் குறைத்தே மதிப்பிட வைக்கிறது.

முதன் முதலில் அன்பர் சோமகாந்தனை அவரது எழுத்துக்களிலேயே நான் தரிசித்தேன். அப்போது எனது மாணவப் பருவம். ''கலைச்செல்வி ' சஞ்சிகை ஈழத்து எழுத்தாளரிகளிடையே பிரபல்யம் பெற்றிருந்த காலம். அதிலே ஈழத்துச் சோமுவின் மணியான சிறுகதைகள் அடிக்கடி பிரசுரமாகிக் கொண்டிருந்தன. முற்போக்குச் சிந்தனைகொண்ட, கலையம்சம் மிகுந்த, அழகிய தமிழ்நடையுடன்கூடிய, தனித்துவமான கதைகள். அக்கதைகள் என்னைப் பெரிதும் கவர்ந்தன. "யார் இந்த ஈழத்துச் சோமு?" நேரில் சந்திக்கவேண்டுமென்ற ஆவல். ஆனாலும் சந்தர்ப்பம் அமையவில்லை. 'குளத்தங்கரை அரசமரம்' என்ற அவரது சிறுகதை வெளியாகியபோது அதனைப் பாராட்டி கலைச்செல்வி ஆசிரியருக்குக் கடிதம் எழுதினேன். அந்தப் பாராட்டுக் கடிதம் அடுத்துவந்த கலைச்செல்வியில் பிரசுரமாகிறது. அதன்பின்னர் சோமுவின் கதைகளை அவ்வப்போது பத்திரிகைகளில் வாசிப்பதோடு நின்றுகொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்துவந்த காலப்பகுதியில் சுதந்திரன் வாரப்பத்திரிகையில் ஈழத்து எழுத்தாளர்கள், கலைஞர்கள் பற்றிய ஓர் அறிமுகத்தொடர் வெளியாகிக்கொண்டிருந்தது. அதனையும் ஈழத்துச் சோமுதான் எழுதிக்கொண்டிருந்தார். அந்த அறிமுகக் குறிப்புகள் அவர்மேல் எனக்கிருந்த மதிப்பை மேலும் உயர்த்தியது. அன்றைய எழுத்தாளர்கள், கலைஞர்கள் பற்றிய முக்கியமான தகவல்களை அத்தொடரிலே தரிசிக்க முடிந்தது. ஏறத்தாழ நூறுக்கும் மேற்பட்டோரை அத்தொடர் அறிமுகஞ்செய்து வைத்தது.

1973ல் எனது சிறுகதைத் தொகுதி 'கால தரிசனம்' வெளிவந்தபோது அதற்கான அறிமுகவிழாவை கொழும்பிலும் நடத்த விரும்பினேன். ஆனாலும் ஒரு தயக்கம். தலைநகரிலே விழாவொன்றினை ஏற்பாடுசெய்வதற்கு வேண்டிய அறிமுகத் தொடர்புகள் அக்காலப் பகுதியில் எனக்கு இருக்கவில்லை. திரு சோமகாந்தன் அவர்கள் அப்போது கொழும்பிலே கடமையாற்றிக் கொண்டிருந்தார்கள். இலக்கியச் செயற்பாடுகளில் தன்னை இணைத்துக் கொண்டிருந்த அவருக்கு நிறையவே எழுத்தாளர்களும் கலைஞர்களும் நண்பர்களாக இருந்தனர். 'ஈழத்துச் சோமு' என்ற புனைப்பெயரில் இயங்கியவர் திரு.சோமகாந்தன் தான் என்பதையும் இந்த இடைப்பட்ட காலத்தில் நான் அறிந்திருந்தேன். எனவே, அவரது உதவியைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்தோடு அவரது இல்லத்திற்குச் சென்றபோது, முகப்பழக்கங்கூட இல்லாத நிலையில் அவர் என்னை வரவேற்று ஊக்கம் கொடுத்து, அறிமுகவிழா ஏற்பாட்டுக்கு வேண்டிய சகல ஆலோசனைகளையும் வழங்கினார். அத்தோடு தானே முன்னின்று பேச்சாளர்களை ஒழுங்குசெய்து, இலக்கிய ஆர்வலர்களை விழாவிற்கு வரச்செய்து, வரவேற்புரையையும் நிகழ்த்தி அருமையானதொரு அறிமுகவிழாவை நடத்திவைத்தார். தொடர்ந்து அந்நூலுக்கான திருமதி.பத்மா சோமகாந்தனின் விமர்சன உரையை 'கலைக்கோலம்' வானொலி நிகழ்ச்சியிலும் இடம்பெறச் செய்தார். இளம் எழுத்தாளர்களை ஊக்குவித்தல், சக எழுத்தாளர்களை மனதார நேசித்தல் ஆகிய பண்புகள் அவருக்கு நிறையவே நண்பர்களைத் தேடிக்கொடுத்திருக்கிறது. தான் எடுத்துக்கொண்ட காரியத்தில் முழுமையான ஈடுபாடு, ஆத்மார்த்தமான பங்களிப்பு ஆகியன நான் அவரிடத்தில் கண்ட சிறப்பான குணநலன்கள். இவைதான் ஈழத்து இலக்கிய உலகில் அவருக்கு ஓர் உன்னத இடத்தை வழங்கியிருக்கின்றன. யாவராலும் விரும்பப்படுகின்ற, போற்றப்படுகின்ற மனிதராக அவர் திகழ்கின்றார்.

அறுபதுகளிலே படைப்பிலக்கியத்தில் அதிக கவனஞ்செலுத்திக் கொண்டிருந்த அன்பர் சோமகாந்தன், தொடர்ந்துவந்த காலப்பகுதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஇலக்கிய வளர்ச்சிக்காக நடத்தப்பட்ட இயக்கச் செயற்பாடுகள், விழாக்கள், மாநாடுகள் போன்றவற்றை ஒழுங்குசெய்து நடத்துவதில் இயக்க சக்தியாக இயங்கத் தொடங்கினார். ஈழத்தைப் பொறுத்தவரை இவரளவு முழுமையான ஈடுபாட்டுடன் வேறு எவருமே இத்தகைய செயற்பாடுகளில் தொடர்ச்சியாக ஈடுபடவில்லை எனத்துணிந்து கூறலாம். இவர் பொறுப்பாசிரியராக இருந்து வெளியிட்ட நாவலர் ஜெயந்தி மலர், நாவலர் முத்திரை வெளியீட்டு மலர், சாகித்திய மண்டல தமிழ்விழா மலர், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க புதுமை இலக்கிய மலர்கள் உட்பட வேறும் பல இலக்கிய மலர்கள் தரத்தில் சிறந்து என்றும் பேணிப்பாதுகாக்க வேண்டியனவாக விளங்குகின்றன.

சக எழுத்தாளர்களது படைப்புகள் நூலுருவில் வெளிவரவேண்டும் என்பதில் திரு.சோமகாந்தன் பெருவிருப்புக் கொண்டவர். பிரபல மலையக எழுத்தாளரும் ஆய்வாளருமான திரு சாரல் நாடன் அவர்களின் சிறுகதைகள் தொகுதியாக வரவேண்டும் என்ற நோக்குடன் தமிழகத்தில் அதனை அச்சேற்றிக் கொடுத்தவர். அதுபோன்று எனது மலையக நாவலான 'குருதிமலை' தமிழகத்திலே இரண்டாவது பதிப்பாக வெளிவர பெருமுயற்சி எடுத்தவர். தற்போதும் வேறுசில எழுத்தாளர்களது படைப்புகள் நூலுருவில் வருதவற்கு அவரால் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதை நான் அறிவேன்.

ஈழத்தின் முதுபெரும் எழுத்தாளர்களான டொமினிக் ஜீவா, நந்தி, வரதர் போன்றோரது மணிவிழாக்கள் சிறப்பாக நடைபெறுவதற்கு பின்னணியில் நின்று உழைத்தவர்களில் திரு.சோமகாந்தன் முக்கியமானவர்.

நீண்டகாலமாக வானொலி, பத்திரிகைகள், சஞ்சிகைகள், தொலைக்காட்சி ஆகிய ஊடகங்கள் மூலமாக கலை இலக்கியச் செய்திகளை வழங்கிவரும் திரு.சோமகாந்தன் மற்றைய கலைஞர்க்கும் சந்தர்ப்பம் வழங்கி, அவர்களது பேட்டிகள், கலைநிகழ்ச்சிகள் போன்றவற்றை வானொலியிலும் தொலைக்காட்சியிலும் இடம்பெறச்செய்து பெருமைப்படுத்தும் பெரும் பண்பாளர்.

தமிழகத்திற்கு அடிக்கடி இலக்கியப் பயணம் மேற்கொண்டு அங்குள்ள கலைஞர்கள், எழுத்தாளர்களை இங்கு அழைத்து வந்து கலை இலக்கிய நிகழ்ச்சிகளில் பங்குபற்றவைப்பதோடு நம்நாட்டுக் கலை இலக்கிய கர்த்தாக்களை அவர்களுக்கு அறிமுகஞ்செய்துவைத்து தமிழகத்திற்கும் ஈழத்திற்கும் ஓர் இலக்கியப் பாலமாகவும் திரு சோமகாந்தன் செயற்பட்டு வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த நாற்பதாண்டுகளுக்கு மேலாக ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றிலே தன்னைப் பின்னிப் பிணைத்துக்கொண்ட திரு.சோமகாந்தனின் நூல்களாக ஆகுதி (சிறுகதைத் தொகுதி), விடிவெள்ளி பூத்தது (நாவல்) ஈழத்து இலக்கியம்: பல்துறை நோக்கு ( கட்டுரைகள்), தத்துவச் சித்திரம் (கட்டுரைகள்), பொய்கை மலர் (பயண இலக்கியம்) ஆகியனவே வெளிவந்திருக்கின்றன. ஒப்பீட்டு ரீதியில் நோக்கினால் படைப்பிலக்கியத்திற்கு அவர் ஆற்றிய பங்களிப்பைவிட ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு அவரது பன்முகப்பட்ட தொழிற்பாடுகள் அதிகமானவை.

1994ல் திருமதி பத்மா சோமகாந்தனின் "கடவுளின் பூக்கள்" சிறுகதைத் தொகுதிக்கு ஓர் அறிமுகவிழா கண்டியில் நடந்தது. அவ்விழாவில் உரையாற்றிய கலாநிதி.துரை மனோகரன் அவர்கள் "திருமதி பத்மா சோமகாந்தன் ஒரு சிறந்த எழுத்தாளர், பேச்சாளர், சமூக கலை இலக்கியச் செயற்பாடுகளில் அதிக ஈடுபாடு கொண்டவர். அத்தகைய ஒருவர் பின்னணியில் நின்று இயங்குவதுதான் திரு. சோமகாந்தனின் வெற்றிக்குக் காரணமோ அல்லது திருமதி பத்மாவின் வெற்றிக்கு, திரு சோமகாந்தனின் பின்னணிதான் காரணமோ" என வியந்து பாராட்டினார்கள். ஆம், இப்படி ஒருவருக்கொருவர் சளைக்காத, சமூக கலை இலக்கியப் பணிகளில் இடையறாத ஈடுபாடுகொண்ட இணையற்ற தம்பதிகளாக திரு.சோமகாந்தன்– பத்மா தம்பதிகள் திகழ்கின்றனர்.

திரு. சோமகாந்தன் மணிவிழாக்காணும் இவ்வேளையில், இத்தம்பதியினர் மென்மேலும் பல சிறப்புகளைப் பெற்று, தமது கலை இலக்கியப் பயணத்தைத் தொடரவேண்டுமென வாழ்த்துகிறேன்.

UNIVERSITY OF JAFFNA
LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சுரமிக்க "ஈழத்துச் சோமு"

கனகசபாபதி- நாகேஸ்வரன்
தலைவர், மொழியியற்றுறை
சப்ரஹமுவா பல்கலைக் கழகம்



இலங்கை வானொலியில் நான் பணிபுரிந்தபோது, ஈழத்துச் சோமு அவர்கள், நாவலர் மாநாட்டு மலர் ஒன்றைத் தந்து எனக்கு அறிமுகமானார். அவரது வண்ணார் பண்ணை வீட்டிலிருந்து 100 மீற்றர் தூரத்தில் எனது பி.ஏ. தம்பி லேன் வீடு உள்ளது. அதனால், அவரது குடும்பம் எங்கள் குடும்பத்திற்கு நன்கு அறிமுகமானது.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம், நாவலர் சபை, இந்து விவகார அமைச்சு, சின்மயானந்த சபை– இவை சோமகாந்தனின் செயற்பாடுகளை வெளிப்படுத்திய நிறுவனங்கள். கருத்தரங்குகள், இலக்கிய மாநாடுகள், விழாக்கள், குருபூசைகள், போட்டிகள் என்பவற்றை நடாத்துதல் அத்தனையும் சோமருக்குக் கைவந்த கலை. அமைப்புக்குள் நின்று அரும் பணியாற்றும் அற்புதமான செயல்வீரன். " யாரைக் கொண்டு சாதிக்கலாம்" என்பது சோமகாந்தனுக்குத் தண்ணி பட்ட பாடம். இதுவும் ஒரு பண்பு தான். 'செய்து முடித்தல்' என்பது ஒரு கலை. 'எதைச் செய்தல்' என்பது ஒரு திறன். இவையிரண்டும் சோமகாந்தனில் ஒட்டியுள்ளன. புரட்சியும், துணிச்சலும் உடைய சோமு அவர்கள் சற்று மாறுபாடான, முரண்பட்ட ஆளுமை வீச்சுக் கொண்டவர் "வைதிகம் விளைத்த முதல் " இது ஒரு பண்பு. சமுதாயத்தின் அடிநிலையினர் பாற்கொண்ட அமைப்பின் தூண், இது பிறிதொரு பண்பு. இவையிரண்டிலும் தம்மை வரித்துக் கொண்டு சமூக–சமய– கலாசார பணி புரியும் ஒருவரே ஈழத்துச் சோமு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கும் இவருக்கும் இடையிலிருக்கும் பிறிதொரு தொடர்பு இருவரும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் பழைய மாணவர்கள் என்பது. மகாஜனாவின் இலக்கியப் பாரம்பரியம் நீண்டது, பெருமையுடையது, போற்றத்தக்கது, அது ஒரு வரலாறு. அவ் வரலாற்றின் நாயகர்களுள் 'ஈழத்துச் சோமு' வும் ஒருவர். எழுதும் கலை எல்லோருக்கும் வாய்க்காது. அவ்வெழுத்தைப் பதிப்பிக்கும் குணமும், பயன்படுத்தும் சிறப்பும் எல்லோர்க்கும் வராது. ஆனால் சோமுவின் இரத்தத்தில் இப்பண்புகள் நன்கு கிடக்கின்றன. பொதுமக்கள் தரத்தை உயர்த்தும் பணிகள் ஒருபுறம். கல்விமான்கள், ஆய்வாளர்கள், பல்கலைக்கழக மட்டத்தினருடன் இணைந்து இயற்றும் செயற்றிறங்கள் இன்னொரு புறம். அவரது இச்செயற்பரிமாணங்களை அனைவரும் அறிவர். ஓயாத உழைப்பாளி அவர்.

போராட்டக் களங்கள் பல கண்டவர் சோமகாந்தன். 'சகித்துக் கொள்ளும்' பண்பு தான் அவரின் ஆளுமையின் தனித்துவம். பிறரைச் சகிக்கப் பழகிக் கொள்வது, சமயம் தரும் பண்பு. இந்துசமயம்— சைவம் பழக்கும் வாழ்க்கை நெறியே சகிப்புணர்வுதான். இது மக்களுள் மாணிக்கங்களாக வாழ நமக்கு உதவுகிறது. "இன்றைக்குச் செய்யத்தான் வேண்டும்" என்று நினைத்தால் வெவ்விடர் வந்துற்றபோதும், பின்னடையாது முன்னேறிச் சென்று நிறைக்கும் பண்பு சோமகாந்தனிடமுண்டு. இதனையே 'நெஞ்சுரம்' என்பர். எதிர்ப்பைக் கண்டு அஞ்சாதவர் இவர். சரியெனத் தனது மனச்சாட்சிக்குப்பட்டதைச் செய்து முடிக்கும் காரிய சித்தியே இவரது செயற்றிறன்.

"ஈழத்துச் சோமுவின்" பணிகளின் வீச்சு, இலங்கையின் பல பாகங்களிலும் விசாலித்து நிற்கிறது. பல துறைகளில் இவருக்குள்ள ஈடுபாடும் புலமையும் "இனங் கண்டு கொள்ளும்" ஆற்றலை இவரிடம் வளர்த்திருந்தது. அதனாலே பலரையும் தட்டிக்கொடுத்து உயர்த்தியிருக்கிறார். இப்பணிகளில் ஈழத்துச் சோமுவின் பங்களிப்புத் தனித்துவமானது.

சீர்திருத்த ஆர்வம் மிக்கவர் சோமு அவர்கள். மக்கள் மனதை வளர்த்தெடுக்கும் முற்போக்குத்தனம் கொண்டவர். வறுமை, சாதிவெறி, மதவெறி, இனவெறி, ஒடுக்கு முறை, அராஜகம் இவற்றுக்கு எதிரானவர். தனது இலட்சியத்துக்கு விசுவாசமானவர். கூட்டுமுறைப் பணிகளில் இயங்குபவர். புரட்சிகரமான மனிதாபிமானி. சத்திய ஆவேசமும், சமுதாய உணர்ச்சியும் கொண்டவர். மனிதகுல மாட்சியை நேசிப்பவர்.

இலக்கியத்தை வளர்த்தல் என்னும் பணியில், இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களை ஒரணியிலே திரட்டிய பெருமை இலங்கை முற்போக்கு எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கத்திற்கு உரியது. அம் முழக்கத்தைத் தன் குரலாக்கி முற்போக்கு எழுத்தாளர் அணியில் முன்னின்று உழைத்து வெற்றி கண்டவர் நம் சோமகாந்தன் அவர்கள்.

எழுத்தாளர் ஜெயகாந்தன், பிராமணர் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுவார்.

"எவன் ஞானத்தைத் தவிர வேறு செல்வத்தைத் தேடாமல், தேடிய ஞானச் செல்வத்தையும் மனிதரின் மேம்பாட்டுக்காக விநியோகம் செய்து விடுகிறானோ அவனே பிராமணன். எவன் அடுத்தவேளைச் சோற்றுக்காகத் தன் வீட்டில் நெல்லைச் சேமித்து வைக்காமல் இருக்கிறானோ அவனே பிராமணன். எவன் தன் புலன்களையடக்கி நெறிப்படுத்திக் கொண்டு லௌகீக இன்பங்களிலும், புலனுணர்ச்சியிலும் நெறி கொண்டு தறி கெட்டுப் போகாமல் ஒரு சமுதாயத்தைத் தனது ஞானத்தினாற் காப்பாற்றுகிறானோ அவனே பிராமணன். அவன் ஒரு சமூகத்தின் ஆசான்" (ஜெயகாந்தனின் பார்ப்பன இளைஞர் மகாநாட்டுப் பேச்சு). ஈழத்துச் சோமுவுக்கும் இவ்வரைவு மிகப் பொருந்தும்.

எழுத்தாளராக இரசிகர் நெஞ்சிலே தடம் பதித்த ஈழத்துச் சோமு தன் நெஞ்சிலே சத்திரசிகிச்சைத் தடமும் பதித்தவர். நெஞ்சுரம், சத்திரசிகிச்சையையும் தூசாக வென்றது. "மனிதன் சில காரியங்களைச் செய்துவிட்டே மரணிக்க வேண்டும்" என்ற உறுதிதான், ஈழத்துச் சோமுவின் இன்றைய வாழ்வு. அதற்காக உழைப்பும், சிந்தனையும், செயலும் கொண்டுநிற்கும் வேகம் காண்போர்க்கு அதிசயம் தரவல்லது.

நான் சோதனைகள் கண்டு சோர்ந்த போதெல்லாம் பேசியும், எழுதியும் என்னை ஊக்குவித்த பெருமனிதர் அவர். மணிவிழாத் தாண்டி நூற்றாண்டு விழாக் காண என் அன்னை நயினை நாக பூஷணியிடம் பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊக்கம் தந்த உத்தமர்

வீ.விக்கிரமராஜா
உதவிப்பணிப்பாளர், (நிருவாகம்)
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்



**1989**ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15ம் திகதி இந்துசமய கலாசார நடவடிக்கைகளுக்காக இராஜாங்க அமைச்சு ஏற்படுத்தப்பட்டது. அதன் செயலாளராக திரு.சி.மாணிக்கவாசகர் அவர்கள் பணியாற்றினார். "இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு பொருத்தமான ஒருவரை அனுப்புகின்றேன். அவரின் சேவையைப் பெற்றுக்கொள்ளுங்கள்" என்று என்னை அழைத்து அவர்கள் கூறினார்கள். ஆனால் ஈழத்துச் சோமு அவர்களைப் பற்றி அறிந்திருந்த நான் திரு.என்.சோமகாந்தன் அவர்களைப் பற்றி அப்போது சரியாக அறிந்து இருக்கவில்லை. ஆதலாலே திணைக்களத்தில் வெற்றிடம் இல்லாத நிலையிலே இக்கோரிக்கையை நான் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. எனினும் இராஜாங்க அமைச்சின் தமிழ் அலுவல்கள் பிரிவிற்கு அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். உண்மையிலேயே தமிழ் அலுவல்கள் பிரிவிற்கு பொருத்தமான ஒருவரின் சேவை தேவைப்பட்ட போது, அவர் சேவையாற்ற வந்தது பெரும் வரப்பிரசாதம் என்பது செயலாளருக்குப் புரிந்திருந்தது.

1990 ம் ஆண்டு ஜனவரி 1ம் திகதி தமிழ் அலுவல்கள் பிரிவு, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின், ஒரு பகுதியாக இணைக்கப்பட்டது. திரு.சோமகாந்தன் எமது திணைக்களத்தின் அலுவலராக மாறினார். 4 ஆண்டுகளையே பூர்த்தி செய்திருந்த இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திலே சேவையாற்றிய அலுவலர்கள் மிகவும் அனுபவம் குறைந்தவர்கள் –பணிப்பாளர் உட்பட. இத்தருணத்திலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவம் மிக்க நிர்வாகப் பயிற்சியுள்ள உத்தியோகத்தர் ஒருவரது சேவை கிடைக்கப்பெற்றது திணைக்களத்திற்குப் பெரும் துணையாக விளங்கியது.

1990ம் ஆண்டு முதன் முதலாக இந்துசமயப் போட்டி அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கிடையே அறிமுகப்படுத்தப்பட்டது. இப்போட்டிகளை நடாத்துவதற்கு ஒழுங்கமைப்புச் செய்தல், சுற்றறிக்கை வரைதல் போன்றவற்றில் அவரின் திறமையும், அனுபவமும் பெரிதும் உதவியாகவிருந்தன. திணைக்களத்தினால் 1990மே மாதம் நடத்தப்பெற்ற மாபெரும் இந்துசமய, கலாசார விழா சிறப்பாக அமைந்ததற்கு திரு.சோமகாந்தனின்பங்களிப்பு மிக முக்கியமானதாக இருந்தது.

இலங்கை இந்துக்களுக்கு இருக்கின்ற ஒரே ஆதீனம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனமாகும். இந்துசமய, கலாசார இராஜாங்க அமைச்சராகவிருந்த கௌரவ பி.பி.தேவராஜ் அவர்கள் நல்லை ஆதீன சுவாமி அவர்களை அமைச்சிற்கு அழைக்க விரும்பினார். நல்லை ஆதீன சுவாமி அவர்கள் அமைச்சிற்கு வந்து, ஆசிகள் வழங்கிய அந்த நிகழ்ச்சியை, கலாசார அம்சங்களோடு சிறப்புற நடத்துவதற்கு திரு. சோமகாந்தன் முக்கிய கர்த்தாவாக விளங்கினார். எல்லாவற்றுக்கும் மேலாக அந்தக்கால கட்டத்திலே யாழ்ப்பாணம் சென்று இந்துசமய, கலாசார திணைக்களத்தின் இந்துசமய, கலாசார நடவடிக்கைகள் சம்பந்தமான வேலைகளைச் செய்வதற்கு அப்போதைய இராஜாங்க அமைச்சின் செயலாளராகவிருந்த திரு.கே.சி.லோகேஸ்வரன் அவர்கள் திரு.என்.சோமகாந்தன் அவர்களை இணைப்பாளராக நியமித்தார். பிரதிப் பணிப்பாளர் யாழ்ப்பாணத்திலுள்ள பல இந்துசமய நிறுவனங்களுக்கு விஜயம் செய்து, திணைக்களத்தின் செயற்பாடுகள், நோக்கங்களைத் தெளிவுபடுத்தி திணைக்களத்தின்பால் மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்கு உறுதுணையாக திரு.சோமகாந்தன் அவர்களின் சேவை இருந்தது என்பதை 1996ஆம் ஆண்டு இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு 10ஆண்டுகள் நிறைவுறும் இவ்வேளையிலே குறிப்பிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

திரு.சோமகாந்தன் அவர்கள் பிராமணகுலத்தைச் சேர்ந்தவர். ஆனால் அவரைச் சுற்றியுள்ள அன்பர்கள், நண்பர்களுடன் அவர் பழகும்போதும் அவர்களைச் சகோதர மனப்பான்மையுடன் உபசரிப்பதைப் பார்க்கும் போதும் யாழ்ப்பாணத்திலுள்ள சாதிக்கொடுமைக் கட்டுப்பாட்டிலிருந்து விலகி, சமுதாயத்திலே நடக்கும் அவர்தம் உயர்பண்பை, சமுதாயத்தில் எல்லோரும் ஒரே குலமென மதித்துப் பழகும் அவரின் உயர்ந்த தன்மையை எண்ணி மகிழ்ந்திருக்கிறேன்.

அலுவலகத்திலே பல்வேறு சமூகங்களைச் சார்ந்த உத்தியோகத்தர்கள் கடமையாற்றுகின்ற பொழுது மேலதிகாரிகள், சிற்றூழியர்கள் என்ற வித்தியாசமின்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோருடனும் அன்பாகப் பழகி அவர்களை நேசித்து, மிக்க கண்ணியத்துடன் சேவையாற்றினார்.

எனது கல்லூரி வாழ்க்கையிலே பத்திரிகைகளில் சிறுகதைகள் வரும் பொழுது தேடி வாசிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தேன். ஈழத்துச் சோமு அவர்களின் கதைகள் என்னை வெகுவாக ஈர்த்திருந்தன. சமுதாயத்தின் அடிமட்டத்திலுள்ள மக்களின் பிரச்சினைகள், யாழ்ப்பாணத்திலுள்ள பல்வேறு சாதி மக்களிடையே காணப்படும் பிரச்சினைகள், வாழ்க்கைமுறைகள் என்பவற்றை மிகத் திறமையாகத் தமது எழுத்துக்கள் மூலமாக வெளிக் காட்டினார். வறுமைப்பட்ட பிராமணர்களிடையே இருக்கின்ற பிரச்சினைகளை வெளிக்காட்டி, தமது சமூகத்தையும் மேம்படுத்த முன்நிற்கின்றார். இலங்கை இலக்கிய வரலாற்றில் இவர் போற்றப்பட வேண்டியவர்.

இந்துசமய, கலாசார இராஜாங்க அமைச்சிலே கடமையாற்றியவர் என்ற ஒரு காரணத்தினால், 1991ல் அவரின் இலக்கிய நூல் தேர்வு செய்யப்பெற்ற போதிலும் அதற்குச் சாகித்தியப் பரிசு வழங்காமல் விட்டது பெரும் வேதனைக்குரிய விடயம் ஆகும். 1994ம் ஆண்டு பெப்ரவரி மாதம் தென்னிந்தியாவின் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற முதலாவது சேக்கிழார் மாநாட்டில் திணைக்களத்தின் பிரதிநிதியாக நான் கலந்து கொண்ட போது திரு.சோமகாந்தன் அவர்கள் கொட்டாஞ்சேனை வரதராஜர் விநாயகர் தேவஸ்தானத்தின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார். சமய, இலக்கியப் புலமைமிக்க திரு . சோமகாந்தன் அவர்களினால் "பெரிய புராணமும் நாவலரும்". என்ற ஆய்வுக் கட்டுரையொன்று வாசிக்கப்பட்டது. அது தமிழகத்தவர்களை மட்டுமல்லாது பிற நாடுகளிலிருந்து அவ்விழாவுக்கு வந்திருந்த அறிஞர்களையும் வெகுவாகக் கவர்ந்தது. இலங்கையின் பெருமையை, குறிப்பாக யாழ்ப்பாண மக்களின் பெருமையை வெகுவாக உணர்த்தக் கூடிய வகையில் அவரின் உரை அமைந்து இருந்தது. எமது மண்ணின் பெருமையைத் திரு.சோமகாந்தன் அன்று நிலைநாட்டினார். இது என்னால் மறக்க முடியாத நிகழ்ச்சியாகும்.

அலுவலகத்தைப் பொறுத்தவரையில் எனது நிர்வாகக் கடமையில் திரு.சோமகாந்தன் நிர்வாக உத்தியோகத்தராக இருந்து ஆற்றிய பணி, நான் பெற்ற பயிற்சி என்பனவும் நினைவு கூரப்பட வேண்டியவையே. மொழியாற்றல், அறிவு பூர்வமான சிந்தனை, சுற்றறிக்கை வரைதல், ஒரு விடயத்தைத் தெளிவாக, சுருக்கமாக,பிறர் புரியக்கூடிய விதத்தில் விளக்குதல் ஆகியவற்றில் அவர் திறமையானவராக விளங்கியதோடு, வழிகாட்டியாகவும் விளங்கினார். நான்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுகள் அவருடன் சேவையாற்றிய போது நான் பெற்ற அனுபவம் எனது வாழ்வில் மறக்க முடியாத அம்சமாகும்.

அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ள அவர்கள் இலக்கிய உலகிற்கு அதிக சேவை செய்யக்கூடிய சந்தர்ப்பம் இப்போது கிடைத்துள்ளது. முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் பல்வேறு பணிகளை முன்னெடுத்துச் செல்லும் பெரும் தொண்டைச் செய்து வருகின்றார். இன்றைய காலகட்டத்தில் இத்தகைய சேவைகளையாற்ற வேண்டியது மிகவும் முக்கியமானதே. அவ்வாறே திரு.சோமகாந்தன் அவர்கள் சைவமும் தமிழும் வளர்வதற்கான பணிகளையும் திறம்படச் செய்துவருகின்றார். இது சைவ உலகிற்குக் கிடைத்த பெரும் பாக்கியமாகும்.

தமிழ் மக்கள் மிகுதியாக வாழ்கின்ற பகுதிகள் தவிர்ந்த அந்நியமாக வாழ்கின்ற பிரதேசங்களில் அறநெறிக் கல்விப் பயிற்சி, விரிவுரைகள் தொடர்பாகத் திணைக்களம் ஏற்பாடு செய்கின்ற நிகழ்ச்சிகளிற் பங்குபற்றி அம்மக்களுக்குத் தன்னாலியன்ற உதவிகளைச் செய்வதில் முன் உதாரணமாக இவர் திகழ்கின்றார். இளம் சமுதாயம் இந்துசமயத்தை வளர்க்க வேண்டும், பேணவேண்டும் என்பதில் இவர் அக்கறையுடன் செயற்பட்டதை இங்கே பாராட்டாமல் இருக்க முடியாது.

திரு.சோமகாந்தன் அவர்களின் துணைவி திருமதி . பத்மா சோமகாந்தன் அவர்கள் கணவரின் சிந்தனைகள்,செயற்பாடுகளில் அவருக்கு உதவியாக இருப்பதுடன் தாமும் சமூகப் பணிகளில் மிகமிக ஆர்வமாக ஈடுபடுவதையும் அவதானிக்க முடிகின்றது. பொருத்தமான வாழ்க்கைத் துணை அமைந்தது தமிழ் உலகிற்கு சோமகாந்தன் அவர்கள் மனவுணர்வுடன் சேவையாற்ற வாய்ப்பாக அமைந்தது என நினைக்கின்றேன். அவர்களின் பிள்ளைகளுங் கூட, தந்தையாருடைய செயற்பாடுகளில் அக்கறையாக உதவுவது இன்னுமொரு அம்சமாகும். திரு.சோமகாந்தன் அவர்களது சேவை சைவத் தமிழ் உலகிற்கு நீண்ட காலம் கிடைக்க வேண்டும். இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தினூடாகவும், புறம்பாகவும் இவற்றைத் தொடர்ந்து அவர் ஆற்றுவதற்கு அவருக்கு இறைவன் எல்லா நலமும் அருள வேண்டுமெனப் பிரார்த்தித்து மகிழ்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அற்புத மனிதர்"

அந்தனி ஜீவா



மனிதன் பிறக்கிறான், இறக்கிறான். பிறப்பிற்கும் இறப்பிற்கும் உள்ள இடைக் காலத்தில் வாழும் வாழ்க்கையே மனிதனை மறக்க முடியாத மா மனிதனாக மாற்றி விடுகிறது.

அதனால் ருஷ்ய இலக்கிய மேதை மாக்ஸிம் கோர்க்கி, "மனிதன் எத்தகைய அற்புதமானவன்" என்றான். அத்தகைய மனித மாணிக்கங்களில் ஒருவர் தான் எல்லாராலும் நேசிக்கப்படும் எழுத்தாளர் சோமகாந்தன்.

மனித நேயம்மிக்க சோமகாந்தன் குடும்பத்தினர் பழகுவதற்கு இனிய பண்பாளர்கள். " சிலர் தொட்டது துலங்கும்" என்பார்கள். அதற்கொப்ப சோமகாந்தன் எந்தப் பணியினைச் செய்தாலும் அது புகழ் பூத்த பெரும் பணியாக அமைந்து விடுகிறது. அதற்கு என்ன காரணம்? கவியரசன் கண்ணதாசன் சொன்னான், "மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்" என்று, கவிஞனின் வாக்கு பொய்ப்பதில்லை.

ஓர் ஆங்கில அறிஞன் சொன்னான், "ஓர் ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் நிச்சயமாக இருப்பாள்" என்று. அது எத்தகைய சத்தியமான உண்மை என்பது சோமகாந்தன் தம்பதியினருடன் பழகியவர்களுக்குத் தான் தெரியும். புரியும்.

சோமகாந்தனின் வெற்றிகரமான செயற்பாடுகளுக்கெல்லாம் உறுதுணையாகவும், உந்துசக்தியாகவும் விளங்குபவர் அவரது துணைவியார் பத்மா சோமகாந்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வள்ளுவர் வாசுகி போல வாழவேண்டும்' என வாழ்த்துவதைக் கேட்டிருகிறேன். ஆனால் சோமகாந்தன் தம்பதியினர் வாழ்வதை பார்த்த பின்னர் தான் அத்தகைய வார்த்தைகள் , வாழ்த்துக்கள் எத்தகைய சத்தியமானவை என்பதைப் புரிந்து கொண்டேன்.

வடபுலத்து மண்ணின் மைந்தரான சோமகாந்தன், தான் பிறந்த பிரதேசத்து எழுத்தாளர்களை மாத்திரமின்றி ஏனைய பிரதேசத்து எழுத்தாளர்களையும் ஊக்குவிப்பதில் முன் நிற்பவர். யாழ்ப்பாணத்தில் 1989ம் ஆண்டு உள்ளூராட்சித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற ஈழத்து நூல்கள், சஞ்சிகைகள், சிற்பக் கண்காட்சியில் மலையகத்தின் படைப்புக்களை இடம் பெறச் செய்ததுடன் மலைகயத்தின் முன்னணிப் படைப்பாளியான சாரல்நாடனையும், என்னையும் விழா நிகழ்ச்சியில் பங்குபெற வைத்தது அவரது பெருந் தன்மையைக் காட்டுகிறது.

கடந்த கால் நூற்றாண்டுகளாக சோமகாந்தன் குடும்பத்தினருடன் இலக்கியத் தொடர்பும், இனிய உறவும், எனக்கு உண்டு. சோமகாந்தன் மிகப்பெரிய செயற்பாடுகளைச் செய்யும் பொழுது என்னையும் இணைத்துக்கொள்வார். கம்ப காவியத்தில் இராமனுக்கு சேது அணையைக் கட்ட அணில் உதவியதைப் போன்று, என் பணியும் அமைகிறது.

*எல்லோரும் ஓர் குலம்!*
*எல்லோரும் ஓர் இனம்!*
*எல்லோரும் ஓர் நிறை!*
*எல்லோரும் ஓர் விலை!*


என்ற மகாகவி பாரதியின் வாக்குக்கொப்ப எல்லோரையும் மதிக்கும் இனியவர்கள் சோமகாந்தன் தம்பதியினர், பிறை நூறு கண்டு பெரு வாழ்வு வாழட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனி மனித நிறுவனம்

-மேமன் கவி-



கலை, இலக்கிய இயக்கங்களும்சரி சமூக, அரசியல் இயக்கங்களும் சரி, கூட்டு முயற்சிகளாக அடையாளம் காணப் பெற்றாலும், அந்த இயக்கங்களின் வளர்ச்சிக்கு அந்த இயக்கங்களுடன் சம்பந்தப்பட்ட குறிப்பிட்ட சில தனி நபர்களின் பங்களிப்புதான் அவதானத்திற்குரியதாக இருக்கிறது.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் வரலாற்றை நோக்கும் பொழுதும் அதன் வளர்ச்சியிலும் ஒவ்வொரு காலகட்டத்திலும் பல தனிநபர்கள் தனித்துவமான அவதானத்திற்குரிய உழைப்பை வழங்கி வந்திருப்பதை நாம் காணக் கூடியதாக இருக்கிறது.

அத்தகைய ஒரு மனிதராகத்தான் ஈழத்துச் சோமு என்ற பெயரால் இலக்கிய உலகில் இனங்காணப்பட்ட சோமகாந்தன் அவர்கள் எனக்கு அறிமுகமானார்.

70 களின் நடுப்பகுதிக் காலம் தொடக்கம் இ. மு. எ. சங்கத்துடன் நான் தொடர்பு கொண்டிருப்பினும் சோமகாந்தன் அவர்கள் இ. மு. எ. சங்கத்துடன் கொண்டிருந்த அபிமானம், மற்றும் அச்சங்கத்தின் வளர்ச்சியில் அவரது பங்களிப்பு போன்றவைகளை நான் ஆழமாக அறிந்திருக்கவில்லை. இடைக்கிடையே அவர் கொழும்பு வரும் பொழுதெல்லாம் அவரை நாங்கள் சந்தித்த வேளைகளில் இ. மு. எ. சங்கத்துடனான அவருக்கான தொடர்பைப் பற்றி அறிந்து கொண்டேன். ஆனாலும், இந்து கலாசார இராஜாங்க அமைச்சில் இவர் உதவிப் பணிப்பாளராகக் கடமையாற்றக் கொழும்பு வந்த பின்தான் இ. மு. எ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கத்தின் மீதான அவரது அபிமானத்தையும் அக்கறையையும் ஆழமாக புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

அத்தோடு, இ. மு. எ. சங்கத்துடனான நெருங்கிய தொடர்பையுடையவர் என்ற வகையிலும் ஒரு மூத்த எழுத்தாளர் என்ற வகையிலும் அவருடன் பழகியதால் ஏற்பட்ட தொடர்பு எனது கலை, இலக்கிய வளர்ச்சிக்கு ஏதோ வகையில் உதவுவதாக இருக்கிறது.

படைப்பாளி என்ற வகையில் தான் சார்ந்து இருக்கும் சமூகத்தில் காணப்பெறும் பலவீனங்களையும், குறைகளையும் தைரியமாக எடுத்துரைக்கும் காத்திரமான படைப்புக்களைத் தந்தவராக இவர் திகழ்கிறார்.

இ. மு. எ. சங்கத்தின் செயற்குழுக் கூட்டத்திற் கூட நடைமுறை சாத்தியமில்லாத எந்தவொரு விடயத்தைப் பற்றியும் நாங்கள் கதைத்தால் மிகவும் காரமாகி விடுவார். தனது இன்றைய உடல் நிலைமையை மீறியும் சமீபத்தில் இ. மு. எ. சங்கம் நடாத்திய கருத்தரங்குக்காக அவரது உழைப்பு கணிசமான முறையில் வழங்கப்பட்டதைக் கண்டு நாங்கள் கவலைப்பட்டதோடு, அவரது திடமான மன உறுதியையும் கண்டு வியந்தோம்.

எந்தவொரு பணியையும் பொறுப்பு எடுத்துக் கொண்டால் , சலிக்காது அதனைச் செம்மையான முறையில் நிறைவேற்றுவதன் மூலம் அவர் ஒரு நல்ல ஏற்பாட்டாளராகத் திகழ்கிறார்.

இத்தகைய சிறப்புமிக்க மனிதராக விளங்கும் சோமகாந்தன் அவர்கள் மணிவிழாக் கண்டு விட்டார். அவரது இலக்கிய பங்களிப்பு மேலும் எமக்குக் கிடைக்க வேண்டும்.

அதற்கான ஊக்கியாக அவருக்கு எமது வாழ்த்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோமகாந்தமும் பத்மகாந்தமும்

புலவர் ஈழத்துச் சிவானந்தன்



ஓ......! ஈழத்துச் சோமருக்கு இன்று அறுபதா? வயது பதினாறிருக்கும் இளமை முகத்தில் ஊஞ்சலாடுகிறதே! இலக்கிய இதயம் சதையத்தைச் சோரச் செய்யாது என்று, என்றோ எவரோ எழுதியது சோமருக்கும் சித்தித்தது. இலக்கியத்துப் பொன் வீட்டிற் குடியிருந்தால் மணிவிழா நல்வீட்டிற்கும் நாயகன் ஆகலாம்.

இந்தச் சோமகாந்தம் ஈர்த்து வைத்திருக்கும் இலக்கியத் துகள்கள் எத்தனை, எத்தனை? சிறுகதை, நாவல், கட்டுரை என்று துறை தொறும், துறை தொறும் துலங்கும் காந்தம். சோமகாந்தத்தின் சோர்விலா இயக்கம் வியக்க வைக்கும். பல சங்கங்களின் இயக்கத்திற்கும், உன்னதங்களுக்கும், பின்னாற் சோமகாந்தத்தின் பேனாவும், நாவும் பெருமுயற்சியுடன் நின்றமை முன் மொழியப்பட வேண்டும்.

சோமகாந்தத்தின் இப்போக்கு, முற்போக்கான முனைப்புக் கொண்டு மூச்செடுக்கப் பக்கபலமாய் நிற்கும் பத்மகாந்தமும் பாராட்டுக்குரியது. வாழ்க்கைத் துணை வேறு. நலம் வேறு. துணையில் பிணைப்பும் இருக்கும். பிணக்கும் இருக்கும். நலத்தில் இணையே ஏகபோகமாய்க் கொலுவிருக்கும். சொல்லும் பொருளுமென நடமாடும். பல்சுவைக்கும், பலகலைக்கும் துணை தேவை. பயன் எனவும், பண்பெனவும் பரிமாணம் காண்பதற்கு நலம் வேண்டும். இது குறித்தே வாழ்க்கைத் துணை நலம் என்று வள்ளுவன் வைத்தனன். சோமகாந்தமும், பத்மகாந்தமும் இருந்தவாறு இது. இதனால் எத்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய உற்சவங்கள்......... எண்ணி மகிழக்கூடிய இலக்கிய யாத்திரைகள், இலக்கிய உறவுகள். வாமபாகத்தால் சோமபாகம் சக்தி பெற்றுச் சாதனை படைத்தது.

இலக்கியத் தேரைச் சமயநெடுந் தெருவுக்குள் விடாது குறுக்குத் தெருக்களுக்குள்ளே திருப்பிக் கொண்டு இழுத்துப் போக எத்தனித்த காலங்கள் அவ்வப்போது தோன்றின. வரலாறு வகைப்படுத்தும் குறுக்குத் தெருக்களுக்குள் இலக்கியத் தேரைச் செலுத்தக் கூடாதென்ற பிற்போக்கு அறியாமையைக் காலமகள் கண்டிருக்கிறாள். குறுக்குத் தெருக்களும் ஆசீர்வதிக்கப்பட வேண்டும். அவையும் தெருக்கள் என்பதை மறந்து விடக் கூடாது. அங்கும் இலக்கியத் தேர் செல்லத் தான் வேண்டும். அங்கு செல்லும் ஆவலில், உற்சாகத்தில் நெடுந் தெருவை விட்டு விடக் கூடாது. விவகாரத்தில் அதனை விலக்கவும் கூடாது. சமய நெடுந்தெருவை நெஞ்சில் நிறுத்திய நேர்த்தியோடு குறுக்குத் தெருக்களுக்குள்ளால் இலக்கியத் தேர் இழுக்கப்பட்டால் குறைவிலாது உயிர்கள் வாழும், மேன்மை கொள்நீதி விளங்கும் என்ற சரியான பார்வையில் படைப்பிலக்கிய இயக்கம் செல்நெறிகளைச் சிருஷ்டித்த நேரத்தில் எழுந்த ஆக்க இலக்கிய உலகுக்கு 'ஆகுதியையும்', 'விடிவெள்ளி பூத்ததையும்' முன் வைத்த பெருமை சோமகாந்தத்திற்குரியது

"இது குறித்த பங்களிப்பாய் எழுந்த 'பொற்சிறையில் வாடும் புனிதர்களும்' 'நைவேத்தியமும்', 'ஆகுதியோடும்,' 'விடிவெள்ளி பூத்ததோடும்' இணைத்து எண்ணப்பட வேண்டியவை" எனப் பேராசிரியர் கா.சிவத்தம்பியும்,பேராசிரியர் நந்தியும் சிலாகித்தமை சிந்தையிற் சிலிர்க்கின்றது. சமய நெடுஞ்சாலை இலக்கியத் தேர்த்திருவிழாவிலே தேசிய இலக்கியத் தந்தையான நல்லைநகர் நாவலரைப் பேருபய காரனாக்கி, தெற்பை போட்டு, ஊர்க் கோலம் காணவைத்த பெருமை இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திற்குரியது. அந்தச் சிறப்பான காரியத்தில் உறைப்பான உணர்வுகளோடு உழைத்த சோமகாந்தத்தின் பணி பாராட்டுக்குரியது.

சஷ்டியப்த பூர்த்தியில் புடம் போட்டு எடுக்க வேண்டிய தங்கபஸ்பங்கள் இரண்டு. இனி வருங்காலங்களில் தேகத்திற்கு ஒத்து வராதனவற்றையும், தேசத்திற்கு ஒத்துவராதனவற்றையும் சிந்தையாலும் தொடேன் என்பது.

சோமகாந்தமும் பத்மகாந்தமும் பழுத்த அனுபவங்களால் விழுப்ப முடையவற்றை உயிரினும் ஓம்பும் பக்குவம் வாய்ந்தன. பாரொடு விண்ணாய்ப் பரந்த பரம்பொருள் சீரொடு பொலியும் மணிவிழாவினை அருளியது போல முத்து விழாவையும் கண்டு வாழ அருள் பாலிக்க வேண்டி அமைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்தை நேசிக்கும் மாமனிதன்

மாத்தளை வடிவேலன்



ஈழத்துச்சோமு.........

பல்கலைக்கழக புகுமுக வகுப்பில் எனது வாசிப்புக் களத்தில் பரப்பு விசாலித்து, இலக்கியம், எழுத்துலக பிரமாக்கள் பற்றியெல்லாம் புதிய தரிசனங்கள் கிடைக்க, புதுமைப்பித்தன், ஜெயகாந்தன், டொமினிக் ஜீவா, கே.டானியல், என்.எஸ்.எம். இராமையா எல்லாம் மனோ ராஜ்யத்திற்கு கொலு வந்தபோது, அந்தக் கொலுவின் மூர்த்தமாக அமர்ந்து இன்றும் என்னுள்ளத்தில் நிறைந்து நிற்பவர் திரு.என்.சோமகாந்தன்.

அந்தக் காலத்தில் பத்திரிகைகளில் அவர் படைப்புக்களை வாசித்து மகிழ்ந்ததோடு, அவர் நாவலர் பணிகளில் ஈடுபட்டிருக்கும் செய்திகளையும், பொதுப்பணிகளில் முன்னின்று பாடுபடும் தகவல்களையும் அறிந்து எப்படியும் ஒரு தடவை சந்திக்க வேண்டும் என்ற ஆவல் மனதிற் பூத்துக் கிடக்க......,

அந்த எண்ணம் கைநழுவிக் கொண்டே போயிருக்கும் போது.....,

அவர் கொழும்பில் குடியிருக்க.... ,

அதுவும் எமது திணைக்களத்திலேயே பணியாற்றவென வந்தபோது,

நீண்டு கிடந்த அந்த இடைவெளிகள் காணாமற் போயின.

எத்தனை எத்தனையோ யுகங்கள், பிறவிகள் ஒன்றிணைந்திருந்தது போல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது அப்படியொரு பிணைப்பு மனதிற் குடிகொண்டுள்ளது.

இது எப்படி ஏற்பட்டது? இந்தக் கொஞ்சக் காலத்திற்குள், வாஞ்சையோடு சிரிக்கும் அந்த முகம் என்றுமே என்னுள்ளத்திலே மலர்ந்து கொண்டே இருக்கின்றதே.

நானும் எனது குடும்பத்தவர்களும் இவரைப் பற்றியும், இவரது அன்புள்ளம் கொண்ட துணைவியாரையும், அருமை மக்களையும் பற்றியும், ஏன் இப்படி தினமும் நினைத்துப் பேசி மகிழ்ந்து கொண்டிருக்கிறோம்.

வாஞ்சையோடு சிரிக்கும் அந்த சிரிப்பிற்காகவா? அல்லது எம்மை வென்று நிற்கும் பாசப் பிணைப்பிற்காகவா? அல்லது எந்தப் பெரிய காரியத்தையும் திட்டம் வகுத்துச் சிறப்பாகச் செயற்படுவதுடன் எம்மையும் தட்டிக்கொடுத்து அரவணைத்துக் கொண்டே போகின்றாரே.

அந்தச் செயலாண்மைக்காகவா?

எப்படியோ....

நாவலப்பிட்டி, கேகாலை, தெகியோவிட்ட..... இன்னும் மலையகத்தவர்களே போய்வரத்தயங்கும் பகுதிகளுக்கெல்லாம் சிரித்த முகத்துடன் களைப்பின்றி, சலிப்பின்றி, ஒரு இளைஞனைப் போல எம்மோடு வந்து இலக்கியம், சமயம் பற்றியெல்லாம் உரையாற்றி.... உரை மட்டுமா... மலையகத்தை நேசிக்கவும் தவறாத மானுட நேயமிக்க எழுத்தாளர்.

சோமகாந்தன் வெறும் எழுத்தாளர் மட்டுமல்ல, அவர் ஓர் இயக்கம்.

அவரோடும் அவர் குடும்பத்தோடும் பழக வாய்ப்புக் கிடைத்த நாமெல்லோரும் பாக்கியவான்கள். எளிமையும், இனிமையும் மட்டும் கொண்டவரல்ல சோமகாந்தன்! எளிமை இனிமையோடு, உறுதியும் தன்னம்பிக்கையும் இறைபக்தியும் கொண்டவராக விளங்குகிறார் அவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோமுவின் குணாதிசயங்கள்



கலாநிதி சி.மௌனகுரு
கலைப்பீடாதிபதி
கிழக்குப் பல்கலைக்கழகம்

ஈழத்துச் சோமு என எம்மால் ஆரம்பத்தில் அறியப்பட்ட திரு. நா.சோமகாந்தன் அவர்களுக்கு மணிவிழா...... நம்ப முடியவில்லை. காலம் எவ்வளவு வேகமாகப் போகிறது.

மற்றவர்க்கெல்லாம் மணிவிழா எடுத்து மகிழ்ந்த சோமுவுக்கு இன்று நண்பர்கள் மணிவிழா எடுக்கின்றனர். சோமுவுக்கு 60 வயது என்பதை நம்ப முடியவில்லை.

1963இல் நாம் பேராதனைப் பல்கலைக்கழகத்திலே கல்வி பயின்று கொண்டிருந்த போது இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் 2வது மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. பேராதனையிலிருந்து ஒரு விரிவுரையாளர், மாணவர் பட்டாளமே அங்கு சென்றது. யாழ்ப்பாணத்துச் சுவாமியார் பிறந்த அல்வாயில் அவர் நினைவாக விழா. அங்கு சுவாமியார் பற்றி ஒரு கவியரங்கு. அதில் நானும் பங்குகொள்ளும் வாய்ப்பு.

அந்த விழாவுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து முற்போக்கு எழுத்தாளர்கள் பஸ்ஸில் பயணமாயினர். வயதில் குறைந்த இளைஞர்களான செ.யோகநாதன், பெனடிக்ற் பாலன் போன்றோர். வயதில் முதிர்ந்த இளைஞர்களான கைலாசபதி, சில்லையூர் செல்வராஜன், ரகுநாதன், டொமினிக் ஜீவா டானியல், நீர்வை பொன்னையன், ஈழத்துச்சோமு போன்றோர் இன்னும் பலர். பத்மா சோமகாந்தனும் அதில ஒருவர் என்பது ஞாபகம்.

சோமு சோமு என பலரும் அழைத்தனர். இளைஞர் குழாத்துக்குரிய கிண்டலும், கேலியும் நிரம்பி வழிந்தன.

மாநாட்டு நிகழ்ச்சிகளில் ஓடி ஓடி வேலை செய்தார். பம்பரமாகச் சுழன்றார். கவியரங்கு முடிய வந்து பாராட்டினார். சோமுவுடன் இப்படித்தான் எம் உறவு ஆரம்பமானது. அந்த உறவு இலக்கிய உறவாக, குடும்ப உறவாக பரந்து விரிந்தது.

இளைஞர்களைப் பாராட்டி ஊக்குவிப்பது சோமுவின் குணாதிசயம்

80 களின் முற்பகுதியில் சோமு யாழ்ப்பாணத்துக்கு மாறுதலாகி வந்திருந்தார். அப்போது நான் யாழ் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தேன். அவரின் 'ஆகுதி' தொகுதி வெளியிடப்பட்டது. என்னையும் பேச அழைத்திருந்தார். என் விமர்சனம் சற்றுக் காரமாக அன்று அமைந்தது. பேச்சின் முடிவில் இந்த விமர்சனம் நண்பர் சோமுவுக்கும் எனக்குமுள்ள உறவைப் பாதிக்காவிட்டால் அதுவே சோமு என் மீது வைக்கும் அன்புக்குச் சிறந்த சான்று என்றும் கூறினேன்.

நட்பு பாதிக்கப்படவில்லை. மாறாக நன்கு இறுகியது.

இதுவே சோமுவின் இன்னொரு குணாம்சம்

1969ல் நாவலர் விழா, 1975 இல் இ.மு.எ.ச. பண்டாரநாயக்க சர்வதேச மண்டபத்தில் நடத்திய தேசிய இனப்பிரச்சினை மாநாடு, 1995 இல் இ.மு.எழுத்தாளர் சங்கத்தின் விழா, இந்த விழாக்களை ஒட்டிய பெரும் மலர்கள், பெரும் பெரும் மலர்கள். இவை எப்படி உருவாகின்றன என்பது புதிரே. ஆனால் எப்படியோ சோமகாந்தன் மலரை வெளியிட்டுவிடுவார். சோமகாந்தனால் மாத்திரமே அது முடியும்.

மலருக்கு ஆக்கங்கள் பெறுவதில், ஆலோசனைகள் பெறுவதில் அவர் பெறும் சிரமங்கள் அதிகம். பலரோடும் நல்லுறவு கொண்டிருப்பதால் அனைவரையும் ஒருங்கிணைத்து ஆக்கங்களைப் பெறும் சாதுரியம், திறமை, சோமுவுக்கு மாத்திரமே உண்டு. மறைந்த பேரசிரியர் கைலாசபதியின் துணை இதில் சோமுவுக்கு நிறைய இருந்தது. எச்சரித்து நச்சரித்துக் கட்டுரைகளைப் பெற்று விடுவார். அவர் நச்சரிப்பால் எழுதியோர் பலர். இது சோமுவின் பிறிதொரு குணாம்சம்.

எதையுமே சின்னதாகச் செய்து சோமுவுக்குப் பழக்கமில்லை. இ.மு.போ.எ.ச. விழா ஆகட்டும், நாவலர் விழா ஆகட்டும், இனப்பிரச்சினைத் தீர்வுத்திட்டமாகட்டும், நூல் வெளியீட்டு விழா ஆகட்டும், எல்லாம் பிரமாண்டம்தான். எதையும் கோலாகலமாகக் கொண்டாடி மகிழ்வது சோமுவின் இன்னொரு குணாம்சம்.

அவர் வீட்டுக்குச் சாப்பாட்டுக்கு அழைத்தாலும் இந்தப் பிரமாண்டத் தன்மை இருக்கும்.

இலங்கை முழுவதும் நிறைந்த எழுத்தாள நண்பர்களைப் பெற்றிப்பவர் சோமு. கொள்கை கோட்பாட்டுக்கப்பால் அனைவருடனும் இணைந்து பழகும் அவரது பண்புதான் அவருக்கு நிறைய நண்பர்களைத் தேடித் தந்துள்ளது.

சோமுவின் குணாதிசயங்கள் அன்றிருந்தபடி இன்றுமுள்ளன. இளம் எழுத்தாளர்களைப் பாராட்டுதல், ஊக்குவித்தல், விமர்சிக்கும் நண்பர்களுடனும் தொடர்ந்து இறுகிய நட்பு, மலர்கள் வெளியீடு, உழைப்பு, எதையுமே பெரிதாகச் செய்யும் இயல்பு. அனைவருடனும் இணையும் பண்பு. இத்தகைய குணாதிசயங்களை உள்ளடக்கிய திரு. சோமகாந்தனின் இலக்கியப் பயணத்திற்கு மிக உற்ற துணை பத்மா சோமகாந்தன் அவர்கள். இன்னொரு துணை பிரேம்ஜி ஞானசுந்தரன்.

பிரேம்ஜியும், சோமுவும் ஒருவகையில் இரட்டையர்கள். நண்பர்களால் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் என்று அழைக்கப்படுபவர்கள். உண்மைதான். அவர்கள் இல்லாவிட்டால் இ.மு.எ.ச. இன்று வரை இயங்கியிருக்க முடியாது. அவர்களின் தொடர்ச்சியான பதவி இருப்பு ஒருவகையில் இ.மு.எ.ச.வின் மிகப் பெரிய பலமும், பலவீனமுமாகும்.

நாம் பலத்தைப் பாராட்டுவோம்.

60 வயது அகவை அடைகிறார் சோமு. வாழ்க்கைப் பஞ்சாங்கத்தின் ஒரு சுற்றுவட்டம் முடிவடைகின்றது. எனினும் தோற்றத்தில் செய்கையில் அவர் இளைஞர். 60 வயது இளைஞனின் விழா சிறக்க வாழ்த்துவோம். இதே வேகத்தோடு தொடர்ந்து செயற்படவும் வாழ்த்துவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றாண்டு விழாக் காணட்டும்

வி.என். மதிஅழகன்
தமிழ்ச்சேவைகள் பணிப்பாளர்
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்



மணிவிழா நாயகன் நா. சோமகாந்தன் அவர்களை மிக நீண்டகாலமாக நாம் அறிவோம். இவரின் எழுத்துக்கள் தனித்துவமானவை. உயர்வானவை.

எமது தமிழ்ச்சேவையின் பல்வேறு நிகழ்ச்சிகளிலே பங்களிப்புச் செய்து நேயர்களின் பாராட்டுதல்களைப் பெற்றிருக்கிறார். தமிழ்ச்சேவைக்கு மகத்துவம் கிடைக்கச்செய்திருக்கிறார்.

எழுத்தாளர் சோமகாந்தனின் வானொலிப்பேச்சுக்களில் அவரது இலக்கியப் புலமை வெகு நன்றாகவே மிளிர்ந்தது. அவரது பேச்சிலே கனிவும் இருக்கும். கருத்தாளமும் இருக்கும். இலக்கிய ரசனை கொண்டோர்க்கு அவரின் பேச்சுக்கள் எப்போதும் மன நிறைவைத் தந்தன.

சமய நற்சிந்தனைகளுக்கு மேலதிகமாக அதிகாலை வேளையில் நடைமுறை வாழ்க்கைத் தத்துவம் ஒலிபரப்பாகி வந்தமை எமது நேயர்கள் அறிந்ததே. எழுத்தாளர் சோமகாந்தன் தமது தத்துவ நோக்கில் வெளிப்படுத்திய கருத்துக்கள் நடைமுறை வாழ்க்கைத்தத்துவம் நிகழ்ச்சிக்கே ஒரு புதிய ஊக்கம் அளித்தன.

இலங்கையின் வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் அனைத்தையும் உள்ளடக்கி, வானொலியிலே தொடர்ச்சியாக இவர் நிகழ்த்திய பேச்சுகள் எமது இளைய சமுதாயத்தின் கவனத்தை வெகுவாக ஈர்த்திருந்தன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் நாவல், இலக்கியம், கவிதை வளர்ச்சி, சிறுகதை இலக்கியம், நாவலர் இயக்கம், மற்றும் மகாகவி சுப்ரமணிய பாரதியாரால் ஞானகுரு எனப்புகழப்பட்ட யாழ்ப்பாணத்துச் சுவாமியார் என இலக்கியத்தைத் தழுவியும், இலங்கையின் திரைப்பட வரலாறு, தொலைக்காட்சியின் பங்களிப்பு என்பன போன்றும் கிட்டத்தட்ட 16 பேச்சுகள் வானொலியில் ஒலிபரப்பாகி ரசிகர் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றன.

எழுத்தாளர் சோமகாந்தனுடன் பழகிய எமது ஒலிபரப்பாளர்கள் அவரை ஒரு சிறந்த பண்பாளராகவே மதித்து வருகிறார்கள். அவரது பவ்வியமான போக்கே இதற்குக் காரணம் எனலாம். இவருடன் நாம் நடத்திய தொலைக்காட்சிப்பேட்டி பல்வேறு கோணங்களிலே பலரையும் கவர்ந்தது என்பதை நேயர்களின்பிரதிபலிப்புகள் எடுத்துக்காட்டின.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன இந்து ஆலோசனைக் குழுவில், ஒரு அங்கத்தவராக விளங்கி ஒலிபரப்புத்துறைக்கு இவர் ஆற்றிவரும் பணிகள் அளப்பரியன.

ஆம்! ஒலிபரப்புத்துறையில் இவருக்குள்ள நெருக்கமான தொடர்பு வளர்ந்து கொண்டே இருக்கிறது. இன்று மணிவிழாக் காணும் எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய சோமகாந்தன் அவர்கள் நூற்றாண்டு விழாக் காண எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்திக்கின்றோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கு தொடங்குவது? எதை எழுதுவது? எதை விடுவது? எப்படி முடிப்பது?

பத்மா சோமகாந்தன்



உள்ளத்தால், உடலால், உணர்வால், ஒன்றித்து என் உயிரிற் கலந்திருக்கும் என்னவரைப்பற்றி நானும் எழுதவேண்டுமென விழாக்குழுவினர் நிர்ப்பந்திக்கின்ற போது –இனிப்பும் கசப்புமான எத்தனை எத்தனை உணர்ச்சிகள் என் மனதில் வண்ணக் கோலமிடுகின்றன.....?

ஐம்பதுகளின் நடுப்பகுதியிற் கொழும்பிலிருந்து 'உதயம்' என்ற இலக்கிய மாசிகை வெளிவந்துகொண்டிருந்தது. அதன் ஆண்டுமலருக்கு ஆக்கங் கோரி எனக்கு வந்த கடிதம் ஒன்றில் ஆசிரியர் குழுவின் பெயர்களுடன் அச்சிடப்பட்டிருந்த கடிதத்தலைப்பில், ஒருவரின் பெயருக்குப் பக்கத்தில் அடைப்புக்குறிக்குள் (சர்மா) என்று தட்டச்சிற் பதிக்கப்பெற்றிருந்தது. "உன்னைப்பற்றி அறிந்து உன்னில் ஒரு கண் வைத்துத்தான் பையன் இப்படிப் பெயர் அடையாளம் காட்டியிருக்கிறார்" எனச் சொல்லி என் சகோதரிகள் சிரித்தனர். என் உள் மனம் புன்னகைத்தது.

எனது கட்டுரை வெளிவந்த 'உதயம்' ஆண்டு மலரும், கட்டுரையை உச்சமெனப் பாராட்டி எழுதிய கடிதமும் அதே நபரிடமிருந்து பின் வந்தன. அதில் இறுதிவரி "சந்தர்ப்பம் கிடைத்தால் மீண்டும் சந்திப்போமே!". பாராட்டுக்கள் என்னை மிதக்க வைத்தன.

இதற்குச் சிலவருடங்களுக்கு முன்பு நடந்த இன்னொரு சம்பவமும் நினைவுக்கு வருகிறது......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று பொங்கல் நாள். பொங்கிப்படைத்து, பாட்டுச் கச்சேரி நடத்தி , எனது பெற்றோர் தமது 'காக்காக் குஞ்சுகளின்' கானத்தில் மகிழ்ந்திருந்த போது.....

வெளிக்கதவை யாரோ தட்டினார்கள்.

கதவைத்திறந்தபோது, முன் அறிமுகமில்லாத மூன்று இளைஞர்கள் என்னைத் தேடிவந்திருந்தனர். ஒருவர் இன்று புகழ்பெற்ற நாவலாசிரியர் செ. கணேசலிங்கன் –ஏனைய இருவரும் அப்போது சுதந்திரன் ஆசிரிய பீடத்திற் பணிபுரிந்த பிரேம்ஜி (இப்போது இ.மு.எ.ச. பொதுச்செயலாளர்), செ.ராஜதுரை (பின்னாளில் அமைச்சராக விளங்கியவர்). 'சுதந்திரன்' நடத்திய சிறுகதைப்போட்டியில் எனக்கு முதற் பரிசு கிடைத்ததற்கான காசோலையைத் தரவும், புகைப்படம் பேட்டி எடுப்பதற்குமாக வந்திருப்பதை அவர்கள் கூறிய போது வானத்திற் பறந்தேன். இதுபோல உதயத்தின் "அவரிடமிருந்து" வந்த பாராட்டும் என்னை மிதக்க வைத்தது. அத்துடன் அக்கடிதத்தின் இறுதி வரியிலே தூவியிருந்த 'பொடி' .... அது என்ன சொக்குப் பொடியோ?

பெரியார் 'விடிவெள்ளி' கா.பே.முத்தையா அவர்கள் ஒரு கிறீஸ்தவர். எனினும் வைதீகவாதியான எனது தந்தையார் மீது அளவற்ற அன்பும் மதிப்பும் கொண்டு அடிக்கடி எமது இல்லம் வந்து ஆலோசனைகளைப் பகிர்ந்து கொள்ளும் எமது குடும்ப நண்பராக விளங்கினார். எமது குடும்பத்திலே திருமண வயதில் நான்– உட்பட மூன்று பெண்களிருந்தோம். எமது தாயார் இக் "குடும்பச்சுமை" பற்றி அவரிடம் அடிக்கடி கூறியிருந்தார்.

'விடிவெள்ளி' அவர்கள் பொதுப்பணிகளுக்காகக் கொழும்புக்கும், வெளியூர்களுக்கும் அடிக்கடி போய்வருபவர். ஒரு தடவை அவரது 'சைக்கிள்' வழமைபோல நமது வீட்டு வாசலில் நின்றதை, பாடசாலை முடிந்து வீடு திரும்பிய நான் அவதானித்தேன். விறாந்தையில் ஐயா, அம்மா மற்றும் சகோதரிகளுடன் உற்சாகமாகச் சம்பாஷித்துக் கொண்டிருந்த அவர் குதூகலமாகக் கூறியது உள்ளே அறையில் உடை மாற்றிக் கொண்டிருந்த எனக்குத் தெளிவாகக் கேட்டது.

"பத்மாவுக்குத் தோதான மாப்பிள்ளையை இம்முறை கொழும்பு சென்றிருந்தபோது கண்டுபிடித்துவிட்டேன். அவரும் ஓர் எழுத்தாளர் தான். அரசாங்க உத்தியோகத்திலிருக்கும் அருமையான பையன். பெற்றோரைச் சந்தித்துப் பேசிமுடிக்க வேணும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது மனத்திரையில் மணமக்களாக எம்மிருவரையும் உட்கார வைத்து எப்போதோ சித்திரம் வரைந்துவிட்ட அப்பெரியார் ஒழுங்காகக் காயை நகர்த்தத் தொடங்கி விட்டார்.

எழுத்தோடு– திருமணப்பதிவல்ல– ஆரம்பித்த எமது வாழ்க்கைச் சக்கரம் எழுத்தும் சேர்ந்ததாக 37 ஆண்டுகள் தொடர்ந்து இன்றும் ஓடிக் கொண்டிருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது.

சோகங்களில், கூடவே கட்டி அழுதிருக்கிறோம். மகிழ்ச்சிகளைச் சேர்ந்து பகிர்ந்து கொண்டிருக்கிறோம். சீறிவந்த புயல்களை நிதானமாக நின்று சமாளித்திருக்கிறோம்.

எவரின் கண்பட்டுவிட்டதோ?– திருமணமாகிச் சில ஆண்டுகளில் மாறி மாறி எம் வாழ்வில் எத்தனை சோகங்கள்?

அவரின்– இளைய சகோதரனின் அகாலமரணம். அதனைத் தாங்க முடியாத அன்னையின் மறைவு. மூத்த சகோதரரின் பிள்ளைகள் இருவரின் திடீர் இழப்புகள். எனது அன்புத் தந்தையாரின் மறைவு..... எல்லாவற்றையும் எப்படிச் சமாளித்தோம். .....? நினைக்கப் பிரமிப்பாகவே இருக்கிறது. சோகங்களென்றால் உடனே சுருண்டு சோர்ந்து விடாது 'காரியங்களை' நடத்தி முடிக்கவேண்டுமே என நிமிர்ந்து நிற்பார். இருமடங்கு உறுதியாக அவர் நிமிர்ந்து நிற்பதைக் கண்டு அதில் எனது சோகத்தைப் புதைத்துவிடுவேன்.

இலக்கியச் சோடியாக நாம் இணைந்துகொண்டதால் அன்று முதல் இன்று வரை எனக்கு எத்தனை அனுகூலங்கள்!– அனுபவங்கள்!

அறுபதுகளின் முற்பகுதியில் சென்னையில் நடந்த அனைத்திந்திய எழுத்தாளர் மாநாட்டில் இலங்கை இ.மு.எ.ச. பிரதிநிதிகளாக நாம் அங்கு சென்று உரையாற்றியதும், அதனைத் தொடர்ந்து பல இலக்கிய நிகழ்ச்சிகளின் பங்கேற்பு– பழம்பெரும் எழுத்தாளர்களாக விளங்கிய தி.ஜானகிராமன், சிதம்பரசுப்பிரமணியன், திருச்சி அ.வெ. கிருஷ்ணசாமி ரெட்டியார், அன்புப் பழம் நீ, சோமகள், எம்.எஸ்.கமலா, சோ.சிவபாதசுந்தரம், டெல்கிராஜாமணி, ஜெயகாந்தன், கோ.பக்தவத்சலம், சி.சு.செல்லப்பா முதலியோரின் அறிமுகமும் நட்பும் எங்கள் இளம் வயதிலேயே கிடைத்தன. புதுமைப்பித்தனின் துணைவி கமலா விருத்தாசலமும், மகள் தினகரியும், சி.சு. செல்லப்பாவும் எம்மை வீட்டுக்கு அழைத்து விருந்தளித்துக் கௌரவித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்திலென்றாலென்ன, கொழும்பிலென்றாலென்ன இ.மு.எ.ச. செயற்கூட்டங்கள் பெரும்பாலும் எமது இல்லத்திலே தான் நடப்பது வழக்கம். இதுபற்றிச் சில மணித்தியாலங்களுக்கு முன்புதான் எனக்குச் சொல்லுவார். எழுத்தாள நண்பர்களை உபசரிப்பதில் எப்போதும் எமக்கு அளவில்லா மகிழ்ச்சி. இ.மு.எ.ச. வின் முக்கிய திட்டங்கள், தீர்மானங்களில் பங்கெடுக்க வாய்ப்புக் கிடைத்திருப்பதுடன், நானில்லாமற் சங்கத்தின் எந்த மாநாடோ விழாவோ நடந்ததில்லை. ஏனெனில் முடிவெடுத்த பின் அதற்குச் செயலுருவம் கொடுப்பதற்கு இவரின் முகத்தை எல்லோரும் பார்ப்பதற்கு முன்பே, பொறுப்புக்களைத் தூக்கித் தலையிலே போட்டுக் கொள்ளுவது இவரின் சுபாவமாச்சே! எழுத்தாளர் சங்கத்தில் மட்டுமல்ல, நாவலர் சபை வேலைகளிலும் இப்படித்தான்! உணவு, ஒய்வு, உறக்கம், குடும்பம் என்ற சிந்தனை இல்லாமல் இவர் அவ்வேளைகளில் மாய்ந்திருக்க நான் மட்டுமல்ல, முழுக்குடும்பமுமே அவருக்கு 'கை கொடுப்பது' அடிக்கடி எமது வீட்டில்நிகழ்வதுதான். நெருக்கடியான வேலைகளில் ஈடுபட்டிருக்கும்போது இடையிற் குறுக்கிட்டால் சீறி விழுவார். சிறிது நேரத்தில் யாவும் மறந்து குழைந்து வருவார். இப்போதும் அப்படியேதான்.!

சரித்திரப் பிரசித்திபெற்ற நாவலர் நூற்றாண்டு விழாத் தயாரிப்பு வேலைகளில் இவர் ஓடித் திரிந்தகாலம்– இவரைப் பல இடங்களிலே தேடித் திரிந்தும் 'பிடிக்க' முடியாமல், களைத்துப் போய்ப் பேராசிரியர் கைலாசபதி என்னிடம் விசாரிக்க எமதில்லம் வந்திருந்தார். "ஒரு நாள் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்பவர்களே களைத்துச் சோர்ந்து போய் விடுகிறார்கள். 'மலர்' வெளியிடுவது மாத்திரமல்ல, அறிஞர்கள், கலைஞர்கள் எழுத்தாளர்களெல்லோரையும் சேர்த்து ஒருவாரம் முழுவதும் விழாவை வெற்றிகரமாக்குவதென்றால் அதற்கு அசுர உழைப்புதேவை. சோமகாந்தன் எமக்குக் கிடைத்த "Giant Woker", எனத்தம்மிடம் பெரியார் ம.ஸ்ரீகாந்தா கூறிப் பெருமிதமடைந்ததாகக் கூறிய கைலாசபதி அவர்கள், இவர் எத்தனை மணி நேரம் தூங்குகிறாரென விசாரித்துவிட்டு அலையாமல் ஆறுதலெடுப்பதைக் கவனிக்குமாறு எனக்கு ஆலோசனை சொன்னார்.

நாம் வாழுகின்ற அன்டர்சன் தொடர் மாடிக்குடியிருப்புக்கு 1971ல் நாம் குஞ்சு குருமான்களாயிருந்த எமது குழந்தைகளான பத்மகாந்தன், விஜயகாந்தன், கலாஞ்சலி, சக்தி காந்தன், ஆகியோருடன் குடியேறிய போது இங்கு பாம்புப் பற்றைகள். குடிதண்ணீர்த் தட்டுப்பாடு. மழைக்கு ஒரே வெள்ளக்காடு. போக்குவரத்துவசதிகளில்லை. எனவே வீடமைப்புத்திட்டத்திலுள்ளவர்களை அணிதிரட்டி இன்றைய முன்னேற்றங்களுக்கான முன்னோடிப்பணிகளை அப்போதிருந்தே மேற்கொண்ட சிலரில் இவரும் முக்கியமானவர். பல இன, மதத்தைச் சார்ந்தோர், வெவ்வேறு அந்தஸ்திலுள்ளவர்கள் இவரது அர்ப்பணிப்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலாற்றலை மதித்து ஒவ்வொரு ஆண்டுக் கூட்டத்திலும் 13 ஆண்டுகளாகப் பொதுச் செயலாளராகத் தெரிவு செய்தனர் என்பது பழங் கதை!

இவரின் வேகமான ஓட்டத்துடன் தானும் சேர்ந்து ஓட முடியாமல் இதயம் சில தடவைகளில் தயங்கிய நாட்களை நினைக்கவே என் இதயம் பதறுகிறது. முதற்றடவை இவர் மூர்ச்சையானபோது..... அந்தப் பெரியாரும் துணைவியாரும் துடித்தே போய் விட்டனர். மருத்துவ மனையிலிருந்தபோது அடிக்கடி தவறாமல் வந்து பார்த்துப் பல ஒத்தாசைகள் புரிந்ததையும், வீட்டில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தபோது தூக்கத்திலிருந்த இவருக்கு விசிறியால் விசிறிக் கொண்டிருந்த பெரியவர் நீதியரசர் சிவசுப்பிரமணியம் ஐயாவையும், அவரின் துணைவியாரையும் மறக்கவே முடியாது. எந்தப் பெரியவரையும் தனது அன்பாலும் நடத்தையாலும் கட்டிப் போடுகிற சக்தி இவருக்கு இறைவனளித்த கொடையோ?

1989 ஒக் 28,29,30 திகதிகளில் யாழ் இந்துக்கல்லூரியில் புத்தக, சிற்ப, ஓவியக் கண்காட்சி நடைபெற்றது. அதன் அச்சாணியாக இருந்து தொழிற்பட்டவர் இவரே. ஓயாத உழைப்பு, அலைச்சல், வெற்றிகரமாக கண்காட்சியை நடாத்திமுடித்த எக்களிப்பு. ஆனால் அன்று நள்ளிரவு அடுத்த தடவையாக 'அட்டாக்'.

ஐ.பி.கே.எப். அட்டகாசங்களின் மத்தியிலும் அந்நள்ளிரவிற் பெரியாஸ்பத்திரியில் அவசரசிகிச்சைப்பிரிவிற் சேர்த்தோம்.

சிறிது சுகம் பெற்றுவரவும் மருத்துவமனையிலிருந்து கொண்டே எழுத்தாளர்கள் நண்பர்களென ஆட்கள் சேர, மருத்துவ எச்சரிக்கையையும் மறந்து அவர்களுடன் அடுத்த விழாவுக்கான திட்டம் தீட்டுவதில் மும்முரமாகி விட்டார். பேராசிரியர் சண்முகதாஸ் இதனை அவதானித்துப் பொறுமை இழந்துவிட்டார். 'இங்கிருந்தால் இவர் ஓய்வெடுக்கமாட்டார். விரைவிற் கொழும்புக்குக் கூட்டிச் செல்லுங்கள்' என என்னை அழைத்துச் சொன்னார்.

* * * *

இலக்கியத்தைமட்டுமல்ல! இலக்கியவாதிகளையும் மிதமாக நேசிப்பதும் வீட்டிற்கழைத்து விருந்தளித்து மகிழ்வதும் எமது வீட்டில் அடிக்கடி நிகழ்ந்து வருவதொன்றே. நந்தி, ஜீவா, வரதர், சொக்கன், சிவத்தம்பி, சிவகுருநாதன் மணிவிழா விருந்துகள் மட்டுமல்ல, தமிழகத்திலிருந்து சிதம்பர ரகுநாதன், விஜயபாஸ்கரன், ராஜம் கிருஷ்ணன், பேராசிரியர் இராமகிருஷ்ணன், கோமல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசந்தி, பொன்னீலன், வல்லிக் கண்ணன், தாமரை மகேந்திரன், பேராசிரியர் நமசிவாயம், ராமமூர்த்தி, புனிதா ஏகாம்பரன், ருக்மணி, சாரதா நம்பியாரூரன், என நாம் விருந்தளித்து மகிழ்ந்தவர்களின் பட்டியல் நீளும். இது இன்னும் நீண்டுகொண்டேயிருக்கவேண்டுமென்பது எமது ஆசை.

* * * *

"அப்பல்லோ" மருத்துவமனை.

"இதயம் சீராகச்செயற்பட அறுவைச் சிகிச்சை ஒன்றே வழி" என இதய சிகிச்சை நிபுணர் டாக்டர் கிரிநாத் கூறினார்.

என் இதயம் 'திக்' என்றது.

கூடவே இருந்த நண்பர்கள் ஈஸ்வரன் –திலகவதி, அருணாசலம், சீதா, நந்தி, கணேசலிங்கன், யோகநாதன், நடராஜன் மாமா, அவர் மனைவி சாரதா, இராமதாஸ் மாமா, கிருஷ்ணமூர்த்தி, என்போர் உள்ளூரப் பயந்து கொண்டே அதனை வெளிக்காட்டாமல், என்னைத் தைரியப்படுத்தினர்.

ஆனால், இவரோ..... புன்முறுவலோடு தியேட்டருக்குட் சென்றாரே! என்ன துணிவு!

சத்திர சிகிச்சைமுடிந்து வெளியே வந்தபோது நோ, எரிவு, பலவீனம் என்ற நிலையிலும் நண்பர்களைப் பார்த்தும் புன்முறுவல்தான்!

* * * *

அந்தப்பணி, இந்தப்பணி என ஓடிக்கொண்டே இருக்கும் இவருடன் நானும் கைகோர்த்து ஓடிக்கொண்டே இருக்கிறேன்.

முத்தான முதற்பேரனாக 'அழகன்' (விஜயகாந்தன், கீதா தம்பதியின் மகன்) என்ற புதிய கிளை எமது வம்சவிருட்சத்தில் முளைத்துவிட்டது.

"இனியாவது ஓடித்திரியாமல் ஓய்வாக இருக்கட்டும் எனச் சொல்லாமற் சொல்வதற்காகத்தான் நண்பர்கள் இம்மணிவிழாவை எடுக்கின்றார்களோ?

அப்படியானால் எனக்கும் மகிழ்ச்சியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நின்பணிகள் நிற்கும்!

கவிஞர் சோ.பத்மநாதன்



வற்றாத புன்னகைக்கு வயது அறுபதென்றார்!
வாயினிக்கும் பேச்சுக்கு மணிவிழா என்றார்!
சற்றேனும் ஓய்வின்றிக் காலமெல்லாம் உழைக்கும்
'தமிழ்ஒளி'க்கு மணிவிழா இம்மாதம் என்றார்!
முற்றாகப் பொதுப்பணிக்குத் தன்வாழ்வைத் தந்த
முற்போக்குத் தொண்டனுக்கு வயது அறுபதென்றார்!
சுற்றாடல் எல்லாமே புனிதமுறச் செய்யும்
'சோமு'வுக்கு வயதறுபதாம் என்றுசொன்னார்!

'ஆகுதி' யைப் 'பொய்கைமலர்' அதனை 'விடிவெள்ளி'
ஆதிபல நூல்தந்த அவர்க்கு விழா என்றால்
நாவலர்தம் சிலைப்பவனி யால், அவரை இந்த
நாடறியச் செய்தவர்க்கு மணிவிழா என்றால்
சேவையிலே தனைமுழுதும் கரைக்கின்ற தொண்டர்
சிகாமணிக்குத் தலைநகரில் விழாவென்று சொன்னால்
யாவருளம் துள்ளாது! யார்மகிழ்ச்சி கொள்ளார்!
யாவரிது தமிழுக்குச் செயும் சிறப்பு என்னார்!

ஈழமணி நாட்டினது தமிழை உலகறிய
ஏற்றமுறச் செய்தபுக ழாழர்வரி சையிலே,
தோழ, உனக் கிடமுண்டு; நின்பணிகள் நிற்கும்!
தொட்டவைகள் துலங்குகிற கைராசி உனக்கு!
நாளை, மணி, நிமிஷத்தைப் பயன்செய்யும் வித்தை
நன்கறிவை! நின்மனைவி மக்களொடு மகிழ்ந்து
வாழியநீ ஊழி! இந்த மணிவிழாக் கோலம்
வாழிய நம் கண்களிலே! வாழியநின் எழுத்து!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முழுமதி சோமகாந்தா !

கே. பி. நடனசிகாமணி



அன்பு அறிவாற்றலுக்கு ஆளுமைக்கு என்ன
அருந்தமிழர் தொண்டுக்கு அறப்பணிகட்கென்ன
பண்புக்குப் பகுத்தறிவுக் கொள்கைகட்கு என்ன
பாசமிகு நெஞ்சோடு பழகுவதற்கென்ன
தன்மானவுணர்வுக்குத் தமிழ்ப்பற்றுக்கென்ன
தரமான பேச்சுக்கு எழுத்துக்கு என்ன
மன்னவனார் எம் சோமகாந்தன் தானென்று
மாண்புடையோர் உமை வாழ்த்த வளமாக வாழ்க

(வேறு)

தன்னலம் கருதாச்சேவை
தாய்மொழிப்பற்றுப் பாசம்
சொன்ன சொல் மாறா நேர்மை
சோர்விலாப் பணிகட்கெல்லாம்
முன்னுதாரணமாய் வாழும்
முழுமதி ! சோமகாந்தா !
இன்துணைப்பத்மாவோடு
இணைந்து பல்லாண்டு வாழி !.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்னகை ஒன்றே சொல்லும்
புனிதவுன் மனிதப்பண்பை
கண்ணொளி காட்டி நிற்கும்
கருணையின் உரு நீயென்று
இன்று நீ அறுபதாண்டின்
இறுதி கொண்டாடி இன்னும்
பன்னெடுங்காலம் இந்தப்
பாரெலாம் போற்ற வாழி !

சொல்வதை நேராய்ச் சொல்வாய்
செய்வதைச் சீராய்ச் செய்வாய்
வல்லமை சொல்லமாட்டாய்
வந்ததை விடவும் மாட்டாய்
பல்கலைவேந்தன் ! நல்ல
பண்புடை எழுத்தாளன் நீ
நல்லவனாக என்றும்
நாடெலாம் வாழ்த்தவாழி !

கடவுளை மறந்தாலும் நீ
கடமையை மறக்கமாட்டாய்
உடமைகள் அழிந்தாலும் நீ
உண்மையை மறுக்க மாட்டாய்
திடமுடை நெஞ்சினாய் நீ
திக்கெலாம் புகழ்பரப்பி
அடுத்த நூற்றாண்டுக்கல்ல
அப்பாலும் சென்றுவாழி !

கல்வியும் அறிவும்போல
கவிதையும் நயமும் போல
உள்ளமும் உணர்வும் போல
ஊக்கமும் உயர்வும் போல
செல்வமும் செழிப்பும் போல
செந்தமிழ்ச் சுவையைப்போல
வல்லமை எல்லாம் பெற்று
வளமெலாம் பெற்றுவாழி !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தக்கவன் மணிவிழா

அருட்கவி வேலணை வேணியன்
தலைவர், அகில இலங்கைக் கண்ணதாசன் மன்றம்.



தன்னலம் சிறிதும் இல்லா தகை உடை மனிதன் என்பேன்
பொன்னென மனம் படைத்த பொதுநலத் தொண்டன் என்பேன்
கண்ணெனத் தமிழ்த்தாய் தன்னைக் காக்கின்ற மைந்தன் என்பேன்
மன்னவ சோமகாந்த 'வள்ளலே' வாழ்க நீயே!

துணிவு நிறை விமர்சகராய்த் தூயதமிழ் பரப்பி நிதம்
அணி செய்தாய் தமிழை நீ ஆண்டாண்டாய்ப் புகழ் வாழும்
பணி செய்த பண்பாள! பாரெல்லாம் புகழ் பரப்பி
மணியானாய் தமிழன்னை மகுடத்தில், மகிழ்ந்தோம் நாம்

இன்னல்கள் தீர்ந்திடு மா என்றே நம் தமிழரினம்
கன்னத்து நீரோடு கதறுவது உன் குரலாய்
வண்ணத்து எழுத்தாகி வரவேண்டும் அதுகண்டு
கன்னல் தமிழினமும் களி கொள்ள வேண்டுமையா!

பக்கவேர் நீர்பெறப் பசுமை காண் தருவெனத்
தக்கவன் மணிவிழா தான் பெறும் தகைமையால்
மிக்கவே மகிழ்வொடு மேன்மையும் உற்றனள்
திக்கெலாம் புகழும் நம் தீந் தமிழ்ப் பாவையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோமகாந்தன் பற்றிய குறிப்புக்கள்



1950களில் இலக்கியப் பிரவேசம்

சிறுகதைகள், இலக்கியக் கட்டுரைகள், நாவல்கள் மற்றும் விமர்சனங்கள்

அச்சில் வெளிவந்த சொந்த ஆக்கங்கள்

ஆகுதி– சிறுகதைத்தொகுப்பு
விடிவெள்ளி பூத்தது – நாவல்
தத்துவச் சித்திரம் –ஒழுக்க விழுமியங்கள் பற்றிய கட்டுரைகள்
ஈழத்து இலக்கியம்– பல்துறை ஆய்வும் அறிமுகமும்– கட்டுரைகள்
நிலவோ நெருப்போ– சிறுகதைத் தொகுப்பு
பொய்கை மலர் –ஆன்மீக பண்பாட்டியல் நாவல்

## ஆசிரியராக இருந்து வெளியிட்ட சிறப்பு மலர்கள்/தொகுப்பு ஏடுகள்

சமூகத் தொண்டன் வெள்ளிவிழா மலர் –1960
இலங்கை அரசின் கலாசாரப் பேரவை – இலக்கிய விழா மலர் –1964
ஆறுமுகநாவலர் மாநாட்டு மலர் –1969
ஆறுமுகநாவலர் 150 வது ஜெயந்தி விழா மலர் –1972
வரதரின் பல்குறிப்பு – Directory in Tamil –1970 –1971
சிங்கள –தமிழ் எழுத்தாளர் மாநாட்டு புதுமை இலக்கிய மலர் –1975
பாரதி நூற்றாண்டு விழா புதுமை இலக்கிய மலர் –1980
நந்தி மணி விழா மலர் –1987
இலக்கியப் பேரரங்கு புதுமை இலக்கிய மலர் –1996



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Souvenir -Salute to gerundev Swami Chin Mayananda -1993
60th B.day Souvenir -Swami Shanthanantha, Published by Col-Shiva Family
Lanka and the Ramayana -1996
Voice of Chinmaya -Quarterly Froul 1994 up to now

## தமிழ் இலக்கியம் சமயம் சார்பான பணிகளுக்காகப் பெற்ற விருதுகள்/ கௌரவங்கள்.

1993– 'இலக்கியக்குரிசில்' பட்டமும் வெண்கலத்திலான பாவை விளக்குப்பரிசிலும், திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளியம்மன் தேவஸ்தானத்தால் அளிக்கப் பெற்றது.

1994– 'தமிழ்மாமணி' நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்ற வைரவிழாவின் போது அளிக்கப்பெற்றது.

1994 – 'தமிழ் ஒளி' கலாசார அமைச்சின் இந்து சமய அலுவல்கள் திணைக்கள கலை விழாவில் வழங்கப்பட்டது.

1962 – சென்னையில் நடந்த அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் இலங்கைப் பிரதிநிதியாகப் பங்கேற்று உரையாற்றியமை

1995– மார்ச் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற உலகசேக்கிழார் பெரு விழாவில் காஞ்சிப்பெரியார் முன்னிலையில், 'ஈழத்தில் பெரிய புராணம்' என்னும் தலைப்பில் ஆய்வுரை ஆற்றியமைக்கான பாராட்டு

## சமய/இலக்கிய மன்றங்களில் வகித்த/வகிக்கும் பொறுப்புகள்

அமைப்புச் செயலாளர் – நாவலர் சிலை நாட்டு விழா, நாவலர் மகாநாடு, தேசபவனி – 1969
பிரதிச் செயலாளர்– ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை 1969–1982
தலைவர் : நீதியசரர் வீ.சிவசுப்பிரமணியம்
பொதுச் செயலாளர் – ம.ஸ்ரீகாந்தா, Permanent Secretary Ministry of Lands
பொதுச்செயலாளர்– க்ஷ சபை – 1982ல் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்புச் செயலாளர் –நாவலர் நூற்றாண்டு விழா– 1982

அமைப்புச் செயலாளர்– சோமசுந்தரப்புலவர் விழா– 1963

அமைப்புச் செயலாளர்– பாரதியாரின் ஞானகுரு அருளம்பலம் சுவாமிகள் நினைவுச் சின்ன திறப்பு விழாவும் 3 நாள் இலக்கிய விழாவும் – 1964

அமைப்புச் செயலாளர்– சிங்கள –தமிழ் எழுத்தாளர் மாநாடு –1974 B.M.I.C.H.

அமைப்புச் செயலாளர் – பாரதி நூற்றாண்டு விழா தேசிய சபை –1980 (தலைவர் : நீதியரசர் H.W. தம்பையா)

தேசிய அமைப்பாளர் – இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் –1964ல் இருந்து

செயலாளர் – தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகம்

பிரதிப் பொதுச் செயலாளர்– இலங்கை சின்மய மிஷன் 1993ல் இருந்து

அமைப்பாளர் –கொழும்புக் கம்பன் கழகம்

அமைப்புச் செயலாளர் – ஈழத்து இலக்கியப் பேரரங்கு– ஜுன் 1996



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Swami Tejomayananda

*Dear Shri Somakanthan,*

*Hari om!*

Hearty Congratulations on editing the lovely Souvenir on " Lanka and the Ramayana" People in India are all praise for it. As per our discussion you may send copies of the Same to C.C.M.T. We will be able to sell them over here. I was pleased to see your work on the local news- Letter. My Visit to SriLanka makes me confident of our missions Success over there. Thank you all for that.

I enjoyed my Bhiksha at your place. Greetings to all at home

Love,
Yours,
*Tejomayananda*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60

# கதையை வளர்க்கும் கலைத்திறமை

**த**மிழ் சிறுகதை வளர்ச்சிக்கும் வளத்துக்கும் ஈழத்து எழுத்தாளர்களும் கணிசமான அளவிற் பங்காற்றியிருக்கிறார்கள்.

குறிப்பிடத் தகுந்த ஈழத்துச் சிறுகதைப் படைப்பாளிகளில் ஈழத்துச் சோமுவும் ஒருவர். 1960 களில் இலக்கியத்தரமான சிறுகதைகள் எழுதி ரசிகர்களின் கவனத்தை ஈர்த்த ஈழத்துச் சோமு (என்.சோமகாந்தன்) பின்னர் இலக்கிய, கலாசார ஆய்வுக் கட்டுரைகள் எழுதுவதிலே கவனம் செலுத்தியுள்ளார்.

ஈழத்துச் சோமுவின் சிறுகதைப் படைப்பாற்றலுக்கு, 'நிலவோ நெருப்போ?' முதலிய பதினொரு கதைகளைக் கொண்ட இத் தொகுப்பு நல்ல சான்று ஆகும்.

சமூக உணர்வோடு, மக்களின் பழக்க வழக்கங்களையும் வாழ்க்கைத் துடிப்புகளையும், நல்ல சொற்சித்திரங்களாக்கியிருக்கிறார் அவர். அவருடைய தனித்த நோக்கும், கற்பனை வீச்சும், அழகான உரை நடையும் அவரது சிறுகதைகளுக்கு வலிவும் வனப்பும் சேர்க்கின்றன.

ஈழத்துச் சோமு கதையின் ஆரம்பத்தை எடுப்பாக அமைத்து, வாசகனை ஈர்த்து, மேலே படித்துச் செல்லும் ஆவலைத் தூண்டி, கதையை வளர்க்கும் கலைத் திறமையைப் பெற்றிருக்கிறார்.

“புகையிலைக் கன்றுகள் கொய்யா இலைக் கூட்டை உடைத்துக் கொண்டு கூவத்தொடங்குகிற சேவல் அளவுக்கு வளர்ந்து, தலையை வெளியே எட்டிப் பார்க்கிற காலம்.” (நிலவோ நெருப்போ?)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு, எடுத்துக் கொண்ட கதையின் பொருளுக்கு ஏற்றவாறு சூழ்நிலை, காலம், பாத்திரம் முதலியவற்றை நேர்த்தியாக வர்ணித்து கதைக்கு உயிரும் உணர்வும் ஊட்டுகிறார் அவர்.

ஈழத்துச் சோமு பாத்திரங்களை அறிமுகம் செய்யும் நேர்த்தி, அக்கதை மாந்தரை வாசகரின் கண்முன் கொண்டு வந்து நிறுத்திவிடும் தன்மையில் இருக்கிறது. உதாரணத்துக்கு தரகர் முருகேச பிள்ளை விவரிக்கப்படுவதைக் குறிப்பிடலாம்.

"குழைக்கடை கூடிவிட்டால் முருகேசபிள்ளைதான் அங்கு முடிசூடா மன்னர்– கடந்த ஏழு வருடங்களாக இவர் தான் அங்கு தரகர்......"

"ஜன இரைச்சலை அமுக்கிக் கிழித்துக் கொண்டு கேட்கக் கூடிய சிம்மக்குரல். வேட்டைத் திருவிழாக் குதிரை வாகனம் போல மேலேழுந்து எட்டிப் பார்க்கிற மூக்கு. சொந்த ஊர்ப் புகையிலையில் சுட்டிய 'சுத்தை' ப் பிரத்தியேகமாகச் சப்பிச்சப்பி உமிழ்ந்தபடி இருக்கும் வாய். குறைவெறியில் கொதித்து மின்னிக்கொண்டிருக்கும் பெரிய கண்கள். வாய்க்கால் ஓரமாக அடர்ந்து வளரும் அறுகம் புல்லுப் போல உரோமம் படர்ந்த நெஞ்சுக்கட்டு. பாணி பிடித்த புகையிலையின் கருமைகாட்டும் உடம்பு. கள்ளு முட்டி போல வயிறு. சற்றுத்தாழக்கட்டிய புழுதி மண்டிய வேட்டி மேலே வரிந்து சுற்றிய சவுக்கம். இவற்றோடு நெற்றியில் சந்தனப் பொட்டும் அணிந்திருந்தாரென்றால், அன்று நிச்சயமாக ஒரு வெள்ளிக்கிழமையாக இருக்கும். இவர் தான் தரகர் முருகேசபிள்ளை." (நிலவோ நெருப்போ?).

புகையிலை பயிரிடுவோர்–குழை விற்கும் பெண்கள் பற்றிய கதை என்பதால், சூழ்நிலை வர்ணனை மற்றும் பிற விவரிப்புகளிலும் புகையிலை தொடர்பான விஷயங்களைத் திறமையாக எடுத்தாளப்பட்டிருப்பது, ரசிக்கக் கூடியதாக இருக்கிறது.

"இளமையென்ற செழுந்தரையில் காலூன்றி" வாளிப்பாக வளர்ந்து எழில் நிறைந்து, முறுவலித்து நிற்கும் பொன்னியைக் கண்டபோது, முருகேச பிள்ளைக்கு, மதாளித்து வளர்ந்து, முறுக்கேறி, பாணி பிடித்த இலைகளைப் பரப்பிக் கொண்டு திறம் விளைச்சலுக்கு உதாரணமாகத் திகழ்ந்து நிற்கும் புகையிலைச் செடிதான் தோற்றங் காட்டிற்று".

இப்படி ஒவ்வொரு கதையிலிருந்தும் எடுத்துக்காட்டுகள் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியைப் பிரிந்து, தனித்து வசிக்கும் ஒரு கணவனின் மனச்சூட்டை– உணர்ச்சிக் கொதிப்பை விவரிக்கும் 'மனப்பாம்பு' கதையும், பாத்திரத்தின் மனநிலைக்கும் கதைப் போக்கிற்கும் பொருத்தமான ஆரம்பத்தையும் வர்ணிப்புகளையும் கொண்டிருக்கிறது. இவை கதைக்கு நயமும், கலை அழகும் சேர்ப்பதோடு, வாசக ரசனைக்கு விருந்தாகவும் விளங்குகின்றன.

உவமைகள் உருவகங்களைக் கையாள்வதிலும் ஈழத்துச் சோமு புதுநோக்கையும் கற்பனைத் திறத்தையும் காட்டுகிறார்.

'கள் வெறி கொண்டவர்களின் கண்களைப் போல, பொழுது மயங்கி, மங்கலாகி, இருண்டு கிடந்தது.'

'நேரம் என்ற ஆணழகன் நடுநிசி மங்கையை இறுகத் தழுவி, உடற்சூட்டில் இதங்கண்டு கொண்டிருந்தான்.'

'அண்டாவில் அபிஷேகத்துக்கென அடியார்களாலே பக்தி சிரத்தையுடன் நிறைக்கப்பட்ட பாலில் கள்ளத்தனமாக விழுந்து வயிறு புடைக்கக் குடித்துப் புரண்டு அதில் குளித்தெழுந்து, அசுத்தப்படுத்தி விட்டு வெளியே வருகிற மூஞ்சூறைக் காணும்போது ஏற்படுகிற அசூயையும் ஆத்திரமும் போல அவரைக் கண்டதும் குருக்களுக்குப் பிறந்தது.''

இவ்வகை நயங்கள் பலப்பல உள்ளன. கதைகளுக்காக அவர் எடுத்துக் கொண்ட விஷயங்களும் பலவகைப்பட்டவையாகும்.

குழைகள் விற்றுப் பசியைத் தணிக்கப்பாடுபடும் பெண்களை, தனது காம இச்சைக்கு பலியிடத் தவிக்கும் தரகரின் போக்கும், வறுமையால் வாடினாலும் தன்மானத்துடன் ஒற்றுமையாக எதிர்த்து நின்று அவரைத் தோல்விகாணச் செய்யும் பெண்களின் வலிமையும் (நிலவோ நெருப்போ?)–

உண்மையாக உழைக்கும் ஒருவனைச் சந்தேகித்து, அத்தொழிலாளியின் பாச உணர்வுகளைக் கேவலமாக மதிப்பிடும் பணத்திமிர் கொண்ட ஒருவரின் போக்கும், அவரது சிரமங்களுக்காக அனுதாபப்பட்டு அவருக்கு உதவும் ஒரு மீனவத் தொழிலாளியின் உளப்பண்பும் (காசுக்காக அல்ல)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயம், நேர்மை, பக்தி உணர்வோடு உழைக்கும் குருக்கள் வஞ்சிக்கப்படுவதும், அவரையும், ஊரில் அவருக்கு இருக்கிற மதிப்பையும் பயன்படுத்தி, கோயிலுக்கென நிதி வசூலித்து, வசூலான பெருந் தொகையைத் தன் சுயலாபங்களுக்கு உபயோகித்துக் கொள்கிற கோயிற் பரிபாலகரின் ஆணவ இயல்பும் (ஆகுதி)–

இப்படி வாழ்க்கை, சமூகம், மனிதர்கள் எழுப்புகிற பிரச்சினைகள், குழப்பங்கள், முரண்பாடுகள், உணர்ச்சி நாடகங்களை ஈழத்துச் சோமு தன் கதைகளில் எடுத்தாண்டிருக்கிறார்.

இத்தொகுப்பைப் படிக்கும் வாசகர்கள் அவரது எழுத்தாற்றலை நன்கு அறிந்துகொள்ள முடியும். ஈழத்துச் சோமுவுக்கு என் வாழ்த்துக்கள்.

வல்லிக்கண்ணன்

(" நிலவோ நெருப்போ ?" நூலின் அணிந்துரையில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60

# தனித்துவமான புதுமையான நாவல்

சமூக நாவல்களை, சமகால வரலாற்று நாவல்கள் எனக் கலாநிதி கைலாசபதி அவர்கள் ''தமிழ் நாவல் இலக்கியம்'' என்ற தன் நூலில் வகைப்படுத்திக் கூறியுள்ளார். மேலும்... 'வரலாறு என்பது சமூக ஆய்வை ஆதாரமாகக் கொண்டது. ஒரு குறிப்பிட்ட காலத்துச் சமூக நிலைமையின் பிரத்தியேகமான பண்புகளுக்கமையப் பாத்திரங்களைக் கண்டறிந்து படைப்பவனே சமூக நாவல் ஆக்குகிறான். அதாவது சமகால வரலாற்றின் தன்மைகள் சிலவற்றிற்கு இலக்கிய வடிவங் கொடுக்கிறான்....' என்றும் விரித்து விளக்கியுள்ளார்.

''விடிவெள்ளி பூத்தது'' என்ற இந்நாவல் ஈழத்தின் அண்மைக்கால வரலாற்றைச் சார்ந்து, பாத்திரங்களைக் கண்டறிந்து ஆக்கப்பட்டுள்ளது. சமகால வரலாறு என்று கூறும்போது நாவல் குறிப்பிடும் காலகட்டத்து அரசியல், பொருளாதாரம் மட்டுமல்ல, குடும்ப அமைப்பு, மதம், கல்வி, கலாசாரம் முதலிய கருத்தியல்களையும் வெளிக்கொணர வேண்டும். இந்நாவல் இந்நூற்றாண்டின் நடுப்பகுதிக் காலகட்டத்திலே இலங்கையின் நிகழ்வுகளை மேலே கூறியவாறு கதை மாந்தர் மூலம் விரித்து நிற்கும்.

ஈழத்தில் இந்துசமயக் கோவில்களுடன் கட்டுப்பட்டு நிற்கும் சிறுபான்மையினரான பிராமண சமூகத்தினரின் வாழ்க்கையை ஆழமாகவும் அகலமாகவும் ஆசிரியர் இந்நாவலிலே சித்திரித்துள்ளார். தமிழ்நாட்டைப் போன்ற பிராமணீயம் அங்கு கிடையாது. கோவில்கள் பெரும் பாலும் சாதியில் உயர்வாகக் கருதப்படும் வேளாள சமூகத்தவரது ஆதிக்கத்தில் உள்ளன. அக்கோவில்களுடன் பிணைக்கப்பட்டு ஒதுக்கப்பட்டவர்களாக மட்டுமல்ல, ஒடுக்கப்பட்டவர்களாகவும் அவர்கள் வாழவேண்டிய நிலைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். 'பொற்சிறையில் வாழும் புனிதர்கள்' என அவர்களின் வாழ்நிலையை ஈழத்து எழுத்தாளர், குறுநாவல் ஒன்று எழுதியுள்ளார். ஆயினும் இந்நாவல் பிராமண வகுப்பைச் சார்ந்த ஆசிரியரால் எழுதப்பட்டதால் யதார்த்த நாவலாக உயிர் பெற்று நிலைக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர் சாதியினர் பொருளாதாரப் பலமற்ற பிராமண சமூகத்தவரது திருமணம், மதம் உட்பட்ட சமூக வாழ்வு, ஆசார முறைகளையும் கட்டுப்படுத்துவதைப் படிப்பவரின் மனிதாபிமான உணர்வுகளைத் தட்டிவிடும் வகையில் ஆசிரியர் எழுதியுள்ளார்.

பிராமணச் சிறுவனான சரவணன் ஆசாரம் என்ற பெயரில் விளையாட்டு, கல்வி, சமூகப் பழக்க வழக்கங்கள் அனைத்திலும் தனிமனித சுதந்திரமின்றி ஒதுக்கப்படுகிறான். இச்சமூகத்தவருக்குக் கிட்டாத சமத்துவம், சமூக நீதியை நாவலாசிரியர் படிப்பவர் நெஞ்சைத்தொடும் வண்ணம் கதையோடு இணைத்துள்ளார். சமூகத்தில் உயர் சாதி என ஒடுக்கப்பட்ட வைத்தீஸ்வரக் குருக்கள் கிராமத்தின் ஒதுக்கப்பட்ட சாதியினருடன் ஆபத்து வேளையில் ஒன்றிணைவது நாவலின் தனிச் சிறப்பம்சமாகும்.

யாழ்ப்பாண வடமராட்சிப் பகுதியில் 1956–இல் நடந்த தேர்தலில் கம்யூனிஸ்டு அபேட்சகர் வெற்றி பெறுவது, 1958–இல் இலங்கையில் நடைபெற்ற முதலாவது இனக்கலவரப் பாதிப்பு, அகதிகளாக, கொழும்பிலிருந்த தமிழர்கள் யாழ்ப்பணத்திற்குக் கப்பலில் அனுப்பப்படுவது, களுத்துறைக் கோவில் சார்ந்த பிராமணக் குருக்கள் கூடச் சிங்களக் காடையரால் எரிக்கப்படுவது ஆகிய வரலாற்று நிகழ்வுகள் யாவும் கதையோடு பின்னப்பட்டுள்ளன.

இந்நாவலாசிரியர் சோமகாந்தன் அவர்கள் ஈழத்துச் சோமு என இலங்கை முற்போக்கு எழுத்தாளரிடையே நன்கு அறிமுகமானவர். சென்ற 40 ஆண்டுகளாகச் சிறு கதைகள், கட்டுரைகள், விமர்சனங்கள் எழுதுவதன் மூலம் நிலைபெற்றவர். "நிலவோ நெருப்போ?" என்ற சிறுகதைத் தொகுதியும் "ஈழத்து இலக்கியம், பல்துறை நோக்கு" என்ற விமர்சன நூலும் தமிழ்நாட்டிலே ஏற்கனவே வெளி வந்துள்ளன. தனித்துவமான புதுமையான இந்நாவல் மூலம் அவர் மேலும் இங்கும் அறிமுகமாகிறார்.

செ. கணேசலிங்கன்

*('விடிவெள்ளி பூத்தது' நாவலின் அறிமுகவுரையில்...)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழமையிலிருந்து பொங்கும் புதுமை

**திரு**.நா.சோமகாந்தன், நவீன படைப்பிலக்கியத்துறையில் நீண்ட காலமாக ஈடுபாடு கொண்டு, சிறுகதைகள், நாவல்கள், இலக்கியம் சார்ந்த கட்டுரைகள் என்பவற்றை எழுதிவருபவர். அவருடைய ஆக்கங்களைப் படித்துப்பார்த்தால், அவர் குறிக்கோள்களுடன் எழுதுகின்ற படைப்பாளி என்னும் உண்மை புலனாகும். நவீன இலக்கியத்துறைகளில் பரிசோதனைகளைச் செய்து, வரவேற்புப் பெற்ற ஈழத்துச் சோமு என்னும் புனைபெயரைக் கொண்ட நா. சோமகாந்தன் ''பொய்கை மலர்'' என்ற தலைப்பில் இப்பொழுது நூல் ஒன்றினை வழங்கியுள்ளார்.

''பொய்கை மலர்'' இந்நூலுக்கு மிகப் பொருத்தமான பெயர். நூலின் பொருள் முழுவதுமே நூலின் தலைப்பினுள் அடக்கம். சரவணப் பொய்கையிற் பூத்த தாமரை மலர்களிலே தவழ்ந்த முருகன் பெருமையை இந்நூல் மிகச் சிறப்பாக உணர்த்துகிறது. முருகனைப் பற்றிய இந்நூலை எழுதியிருப்பது தமக்கு ஒரு புதிய அனுபவம் என்று நூலாசிரியர் தமது முகவுரையிற் குறிப்பிட்டுள்ளமை நோக்கற்பாலது.

ஆமாம், நவீன இலக்கியத்துறையோடு ஈடுபாடு கொண்டிருந்த ஒருவர், சமய மரபுகளோடு இணைந்து கொள்ளும் போது, அது ஒரு புதிய அனுபவமாகத்தான் இருக்கும். சமய மரபுகளையும், ஆன்மிக உணர்வுகளையும் வெளிப்படுத்தி எழுதும் போதும், நூலாசிரியர், புதுமை இலக்கியங்களோடு தாம் கொண்டுள்ள நெருக்கமான உறவின் தாக்கத்திலிருந்து விடுபட முடியாமையினாலோ என்னவோ, அணுகு முறைகளில் அதன் தாக்கத்தைக் காண முடிகிறது.

''பொய்கை மலரின்'' முதற் பாகம், செல்வச் சந்நிதியிலிருந்து கதிர்காமம் வரை என்னும் தலைப்பில் அமைகிறது. ஒரு குறுநாவல் போன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளது. வாசிக்கும் போது இதனை உணரமுடிகின்றது. முதல் அத்தியாயம் எவ்வாறு தொடங்குகின்றது என்பதைப் பார்ப்போம்.

"சூரியக் குழந்தை மெது மெதுவாகத் தலையைத் தூக்கி, அச்சத்தோடு எட்டிப் பார்த்தது"

"இன்னும் சேவல்கள் கூவவில்லை. பறவைகள் குரல் எழுப்பவில்லை. மலர் மொட்டுக்கள் இதழ் விரிக்க வில்லை."

"சில மணி நேரத்துக்கு முன் நடந்த அனர்த்தத்தினால் மொட்டுக்கள் பொசுங்கிக் கருகி உதிர்ந்து விட்டன. பறவைகள் ஊமைகளாகி விட்டன. முறிந்து விழுந்த மரங்கள், தெறித்துப் பறந்த கிளைகள், இடிந்து விழுந்து தீ சுவாலித்து எரியும் கட்டிடங்கள்.... " இப்படியான வர்ணனையுடன் முதலாம் அத்தியாயம் தொடங்குகிறது. ஏதோ நடக்கக் கூடாதது ஒன்று நடந்து விட்டது. இயல்புக்கு மாறான நிகழ்வு ஒன்று நிகழ்ந்து விட்டது...... அது என்ன, என்ன, என்ற ஆவல் வாசகனின் உள்ளத்தில் மேலிட, தொடர்ந்தும் வாசிக்க வேண்டும் என்னும் ஆர்வம் பீறிட்டு எழுகிறது. கதாசிரியரின் உத்தி, இங்கும் கையாளப்பட்டுள்ளது. சுவை குன்றாமல் எடுத்துச் சொல்ல வேண்டிய விஷயத்தை நகர்த்திச் செல்லும் அழகிய பாங்கு தொடக்கத்தில் மாத்திரமல்ல, ஆங்காங்கு பல இடங்களிலும் நூலின் கண் தென்படுகின்றது.

சமகால அவல நிகழ்வினை, மண்வாசனை மிளிர, கதையாகச் சொல்லி இறுதியில் நூலாசிரியர் எடுத்துக் கொண்ட பொருளை அறிமுகம் செய்கிறார்.

"குழந்தைகளை அணைத்தபடி அவள் வாய் முருக நாமத்தைச் செபித்தபடியே இருந்தது.

..... ஆகாயத்தில் ஒரு கழுகு, சிறகு ஒடிந்து.... நொண்டியாகி... தள்ளாடித் தள்ளாடி.... தட்டுத் தடுமாறி.... புகையைக் கக்கிக் கொண்டு..... தெற்குப் புறமாக உள்ள உப்பங்களியில் குப்புற வீழ்ந்த அந்தக் காட்சியை நிலத்திற் படுத்துக் கிடந்தபடி அந்த ஊரவர்கள் கண்டனர்.......

முருகனுக்கு அரோஹரா!
கந்தனுக்கு அரோஹரா!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சத்தைப் போக்கி, ஆபத்துக்களை விரட்டுபவன் முருகன் என்பதில், தமிழ்மக்கள் காலங்காலமாக நம்பிக்கையும் பக்தியும் கொண்டிருந்தனர். அந்த அசைக்க முடியாத நம்பிக்கையும், ஆணித்தரமான பக்தியும் அவர்களை வாழ்வித்தன. இன்றும் வாழ்வித்து வருகின்றன. இந்த முதல் அத்தியாயத்தில் விபரிக்கப்பட்ட சம்பவம் அதற்குச் சான்று. இப்படி எத்தனையோ தெய்வீக அனுபவங்கள் முன்னைய தலைமுறையினரின் வாழ்விலும் இடம் பெற்றுள்ளன. ஆனால், அவை தற்காலத்தில் மறக்கப்பட்டு வருகின்றன. இன்றைய சந்ததியினருக்கும், எதிர்காலச் சந்ததியினராகிய இன்றைய சிறார்களுக்கும் இத்தகைய தெய்வீக அனுபவங்கள், அற்புதங்கள் பற்றி எதுவுமே தெரிவதில்லை. அவற்றைப் பற்றிச் சொல்லுவாரும் இல்லை என்ற சூழ்நிலையில், காலத்தின் தேவையை உணர்ந்து கற்றோரும் மற்றோரும் உவந்தேற்கும் வகையில் சோமகாந்தன் இந்நூலை ஆக்கித் தந்துள்ளார்.

உள்ளன்போடு ஒருகால் அழைத்தால், இருக்கும் இடம் தேடி, நொடிப்பொழுதில் வந்து இடர் தீர்க்கும் கந்தன் தமிழர்களின் குலதெய்வம். கலியுக வரதனாகிய முருகனை நம்பினோர் கைவிடப்படமாட்டார் என்பது உறுதி. தமிழ் கூறும் நல்லுலகில் மட்டுமன்றி, அதற்கு அப்பாலும் முருகனுக்கு ஆலயங்கள் மிகப் பலவாக உண்டு. இலங்கையிலும் வடக்கே செல்வச்சந்நிதியிலிருந்து, தெற்கே கதிர்காமம் வரை, காணப்படுகின்ற முருகன் ஆலயங்கள் ஏராளம். அவை ஒவ்வொன்றிற்கும் மகிமை பொருந்திய தலவரலாறுகள் உண்டு. அவற்றை யெல்லாம் தேடி, ஆராய்ந்து இரத்தினச் சுருக்கமாக ஆனால் வேண்டிய சரித்திரக் குறிப்புகள், சாசனக் சான்றுகள், மற்றும் தகவல்கள் என்பவற்றுடன் தெளிவாக, இந்த நூலில் விளக்கியுள்ளார். அவருடைய இம் முயற்சி பெரிதும் பாராட்டப்பட வேண்டியது. மறந்தும், மறைந்தும் போகின்ற மரபுகளை, பாரம்பரியங்களை, அவற்றை உள்ளடக்கிய கலாசார வரலாறுகளை மீட்டு இளஞ் சந்ததியினருக்கு வழங்குவது மிகவும் மகத்தான பணியாகும்.

பழமையிலிருந்துதான் புதுமை பொங்கியெழ வேண்டும். புதுமையில் நாட்டமுள்ளவர்கள் பழமையைப் பேணுதல் அவசியம். பழமை யென்பது பிற்போக்கு அன்று; அது பின்னோக்கு. இந்த நிலைப்பாட்டினை நூலாசிரியர் நன்கு உணர்ந்துள்ளார். அதனாலேதான், முற்போக்கு எண்ணங் கொண்ட சோமகாந்தன், ''முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருள்'' ஆகவும் ''பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியன்'' ஆகவும் விளங்குகின்ற முருகப் பெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறையும் இலங்கைத் திருத்தலங்களுக்கு நம்மையும் யாத்திரையாக அழைத்துச் சென்று, அவனைத் தரிசிக்க வைப்பதுடன், அவனின் பெருமையையும் உணர்த்தி, வாழ்க்கையிலே பழமையில் பற்று வைக்கும், பண்பையும், புதுமையிலே கருத்தைச் செலுத்த வேண்டிய அவசியத்தையும் காண்பிக்கிறார். பழமையான ஒன்றை ஆராய்ந்து, விளக்கமும் திறமையும் பெறுவது புதுமை. பழமையைக் கரு என்றும் புதுமையை அதன் உரு என்றும் கொள்ளலாம். இந்த அடிப்படையில் நோக்கும் போது, ''பொய்கை மலர்'' என்ற நூல் மூலம், சோமகாந்தன் பின்னோக்கும், முற்போக்கும்– பழமையும், புதுமையும் இணைந்து வளரக் கூடியன என்பதை எடுத்துக் காட்டிவிட்டார்.

யாழ்ப்பாணத்திலுள்ள புகழ்பூத்த முருகன் ஆலயங்களாக விளங்குகின்ற செல்வச் சந்நிதி, மாவிட்டபுரம், நல்லூர் ஆகியன தொடர்பான வரலாற்று உண்மைகள், அவற்றின் மூர்த்தி, தலம் தீர்த்தம் சிறப்புகள், நடைபெறுகின்ற நித்திய நைமித்திய பூசைகள், மகோற்சவங்கள், நிகழ்ந்த அற்புதங்கள் முதலியனபற்றிய விவரணங்கள், விளக்கங்கள் யாவும் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இடையிடையே கர்ண பரம்பரைக் கதைகள் வாசிப்போருக்குச் சுவை சேர்க்கின்றன. அத்தோடு பக்தி பரவசத்தையும் ஊட்டுகின்றன. கதிர்காமத்தையும் செல்வச் சந்நிதியையும் பிணைக்கின்ற நிகழ்ச்சிகள், மாவிட்டபுரம், கீரிமலை தலங்களில் நிகழ்ந்த அற்புதச் சம்பவங்கள், மற்றும் நல்லூரின் பண்டைய சரித்திரப் பெருமைகள், அங்கு வாழ்ந்த சித்தர்களின் அருட்டிறன்கள், நாவலர் பெருமானின் சைவப்பணிகள் யாவும் அழகாகச் சொல்லப்பட்டுள்ளன.

கதிர்காம யாத்திரை, வட இலங்கையிலிருந்து கிழக்கிலங்கைக் கரையோரமாகத் தென்னிலங்கை வரை புனிதம், பக்தி, பரவசம், வைராக்கியம் நிறைந்த பாதயாத்திரையாகப் பெருமளவு அடியார்களினால் மேற்கொள்ளப்பட்டமை, அவர்கள் பெற்ற தெய்வீக வாழ்க்கை அனுபவங்கள், அவர்கள் வழிநெடுகிலும் தரிசித்த விநாயகர், முருகன், சிவன், அம்பாள் ஆலயங்கள், அவற்றின் திருவருட் சிறப்புக்கள், சரித்திரப் பெருமைகள், அன்னதானம், தாகசாந்தி செய்த மக்களின் விருந்தோம்பற் பண்புகள் மற்றும் இன்னோரன்ன விஷயங்கள் தற்காலத்தவர்களுக்குத் தெரியாத விஷயங்கள் ஆகிவிட்டன. கதிர்காமப் பாதயாத்திரை இலங்கையின் வடக்கு, கிழக்கு, தெற்குப் பகுதி மக்களிடையே ஐக்கியம், புரிந்துணர்வு, ஒருமைப்பாடு என்பனவற்றை ஏற்படுத்தி அமைதியையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதானத்தையும் நிலவச் செய்தது என்பதை இன்று யார் சிந்தித்துப் பார்க்கிறார்கள்? பக்தி, பயத்தோடு செய்ய வேண்டிய தலயாத்திரைகள் தற்போது களியாட்டம், உல்லாசப் பயணங்கள் ஆக நடைபெறுகின்றன. இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டு, தெரிந்தவற்றைத் தெரியாதவர்களிடம் அறியச் செய்து பண்பாட்டு மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் தலையாய நோக்கத்துடன் இந்நூலை ஆசிரியர் எழுதியுள்ளார். தமிழ் மக்களின் வாழ்க்கையிலும் பண்பாட்டிலும் அதிமுக்கிய இடம் வகிப்பது ஆலயங்கள்.

"கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" எனும் மகுட வாசகம் தமிழ் மக்களிடையே மிகத் தொன்மையான காலத்திலேயே தோன்றி விட்டது.

நம் நாட்டிற் போர்த்துக்கேய, ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் கோயில்கள் இடிக்கப்பட்டுத் தரை மட்டமாக்கப்பட்டன. ஆயினும் மக்கள் மனங்களில் இருந்து தெய்வ பக்தியையோ, ஆசார ஒழுக்கங்களையோ அகற்ற முடியவில்லை. ஆனால் இன்றைய நிலை முற்றிலும் மாறுபட்டது. மக்கள் மனங்களிலிருந்துமே அவை அகன்று கொண்டிருக்கின்றன. இந்த நேரத்திலே தான் "பொய்கை மலர்" போன்ற நூற்கள் நமக்குத் தேவைப்படுகின்றன.

கதிர்காமப் பாதயாத்திரைப் பாதைகளில் ஊர்கள் தோறும், காடுகளிலும், காணப்படுகின்ற கோயில்கள் பற்றியெல்லாம் இந்நூலில் விளக்கமாகக் குறிப்புகள் உள்ளன. முறிகண்டி, வன்னி விளாங்குளம், புதூர், புளியம் பொக்கனை நாகதம்பிரான், ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர், முள்ளியவளை காட்டுவிநாயகர், வற்றாப்பளை அம்பாள், ஊற்றங்கரை விநாயகர், கொக்கிளாய் கற்பக விநாயகர், தென்னை மரவாடி, குச்சவெளி சித்தி விநாயகர், நிலாவெளி விநாயகர், உப்பு வெளிப் பிள்ளையார், திருக்கோணேஸ்வரம், திருகோணமலை பத்திரகாளியம்மன், வில்லூன்றிக் கந்தசுவாமி, தம்பலகமம் ஆதிகோணநாயகர், கன்னியாய், கிண்ணியா, கிளிவெட்டி, வெருகல் சித்திர வேலாயுதசுவாமி, வாகரை, மாங்கேணி, சித்தாண்டி முருகன், மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர், மண்டூர் முருகன், தாந்தாமலை, கொக்கட்டிச் சோலை, திருக்கோயில், சங்குமண் கண்டி, பொத்துவில் உகந்தை முருகன், கதிர்காமம். அப்பப்பா இத்தனை கோயில்களா! நம் நாட்டில் என்று வியப்புறத் தோன்றுகிறது. இக் கோயில்கள் பற்றிய மூர்த்தி, தலம், தீர்த்தம், வரலாறு முதலியவற்றை தருகிறார். இயற்கைக் காட்சி வர்ணனைகள் நூலாசிரியருக்குக் கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த கலையாயிற்றே. இடையிடையே பொருத்தமான தெய்வீகப் பாடல்கள். மேலும், நூலாசிரியர் முருகன் பற்றிய பத்துத் தனிக் கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன. அனைத்திலும் அற்புதமான விடயங்கள். நமக்கு அவை தெளிவைத் தருகின்றன. குறிப்பாக மாணவர்களும் இளைஞர்களும் நிச்சயம் படிக்க வேண்டிய நூல். எல்லோருக்கும் பயன்தருவதாக, ' பொய்கை மலர்' விளங்குகின்றது என்பதைக் குறிப்பிட்டுத்தான் ஆக வேண்டும்

குமாரசாமி சோமசுந்தரம்

(இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத் தமிழ்ச் சேவை, "கலைப் பூங்கா" நிகழ்ச்சியில் ஒலிபரப்பான மதிப்புரையின் சில பகுதிகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரியதொரு வாய்ப்பு

இலக்கிய வரலாற்றின் தளம் பொதுவாகவே விரிவானது. ஈழத்து இலக்கியத்தின் பல்வேறு துறைகளையும் ஆசிரியர் நமக்கு ஓரளவு விரிவாகவே உணர்த்த முற்பட்டுள்ளார். பாராட்டத்தக்க முயற்சி. நம்நாட்டின் பல்வேறு மொழிகளின் இலக்கியம் பற்றி நாம் அறிந்துகொள்ள முற்படாத நிலையில், அண்டை நாடான ஈழத்தின் இலக்கிய வரலாறு பற்றி அறிய இந்நூலின் மூலம் அரியதொரு வாய்ப்புக் கிட்டியுள்ளது எனலாம். கிட்டத்தட்ட எல்லா இந்திய மொழிகளிலுமே வசன நடையில் எழுதப்பட்ட நூல்கள் ஆங்கிலேயரின் வருகைக்குப் பின், கிறிஸ்துவ சமயப் பிரச்சாரம், ஆங்கிலக்கல்வியின் பிரச்சாரம், அச்சு வசதிகள் ஏற்பட்ட பின்னர்தான் பரவலாக எழுதப்பட்டுள்ளன. தமிழின் முதல் நாவல் 'அசன் பேயின் சரித்திரம்' என்பதுடன், 1895ல் எழுதப்பட்ட 'மோகனாங்கி' என்னும் நாவல்தான், தமிழ்நாட்டின் நாயக்கராட்சி காலத்து வரலாற்றுச் சம்பவங்களை வைத்து எழுதப்பட்ட முதலாவது சரித்திர நாவல் என்பதும் இந்நூலின் மூலம் தெரிய வருகிறது.

தமிழ் நாட்டில் , தமிழிலக்கியத்தில் ஏற்பட்ட மறுமலர்ச்சியையொட்டி 1940களில் இலங்கையிலும் புதிய அலை எழுந்தது என்கிறார் ஆசிரியர். தமிழ் நாட்டில் இலக்கியத்தில் ஏற்பட்ட எந்தவொரு மாற்றமும், புதுமையும் ஈழத்து எழுத்திலும் பிரதிபலித்துள்ளது. எழுத்தாளர்களின் சமூகப்பார்வை விரிந்து, பல சிறந்த நாவல்கள் வெளியாகியுள்ளன. சிறுகதை வளர்ச்சியிலும், மண்ணுக்கே உரித்தான பேச்சு மொழியைப் பயன்படுத்தியதும், 1950களின் பிற்பகுதியில் எழுந்துள்ளது. முற்போக்கு எழுத்தாளர்களின் படைப்பில் மண்வாசனையும், தனித்துவமும், ஈழத்து மரபும் வெளிப்பட்டது. இதே போல் ஆசிரியர் இலங்கையில் புதுக் கவிதையின் பாரம்பரியமும், அது தமிழகத்தில் இலக்கிய அங்கீகாரம் பெற்ற பின்னே மலர்ந்தது என்கிறார்.

இச்சிறு நூலில் நா. சோமகாந்தன் ஈழத்து இலக்கியத்தின் பல்துறைகளைப் பற்றி மட்டுமல்ல, இலக்கியத்தின் வளர்ச்சிக்கு, பத்திரிகை, வானொலி, திரைப்படங்கள் ஆகியவற்றின் பங்களிப்பையும் விவரிக்கின்றார். எழுத்தாளர் சங்கத்தின் பணிகள், தொலைக்காட்சியின் பங்களிப்பு பற்றியும் நாம் அறிகின்றோம். ஈழத்து இலக்கியம் பற்றி நமக்கு அறிமுகப்படுத்துகிறது இந்நூல்.

*சரஸ்வதி ராம்நாத்*

*("ஈழத்து இலக்கியம் : பல்துறை நோக்கு" நூல் பற்றி 1993 ஆகஸ்ட் 'சுபமங்களா'வில்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60

# ஓர் உணர்வுக் கோலம்

இது அறிமுகமல்ல. ஏனென்றால் சோமகாந்தன் அறிமுகப் படுத்தப்பட வேண்டிய கட்டத்தை என்றோ கடந்தவர். எனவே இது அவர் பற்றிய ஒரு உணர்வுக் கோலமே.

நண்பர் ஈழத்துச் சோமு பற்றி ஓரிரு பக்கங்களில் எழுதுவது என்பது சற்றுச் சிரமமான காரியந் தான். எனது மிக மிக நெருங்கிய, நீண்டகால நண்பர் என்பதனால் அவரைப் பற்றி எண்ணும்போது இலக்கிய உலகின் பல நிகழ்வுகள் மனவெளியில் மொய்க்கின்றன.

இலக்கியம், இலக்கிய இயக்கம், பொது வாழ்வுப் பணிகள் என்று விரிந்து செல்லும் காட்சிப் பரப்புகளுக்கு அப்பால், இவற்றிற்குரித்தான அழுத்தமும் முதன்மையும் அளிக்கப்படும் அதேவேளையில், மனித உணர்வுகளின், மனித உறவுகளின் பவ்வியமான வெளிப்பாடுகளே என் ஆத்மாவை அவரிடம் ஆகர்ஷித்து நிற்கின்றன.

சோமு பழகுவதற்கு இனியவர். பக்குவமான பண்பாளர். காரியசமர்த்தர். பல்வேறுவகை மனிதர்களை ஏககாலத்திலே கவர்வதிலும், அவர்களைப் பொதுநோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதிலும் படு சூரர்.

சோமு முற்போக்கான சிந்தனையாளர். ஏற்றத் தாழ்வுகள், சுரண்டல்கள், ஒடுக்குமுறைகள் மண்டிய நடப்பிலுள்ள கொடிய சமுதாயத்தை மாற்றியமைத்திட வேண்டும் என்று விரும்புபவர். மனித தர்மங்கள், மனிதப் பெறுமானங்கள், மனித கௌரவங்கள் மதித்துப் பேணப்படும் ஒரு புதிய சமுதாயம், சமதர்ம சமுதாயம் உருவாக வேண்டும் என்று விழைபவர்.

இதற்கான போராட்டத்திலே தன்னை முழுமையாகவும், வெளிப்படையாகவும் இணைத்துக் கொள்ளாவிட்டாலும் இதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலட்சியங்களுக்காகத் தனது எழுத்தாற்றலைப் பிரக்ஞை பூர்வமாகப் பயன்படுத்துகிறவர். இவரது முதலாவது சிறுகதைத் தொகுப்பான 'ஆகுதி' இதற்கு அத்தாட்சி பகர்கிறது. அதில் வரும் பல பாத்திரங்கள், கதைப் பின்னல்கள், கதைக் களங்கள் எல்லாமே சாதாரண மக்களை, அவர்களின் வாழ்வை, வாழ்க்கைச் சிக்கல்களை, வாழ்க்கைப் போராட்டங்களை, ஏக்கங்களை, எதிர்பார்ப்புகளை உணர்வு பூர்வமாகச் சித்திரிக்கின்றன.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் சிருஷ்டி வீச்சுடன் இலக்கியம் படைக்க ஆரம்பித்துள்ள சோமு பல தரமான, கனமான, கவனிப்புக்குரிய கதைகளை ஆக்கி வருகிறார், 'தேக்கம்' பொதுவாக ஏற்படுத்துகிற தொய்வை, தளர்வை, வீழ்ச்சியைத் தவிர்த்துக் கூடுதல் முதிர்வையும், ஆழத்தையும், சிரேஷ்ட நுணுக்கத் தேர்ச்சியையும் வெளிக்காட்டி வருவது அவரது உள்ளார்ந்த படைப்புத் திறனுக்குக் கட்டியங் கூறுகிறது.

பல முற்போக்கு இலக்கியப் படைப்பாளிகளிடம் துரதிர்ஷ்ட வசமாகக் காணப்படும் வரட்சி, வக்கிரத்தனம், ஒரு குறிப்பிட்ட கதைக் கருக்களுக்குள் மட்டும் நின்று குண்டுச்சட்டிக்குள் குதிரைச் சவாரி செய்யும் மட்டுப்படல், உள்ளடக்கத்தில் மட்டும் அதீத அக்கறை காட்டிவிட்டு உருவ நேர்த்தியை உதாசீனப்படுத்தும் தவறான இலக்கியப் போக்கு ஆகிய குறைபாடுகளைத் தவிர்த்துக் கொள்வதன் மூலம் ஒரு இலக்கிய நிறைவைச் சோமு வெளிக்காட்டுகிறார். கதையின் தேவையை, கதாபாத்திரத்தின் பண்பைப் பொறுத்துக் கனதியையும், கனல் தெறிக்கும் நடையையும் கனகச்சிதமாகக் கையாண்ட போதிலும், தனது செழுமையையும், இலக்கிய நயத்தையும், மொழி லாவகத்தையும் வெளிக்காட்டுகிறார்.

சோமு மனிதனையும் வாழ்வையும் கலை நேர்த்தியுடன் சித்திரித்த போதிலும், ஆழமான மனித நேயத்துடன் பிரதி பலித்த போதிலும் சமூக முரண்பாடுகள், சமுதாயத்தின் வளர்ச்சி நியதிகள், சமூகப் போராட்ட சாஸ்திரம் பற்றிய முழுமையான பிரக்ஞையின்மையினால் சமூக உள்ளடக்கத்தில் பூரணத்துவத்தைப் பெறாத பலவீனத்தைக் கொண்டிருப்பதைப் பார்க்கத் தவற முடியாதுதான்.

படைப்பாளி சோமுவின் செயற்களம் விஸ்தாரமானது.

'சுதந்திரன்', 'கலைச்செல்வி' ஆகியவற்றின் மூலம் இலக்கிய உலகிற் கால்கோள் கொண்ட சோமு எழுத்தாளர்களை அறிமுகப்படுத்துவது, காரசாரமான இலக்கியக் குறிப்புகளை எழுதுவது போன்ற துவக்கச் 'செயற்பாடு' களுக்குப் பின்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது பாரியார் பத்மாவைத் தொடர்ந்து, இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் அணியிற் சேர்ந்து கொண்டார்.

சோமு இ. மு. எ. ச. செயற்பாட்டில் இணைந்த பின்னர் இ. மு. எ. ச. ஒரு செயல் வேகத்தைப் பெற்றது என்பது மனம் கொள்ளத்தக்கது. இ. மு. எ. ச. நடத்திய இடையறாத, எண்ணிலடங்கா இலக்கியக் கூட்டங்கள், கருத்தரங்குகள், எழுத்தாளர் சந்திப்புக்கள், இலக்கிய விழாக்கள், போராட்டங்கள் ஆகியவற்றில் சோமு முனைப்புடன் செயற்பட்டார். நாவலர் விழா, யாழ்ப்பாணத்தில் நடந்த இ. மு. எ. சவின் இரண்டாவது மாநாடு (இதற்கான தயாரிப்பு ஒரு பெரும் வெகுஜன இயக்கமாகவே அமைந்தது) 1975ல் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தமிழ், சிங்கள எழுத்தாளர் தேசிய ஒருமைப்பாட்டு மாநாடு, 1982–83ல் இ. மு.எ. ச. நாடு தழுவிய ரீதியில் நடத்திய மகாகவி பாரதி நூற்றாண்டு விழா, 1987ல் குண்டுகளுக்கும், ஷெல் அடிகளுக்கும் துப்பாக்கிகளுக்கும் மத்தியில் இ. மு. எ. ச. நடத்திய தேசிய இனப் பிரச்சினையில் இ. மு. எ. ச. நிலைப்பாட்டை விளக்கிய எழுத்தாளர் மாநாடு உட்பட இ. மு. எ. ச.வின் பிரதான செயற்பாடுகளிலெல்லாம் சோமு அதிசயிக்கத்தக்க அமைப்பாற்றலையும், வியக்கத்தகு செயற்றிறனையும் வெளிக்காட்டி இவற்றின் வெற்றிக்கான மூலவர்களுள் முக்கியமானவராகத் திகழ்ந்திருக்கிறார்.

இ. மு. எ. ச. அகக் காரணங்களால் தனது செயற்பாட்டை ஒரு 'இடைக்காலத்திற்கு நிறுத்தி வைத்த காலப்பகுதியில் நாவலரை ஈழத்து தேசியத்தின் தோற்று புருஷராக நிறுவும் இ.மு.எ.சவின் திட்டத்தைப் பல்வேறு பொது அமைப்புகளின் மூலம் சோமு வெகு விசாலிப்பாக நிறைவேற்றியமையில் அவரது 'கர்மவீர'த் தன்மை பளிச்சிட்டது.

மொத்தத்தில் அறுபதுகளில் இ. மு. எ. சவுடன் இணைந்தது முதல் அதன் எண்ணற்ற செயற்பாடுகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதில் சோமு பக்கபலமாக நின்று செயற்பட்ட பாங்கினை நான் மனநிறைவுடனும் நன்றியுணர்வுடனும் நினைத்து நினைத்துப் பூரிக்கிறேன்.

சோமு 'முன்னுரிமை' களைத் தெரிவு செய்வதில் சில சமயங்களில் தவறு விடுவது உண்டு. இயங்குவதிலான தனது பேராற்றலை அவர் 'தேவையற்ற' வற்றிலும் விரயம் செய்வது உண்டு. இவ்வாறு 'வீணடிப்பது' கூட இவரது செயல் வேகத்தின், ஓயாது செயற்படும் இயல்பின் வெளிப்பாடே. 'எழுதுவது என்பது எனக்கு உயிர் வாழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூச்சு விடுவது போன்றது' என்று பிரபல பிரெஞ்சு எழுத்தாளர் றோமெயின் றோலந்து கூறினார். ஆனால் சோமுவுக்குச் 'செயலாற்றுவது என்பது உயிர்வாழ மூச்சுவிடுவது போன்றது'.

இயக்க ஆற்றலையும் படைப்புத் திறனையும் ஒருங்கே தன்னுள்ளே கொண்டுள்ள சோமு ஒரு அற்புதமான மனிதர், ஆத்மா முழுவதையும் ஆட்கொள்ளும் இனிய மனிதர். இலக்கிய உலகம் என்றென்றும் நன்றியுணர்வுடன் இருக்கும் அளவுக்குத் தனது பல தரப்பட்ட ஆளுமையின் முத்திரையை இலக்கிய உலகிலும் அதற்கப்பாலும் ஆழமாகப் பதித்தவர். அவர் நீடூழி, நீடூழி வாழ்க ! அவரது இலக்கியப் பணி ஓங்குக.

பிரேம்ஜி

*("மல்லிகை" 1989 ஏப்ரல் இதழ் அட்டைப்பட அறிமுகம் பற்றி....)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 60

# ஒரு மதிப்பு மடல்

*பேரன்பும் பெருமதிப்பும் கொண்ட என் அருமைச் சோமு !*

நெடுங்காலம் ! நம் சகவாசம், ஒரு முப்பது வருடங்களுக்கு மேல் இருக்குமா? இருக்கும் ! அவ்வப்போது, எடுபட்ட உறவும், விடுபட்ட துறவுமாகச் சின்னஞ்சிறு இடைவெளிகள் ஏற்பட்டிருக்கலாம். ஆனாலும் நெடுங்காலம் !

கடைசியாக எப்பொழுது கண்டோம்? 1983 ஆடிக் கலவரத்தில், உடல் ஆடிப் பொருள் ஆடி உயிர் ஆடிப் போனவர்களிலிருந்து விலகி, உணர்வு ஆடிப் போகாமல் நீங்கள் திரும்பிய சமயம், உங்கள் உயிர்த் துணைவி பத்மாவுடன் எங்கள் வீட்டுக்கு வந்தீர்கள்.

உபசரணைகள் முடிந்த பிறகு, அச்சுத்தாள் நறுக்குகள் ஒட்டிய ஒரு கச்சிதக் கோவையை மாடியிலிருந்து எடுத்து வந்து உங்கள் கைகளிற் கொடுத்தேன். விரித்துப் பார்த்தீர்கள். வியப்பால் உங்கள் விழிகளும் விரிந்தன.

''செல்வா ! இத்தனை காலம் இதை இப்படிப் பாதுகாத்து வைத்தீர்களா?'' என்று கசிந்தீர்கள்.

அந்தக் கோவையில் இருந்தவை உங்கள் சிறுகதைப் படைப்புக்கள். நீங்கள் தொகுத்து வைத்து, பத்துக்கும் மேற்பட்ட ஆண்டுகளுக்கு முன் என்னிடம் கொடுத்த உங்கள் சிறுகதைகள் மட்டுமல்ல, வாலிப எதேச்சையில் நீங்கள் பத்திரப்படுத்தத் தவறி, என் சேகரத்தில் நான் பவித்திரம் செய்த இலக்கியக் களஞ்சியத்தில், நீங்கள் கொடுத்தவற்றோடு நான் சேகரித்து வைத்தவற்றையும் சேர்த்து, அந்தச் சிறுகதைகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவையை உங்களிடம் கொடுத்த போது, உங்களுக்கு மறுபடி ஒரு 'உயிர்ப்பு' வந்திருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

ஏனெனில் கோவையைக் கையில் வாங்கிய போது உங்கள் கசிவில் ஒரு சிலிர்ப்பும் இருந்ததை அவதானித்தேன்.

"பத்தாண்டுகளுக்கு மேல் என் ஆத்மா படுத்துக் கிடந்ததா?" என்பது போன்ற ஒரு சிலிர்ப்பு !

ஆனாலும் நீங்கள் அப்போது ஒன்றும் பேசவில்லை. கோவையையும் பெற்று, ஆசாரமாக விடையும் பெற்றுப் போய் விட்டீர்கள்.

* * *

ஏறத்தாழ மூன்றாண்டுகள் கழிந்து விட்டன.

மனைவியின் நாமமும் உங்கள் பெயரும் உறழ்ந்து, இருவரின் குணம் குறிகளும் ஏந்திய உங்கள் குமாரன் பத்மகாந்தன், காலைக் கதிரவனைக் கூட்டிக் கொண்டு, கையில் அதே கோவையுடன் வருகிறான்.

"மாமா !" என்று சிரிக்கிறான்.

சுமார் இருபதாண்டுகளுக்கு முன் அவனைப் பாலகனாய்த் தூக்கி என் செல்வ மாளிகையில் கட்டிலில் கிடத்திக் கட்டிக் கொஞ்சிச் 'செல்லம்' ஆடிய சிருங்கார நினைவுகள் நெஞ்சில் நிழலாடுகின்றன.

கோவையைக் கொடுக்கிறான். வாங்கித் திறக்கிறேன். முதல் இதழ் உங்கள் கடிதம், படிக்கிறேன்.

"செல்வா!..... இக் கடிதமும் கோவையும் வியப்பை ஏற்படுத்தும். எனது 11 சிறுகதைகளைக் கொண்ட தொகுதி அச்சாகிக் கொண்டிருக்கிறது...... இந்நூலுக்குரிய மதிப்புரையை, பத்தாண்டுகளுக்கு முன் நான் வாக்களித்தது போல, பல்கலை வேந்தரே எழுத வேண்டும் என்பது என் தாழ்மையான கோரிக்கை. என் எழுத்துப் பணியை, எடுத்தியம்பும் சிறந்த முன்னுரை ஒன்றை, விரைவிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களிடமிருந்து எதிர் பார்க்கிறேன். நீளத்தைப் பற்றிக் கவலைப்படாமல் எழுதுங்கள். ஆனால் நேரத்துக்கு அது என்னைச் சேர வேண்டும்......''

கடிதத்தைத் தொடர்ந்து படித்துப் படித்துச் செல்ல என் உள்ளத்திற் கிளர்ச்சி! மொந்தைப் பழைய கள்ளைப் போலப் பழைய ஞாபகங்கள் போதையூட்டுகின்றன.

நினைவுகள் சாவதில்லை என்பது நிசம் தான் !

* * *

பத்தாண்டுகள் படுத்தெழும்பிய சிலிர்ப்பும், மூன்றாண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட உயிர்ப்பும் ஊட்டிய எழுச்சியால், உங்கள் சிறுகதைகள் இன்னும் சில தினங்களில் நூலுருவம் பெறுகின்றன என்ற செய்தி இனிய நினைவுகளைத் தூண்டி விடுகிறது.....

1950–ம் ஆண்டைத் தொடர்ந்து, இலக்கிய இராமனாக நான் பத்திரிகைக் காட்டிற் கழித்த பதினான்கு வருட வனவாசத்தை நினைத்துப் பார்க்கிறேன். 'சுதந்திரனில்' உதவி ஆசிரியராக நான் ஆரம்பத்திற் பணியாற்றிய அந்தச் சில மாதங்களிலும், பின்னர் 'தினகரன்', அதன் பின் 'வீரகேசரி' ஞாயிறு இதழ்களின் ஆசிரியராகப் பணியாற்றிய எஞ்சிய வருடங்களிலும், ஈழத்தின் இன்றைய முன்னணி எழுத்தாளர்களில் வெகு பலரின் கையெழுத்துகளும் எனக்கு மிகவும் பரிச்சயப்பட்டிருந்தன.

கருணையூர்ச் சோமு என்னும் ஓர் இளைஞனின் ஆக்கங்கள் அந்தத் தொடக்க காலத்தில் 'மாணவர் அரங்கத்து' க்கு வரும். தமிழ் நடையிலும் மல்லிகை வாசனை இழையும். கரணவாய்என்ற ஊரின் பெயர் 'கருணையூர்' என்று மாறியதற்குக் காரணம் குறிப்பது போல, உருக்கமான எழுத்தின் உள்ளடக்கமும் சோமகிரணனாகிய நிலவின் குளுமை காட்டும்.....

அதே சம காலத்திலே தமிழரசு மேடைகளிற் கனல் பறத்தியும் பத்திரிகைகளில் அனல் பரப்பியும் வந்த யுவதி பத்மா பஞ்சநதேஸ்வரன். அந்தப் பத்மாவைக் கரம் பிடித்து, இலக்கித் தம்பதிக் கோலத்தில் எழுத்தாளர் சோமகாந்தன் என்பவர் நேரிற் சந்தித்த போது தான், 'நதி மூலம் ரிஷி மூலம்' பிடிபட்டது. பிறகு ஏற்பட்டு இன்றும் நீடிக்கும் நெருங்கிய தொடர்பில், சோமகாந்தனின் வேறும் 'கன' விஷயங்களும் பிடிபட்டன.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பிடிப்பின் காரணமாகவே உங்களுக்கு இந்த மதிப்பு மடலை எழுதுவதாக எண்ணி விடாதீர்கள். உங்கள் எழுத்தின் கனத்துக்கு என் தலைக்கனம் ஒன்றும் குறைந்ததன்று என்பது உங்களுக்குத் தெரியும்.

சண்டைப் பட்டிருக்கிறோமே ! இலக்கியச் சண்டைகள் ! முற்போக்கு எழுத்தாளர்கள் என்று கூடி நின்ற எங்கள் பலரின் நதி மூலம் ரிஷி மூலம் எல்லாம் தி. மு. க.– தமிழரசுப் பண்ணைகளே என்பது வாஸ்தவம் தான். ஆனால் அந்த இளமைக்கொதிப்பும், குதிப்பும் நிதானப்பட்டு, கலைத் துறைப் பார்வைகள் தெளிவுற்று, மக்கள் இலக்கியப் படைப்பாளிகள் என்ற கூட்டமைப்புக்குள் பிற்காலத்திலும் நாம் மல்லுக்கட்டி வந்திருக்றோம். நோக்கில் ஒன்றுபட்ட போதிலும் அணுகு முறைகளில் அபிப்பிராய வேற்றுமைகள் கண்டிருக்கிறோம். நீங்களும் நானும் வெவ்வேறு கன்னைகளில் நின்றிருக்கிறோம்.

பல சம்பவங்களை நினைத்துப் பார்க்கிறேன். சதாசிவம் காலத்து சாகித்திய விழா எதிர்ப்புக் காட்டிய நாமே, பின்னொரு காலத்தில் மண்டல மலரை வெளியிட்டோம். நீங்களே அதன் ஆசிரியராக முன்னின்று தொகுத்து அச்சேற்றி வெளியிட்டீர்கள். பாரதியின் ஞானகுருவான யாழ்ப்பாணச் சுவாமி அருளம்பல ஞானதேசிகருக்கு, பருத்தித்துறை வியாபாரிமூலையிற் கோயில் கட்டியதும், நாத்திகம் பேசிய நாங்களே ! ஆறுமுக நாவலருக்குப் பெருவிழா எடுத்து, கொழும்பிலிருந்து நல்லூருக்குச் சிலை ஊர்வலம் நடத்தி, பாரிய மலர் தொகுத்து வெளியிட்டு அவரைத் தேசிய வீரராக்கியதும் நாங்களே ! இலங்கையின் முதலாவது தமிழ் எழுத்தாளர் மகாநாடு தொடக்கம் முற்போக்கு எழுத்தாளர் மகாநாடு, ஜனநாயக எழுத்தாளர் மகாநாடு வரை, எங்கள் சாதனைப் பட்டியல்கள் நீளம் ! சான்றோர் இலக்கிய – இழிசினர் இலக்கியப் போராட்டம், முற்போக்கு இலக்கிய – நற்போக்கு இலக்கியத் தகராறு, 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி' நூல் பற்றிய கண்டனத் தர்க்கங்கள் என்று எத்தனை எத்தனை மோதல்கள் ! .......கொடி பிடிக்க வேண்டியவர்கள், பேனா பிடித்திருக்கிறார்கள். பேனா பிடிக்க வேண்டியவர்கள் தடியெடுத்துச் சண்டப் பிரசண்டம் செய்திருக்கிறார்கள். காலத்தை மாற்றக் கிளம்பிய நாங்கள், கால மாற்றங்களுக்கு இசைந்தும் இயங்கியிருக்கிறோம்.

சரி எது, பிழை எது என்று தீர்ப்புக் காண நான் இவற்றைக் குறிப்பிடவில்லை. அதைக் காலம் தான் நிர்ணயிக்க வேண்டும். ஆனால், பின்னோக்காகப் பார்க்கிற போது, ஏதோ ஒவ்வொரு விதத்தில், இலங்கையின் இரண்டொரு இலக்கியத் தலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறை மீது இந்த நடவடிக்கைகள் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. என்பது தெரிகிறது.

இவற்றில் எல்லாம் உங்களுடைய தனிப்பட்ட பங்களிப்பும் கணிசமாக இருந்ததென்பதை நினைவோடு நிறுத்தாமல், பதிவு செய்து வைப்பது நியாயம் என்று கருதி இவற்றைக் குறிப்பிட்டேன். வெறும் பிடிப்பின் காரணமாக அன்று.

'கலைச் செல்வி' மாசிகைக் காலம் முதல் இன்றைய 'ஈழமுரசு' காலம் வரை, சுமார் முப்பத்தைந்து வருடங்களில், உங்களின் படைப்பாற்றல் எப்படி வளர்ந்திருக்கிறது என்பதை எடை போடலாம் என்று உங்கள் சிறு கதைகளை ஒரு பிடி பிடித்தேன்.

உங்கள் இலக்கியத் தேன் கூட்டிலிருந்து கிடைக்கும் ஒரு பிடித் தேன் மட்டுமே இந்தத் தொகுதி என்று சொல்லத் தோன்றுகிறது.

ஏனென்றால், 1959 முதல் 1969 வரை, பத்தாண்டு காலத்தில் நீங்கள் எழுதிய ஒன்பது சிறுகதைகள் மட்டுமே பதினொரு சிறுகதைகள் கொண்ட இந்தத் தொகுதியில் அடக்கம். மீதி இரண்டில், இந்த ஆண்டு நீங்கள் எழுதி மூன்று மாதங்களுக்கு முன் 'மல்லிகை'யிற் பிரசுரமான 'ஆகுதி', மற்றும் இம்மாத 'மல்லிகை'யில் வெளியாகிய 'விடியல்' ஆகிய இரண்டு சிறுகதைகளும் மட்டுமே விதிவிலக்கு . குறித்த பத்தாண்டு கால அறுவடை மட்டுமே 35 வருடச் சாகுபடியின் தகைமைக்குச் சான்று பகர முடியுமா? 1986ம் ஆண்டின் 'ஆகுதி'யும் கூட இன்று தேவைப்படாமற் போய்விட்ட தேர்தற் காற்றின் பழைய, நிலையும் நினைப்பும் பற்றியே அசை போடும் சிறுகதையாகத் தோன்றுகிறது. 'விடியல்' சமீபத்தில் எழுதியதா? சிறிது மாற்றம் தான். ஆனாலும் அதுவும் இன்றைய யதார்த்தச் சூழ்நிலைக்கு ஒப்பியதாகத் தெரியவில்லை. கால நிர்ணயம் செய்தால் இந்த இரண்டு சிறு கதைகளும் கூட, 1959–1969 என்ற பத்தாண்டு காலப்பகைப்புலம் கொண்டவை தாம்.

எனவே உங்கள் முப்பத்தைந்தாண்டுக்கால முழு மூச்சான இலக்கியத் தேனீத் தேட்டத்தின் மூன்றில் ஒரு பகுதித் தேனையே இந்தத் தொகுப்பில் எங்களுக்குத் தருகின்றீர்கள். போதுமா? போதாது !

ஆனாலும் இந்தப் பிடித் தேனே, ஒரு படித் தேன் கிடைத்தால் எப்படிச் சுவைக்கும் என்பதற்குக் குறி காட்டி விடுகிறது.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நிலவோ நெருப்போ?' என்ற இந்தச் சிறுகதை ஒரு கணம் என்னை உலுக்கி விடுகிறது. என்னுடைய கவித்துவச் சொற் சிலம்படி போல் இருக்கிறதே என்று சிற்சில இடங்களிற் பிரமித்துப் போகிறேன்.

"பொன்னியின் கருங்காலிச் செதுக்குடம்பைக் கவ்விக் கிடக்கும் குறுக்குக் கட்டுக்கு மேலே மொழு மொழுவென்றிருக்கும் வழுக்கு மேனியில் அவர் கண்கள் மேய்கின்றன............ அவள் கன்னத்தில், தோளில், புஜத்தில், இலையான் உட்கார்ந்தால் கூட நழுவி விழுந்துவிடும்".

"பொன்னி குழையை இறக்கு முன்பே தரகர் குழையத் தொடங்கி விடுகிறார்".

"பொன்னிக்கு வெற்றிலைத் தாகம். குறுக்குக்கட்டின் இடுக்கிலிருந்து கொட்டைப் பெட்டியை விரலைச் செலுத்தி எடுத்து விரிக்கிறாள், கொழுந்து வெற்றிலை முருகேச பிள்ளையின் கண்களைக் குத்துகிறது. கிறுக்கேற்றுகிறது."

*    *    *

உங்களுடைய தமிழ் நடையும் கிறுக்கேற்றுகிறது.

சோமு ! உங்களுடைய தமிழ் கொழுந்து !

வெற்றிலைக் கொழுந்தாயும் குழைகிறது.

தீக் கொழுந்தாயும் சுவாலை விடுகிறது !

குளிர் நிலவோ ! சுடு நெருப்போ? ...... இரண்டும் தான்.

சோமன் = நிலவு = குளிர்மை !

காந்தன் = கதிரவன் = சூடு !

சோமகாந்தன் !

பெயருக்குப் பொருத்தமான நடைதான் !

*    *    *

சூடு எங்கேயோ?

அதே கதையிற் சில வரிகள் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முருகேசபிள்ளையின் குதிக்காற் குருதி குபீரென்று சீறிச் சிரசில் அடிக்கிறது."

"அவர் உணர்ச்சிகளும் கட்டவிழ......"

"சீ!... கையை விட......."

"தோளில் நெளிந்த பாம்பை உதறி எறிகிறாள்...."

"தீயைத் தொட்ட கை சுரீரென்று சோர்ந்தது".

"அடுத்து என்ன என்ற தீர்மானம் தோன்றாத இரண்டு கணங்கள் தீய்ந்து அமுங்குகின்றன."

'காசுக்காக அல்ல' என்ற மற்றொரு சிறுகதை.......

"காசையும் சுருட்டிக் கொண்டு கடல் கடந்து வந்து விட்டாற் பிடிக்க முடியாது தப்பி விடலாம் என்று நினைத்தாயோ?"

"வந்ததும் வராததுமாகத் தன் வார்த்தைச் சவுக்கால் இறுக்கிச் சொடுக்கினார்."

* * *

காந்தன் ! உங்கள் சூடு பொல்லாத சூடு தான் !

நீங்கள் இறுக்கிச் சொடுக்கியிருப்பது வார்த்தைச் சவுக்கு மட்டுமன்று, கருத்துச் சவுக்கும் தான் !

நான் உதாரணத்திற்கு எடுத்தாண்ட இரண்டு சிறு கதைகளிற் போலவே, ஏனைய ஒன்பதிலும் சவுக்கைச் சுழற்றி நன்றாகத் தான் விளாசி இருக்கிறீர்கள். வர்க்க பேதங்களால் நாசமுற்றிருக்கும் மனித சமூகத்தின் மனச் சாட்சியைச் சொடுக்கி எழுப்பும் சவுக்கின் 'சுரீர்' ஒலி, ஒவ்வொரு கதையிலும் 'பளிச்சுப் பளிச்' சென்று தொனிக்கிறது.

மாப்பசான் போலவும், மாக்சிம் கோர்க்கி போலவும் முத்தாய்ப்பாகச் சவுக்கைக் கடைசி வரிகளில் அனாயாசமாகக் கொழுவி இழுத்து மடக்கும் அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதி உத்தி வீச்சுமின்னல் எறிப்பாக, அலாதியாக ஒவ்வொரு சிறுகதையிலும் விழுந்திருக்கிறது.

* * *

விழுந்தவர்கள் எழுந்திருக்க வேண்டும். விழுவதெல்லாம்எழுவதற்கே அல்லவா? விழிக்காமல் தூங்கி விட்டால் எழ முடியாது. எழாதவர்களைச் சவுக்கடி கொடுத்தாவது எழுப்பத்தான் வேண்டும். எங்கள் சமூகத்துக்கு உங்களைப் போன்றவர்களின் சவுக்கடிகள் மேன்மேலும் தேவை.

'மனப் பாம்பு' என்ற உங்கள் சிறுகதையில் ''இறந்தவர்களோடு அவர்களின் எண்ணங்களும் இறந்து போவதில்லை'' என்று ஒரு வசனம் எழுதி இருக்கிறீர்கள். அட்சர இலட்சம் பெறும் வார்த்தைகள். விழிப்புறப் போகும் எங்கள் சமுதாயத்தில், உங்கள் சிறுகதைகளின் எண்ணக் கருத்துக்களும்இறக்கப் போவதில்லை.

தொகுதிச் சிறுகதைகள் அனைத்தையும் நான் ஆராய்ந்து எடுத்துக் காட்டுதல் செய்யவில்லை. அவற்றின் சிறப்பை அவையே பேசும். ஆழ்ந்துபடிப்பவர்கள் உணர்வார்கள்.

''நெடுங்காலம்'' என்று இந்த மடல் ஆரம்பித்தேனே ! அந்த நீண்ட நெடுங்காலம், நித்தியமாக உங்கள் படைப்புகள் நிலைக்கட்டும் !

யாழ்ப்பாணம், ஒட்டுமடம் வீதியில், 111 என்று, சோமகர்ப்பனாகிய திருமாலின் நுதலில் ஒளிரும் நாமக் குறியீட்டைத் தாங்கிய இலக்கம் கொண்ட உங்கள் இல்லத்தில், விஷ்ணு பிராட்டியாகிய பத்மாவதியின் கருணையும், பிரம்மன்தேவி கலைமகளின் கடாட்சமும் நிலைக்கட்டும் – நெடுங்காலம் !

அன்பு மறவாத,
*சில்லையூர் செல்வராசன்*
3–10–1986



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60

# "இலக்கிய கர்த்தா மனித நேயத்தை வெளிப்படுத்த வேண்டும்"

(சிங்களப்பத்திரிகைக்கு சோமகாந்தன் அளித்த பேட்டி)

"மனிதநேயம் மிக்க ஒரு இலக்கியகர்த்தா எந்த இனத்தைச் சார்ந்தவராயினும் அவனுடைய சிருஷ்டி எம் மொழியில் அமைந்தாலும், மனித இனத்தின் மகிழ்ச்சியையும், கண்ணீரையும், வேதனைகளையும் உணர்வுகளையும் பிரதிபலிப்பனவாகவே அவனுடைய சிருஷ்டிகள் அமைந்திருக்கும்"–

இவ்வாறு கருத்தைக் கூறியிருப்பவர்கள் வட இலங்கையைச் சேர்ந்த பிரபல எழுத்தாளரும் இலக்கிய கர்த்தாவுமான திரு. என். சோமகாந்தன்.

யாழ்ப்பாணம் கரவெட்டிப்பகுதியிலுள்ள கரணவாய்க்கிராமத்தில் பிறந்த சோமகாந்தன், பிறப்பில் ஒரு பிராமணர். அவருடைய தகப்பனார் அவ்வூரிலுள்ள சிவன் ஆலயத்தில் அர்ச்சகராக விளங்கியவர்.

"எனது தகப்பனார் பண்டைய சாஸ்திர நூல்களின் கருத்துக்களை எமது கிராம மக்களுக்கு எடுத்து விளக்கி வந்தவர். எனது வாழ்வின் விளக்கமாகவும் வழிகாட்டியாகவும் அவரே, விளங்கினார். எனது இலக்கிய வாழ்வில் அவர் பெருந்துணையாக இருந்தார்.அக்காலத்தில் எமது பிரதேசத்தில் சாதி பேதம் பலமாக வேரூன்றி இருந்தது. இதன் காரணமாக மக்கள்– அனுபவித்த துன்பங்கள் கொஞ்சநஞ்சமல்ல. அத்துயரங்களைக்கண்டு என் மனம் வெதும்பியது. துன்பத்துக்கு உள்ளான மக்களை நேயத்துடன் நோக்கினேன். ஆசார மிக்க வைதீக குடும்பத்தைச் சேர்ந்தவன் என்பதால், எனது புரட்சிகரக் கருத்துக்களைச் சொல்வதற்கு ஆரம்பகாலத்தில் சோமசுந்தரன்– கலாமதி என்ற பெயர்களில் எழுதினேன். பண்டைய இலக்கியங்களில் எமது நாடு 'ஈழம்' என்றே கூறப்பட்டுள்ளது. எனவே நான் 'ஈழத்துச்சோமு' என்ற பெயரிலும் ஐம்பதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தசாப்தத்திலிருந்து எழுதி வருகிறேன். அக்காலத்தில் இனப்பிரச்சினை இன்று போல் மோசமாக இருக்கவில்லை" என அவர் தனது கடந்த காலத்தை நினைவு கூர்ந்தார்.

"பாரதியாரால் ஞான குருவாகப் போற்றப்பட்ட யாழ்ப்பாணத்து சுவாமி நமது நாட்டவரே என்பதையும் அவர் பிறந்த இடம் பருத்தித்துறையிலுள்ள அல்வாய்க் கிராமமே என்பதையும் பிரபல எழுத்தாளர் அ.ந.கந்தசாமி ஆராய்ந்து நிலை நிறுத்தினார். அவ்வூரிற் சுவாமி நினைவுச் சின்னத்தை நிறுவுவதற்காக 1963ல் விழா நடைபெற்றது. விழா ஏற்பாட்டுச் செயலாளராக நான் பணியாற்றினேன். அவ்விழாவில் சகோதர சிங்கள எழுத்தாளர்களிற் பலரும் பங்குபற்றினர். இன்றும் சிங்கள– தமிழ் எழுத்தாளர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள் ஒழுங்குசெய்யப்படவேண்டும் எனக் கருதுகிறேன். மறக்க முடியாத மற்றொரு சம்பவத்தையும் சொல்ல விரும்புகிறேன். 1974ல் பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நாம் நடத்திய சிங்கள– தமிழ் எழுத்தாளர் மகாநாடு மிக முக்கியத்துவம் வாய்ந்தது. அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டார நாயக்கா அதில் கலந்து கொண்டார். அத்தகைய மகாநாடு போன்று அதன் பின்னர் நடைபெறவேயில்லை".

"தமிழ் இலக்கியத்தை, செழுமைப்படுத்துவதற்கு நீங்கள் எவ்வாறு பங்களித்துள்ளீர்கள்?" என வினவிய போது, திரு. சோமகாந்தன் பின்வருமாறு கூறினார்.

"சிறுகதை ஆசிரியராக, நாவலாசிரியராக மற்றும் பல இலக்கியத்தரமான மலர்களின் ஆசிரியராக நான் பணி புரிந்துள்ளேன்" கலாசாரப் பேரவை விழா மலர் பாரதி நூற்றாண்டு விழா புதுமை இலக்கிய மலர், நாவலர் ஜெயந்தி விழா மலர்கள் நான் வெளியிட்டவைகளில் குறிப்பிடத்தகுந்தவை. மூத்த எழுத்தாளர் வரதர் வெளியிட்ட 'பலகுறிப்பு' என்ற டைரக்டரியின் இணை ஆசிரியராகவும் இருந்துள்ளேன்". இவர், வரதர் நடத்திய 'புதினம்' வாரப்பத்திரிகையில் 16 வாரங்களாக 'களனி நதி தீரத்திலே' என்றொரு நாவலையும் எழுதியிருக்கிறார். 'ஆகுதி' சிறுகதைத்தொகுதி, "விடிவெள்ளி பூத்தது" நாவல் "ஈழத்து இலக்கியம் பல்துறை நோக்கு", "தத்துவசித்திரம்" முதலிய நூல்களையும் எழுதி அளித்து தமிழ் இலக்கியத்தினை இவர் செழுமைப்படுத்தியுள்ளார். இவரின் சிறுகதைத் தொகுதி தமிழ் நாடு உட்பட வெளி நாடுகளிலும் புகழ்ந்துரைக்கப்பட்டிருக்கிறது. 'விடிவெள்ளி பூத்தது' நாவலில் ஒரு இந்து பூசகர் எதிர் நோக்கும் பிரச்சனைகள் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. இவரின் நூல்கள் கல்விமான்களினதும் சாதாரண வாசகர்களினதும் கவனத்தை ஈர்ந்தவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் இலக்கியம், சமயம், சார்பாக வெளிநாடுகளிலும், மாநாடுகள், விழாக்களிலும் உரைகளாற்றியவர். தமிழ் நாட்டு எழுத்தாளர்களைச் சந்திக்கும் வாய்ப்பு அடிக்கடி இவருக்கு உள்ளதால், தமது நூல்களில் பலவற்றை அங்கே வெளியிட்டு வருகிறார்.

"அண்மையில் நீங்கள் எழுதிய நூல் எது?" எனக் கேட்ட போது,

"நல்லூர்க் கந்தசுவாமி கோயிலிருந்து கதிர்காமம்வரை முற்காலத்தில் பக்தர்கள் எவ்வாறு கால் நடையாக யாத்திரையை மேற்கொண்டனர் என்பதைச் சித்திரித்து 'பொய்கை மலர்' என்றொரு நூல் அண்மையில் வெளியாகியுள்ளது. யாழ் மக்கள் கதிர்காம யாத்திரை ஆரம்பிக்கும் போது புனித தலங்களில் இருந்தே தொடங்குவர். முற்காலத்தில் இன்று போல போக்குவரத்து வசதிகளில்லை. கஷ்டமான யாத்திரை. பயணத்துக்கு மூன்று மாசங்களாவது வேண்டும். யாத்திரை செல்கிற வழிகளிலுள்ள தலங்களைத் தரிசித்துக்கொண்டு செல்வார்கள். இந்நிகழ்ச்சிகளை நினைவூட்டி 'பொய்கை மலரை' எழுதி முடித்தது பெரிய வாய்ப்பு" என அவர் கூறினார்.

முந்திய காலங்களில் எமது சிங்கள மக்களும் கால் நடைமூலமாகவே யாத்திரைகளைச் செய்தார்கள். இதனைப் பிரபல சிங்கள எழுத்தாளரான மார்டின் விக்கிரமசிங்க அவர்கள் அவரின் 'கம்பெரலிய' என்ற நாவலில் விபரித்துள்ளார். அனுராதபுரம் பொலனறுவை முதலிய பிரதேசங்களுக்கும் சிங்கள மக்கள் நடந்து தான் சென்றனர். எனவே சிங்கள வாசகர்களும் 'பொய்கை மலரை' வாசிக்க முடிந்தால் பயனடைவார்கள்...... புத்தர் பகவான் அருளிய ஒரு கூற்று என நினைவுக்கு வருகிறது. "கங்கை, யமுனை, அமராவதி, சரயு, ஆகிய நான்கு மாபெரும் நதிகள் இமய மலையில் ஊற்றெடுத்து, ஒரே கடலில் சங்கமிப்பது போல, புத்தர் பகவானின் சாசனத்தில் பிராமணர், சத்திரியர், வைசிகர், சூத்திரர் ஆகிய அனைவரும் துறவிகளானார்கள். அதுபோல சிங்கள –தமிழ்– ஆங்கில இலக்கியங்கள் இலங்கை இலக்கியத்தைச் செழுமைப்படுத்துகின்றன. சோமகாந்தனின் படைப்புகளும் எமது நாட்டு இலக்கிய வளர்ச்சிக்கு குறிப்பிட்டுக் கூறுமளவு பங்களிப்புச் செய்துள்ளன.

சூரியன் மறைந்து கொண்டிருந்தது. இருள் சூழத்துவங்கிவிட்டது. சகோதர இலக்கிய கர்த்தா அவர்களிடமிருந்து, புறப்படுவதற்கு விடைபெற்றுக் கொண்டபோது புன்முறுவல் பூத்தபடி வழி அனுப்புகின்றார். அப்புன்முறுவல் மனித நேயத்தை வெளிப்படுத்தும் மானிடத்தின் புன்முறுவலாக என் மனதில் தோற்றமளித்தது!

மடுளுகிரிய விஜேரத்தின

*(2.11.95 'சரசவிய' சிங்கள வார இதழில் எழுதியதன் தமிழாக்கம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழாவை முன்னிட்டு, 'வீரகேசரி'க்கு அளித்த பேட்டி

பேட்டி கண்டவர் கே. பி. நடனசிகாமணி.

**இலக்கிய உலகில் ஈடுபடத் தங்களைத் தூண்டியது எது?**

மனிதன் ஒரு சமூகப் பிராணி. நாட்டிலோ சமூகத்திலோ நிகழும் மாற்றங்கள், முக்கிய நிகழ்ச்சிகள் ஏதோ ஒரு வகையில் அவனைப் பாதிப்பதுண்டு. நான் இளம் மாணவனாக இருந்த காலத்திலேயே இந்நாட்டில் தமிழருக்கு எதிரான பாரபட்சம், சிறுபான்மை மக்களின் உரிமை பறிப்பு, தமிழர் பாரம்பரிய நிலங்களில் குடியேற்றத்திட்டம் முதலியவை பட்டவர்த்தனமாகத் தலையெடுத்து விட்டன. சிறுபான்மையினரின் காட்டமான எதிர்ப்புக்களையும் பொருட்படுத்தாமல் சிங்கக் கொடியைத் தேசியக் கொடியாக்கிய போது, என் எதிர்ப்புக் குரலை ஒரு கவிதையாக எழுதிச் சுதந்திரன் பத்திரிகைக்கு அனுப்பினேன். எனது பாடசாலை முகவரியோடு அது வெளிவந்துவிடவே, அரசுக்கு எதிராக எழுதி விட்டேன் என ஆசிரியர்களிற் சிலர் என்னைக் கடிந்தனர். அரசு என்னைத் தண்டித்து அதனால் எனது படிப்பும் எதிர்காலமும் பாழாகி விடுமே என்ற நியாயமான அச்சம் அவர்களுக்கு ஏற்பட்டிருந்தது. அதற்குப் பிறகு நான் கவிதை எழுதவேயில்லை. புனைபெயரில் சிறுகதைகள் எழுதத் துவங்கினேன்.

**இலக்கிய உலகில் உங்களின் முன்னோடிகளாக யார் யாரைக் கொள்கிறீர்கள்? எவ்வகையில் அவர்கள் உங்களைப் பாதித்துள்ளார்கள்?**

எனது தந்தையார் சமஸ்கிருத இலக்கியங்களிலும், தமிழிலுள்ள புராணங்களிலும் புலமை மிக்கவர். இதனால் இரத்தத்தினூடாக மட்டுமல்லாது இளம் வயதில்அவரிடமிருந்து இவற்றைக் கேட்டதனாலும் இலக்கிய ஆர்வம் என்னில் மிகுதியாக ஏற்பட்டிருக்கலாம். இதனைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர, இலக்கியக் குருவாக நான் எவரையும் வரித்துக் கொண்டு எழுதத் துவங்கவில்லை. ஆனால் இளம் மாணவப் பருவத்தில் வாசிக்கக் கிடைத்த தி. மு. க. ஏடுகள், சுதந்திரன் பத்திரிகை, மார்சிம் கோர்க்கியின் 'தாய்' என்னும் நாவல், புதுமைப்பித்தன் போன்றவர்களின் படைப்புகள் என் சிந்தனையைப் புதிய கோணத்திலே திருப்பி விட்டது, உண்மையே.

அக்காலத்தில் யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜத்தினர் 'சமூகத் தொண்டன்' என்ற சிறு ஏட்டை மாதந்தோறும் வெளியிட்டனர். அதன் ஆசிரியராக இருந்த கவிஞர் 'விடிவெள்ளி' க. பே. முத்தையா, முன் அறிமுகமில்லாத என்னை அதற்கு எழுதும்படி கடித மூலமாக அடிக்கடி தூண்டினார். நான் எழுதிய விஷயங்களைப் பாராட்டிக் கடிதம் எழுதி ஊக்கப்படுத்தினார்.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் நான் உயர்வகுப்புப் படித்த காலம், பொற்காலம். அதிபர் தெ. து. ஜெயரத்தினம், புலவர் சிவபாதசுந்தரனார், கவிஞர் கதிரேசர்பிள்ளை, கலையருவி த. சண்முகசுந்தரம் முதலிய இலக்கிய ஜாம்பவான்களின் 'செல்லப் பிள்ளையாக' விளங்கியதாலும், அருமையான நூலக வசதிகளிருந்ததனாலும், என் ஆர்வத்தை மேலும் வளர்க்க முடிந்தது. சுதந்திரன், ஈழகேசரி, தினகரன் என எனது ஆக்கங்களின் பிரசுரக் களங்களும் விரிவடைந்தன. 1955 ல் நான் கொழும்புக்கு வந்ததன் பின்பு, முதுபெரும் பத்திரிகையாளர் எஸ். டி. சிவநாயகம் என் பன்முக ஆற்றல்களைக் காட்ட அக்கறையோடு தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாகக் களம் அமைத்து உதவியதை என்னால் மறக்கவே முடியாது.

**அந்தணர் குடும்பத்தில் வந்த தாங்கள் முற்போக்கு வாதியாக மாறக் காரணமென்ன?**

மன்னராட்சிக் காலத்தில், அவர்களுக்குக் கிளுகிளுப்பு ஊட்டுவதற்காக அரசர்களின் காதலிகளினதோ, மனைவியர்களினதோ இடையையும், தொடையையும், தலைமயிரையும், அழகையும் வர்ணிப்பதிலே புலவர்கள் ஈடுபட்டிருந்தனர். இலக்கியத்தின் இன்றைய ஜனநாயக யுகத்தின் இலக்கு அதுவல்ல. மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்குத் துணையாக இலக்கியம் விளங்க வேண்டும். அடிமைத்தனம், அடக்கு முறை, சுரண்டல், ஏற்றத்தாழ்வு முதலிய கொடுமைகளற்ற கம்பன் கண்ட "எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தி இல்லாரும் உடையாரும் இல்லாத" சமுதாயம் உருவாகுவதற்கு, பாரதிகண்ட "எல்லோரும் ஓர்விலை, எல்லோரும் ஓர் நிறை" என்ற சமத்துவ சமுதாயம் மலர்வதற்கு மேற்கொள்ளப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரயத்தனங்களில் தாமும்ஒரு சக்தியாக விளங்க வேண்டியது கலைஞர்களினதும் எழுத்தாளர்களினதும் கடமை. அந்தக் கருத்தில் நம்பிக்கை கொண்டதனால் முற்போக்கு இயக்கத்தில் என்னைப் பிணைத்துக் கொண்டேன்.

### இம்மாற்றம் உங்கள் தனிவாழ்வில் பாதிப்பை ஏற்படுத்தவில்லையா?

இது என் வளர்ச்சி நிலையே தவிர, மாற்றம் எனக் கூற முடியாது. புழு கூட வளர்ச்சி நிலையிற் கூட்டை உடைத்துக் கொண்டு தான் வெளியே எட்டிப் பார்க்கிறது. ஆரம்பத்தில் நானும் பல எதிர்ப்புகளுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. ஆனால் சலசலப்புக்களைக் கண்டு பின்வாங்கிவிடக் கூடாதென்பது சாதனையாளர்களின் வரலாற்றிலிருந்து நான் கற்றுக் கொண்டது. முற்போக்கு முகாமில் நான் இருப்பதனால், பெரிய பாதிப்பு என நான் கருதக் கூடியளவுக்கு எதுவும் ஏற்படவில்லை.

### முற்போக்குவாதியான தாங்கள் சமயத்தை ஏற்றுக் கொள்கிறீர்களா?

சமயம் என்பது பண்பாட்டின் ஓரம்சமே என்பதை நாம் மறக்கக் கூடாது. தனித்துவமான பண்பாட்டை விலத்திவிட்டு ஓர் இனம் இருக்க முடியாது. எமது சமய ஆலயங்களை மையமாக வைத்தே தமிழ்க் கலைகள், இலக்கியங்கள் வளர்ந்திருப்பது வரலாறு. இறைவன் எல்லோருக்கும் பொதுவானவன், அருள் வழங்குவதில் ஏற்றத்தாழ்வு பார்க்காதவன் என்பதைப் பெரிய புராண நாயன்மார்களின் வாழ்க்கை நிரூபிக்கிறது. குன்றக்குடி அடிகளார் போன்ற புரட்சித் துறவிகளே ஏற்றுக் கொண்ட சமயத்தை நாம் ஏன் நிராகரிக்க வேண்டும்.

### தங்கள் சமூகப் பணி நாடறிந்தது. தாங்கள் முன்னின்று நடத்திய மாபெரும் நாவலர் மாநாடு அனுபவங்களைச் சொல்வீர்களா?

சென்னையில் 1968 ல் நடந்த உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்ற போது அங்கு தமிழறிஞர்களுக்குச் சிலை எடுத்தார்கள். ஆறுமுக நாவலரை மறந்தோ, மறைத்தோ விட்டார்கள். இது இலங்கைத் தமிழரிடையே இங்கு பெரும் மனக் கொதிப்பை ஏற்படுத்தியது. நாவலர் பெருமானுக்கு நமது நாட்டிலே முதலிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலையெடுத்து நாம் கௌரவிக்க வேண்டுமென சமூகப் பிரமுகர்கள் தமது உணர்வுகளை வெளியிட்டனர். இதற்குச் செயல்வடிவம் கொடுக்க அமைக்கப்பட்டதே ஆறுமுகநாவலர் சபை. அதன் தொடக்க வேளையில் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டவர் பேராசிரியர் H. W. தம்பையா. ஆனால் அவர் வெளிநாட்டுத் தூதுவராக நியமிக்கப்பட்டு கனடாவுக்குச் செல்ல வேண்டி ஏற்பட்டதனால் நீதியரசர் வீரபாகு சிவசுப்பிரமணியம் தலைமைப் பதவியை ஏற்றார். பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டவர் புகழ் பெற்ற சிவில் நிர்வாக அதிகாரி ம. ஸ்ரீகாந்தா. அக்காலத்தில் செல்வாக்குமிக்க செனட்டராக இருந்த த. நீதிராஜா மற்றும் மெய்கண்டான் இரத்தினசபாபதி ஆகியோர் பொருளாளர்கள். துணைச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்ட நான் முழு விவகாரங்களினதும் அமைப்புச் செயலாளராக இப்பெரியார்களினால் பொறுப்புகளைச் சுமத்தப்பட்டேன். ஒன்பது மாதங்களில் வெண்கலச்சிலை உருவாக்கப்பட்டது. நானும் நண்பர்கள் பொ. தேவதாசன், அட்சரமூர்த்தி, கே. கே. சுப்பிரமணியம், ஐ. தி. சம்பந்தன், க. இளையதம்பி முதலியோர் அந்தக் குறுகியகாலத்தில் நாடு முழுவதும் இரவுபகலாகப் பயணம் செய்து ஒவ்வொரு நகரத்திலும் கிராமங்களிலும் சிலை நாட்டு விழாவுக்கான முன்னோடிப் பிரச்சாரக் கூட்டங்களிற் பங்கு பற்றினோம். நாடெங்கும் புதிய விழிப்பு ஏற்பட்டது. 1969 ஆனிப் பௌர்ணமி அன்று நல்லூரில்சிலை நாட்டப்படுவதற்கு முன்பதாக 10 நாட்கள் சிலை பவனி விழா கொழும்பிலிருந்து நல்லூர் வரை ஏற்பாடு செய்யப்பட்டது.

சிலைநாட்டுப் பெருவிழாவின் பின்னர் யாழ்ப்பாணம் முற்ற வெளியில் 5 நாட்களுக்கு நாவலர் மாநாடு கலை இலக்கிய நிகழ்ச்சிகளுடன் நடாத்தப்பட்டது. இது ஒரு வரலாற்றுப் பெருவிழா. இதன் அமைப்பு வேலைகளனைத்தையும் சிறப்புற நடாத்திக் கொடுத்தது என் வாழ்வில் மறக்க முடியாதது. இதன் மூலம் நான் பல அனுபவங்களைக் கற்றுக் கொண்டேன். அவ்வேளையில் வெளியிடப் பட்ட நாவலரைப் பற்றிய முதலாவது பாரிய மலராகிய நாவலர் மாநாட்டு மலரை வெளிக் கொணர்வதில் நான் முக்கிய பங்களிப்புச் செய்துள்ளமை அனைவரும் அறிந்ததே. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரை நடாத்தப்பட்ட சிலை பவனியையும் அதனைத் தொடர்ந்து 10 நாட்களுக்கு நடைபெற்ற நாவலர் மாநாட்டு நிகழ்ச்சிகளையும் சினிமாஸ் லிமிடெட்டினர் அப்போது திரைப்படம் ஆக்கினர். அப்படத்திற்குரிய வர்ணனைகள் என்னால் எழுதப்பட்டு எனது குரலிலேயே ஒலிப்பதிவு செய்யப்பட்டது எனக்கு புதிய அனுபவமாகும்.

குருபூசைக்குள் மட்டுமே அடக்கப்பட்டிருந்த நாவலர் பெருமான் நினைவை பேரியக்கமாகக் கட்டியெழுப்ப, பின்னர் எத்தனையோ செயற்பாடுகள்! நாவலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினத்தையொட்டி நாவலர் வாரத்தைப் பிரகடனப்படுத்தி நாடு முழுவதும் பல நிகழ்ச்சிகள் இலக்கியப் போட்டிகள் நடாத்தப்பட்டன. 'நல்லை நாவலர்' என்ற மாதப் பத்திரிகையினைச் சபை ஆரம்பித்தது. அதன் ஆசிரியப் பொறுப்பினையும் யான் ஏற்றுத் திறம்பட நடாத்தினேன். நாவலரின் 150 வது ஜெயந்தி விழாவையொட்டி நடாத்தப்பட்ட சிறுகதை, நாடக, கவிதைப் போட்டிகள் வளர்ச்சியின் மற்றொரு கட்டம். அப்போது என்னை ஆசிரியராகக் கொண்டு வெளியிடப் பெற்ற நாவலர் ஜெயந்தி மலர் நாவலர் பற்றிய புதிய ஆய்வுப் பாதைகளுக்கு வழிகாட்டியதாக ஆய்வாளர்களினால் கருதப்படுகின்றது. பின்பு நாவலர் நூற்றாண்டு விழா........... இப்படிப் பல.

## ஓர் எழுத்தாளரே தங்களின் வாழ்க்கைத் துணையாய் அமைந்தது எப்படி? இலக்கியம் தான் உங்களை இணைத்ததா?

ஐம்பதுகளில் 'சுதந்திரன்' நாடளாவிய ரீதியிற் சிறுகதைப் போட்டியொன்றினை நடத்தியது. போட்டி முடிவு வெளியாகியபோது முதற்பரிசு பத்மாவுக்கு. அப்போது அவரை எனக்குத் தெரியாது. அவரின் புகைப்படமும் பரபரப்பான பேட்டியும் பரிசுக்கதை வெளியாவதற்கு முதல்வாரம் பத்திரிகையில் இடம் பெற்றிருந்தது. பேட்டியில் அவர் கூறியிருந்த கருத்துக்கள் அவரின் தீவிரமான போக்கைப் புலப்படுத்தின. என்னைப் போலக் கருத்துக் கொண்ட ஒரு பெண்ணும் எனது சமூகத்திலிருக்கிறாளே என வியந்து கொண்டேன். அக்காலத்திலே கொழும்பிலிருந்து வெளிவந்த 'உதயம்' இலக்கிய இதழின் ஆண்டுமலரின் பொறுப்பாசிரியப் பணியை நண்பர் இனுவை மூர்த்தி என்னிடம் தந்திருந்தார். அதற்கு ஆக்கம் கோரி நான் கடிதம் அனுப்பிய எழுத்தாளர்களில் பத்மாவும் ஒருவர். உடனே அனுப்பி வைத்தார். ஆனால் ஒருவரை ஒருவர் நேரிலோ கடிதமூலமாகவோ அதுவரை சந்திக்கவில்லை. எழுத்துக்களின் மூலமாக என்னை முன்பே அறிந்திருந்ததாகத் திருமணமான பிறகு பத்மா சொன்னார்.

கவிஞர் 'விடிவெள்ளி' முத்தையா, ஒரு பாடசாலை அதிபர். உண்மையான சமூக சேவையாளர். இனிய பண்பாளர். அவர் கொழும்புக்கு வரும்போது என்னைச் சந்திக்காமற் செல்ல மாட்டார். "தம்பி உங்களுடைய போக்குக்கும் நோக்குக்கும் ஒத்துப் போகக்கூடிய பெண் உங்கள் சமூகத்தில் ஒருத்தி தான் இருக்கிறாள். அது விஷயம் பற்றி நீங்கள் சிந்திக்க வேண்டும்" என ஒரு நாட் கூறினார். இப்போது திருமணத்துக்கு அவசியமில்லை, எனச் சொல்லி அனுப்பி விட்டேன். தனது பாடசாலை நிகழ்ச்சியொன்றுக்கு யாழ்ப்பாணம் வருமாறு எனக்கு எழுதியிருந்தார். போனேன். அதிபரின் அலுவலகத்தில் சில ஆசிரியர்கள், ஆசிரியைகள். இவர்களுள் அழகிய இளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியை ஒருத்தியும் இருந்தார். ஆசிரியர் குழாம் வெளியேறியதும் அந்த இளம் ஆசிரியையும் என்னையும் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்துவிட்டு அர்த்தத்துடன் புன்முறுவல் செய்து கொண்டார். தானே மனக்கணக்குப் போட்டுச் சரியான விடையையும் எழுதிய மாணவர்களின் திருப்தி அவரின் முகத்திலிருந்தது. அடுத்த சில ஆண்டுகளில் எளிமையாகத் திருக்கேதீச்சரப் பெருமான் முன்னிலையில் எமது திருமணம் நடந்தது.

### ஓர் எழுத்தாளர் என்னும் முறையில் உங்கள் துணைவியார்உங்கள்எழுத்துக்களை விமர்சிப்பதுண்டா?

ஆம். ஆனால் நான் சரியானது, பொருத்தமானது என்ற முடிபுக்குப் பிறகே கருத்துக்களை எழுத்தில் வடிப்பதனால், மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுவதில்லை.

### இந்திய, நவீன தமிழ் இலக்கியங்களுடனான ஒப்பீட்டில், ஈழத்து இலக்கியம் பற்றிய தங்கள் கருத்தென்ன?

தமிழ் நாட்டு இலக்கியத்தின் நகலாகவே எமது நாட்டு எழுத்தாளர்கள் எழுதத் துவங்கினார்கள் என்பதை நாம் மறக்கக் கூடாது. இந்த நிலை தவறு. எமது நாட்டு எழுத்தாளர்கள் எமது மக்களின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் சிருஷ்டிகளை அவர்களின் மண்ணின் மணத்தோடு ஆக்க வேண்டும். எமது மண்ணிற் படைக்கப்படும் இலக்கியம் எமது தனித்தன்மையைப் பிரதிபலிக்க வேண்டும் என்ற கருத்துக்கு 1960களிலே தான் தீவிரமான செயலுருவம் அளிக்கப்பட்டது என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். இவ்வாறு ஆக்கப் பெற்றவையே 'ஈழத்து இலக்கியம்' என்ற வரைவிலக்கணத்துக்கு அமையக் கூடியவை. தமிழ் நாட்டு ஆக்க இலக்கிய எழுத்தாளர்களின் சிறந்த கதைகளுக்கு நிகராக நிற்கக்கூடிய சிருஷ்டிகள் சிறுகதைகளாக, சென்ற மூன்று தசாப்தங்களில் இங்கு தோன்றியுள்ளன.

### தமிழ் நாட்டு எழுத்தாளர்களைப் போல ஈழத்து எழுத்தாளர்கள் பெருமளவு வாசகர்களைப் பெறாதது ஏன்?

அங்கு பிரசுரகளம், பிரசாரபலம், விரிந்த வாசகர் பரப்பு நமது நாட்டிலும் பார்க்கக் கூடுதலாக உள்ளது. ஆனால் நமது நாடு சிறியது. தமிழ் பேசுவோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுபான்மையினர். அரசியல் ரீதியாக நாம் மேலை நாட்டினரின் ஆதிபத்தியத்தின் கீழ் பல காலம் இருந்தது போல, இப்போது பேரினவாத ஆதிக்கத்துள் ஆட்பட்டிருக்கிறோம் என்பது ஒருபுறமிருக்க, தமிழ்நாட்டு கலாசார இலக்கிய ஆக்கிரமிப்பின் கீழும் பலகாலமாக இருந்து வருகிறோம். இந்தப் பிரதிபலிப்பிலிருந்து எமது நாட்டு வாசர்கள் முற்று முழுதாக விடுபடவில்லை. தமிழ்நாட்டின் இலக்கிய விற்பனைச் சந்தை என்ற நிலை மாறவில்லை. அங்கிருந்து நல்ல நூல்கள் இறக்குமதியாகுவதில் ஆட்சேபமில்லை. ஆனால் ஜனரஞ்சகம் என்ற போர்வையில் படையெடுத்து வரும் சஞ்சிகைகள் இலக்கியமா வளர்க்கின்றன? இவற்றின் வாசகர் பரப்பு அகலமானது தான். அங்குள்ள நல்ல எழுத்தாளர்களின் படைப்புக்கள் கூட 1000 பிரதிகளுக்கு மேல் அச்சிடப்படுவதில்லை என்பதை ஒப்பிடும் போது, எமது எழுத்தாளர்களுக்கு உள்ள வாசகர் பரப்பு குறைந்ததல்ல. தவிர, எமது நூல்களை அங்கு இறக்குமதி செய்து விற்பனை செய்ய முடியாத கட்டுப்பாடு இருப்பதாகவும் கூறப்படுகின்றது. இதற்கு ஒரு வழி காணப்படுமேயெனில் அங்குள்ள தரமான வாசகர்களும் எமது நூல்களை விரும்பிப் படிக்கும் நிலைமை உண்டாகலாம்.

**தமிழ் மரபிலக்கியங்கள் பற்றிய உங்கள் கருத்தென்ன?**

தமிழ்மொழியின் இலக்கியச் செழுமைக்கும் செழிப்புக்கும் அத்திவாரமே மரபு இலக்கியங்கள் தானே? புதுமை, சூனியத்திற் பூத்து விட முடியாது. பழமையின் தளத்தில் நின்று தான் புதுமை புஷ்பிக்க முடியும். மரபு என்பது நிலையான நீர்க்குட்டை அல்ல, காலத்துக்குக்காலம் மாற்றம் பெற்று வந்திருக்கிற தெளிந்த ஓடை அது.

**ஈழத்தின் இலக்கிய விமர்சகர்கள் பற்றியும் அவர் தம் விமர்சனம் பற்றியும் தங்கள் அபிப்பிராயம்?**

பேராசிரியர்கள் கைலாசபதி, சிவத்தம்பி முதலியோரின் விமர்சனம் தமிழ்நாட்டு இலக்கியக்காரர்களினால் மிகவும் மதிக்கப்படுகிறது. முதுகு சொறியும் கலையாக இருந்த விமர்சனப் போக்கை மாற்றி, இலக்கிய விமர்சனம் என்பது அக்கறைக்குரிய மதிப்புக்குரிய ஒரு துறையாக வளர்வதற்கு வழிகாட்டிய இப் பேராசிரியர்களின் திறனாய்வு சம்பந்தமான நூல்கள் தமிழ் நாட்டில், உயர் வகுப்புப் பாடநூற்களாக உள்ளன.

**அடுத்த நூற்றாண்டில் ஈழத்து இலக்கியமே தமிழ் உலகின் தலைமை தாங்கும் என்று எஸ். பொ. அவர்களின்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கருத்துலேனாதமிழ்வாணன்அவர்களால் மறுக்கப்பட்டுள்ளது. இதுபற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?**

லேனா தமிழ்வாணனின் கருத்தைப் பற்றி யாரும் கவலைப்படத் தேவையில்லை. அவர் தமிழ் நாட்டிலுள்ள சிறந்த ஆக்க இலக்கியப் படைப்பாளிகளில் ஒருவராகவோ, அங்குள்ள இலக்கியப் போக்குகளை உணர்ந்தவராகவோ கருதப்படுவதில்லை. ஈழத்து இலக்கியம் பற்றி எஸ். பொ. அண்மையில் கூறிய கருத்தையொத்ததாக, 'சுபமங்களா' கோமல் சுவாமிநாதன் அவர்கள் சில ஆண்டுகளுக்கு முன்பு சென்னையில் நடந்த புத்தக வெளியீட்டு விழாவொன்றிற் கூறியிருந்தார். நான் அவ்விழாவில் சமூகமளித்திருந்தேன். அவரின் உரை அக்காலத்தில் பத்திரிகைகளில் வெளியாகியிருந்தது. பின்னர் இலங்கை வந்திருந்த போதும் அக்கருத்தை அழுத்தம் திருத்தமாகப் பல கூட்டங்களிலும், பேட்டிகளிலும் தெரிவித்திருந்தார். அப்போது மறுக்கத் திராணியற்றவர்கள், இப்போது இலங்கையரான எஸ். பொ. கூறினால் ஏன் மறுக்க வேண்டும்? லேனா, ஈழத்து இலக்கியத்தைப் பொறுத்தவரை மற்றொரு பகீரதனாக மாற விரும்புகிறாரோ தெரியாது?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஆகுதி' என். சோமகாந்தன் அவர்களுடன் ஒரு நேர்காணல்

புலோலியூர் ஆ. இரத்தின வேலோன்

ஈழத்துச் சோமு என்கிற என். சோமகாந்தன் அவர்கள் எம்மிடையே நன்கு அறிமுகமானவர். கடந்த நான்கு தசாப்தகாலங்களுக்கு மேலாகச் சிறுகதை, நாவல், பத்தி எழுத்துக்கள், திறனாய்வுக் கட்டுரைகள், ஆன்மீகக் கட்டுரைகள் என இலக்கியத்தின் சகல பரிமாணங்களிலும் தன்னைப் பின்னிப் பிணைத்துக் கொண்டவர். செயல்வேகத்துடன் இயங்குபவர். இலக்கிய விழாக்கள், மாநாடுகள் முதலியவற்றின் அமைப்பாளராக மிளிர்ந்து திறம்படச் செயலாற்றுபவர். இவ்வாறு சமுதாயப் பிரக்ஞையுடன் இலக்கியத்திற்காகத் தன்னை அர்ப்பணித்த நா. சோமகாந்தன் அவர்கள் இவ்வாண்டு மார்கழித் திங்கள் 21ம் நாள் சனிக்கிழமை, மணிவிழாக் காண்கின்றார் என்ற செய்தி அவர் தம் இலக்கிய சாதனைகளைப் புரட்டிப் பார்க்க ஒரு வழி சமைத்துக் கொடுத்திருக்கின்றது.

ஐம்பதுகளின் முற்கூற்றில் எழுத ஆரம்பித்த சோமகாந்தன் அவர்கள் இலங்கையில் வெளியான, வெளியாகின்ற தரமான சிற்றேடுகள், தேசியப் பத்திரிகைகள் சகலவற்றிலும் தனது ஆக்கங்களைப் பதிவு செய்திருக்கின்றார். மல்லிகைப் பந்தல் வெளியீடாக, இவரது முதலாவது சிறுகதைத் தொகுதியான 'ஆகுதி' 1986ல் வெளிக்கொணரப்பட்டது. 'நிலவோ நெருப்போ?' (சிறுகதைகள்), 'விடிவெள்ளி பூத்தது' (நாவல்), 'ஈழத்து இலக்கியம்: பல்துறை நோக்கு' 'பொய்கை மலர்' (தலங்களின் சிறப்புக்கள் பற்றிய நூல்) ஆகியவை, தமிழ் நாட்டில் வெளியிடப் பெற்ற இவரின் ஏனைய நூற்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோமகாந்தன் அவர்களது இலக்கியத் தேடலுக்கும், இலக்கிய நண்பர்களது தொடர்பிற்கும், தற்போது தொடராகத் தினகரன் வார மஞ்சரியில் வெளியாகும் 'காந்தனின் கண்ணோட்டம்' என்ற பத்தி எழுத்துக்கள் நல்ல சான்றாக அமைந்துள்ளன. வெள்ளி விழாக் கண்ட, இலங்கையின் தரமான சிற்றேடான மல்லிகையின் அட்டைப்படக் கௌரவம் 1989 சித்திரையில் சோமகாந்தன் அவர்களுக்குக் கிடைத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இலக்கியத்தை மட்டுமன்றி இலக்கியகாரர்களையும் இவர் நேசிக்கின்றார் என்பதற்குத் தமிழ்நாட்டில் உள்ள முன்னணி எழுத்தாளர்களது தொடர்புகளையும் அவர்களை இலங்கையில் நடைபெறும் இலக்கியப் பேரரங்குகளுக்கு அழைத்து வரும் நிகழ்வுகளையும் உதாரணங்களாகக் கூறலாம். இவ்வாறு இலக்கியக் களத்திலே தனக்கென ஒரு முத்திரை பதித்த எழுத்தாளர் என். சோமகாந்தன் அவர்களை இங்கே வாசகர்களுக்காகச் சந்திக்கின்றோம் !

கேள்வி : உங்களை எழுத வைத்த நிகழ்வுகள் எவை?

பதில் : என் இளமைக் காலத்திலேயே தி. மு. க. ஏடுகள், சுதந்திரன் பத்திரிகை, பாரதியாரின் பாடல்கள் முதலியவற்றால் நான் ஈர்க்கப்பட்டிருந்தேன். இதனால் அந்த ஆவேசப் பாணியில் கவிதை மற்றும் சிறு கட்டுரைகளை என்னால் எழுத முடிந்தது. சுதந்திரன் சிறுவர் பகுதியில் இவ்வாறு ஐம்பதுகளின் முற்கூறில் பலவற்றை எழுதியிருக்கிறேன். ஈழகேசரி மாணவர் பகுதியில் பல கிழமைகள் தொடராக எழுதியிருக்கிறேன். சாதியாசார அமைப்பினை மிகக் கடுமையாகக் கடைப்பிடித்து வந்த கிராமத்தில், வைதீக அனுட்டானம் மிக்க குடும்பத்தைச் சேர்ந்தவன் நான். பாடசாலையிற் சில சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களுடன் உட்காரவோ சேர்ந்து விளையாடவோ முடியாமல் 'உயர்ந்த' நிலையில் எனது சமூகத்தினர் வைக்கப்பட்டிருந்தனர். அடி நிலை மக்கள் எனக் கருதப்பட்ட சமூகத்தினர் அனுபவித்த கொடுமைகள், அவர்களின் வீடுகளுக்குத் தீவைக்கப்பட்டமை, வாயில்லாப் பூச்சிகளான அச் சமூகங்களைச் சேர்ந்த பெண்கள் கேட்பாரின்றிக் கெடுக்கப்பட்டமை, குடியும் கூத்தியுமாகத் திகழ்ந்த அக்காலக் கோயில் எஜமான் எனப்படுவோர் ஆசாரம் பற்றிக் கூறி அர்ச்சகர்களை அடக்கி வைத்தமை போன்றவை என் மனசை உசுப்பி விட்டன. அவற்றைப் பல புனை பெயர்களிற் சிறுகதைகளாக எழுத முற்பட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி : அறுபதுகளில் இலக்கிய நிறைவினைத்தரும் புனைகதை இலக்கியங்களைச் சுதந்திரன்,கலைச் செல்வி, தினகரன் போன்ற களங்களிலே தொடர்ந்து எழுதி வந்த நீங்கள் பின்னர் சிறிது காலங்கள் ஓய்ந்திருக்கக் காரணம் என்னவென்று கூற முடியுமா ?

பதில் : அறுபதுகளில் எமது நாட்டு எழுத்தாளர்களின் இலக்கிய முயற்சிகள் புதிய திசையில் வேகமாக நடைபோடத் துவங்கின. ஈழத்து மண் வாசனை கொண்ட படைப்புகள் உருவாக்கப்பட வேண்டுமென்ற கருத்தினை இ. மு. எ. ச. முன் வைத்துப் பேரியக்கம் நடத்தியது. பல பிரதேசங்களிலிருந்தும், அப்பகுதி மக்களின் வாழ்க்கைப் பின்னணி பிரச்சினைகளைச் சித்திரிக்கும் சிருஷ்டிகள் தோன்றின. கைலாசபதிஅப்போது'தினகரன்'ஆசிரியராகவிருந்தார்.அவர், பிரதேச மணங்கொண்ட கதைகளை எழுதுமாறு பலரையும் ஊக்குவித்துக் கொண்டிருந்தார். அந்த ஊக்கத்தினால் எழுதிய கதைகளில் 'நிலவோ நெருப்போ', 'வாத்தியார் பேசவில்லை' முதலியவை எனது கிராமத்தைப் பின்னணியாக வைத்து எழுதப்பட்டவை. அறுபதுகளில் துடிதுடிப்பாக ஆக்க இலக்கியப் படைப்பிலீடுபட்டிருந்த நான் எழுபதுகளில் அவ்வாறு எழுதாமலிருந்தது ஓய்ந்து போயல்ல. எழுபதுகளில் என் ஆசிரியப் பொறுப்பில் வெளிவந்த இலக்கியத்தரமான பல மலர்களில் எனது இல்க்கியக் கட்டுரைகள் வெளி வந்துள்ளன. தவிர ஆக்க இலக்கியக்காரனாகிய எனது முழு நேரத்தையும், அக் காலத்தின் முக்கிய பணியொன்றில் முழுமூச்சாகச் செலவிட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. 1968 ல் சென்னையில் நடந்த உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிலே தமிழ் அறிஞர்களுக்குச் சிலை நிறுவிய போது, தமிழுக்கு வசன நடை தந்த நமது நாட்டு ஆறுமுக நாவலரைப் புறக்கணித்து விட்டனர். அதனால் இலங்கைத் தமிழ் மக்களிடம் ஏற்பட்ட மனக் கொதிப்புக்குச் செயலுருவம் கொடுக்க ஆறுமுக நாவலர் சபை ஏற்படுத்தப்பட்டு, சிலை உருவாக்கம் பெற்று, சிலை நாட்டு விழாவும், நாவலர் மகாநாடும் பத்து நாட்கள் தேசந்தழுவிய பெருவிழாவாக நடைபெற்றதை அறிந்திருப்பீர்கள். சபையின் அமைப்புச் செயலாளர் பதவி என்மீது சுமத்தப்பட்டதால், விழா தயாரிப்பு வேலைகள், மலர்கள், இலக்கியப் போட்டிகள், மாணவர் போட்டிகள், நாவலர் 150வது ஜெயந்தி விழா, 'நல்லை நாவலர்' பத்திரிகையின் ஆசிரியப் பொறுப்பு, பின்பு நாவலர் நூற்றாண்டு விழா (1979) என ஓய்வில்லாமல் நாவலரியக்கப் பணிகளில் ஈடுபட வேண்டியதாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையில் 1975ல் இ.மு.எ.ச., பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் தேசிய இனப்பிரச்சினைத் தீர்வுக்கான திட்டங்களை முன்வைத்து நடாத்திய சிங்கள–தமிழ் எழுத்தாளர் மகாநாட்டுத் தயாரிப்பு வேலைகள் – பிரேம்ஜி, நான், நீர்வை, எச். எம். பி, முருகையன், மாணிக்கவாசகர் முதலியோர் மூன்று மாதங்களாக நாட்டின் சகல பகுதிகளுக்கும் சென்று சந்திப்புக்கள், பிரச்சாரக் கூட்டங்கள் என்பவற்றை நடத்தித் தீர்வுத் திட்ட யோசனைகளுக்காக அக்காலத்திலே பல்வேறு இன மக்களிடமும் மட்டங்களிலும் ஆதரவைத் திரட்ட வேண்டியிருந்தது. எழுதுவதில் மட்டுமே ஈடுபட்டு, பல ஆக்கங்களைப் படைத்தளித்து அத்துறையில் என்னை மேலும் வளர்த்துக் கொள்ள முடியாத சூழ்நிலை ஒரு தசாப்தத்துக்கு மேலாக ஏற்பட்டுவிட்டது.

என்னில் ஒரு கூடாத பழக்கம் உண்டு. ஏதாவது பொறுப்பை ஏற்றால், அதனைச் சிறப்பாக முடித்துவிட வேண்டுமென்பதற்காக, சொந்த வேலைகளையே ஒதுக்கி விட்டு, இருபத்துநான்கு மணிநேரமும் அந்தப் பணிக்காகவே செலவிடுவது என்பதே அது. பொது நன்மைக்கான எனது உழைப்பினால், நன்மைகள் பலவற்றை நான் இழந்துள்ளேன். ஆனால் நாடு முழுவதிலும் பல நல்ல நண்பர்களைத் தேடியுள்ளேன். இதன் காரணமாகத்தான் எனது நூல்கள் வெளியாகிற காலங்களில், அவற்றின் அறிமுக விழாக்கள் பலபகுதிகளிலும் அவ்வப்பகுதி நண்பர்களினால் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

கேள்வி : நீங்கள் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திலே சேர்ந்ததன் பின்னர்தான் இ. மு. எ. ச. செயல்வேகம் பெற்றது என்ற கருத்துப் பரவலாக உள்ளது. இது பற்றி நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்?

பதில் : இ. மு. எ. ச. கூட்டுச் செயற்பாட்டினால் வளர்ந்த ஓர் இயக்கம். அதன் வளர்ச்சி தனி மனிதர் ஒருவரின் செயற்பாட்டினாலே தான் ஏற்பட்டது என யாரும் உரிமை கொள்ள முடியாது. சங்கம் உருவாகியவுடனேயே வேகமாகச் செயற்படுவதென்பது இயலாது. சிறந்த கொள்கைகள் நடைமுறைப்படுத்தக் கூடிய செயற்றிட்டங்கள் விவேக பூர்வமாக வகுக்கப்படல் வேண்டும். ஆரம்ப காலத்தில் இவை திட்ட வட்டமாக அமைக்கப்பட்டன. இவற்றைப் பிரேம்ஜி, இளங்கீரன், எச். எம். பி., கைலாசபதி, இராமநாதன், கணேசலிங்கன், ஹமீட், சிவத்தம்பி முதலியவர்கள் சிறப்பாகச் செய்த காரணத்திலேயே சங்கத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தகட்டப் பாய்ச்சல்களில் என் போன்றவர்கள் வேகத்தைக் காட்ட முடிந்தது.

1961 ல் இ. மு. எ. ச. கொழும்பு ஸாகிராக் கல்லூரியில் நடாத்திய வரலாற்று முக்கியத்துவமான ஈழத்து தமிழ் எழுத்தாளர் பொது மாநாடு ஏற்பாட்டுக் குழுவின் ஓர் உறுப்பினர் என்ற பணிதான் அப்போது எனக்கு இருந்தது. அடுத்தாண்டு, சோமசுந்தரப் புலவரைத் தேசியக் கவியாகக் கொண்டாடி யாழ்ப்பாணத்தில் எடுக்கப்பட்ட விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியின் அமைப்பாளராக என்னையும் நண்பர் சில்லையூர் செல்வராஜனையும் இ. மு. எ. ச. நியமித்தது.

1961 ல் யாழ்ப்பாணத்துச் சுவாமியார் பிறந்த அல்வாயில் அவர் நினைவாக விழா, அடுத்த இரு நாட்களிலும் யாழ் நகர மண்டபத்தில் இ. மு. எ. ச. வின் இரண்டாவது மாநாடு. அதிலே தான் நான் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் என்னும் பதவி பெற்றேன். அது பொதுச் செயலாளருக்கு அடுத்த ஸ்தானம். பதவியை ஏற்றாற் சிறப்பாக இயங்க வேண்டியதுதானே? எனது ஆற்றலுக்கு உட்பட்ட வகையில் இதனைச் செய்து வருகிறேன். சங்கத்தின் தலைமை முழு ஒத்துழைப்பும் உற்சாகமும் தருகிறது. கூட்டு முடிவின்படி செயற்படுவதனாலேயே இ. மு. எ. ச. வின் செயற்பாடுகள் அர்த்தமும், பயனும், வீரியமும் பெறுகின்றன என்றே கூறுவேன்.

கேள்வி : ஈழத்துச் சோமு என்ற இலக்கியப் பிரசித்தமான பெயரினைத் துறந்து த ரது என். சோமகாந்தன் என்ற உங்கள் சொந்தப் பெயரில் எழுதக் ரம் என்ன?

பதில் : ஆரம்பத்திலே நான் எழுதத் துவங்கிய நாட்களில் சோமகாந்தன், கருணையூர்ச்சோமு, கலாமதி எனப் பல புனைபெயர்களில் எழுதினேன். புதுமைப் பிரியன் என்ற பெயரிலும் எழுதியிருக்கிறேன். ஆனால் ஈழத்துச் சோமு என்ற புனைபெயரே எனக்கு மிகவும் பிடித்தமான புனைபெயர். நான் எழுத்தாளர் சங்கம், நாவலர் சபை முதலிய நிறுவனங்களில் முக்கிய பதவிகளிலிருந்து தீவிரமாகச் செயலாற்றியதனால் இந்த நிறுவனங்களின் நிகழ்ச்சிகள் பற்றிய பத்திரிகைச் செய்திகளினாலும், நேரிடையான அறிமுகங்களினாலும் சோமகாந்தன் என்ற இயற்பெயர் புனைபெயரையும் மீறிக் கொண்டு நாடெங்கும் பிரபலமாகி விட்டது. எனது முதலாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதைத் தொகுதியான 'ஆகுதி' யை வெளியிட்ட நண்பர் மல்லிகை டொமினிக் ஜீவா எனது சொந்தப் பெயரே சிறப்பாக இருக்கிறதெனக் கூறி, நூலில் அவ்வாறே அச்சிட்டு விட்டார். அதனை இப்போது நான் தொடர்கிறேன்! வேறு விசேட காரணம் எதுவுமில்லை.

கேள்வி : கணவன், மனைவி இருவருமே இலக்கியகாரர்களாக வாய்ப்பது அருமை, மிக அபூர்வம். ஆனால் உங்களுக்கு அவ்வாறு வாய்த்திருக்கிறது. இதனால் உங்களால் உணரக்கூடிய அனுகூலங்களை விளக்கமுடியுமா?

பதில் : நானும் பத்மாவும் சமகாலத்தில் இலக்கியப் பிரவேசம் செய்தவர்கள் முக அறிமுகமில்லாமல் இலக்கிய மூலமாக மட்டும் ஒருவரை ஒருவர் அறிந்திருந்தவர்கள், பின்னர் வாழ்வில் இணைந்து கொண்டோம். இலக்கியத்தைப் பற்றியும் சமூகத்தைப் பற்றியும் எனது மனைவியிடம் ஒத்த பார்வையும் புரிந்துணர்வும் இல்லையென்றால் அறுபதுகளிலிருந்து எனது வேகமான இலக்கிய, கலாசார இயக்கப் பணிகளைச் செய்திருக்க முடியாது. நான் எழுதுவதற்கும், எனது நூல்கள் அச்சில் வெளிவருவதற்கும் ஊக்க 'சக்தி' அவரே !

கேள்வி : பிராமண சமூகப் பிரச்சினைகள் பற்றி, நீங்கள் எழுதும் போதும், அச்சமூகமல்லாத பிற கதைஞர்கள் எழுதும் போதும் உங்களால் ஏதாவது பேதங்களை அவதானிக்கமுடிகிறதா ?

பதில் : தலித் இலக்கியத்தை ஒரு தலித்தான் எழுதவேண்டும் என்று எழுந்துள்ள கோஷத்துக்கு நான் உடன்பாடானவனல்லன். அவர்களின் பிரச்சினைகளின் மீது உண்மையான அனுதாபமும், அக்கறையும் கொண்ட எவருமே எழுதலாம். அதுபோலப் பிராமணர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஏனையோரும் எழுத முடியும். அவ்வாறான ஒரு நாவலை நண்பர் தெணியான் (''பொற்சிறையில் வாழும் புனிதர்கள்'') எழுதியிருக்கிறார். ஆனால் அவர்களின் உட்பிரச்சினை – உள்ளத்துப் பிரச்சினைகளை ஓர் 'உள் வீட்டுப் பிள்ளை' யினாலே தான் யதார்த்தமாகவும் உணர்ச்சிபூர்வமாகவும் சித்திரிக்கமுடியும். இதனைப் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் எனது 'விடிவெள்ளி பூத்தது' நாவலின் முதற்பதிப்புக்கு அளித்த முன்னுரையிற் சுட்டிக் காட்டியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி : அண்மையில் இ. மு. எ. ச. நடாத்திய இலக்கியப் பெருவிழாவிலே தமிழக எழுத்தாளர்கள் 'வரமாட்டார்கள்'என்றே சகலரும் நினைத்திருந்தார்கள். ஆனால், பேரரங்கின் நிகழ்விலே திடீரென அவர்களைத் தோன்ற வைத்து சகலரையும் 'வியப்பிற்குள்ளாக்கினீர்களே?' அது எப்படி ?

பதில் : சென்ற காலத்தில் பல சந்தர்ப்பங்களில் தமிழகத்து எழுத்தாளர்கள் நிகழ்ச்சிக்கு வருவதாக ஒப்புக் கொண்டு விட்டு, இறுதி நேரத்தில் மூச்சுக் காட்டாமல் 'பெப்பே' காட்டியதுண்டு. ஆனால் இ. மு. எ. ச. வுக்கு அப்படி என்றுமே நேர்ந்ததில்லை. பொன்னீலனும், 'தாமரை' மகேந்திரனும் சில ஆண்டுகளாக என்னுடன் நெருங்கிப் பழகி வருபவர்கள். சென்னைக்கு இதயச் சிகிச்சைக்காக நான் அடிக்கடி செல்வதால், பல தடவைகளிலே சந்தித்திருக்கிறோம். அவர்கள் வழி நடத்தும் தமிழ்நாடு கலை இலக்கியப் பெரு மன்றமும், இ.மு.எ.ச–வும் ஒத்த கருத்துக் கொண்ட சகோதர இலக்கிய அமைப்புக்கள். சகோதர நிறுவனத்தின் பிரதிநிதிகளாக எமது விழாவுக்கு வருமாறு சென்ற ஆண்டில் அழைப்பு விடுத்தேன். ஏற்றுக் கொண்டார்கள். இவ்வாண்டு மார்ச் மாதம் நானும் நண்பர் ஸ்ரீதரசிங்கும் சென்னையிலே நின்றபோது, வரதர் பாராட்டு விழாவில் மூத்த எழுத்தாளர் வல்லிக் கண்ணனையும் பங்கேற்க வைத்தாற் பொருத்தமாக இருக்கும் என எண்ணினோம். நண்பர் செ. யோகநாதனுடன் சென்று அழைத்தபோது அவரும் மகிழ்வுடன் ஒப்புக் கொண்டார். விழாத் திகதியை மூவரிடமும் உறுதிப்படுத்திக் கூறிவிட்டு, கொழும்பு திரும்பியதும் விழா வேலைகளைத் துரிதப்படுத்தினோம். எமது நாட்டுத் தமிழ் இலக்கியத்தின் அரை நூற்றாண்டு வளர்ச்சியைப் பற்றிய ஆய்வுதான் விழாவின் முக்கிய நோக்கம். அவற்றை ஆய்வு செய்வதற்கு எமது இலக்கிய ஆய்வாளர்களின் பங்களிப்புத்தான் பிரதானம்.

எல்லா ஒழுங்குகளையும் செய்த பின்னர் தமிழக நண்பர்களில் யார் வந்தாலென்ன, வராவிட்டாலென்ன பேரரங்கை நடாத்தியே முடிப்பதென்ற முடிவில் விழா அழைப்புகளை அச்சிட்டு அனுப்பினோம். ஈழத்து எழுத்தாளர் விழாவுக்கு வருகின்றார்கள் என்ற எதிர்பார்ப்பு எமது நாட்டு இலக்கிய ஆர்வலர்களிடம் பெரிதும் இருந்தது உண்மையே. அவர்கள் வராவிட்டால் அவர்களின் வருகைக்குப் பொறுப்பேற்ற, எனது சொல், செல்லாக் காசாகி விடும் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர் செ. யோவைக் கொழும்பிலிருந்தவாறே 'ஃபோன்' மூலம் விரட்டினேன். அவர் அங்கு பம்பரமாகச் சுழன்று பணியாற்றினார். மகேந்திரன் சென்னைக்கும் டெல்லிக்குமாகப் பறந்து கொண்டிருந்தார். அரச அதிகாரியான பொன்னீலனுக்கு லீவு அனுமதி பெறுவதில் இழுபறி. வல்லிக்கண்ணனுக்கு பாஸ்போர்ட் பெறுவதிற் சிக்கல். விழாவுக்கு நான்கு நாட்களுக்கு முன்பிருந்த சென்னை நிலவரத்தைத் தொலைபேசியில் நண்பர் யோகநாதன் சொன்னார். இவர்கள் வந்து கலந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கையை எம்மிலே கூடப் பலர் இழந்து விட்டனர்! என்னை நண்பர்கள் ஒருவிதமாகப் பார்க்கத் துவங்கி விட்டனர். எனது செயலாற்றலையும் சொல்லையும் என்றுமே மதிப்பவர்கள்,அன்று ஒரு விதமாகப் பார்க்கத் துவங்கியதில் எனக்குக் கவலை!

பொன்னீலனுக்குப் 'ஃபோன்' போட்டு விசாரித்தேன். சில சிக்கல்கள் இருப்பதாயும், எப்படியும் வந்து சேர்வதாயும் கூறினார். விழா ஆரம்ப நாளன்று காலை யோகநாதனிடமிருந்து எனக்கு 'ஃபாக்ஸ்' வந்தது. விமானத்தில் இவர்களை ஏற்றி அனுப்பிவிட்டதாக அறிவித்திருந்தார். அவர்களை அழைத்து வர நண்பர் ஸ்ரீதரசிங்கை விமான நிலையத்துக்கு அனுப்பிவிட்டு இதனை எவருக்குமே கூறாமல், நான் மேடையில் இருந்து விழா வேலைகளைக் கவனித்தேன். எதிர்பாராத வகையில் அவர்கள் வருகை தந்தது எம்மவர்களுட்படப் பலரையும் நீங்கள் கூறுவது போல 'வியப்பிற்குள்ளாக்கியது!'

நான் எளிதில் மனச் சோர்வு அடைவதில்லை. எதனைச் சாதிப்பதற்கும் அயராத முயற்சி, நம்பிக்கையான நண்பர்களின் நட்பு, "செய்து முடிப்பேன்" என்ற திடமான நம்பிக்கை, பல துறைகளைச் சார்ந்தவர்களிடம் ஓரளவு செல்வாக்கு முதலியவை தேவை. அவை எனக்கு நிறையவே உண்டு.

கேள்வி : இறுதியாக........, உங்கள் துறை சார்ந்த வளரிளம் பருவத்தினருக்கு நீங்கள் வழங்கும் ஆலோசனைகள் என்ன?

பதில் : குரு பீடத்தில் இருந்து போதிக்கும் உபதேசியாராக நான் மாற விரும்பவில்லை. ஏனெனில் நாம் எழுதத் தொடங்கிய காலத்திலேதான் இப்படி ஆலோசனைகளைப் பெற வேண்டியிருந்தது. இப்பொழுது எழுதும் புதியவர்கள் நன்கு படித்தவர்கள். இலக்கியம் பற்றிய பல நூல்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசித்தவர்கள். சிறுகதை, கவிதை, நாவல் முதலியவை எப்படியாக அமைய வேண்டும் என்பதை நன்கு அறிந்து கொண்ட பின்பே இலக்கியப் பிரவேசம் செய்கின்றனர் என்பதை இவ்வாண்டில் நடைபெற்ற சில இலக்கியப் போட்டிகளுக்கு நடுவராக இருந்தமையால் என்னால் அனுபவபூர்வமாக உணர முடிகிறது.

அடித்துச் சொல்கிறேன் ! இந்த நூற்றாண்டு முடிவதற்கு மூன்றாண்டுகள் மட்டுமே உள்ளன. இந்தக் குறுகிய காலத்துள், சிறந்த படைப்பாளிகளாக ஒரு புதிய தலைமுறையினர் எமக்குக் கிடைக்கப்போகின்றனர். அதற்காக இப்போதே அவர்களை வரவேற்று........ நான் வாழ்த்துக் கூறுகிறேன் !

*(15.12.96 தினகரன் வார மஞ்சரியில் வெளி வந்தது)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலை நிகழ்ச்சிகள்

காலம் : 21–12–1996 சனிக்கிழமை காலை 8.30 மணி

## நிகழ்ச்சி நிரல்

8.30 முதல் சமயக் கிரியைகள்:

விநாயக பூஜை
மிருத்யுஞ்ச ஹோமம்
லக்ஷ்மி நாராயண பூஜை
கும்ப புரோக்ஷணம்
மாங்கல்ய தாரணம்
ஆசீர்வாதம் - ஆரத்தி

கிரியைத் தலைமை
பிரதிஷ்டா பூஷணம், சிவாசார்ய துரந்தரர்,
*பிரம்மஸ்ரீ. சாமி விஸ்வநாதக் குருக்கள் அவர்கள்*

11.00 முதல் 'வாழ்த்துக் கவியரங்கம்'

தலைவர்:
கவிஞர் ஆ. சிவநேசச் செல்வன் அவர்கள்

பங்கு கொள்ளும் கவிஞர்கள்:

கவிஞர் மேமன்கவி அவர்கள்
கவிஞர் இ. தயானந்தா அவர்கள்
கவிஞர் சு. முரளிதரன் அவர்கள்
கவிஞர் ஜின்னா ஷெரிப்டீன் அவர்கள்
கவிஞர் கே. பி. நடனசிகாமணி அவர்கள்

12.00 மணி மதிய விருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலை நிகழ்ச்சிகள்

காலம் : 21–12–1996 சனிக்கிழமை மாலை 5.30 மணி

# நிகழ்ச்சி நிரல்

5.30 வரவேற்பு ஊர்வலம் (ஐங்கரன் ஆலயத்திலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகும்)

6.00 நாத வேள்வி.

வழங்குவோர்:

| | | |
|---|---|---|
| நாதஸ்வரம் | : | திருமிகு. வி. கே. பஞ்சமூர்த்தி அவர்கள் |
| | | திருமிகு. எம். பி. நாகேந்திரம் அவர்கள் |
| தவில் | : | திருமிகு. கே. கணேசபிள்ளை அவர்கள் |
| | | திருமிகு. ஆர். புண்ணியமூர்த்தி அவர்கள் |
| | | திருமிகு. பி. முருகதாஸ் அவர்கள் |

6.30 மங்கல விளக்கேற்றல்

கடவுள் வாழ்த்து

தமிழ் வாழ்த்து

வரவேற்புரை: திருமிகு. பொ. பாலசுந்தரம் அவர்கள்
(விழா அமைப்பாளர்)

6.45 ஆடல் வேள்வி

வழங்குபவர்
செல்வி காயத்திரி நேசேந்திரன் அவர்கள்

| | | |
|---|---|---|
| நட்டுவாங்கம் | - | நாட்டியக்கலைமணிஅம்பிகை இலங்கேஸ்வரன் அவர்கள் |
| பாட்டு | - | இசைக் கலைமாமணி பராசக்தி விநாயகதேவராஜா அவர்க |
| மிருதங்கம் | - | திருமிகு. அ. ரவீந்திரன் அவர்கள் |
| வயலின் | - | கலாசூரி ரி. வி. பிச்சையப்பா அவர்கள் |

7.05 விழா நாயகர் கௌரவம்

7.15 பாராட்டு விழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர்:

## பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள்

## 'மணிவிழா மலர்' வெளியீடு

வழங்குபவர்:

தொகுப்பாசிரியர் திருமிகு. பூ. ஸ்ரீதரசிங் அவர்கள்

(மணிவிழாச் சபை, செயலர்)

வெளியிடுபவர்:

திருமிகு. தெ. ஈஸ்வரன் அவர்கள்

(மணி விழாச் சபைத் தலைவர்)

வாழ்த்துரைகள்:

திருமிகு பிரேம்ஜி ஞானசுந்தரன் அவர்கள்

திருமதி வசந்தா வைத்தியநாதன் அவர்கள்

திருமிகு சுந்தரம் டிவகலாலா அவர்கள்

திருமிகு டொமினிக் ஜீவா அவர்கள்

திருமிகு. சாரல் நாடன் அவர்கள்

விழா நாயகர் ஏற்புரை


நன்றியுரை : திருமிகு . ச. ஆ. பாலேந்திரா அவர்கள்

(மணிவிழாச் சபை பொருளாளர்)

நிகழ்ச்சித் தொகுப்பு: திருமிகு இ. தயானந்தா அவர்கள்

(அறிவிப்பாளர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சிப் பதிவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப விருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபதில்





அறுபதில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1970 நாவலர் பெருவிழா. நீதியரசர் வீ. சிவசுப்பிரமணியம் தலைமை வகிக்க
அவரின் பாரியார் பரிசளிக்க அருகில் அமைப்புச் செயலாளர் சோமகாந்தன்



ஆசிரியரின் முதலாவது நூலான 'ஆகுதி' வெளியீட்டு விழாவில்.......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1989ல் யாழ் இந்துவில் நடந்த புத்தகக் கண்காட்சி வரவேற்புரை




'மாருதம்' சஞ்சிகை வெளியீட்டு விழாவில்...........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமறைக் கலாமன்ற நூல் வெளியீட்டு விழாவில்.........



தமிழ்நாடு காஞ்சிபுரம் கருத்தரங்கில்...........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மொரிஷஸ் நாட்டு அமைச்சரை வரவேற்றுத் தலைமையுரை



சென்னை விழாவில் உரையாற்றிய போது.........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'இலக்கியக்குரிசில்' பட்டம் பெற்றபோது நன்றி தெரிவித்து........



இலக்கியப் பேரரங்கைத் தொடக்கி வைத்து..........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




புத்தகாயாவில்.........



'இந்தியா ருடே' வாசந்தியை வரவேற்று இல்லத்தில் விருந்து உபசரிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீர்கொழும்பு இ. இ. மன்ற வைரவிழாவில், 'தமிழ்மாமணி' பட்டமளிப்பு




ஆசிரியரின் நூல்களைப் பாராட்டி அமைச்சர் தேவராஜ் வெளியீட்டுவிழாவில் பொன்னாடை சூட்டல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இமயமலைச்சாரலில் சித்தபாரியில் ஸ்ரீதரசிங்குடன்



எட்டயபுரம் பாரதிமணி மண்டபத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவாமி சாந்தானந்தா சஷ்டியப்த பூர்த்திவிழா மலரைச் சமர்ப்பித்து ஆசி பெற்றபோது.........



சென்னை பிரீஸ் ஹோட்டலில் நடந்த நூல் வெளியீட்டு விழாவில் இலக்கிய நண்பர்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாஸ்தா பீடவிழாவில் 'கலை இலக்கிய கலாபமணி' பட்டமளிப்பு



'பொய்கைமலர்' வெளியீட்டு விழாவில் நண்பர்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




'தமிழ் ஒளி' பட்டமளிக்கப் பெற்றபோது........



கண்டி விழாவில் கலாசார அமைச்சரின் கௌரவிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'இலங்கையும் இராமாயணமும்' நூலைப் பாராட்டி சுவாமி தேஜோமயானந்தா பொன்னாடை சூட்டிய போது




'பொய்கைமலர்' நூலுக்காக சுவாமி கமலாத்மானந்தா கௌரவிப்பு

167716
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA ★ LIBRARY ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ARCHIVES

K. Sivaramalingapillai, B.A.
RETD DEPUTY PRINCIPAL
JAFFNA HINDU COLLEGE
28, CUMARASAMY ROAD
KANDARMADAM - JAFFNA

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

University of Jaffna
167716
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA ★ LIBRARY ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed by Unie Arts (Pvt) Ltd.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org